W
N23
77462

1 AUG 1985

இராஜரீக சாஸ்திரம்

சென்னை-600 008

Everymans Press, Madras.

அரசியல் ஞானபோதினி—6.

# இராஜரீக சாஸ்திரம்

[அரசியல் நூல்]

2112
1189

முதற்பாகம்

கிருஷ்ணஸ்வாமி சர்மா
எழுதியது

- AUG 1923

விலை ரூ. 1.

"ஞானபோதினி" பிரசுராலயம்
33, இருளப்பன் வீதி,
சாவுகார் பேட்டை போஸ்டு, சென்னை.

1923

# சமர்ப்பணம்

இராஜீயத்துறையில் இணையற்ற அநுபவமும், முதிர்ந்த
ஞானமுங்கொண்டு, சென்ற இருபது வருட கால
மாகத் தீவிர இராஜீயகொள்கையுடன் சற்றுஞ் சலி
யாது உழைத்து வருபவரும், பத்திரிகை நடத்து
வதில் ஒப்புயர்வில்லாதவரென இந்நாட்டின
ராலும் மேனாட்டினராலும் கொண்டா
டப்பட்டவரும், சிறந்த தேசாபிமானங்
கொண்டவரும், அதிகாரவர்க்கத்தி
னரை நடுங்கச்செய்பவரும், உண்
மையைக் கண்டிப்பாய் வெளி
யிடுபவரும் என் வாழ்க்கை
யில் மிக்க ஆர்வங் கொண்ட
வருமான 'ஹிந்து' பத்
திரிகாசிரியர்
ஸ்ரீமான்
கஸ்தூரிரங்கய்யங்கார்
அவர்கட்கு
இந்நூலை யான் மிக்க தாழ்மையுடன் சமர்ப்பிக்
கின்றேன்.

77462

# INTRODUCTION

A. RANGASWAMI IYENGAR
*Editor "Swadesamitran"*

THE Study of Indian Political Science from the formal standpoint presented to the people of South India in their own mother-tongue and in accordance with their habits of thought and expression, has been a long felt want. One of the dreams of my earlier literary life was the preparation and publication of such a work in Tamil as well as another on the Principles of Indian Economics. But the dream has receded under the fierce pressure of exacting journalistic work and the continual demands of political controversy and agitation. My friend Mr. Krishnaswami Sarma has been more fortunate. The enforced leisure and rest which his last incarceration in Jail gave him, has enabled him to write and bring out the accompanying Treatise which I have great pleasure in commending to the Tamil reading public as a solid and opportune contribution to their growing political literature. It bears the impress of deep study and earnest thought; it seeks to collate Western ideas with Eastern concepts as to the nature and origin of the State; it examines the aims and ideals

of all well-ordered States and Communities from the point of view of the latest Western Social theories and the earliest Hindu and Muslim doctrines; and it at the same time strives to present the fundamental principles bearing on the Science of Politics in a form understandable by the ordinary cultured Tamil Reader, who has had no grounding in the study before. It is a hard task, but I think Mr. Sarma has achieved a measure of success in it which few could hope for. The present state of Tamil culture is one in which the assimilation of modern thought and of the progress made in the physical and social sciences has long lagged behind that attained in the Bengalee, Marathi, Hindi and other National languages. The development of the language and vocabulary so as to make it a flexible vehicle for this purpose, has not been undertaken in any systematic manner. It has been left mostly to the tender mercies of elementary text-book writers, fashioning themselves on English analogues without the permeating current of literary efficiency in their own mother-tongue, or to the tender mercies of newspaper writers, always in haste to coin some vernacular substitutes for English words on the spur of the moment and under the pressure of the post and the telegraph.

It is creditable to Mr. Sarma, therefore, that in



spite of such handicaps he should have succeeded in writing this work free from the colloquialisms of current politics and, may I add, equally free from the prepossessions of current political activities in which he has borne his own measure of sacrifice and suffering. There are, no doubt, many parts of the work which would require elaboration and expansion later on, and there are many aspects of Indian political science in which the application and illustration of political doctrines to the political events of our time might be found interesting; but he has wisely deferred their elucidation to a later day when the fierce controversies of the hour may have subsided.

# சிறப்புரை.

## 'சுதேசமித்திரன்' ஆசிரியர்

## ஸ்ரீமான் எ. ரங்கஸ்வாமி அய்யங்கார் எழுதியது.

தமிழ் பாஷையில், தமிழ் ஜனங்கள் வழக்கத்தில் உபயோகப் படுத்தும் சொற்களின் மூலமாக இந்திய இராஜீய சாஸ்திரத்தையும் இந்தியப் பொருளாதார சாஸ்திரத்தையும் எழுதித் தமிழ் மக்களுக்கு அவை உபயோகமாகும்படி செய்யவேண்டு மென்று பல வருடங்களாக நான் ஆவல் கொண்டிருந்தேன்; ஆனால் எனது எண்ணத்தை நிறைவேற்ற பத்திரிகை வேலையும் ராஜீய வாதங்களும் கிளர்ச்சிகளும் எனக்கு அவகாசம் கொடுக்கவேயில்லை. ஆனால் என்னுடைய நண்பர் ஸ்ரீமான். கிருஷ்ணசாமி சர்மா சமீபத்தில் சிறை வாஸம் செய்ய நேர்ந்ததால், அந்தக் காலத்தில் இவருக்குக் கிடைத்த அவகாசத்தை உபயோகப் படுத்தி, இந்த நூலை எழுதியதற்கு நான் சந்தோஷப் படுகிறதுடன், இது மிகவும் சமயோசிதமான பிரகரணமென்றும், இது தமிழிலுள்ள இராஜீய நூல்களுக்குச் சிறந்த துணையாகு மென்றும் சிபார்சு செய்கிறேன். ஸ்ரீமான். சர்மா வேறு நூல்களை ஆழ்ந்து படித்து சிந்தனை செய்து இந்நூலை எழுதியிருக்கிறார் என்று இதைப் படிப்பதிலிருந்து நன்கு விளங்குகிறது. இராஜாங்கத்தின் சுபாவம், உற்பத்தி முதலிய விஷயங்களைப்



பற்றி மேனாட்டாரும் கீழ் நாட்டாரும் கேட்டுள்ள அபிப்பிராயங்களையும் அவர் எடுத்துக் கூறியிருப்பதுடன், நல்ல பயனுள்ள ராஜாங்கங்கள் சமூகங்கள் ஆகியவைகளின் கடமைகள், லட்சியங்கள் ஆகியவைகளைப் பற்றி பண்டைக் கால ஹிந்து கிரந்த கர்த்தாக்களும் முஸ்லிம் பண்டிதர்களும் கொண்டிருந்த கருத்துக்களையும் நவீன ஐரோப்பிய சாஸ்திரக்காரர்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் எழுதிக் கூறி யிருக்கிறார். இத்தனை விஷயங்களையும் ஸ்ரீமான் சர்மா எற்கனவே ராஜீய நூல்களை வாசித்திராத தமிழரும் அறியக் கூடிய நடையில் எழுதி யிருக்கிறார். இது சிரமமான் வேலை. இதைச் சரியாகச் செய்து முடிக்கக் கூடுமென்று பலர் தைரியமாக இறங்க முடியாது. ஆயினும் இந்த வேலையை ஸ்ரீமான் சர்மா கூடுமானவரையில் திருப்தி கரமாகவே செய்து விட்டார். நவீன கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதில் வங்காளி, மராத்தி, ஹிந்தி முதலிய பாஷைகள் எவ்வளவு தேர்ச்சியடைந்திருக்கின்றனவோ அவ்வளவு தேர்ச்சியைத் தமிழ் மொழி அடையவில்லை. இந்த வேலையைச் செய்யும்படி பாஷையையும் அதன் சொற்களையும் விருத்தி செய்ய எற்பாடாக முயற்சி செய்யப் படவில்லை. தங்களுடைய தாய் மொழியில் பாண்டித்தியம் பெறாத சற்றுக் குட்டிகளும் பத்திரிகைகளுக்கு எழுதுவோருமே இந்த வேலையைச் செய்து வந்திருக்கிறார்கள். தபால் போய்விடும், நேரமாகி விட்டது என்று அவசரப்பட்டுக் கொண்டு அவ்வப் பொழுது அவர்கள் அந்தந்த ஆங்கிலச் சொற்களுக்குப்

பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் புதிதாக அமைத்து வந்திருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுது வரும் சொற்களைப் பிரயோகம் செய்யாமலும், எந்த தற்கால இராஜீய போராட்டத்தில் அவரும் கலந்து கொண்டு தியாகம் செய்து கஷ்டப் பட்டிருக்கிறாரோ அந்தப் போராட்டத்தின் அம்சங்களைக் கூட விடாமலும் இந் நூலை ஸ்ரீமான் சர்மா எழுதியிருப்பதை நான் மிகவும் சிலாக்கிக்கிறேன். இந்நூலின் சில பாகங்களைப் பிறகு விஸ்தரிக்கவேண்டி யிருக்கும், சில பாகங்களை விளக்கி எழுதவேண்டியிருக்கும், சில சந்தர்ப்பங்களில் ராஜீய சித்தாந்தங்களை ராஜீய விஷயங்களைக் கொண்டு விளக்குவது உபயோகமாக விருக்கும்; ஆயினும் இப்பொழுது நடை பெற்று வரும் போராட்டத்தின் வேகம் குறைந்த பிறகு அதை யெல்லாம் செய்து கொள்ளலாமென்று ஸ்ரீமான் சர்மா ஒத்திப் போட்டு விட்டதே நலமான காரியம்.

## முகவுரை

கடந்த சில வருடங்களாக நம் பாரத நாட்டில் இராஜீயத் துறையில் ஜனங்களுக்குள் ஓர் உயர்ச்சியுண்டாகி, அரசியல் விஷமாகப் பல நூல்களைக்கற்க சிலர் முன் வந்துள்ளார். அங்ஙனம், கற்க முன் வந்த அச் சிலரும் ஆங்கில பாஷையில் எழுதப்பட்ட பல அரசியல் நூல்களை ஆராய்ச்சி செய்தனரே யன்றி, பாரதநாட்டில் தொன்மைவாய்ந்த இராஜரீக சாஸ்திரங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய முன் வரவில்லை. சமீப காலமாகத்தான் சிலர் ஆரிய பாஷையின் ஞான முதிர்ச்சியால் பண்டை அரசியல் சாஸ்திரங்களைக் களைந்து, ஆங்கிலத்தில் எழுத முன் வந்தனர். எனினும், நம் நாட்டில் பலர் அரசியல் நூலைப்பற்றிய ஞானம் சிறிது மில்லாமலே ஞான சூன்னியங் கொண்டிருக்கின்றனர். அரசியல் நூலை ஒவ்வொருவரும் அறிய வேண்டுமென்னும் ஆவல் கொண்டு நம் பாரதநாட்டில் பல மாகாணத்தவர்கள் அவரவர்களுடைய மாகாணத்தில் வழங்கும் தாய்பாஷையில் அரசியல் நூல்களை இயற்றியுள்ளார்கள். தமிழ் நாடு ஒன்றுதவிர, ஏனைய மகாராஷ்டிரம், வங்காளம், கூர்ச்சரம், ஆந்திரம், கர்ணாடகம் முதலிய நாடுகளில் அரசியல் விஷயமாகப் பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அக்குறையைத் தீர்க்கவே, யான் முதன் முதலாக அரசியல் நூலொன்று நம் தமிழ் மக்களுக்குப் பிரயோசனப்படும் பொருட்டு என் சிற்

றிவைக்கொண்டு எழுதப் புகுந்தேன். இந்நூலில், மேனாட்டு அரசியல் சித்தாந்தமும், இந்நாட்டுப் பழைய அரசியல் சித்தாந்தமும் எழுதப்பட்டுள்ளது. அரசியல் விஷயமாகத் தமிழ் மக்கள் அறியவேண்டிய அம்சம் பல உள. பாரத நாட்டில், தற்பொழுது இராஜீயத் துறையில் உண்டாகிவரும் கிளர்ச்சிக்கும், வருங்கால பாரதநாட்டின் அப்யுதயத்திற்கும் அரசியல நூல் மிகவும் இன்றியமையாதது. இந்நூலில் அரசு உண்டான விஷயமும், அரசின் தன்மையும், அரசின் வகையும், அரசின் உறுப்பும், அரசின் கடமையும் ஆகிய இவைகள் யாவும் கூறப்பட்டுள்ளன. தவிர, பாரதநாட்டில் பூர்வமிருந்த அரசும் அரசுரிமையும் பற்றியும், இஸ்லாம் மத வழியாகப் பூர்வமுண்டான அரசும் அரசுரிமையும் பற்றியும் இந் நூலில் கூறப்பட்டுள்ளன. இதுதவிர, அரசியல் விஷயமாக இன்னும் இரண்டு பாகங்களைப் பிரசுரிக்கவும் எண்ணங் கொண்டுள்ளேன். இரண்டாவது பாகத்தில், அரசாங்கத்தின் கடமை, அரசாங்கத்தின் இலட்சியம், அரசாங்கத்திற்கும் மனிதனுக்கு முள்ள சம்பந்தம், மனிதனுடைய சுதந்தரம் ஆகிய இவைகளைப்பற்றிக் கூறப்படும். மூன்றாவது பாகத்தில், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், ஆஸ்திரியா, இதாலி முதலிய வல்லரசுகள் எங்ஙனம் இராஜரீகத்தை நடத்தி வருகின்றன வென்பதையும் கூறப்படும். ஆகவே, இம்மூன்று பாகங்களையும் நம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் படித்தறிதல் அவசியம். தவிர, இந்நூலை எழுதுவதற்கு உற்சாகத்தை யூட்டி இதற்குச் சிறப்



புரை எழுதித் தந்த என் நண்பர் ஸ்ரீமான். எ. ரங்கஸ்வாமி ஐயங்காருக்கு நான் வந்தனமளிக்கிறேன்.

நிற்க, இந்நூலும் இதுபோன்ற பல இராஜீய நூல்களும் நாட்டின் அபிவிர்த்திக்கு இன்றியமையாதன வென்பது ஒரு புற மிருப்பினும், இராஜீய போராட்டமே எனக்கு முக்கிய கருத்தாதலால், ஒழிந்த நேரங்களில் புத்தகங்களை எழுதுவது எனக்கு ஓர் விளையாட்டுக் கருவியாகும். காலஞ்சென்ற லோகமான்ய பால கங்காதர திலகரும் இதையே கூறியுள்ளார். இராஜீயப் போராட்டத்தில் இன்னும் எத்தனை தடவைகள் சிறைவாசம் புக நேரினும் அதற்கு என் வாழ்க்கையை ஒப்புவித்து விட்டபிறகே புத்தகங்கள் எழுதுவதற்கு என் காலத்தை ஒப்புவிப்பேன்.

கிருஷ்ணஸ்வாமி சர்மா.

வேலூர் சிறை
1-12-22

## விஷய சூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அரசு | 1 |
| 2. | அரசின் மூலம் | 15 |
| 3. | அரசின் மூலதத்துவம் | 32 |
| 4. | அரசின் அதிகாரம் | 42 |
| 5. | மனித சுதந்தரம் | 60 |
| 6. | அரசுகளின் பரஸ்பர சம்பந்தம் | 73 |
| 7. | அரசின் வடிவம் | 84 |
| 8. | அரசைப்பற்றிய நவீன சித்தாந்தம் | 103 |
| 9. | அரசும் அரசனும் | 114 |
| 10. | முஸ்லீம் அரசும் சமூகமும் | 139 |
| | (அரசின் உறுப்புகள்) | |
| 11. | அதிகாரப் பிரிவினை | 157 |
| 12. | சட்ட நிரூபண சபை | 170 |
| 13. | நிர்வாக பரிபாலனம் | 188 |
| 14. | நீதிஸ்தாபனம் | 202 |
| 15. | தேறுதல் முறை | 210 |
| 16. | அரசாங்கங்களின் வகை | 221 |
| 17. | அரசாங்க கடமை | 237 |


# இராஜரீக சாஸ்திரம்

## 1. அரசு

உலகத்திலுள்ள பல சாஸ்திரங்களுள் இராஜரீக சாஸ்திரமென்பதொன்று. இராஜரீக சாஸ்திரமென்பது அரசியல் நூல். பொருள் நூலைக்குறிக்கும் சாஸ்திரத்திற்கு அர்த்தசாஸ்திரமெனக் கூறப்படுவதுபோல, அரசாங்கத்தைப்பற்றிக் கூறும் நூலுக்கு இராஜரீக சாஸ்திரமெனப் பொதுவாகக் கூறப்படும். இராஜரீக சாஸ்திரத்தைப்பற்றிக் கூறுகையில், அதை யொட்டிப் பல விஷயங்கள் மற்ற சாஸ்திரங்களினின்றும் உண்டாகின்றன. தவிர, மானிட சமூகங்களின் ஏற்றத்தாழ்ச்சியும், மனித ஸ்வபாவ குணங்களின் சங்கற்ப விகற்பங்களும் அவைகளைத் தழுவிய பல பாடங்களும், இதர சாஸ்திரங்களினின்றும் உண்டாகின்றன. இராஜரீக சாஸ்திரமென்பது கேவலம் வாசா ஞானம்பற்றிவராமல் மிகவும் உயர்ந்த கிரியா ஞானம்பற்றிப் பல மூதறிஞர்களால் வாதிக்கப்பட்டும் நிர்ணயிக்கப்பட்டும் வந்ததாகும். இராஜரீக சாஸ்திரத்துடன் நீதி சாஸ்திரம், தேச சரித்திரம், பொருள்நூல் ஆகிய இவைகள் தழுவி நிற்கும். இராஜரீக சாஸ்திரத்திற்கு விரிவாகப்பல பொருள் அமைத்துக்கூறினும், சுருங்கச்சொல்லுமிடத்து அது அரசாங்கத்தைப்பற்றிய நூல் என்று விளங்க வைக்கலாம். பூர்வம், பாரத நாட்டில் இராஜரீக சாஸ்திர விஷயமாக மனு, பிரகஸ்பதி, சுக்கிரர், சாணக்யர், காமந்தகர், யாஜ்ஞவல்கர், உஸனர் முதலானோர் வெகு

தெளிவாகவும் விரிவாகவும் கூறியுள்ளார். மௌரிய வம்சத்து சந்திரகுப்தனை மகத தேசாதிபதியாக்கத் தனநந்தனைக்கொன்ற பிராம்மண மந்திரி சாணக்யர் இயற்றிய அர்த்த சாஸ்திரம் என்னும் நூல் மிகவும் சிறந்ததென இப்பொழுதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. சாணக்யர், அன்விக்ஷிகி, திரயி, வார்த்தா, தண்டநீதி என நான்கு சாஸ்திரங்களாகப் பிரித்துக் கூறினார். மனு, திரயி, வார்த்தா, தண்டநீதி என மூன்று சாஸ்திரங்களாகப் பிரித்துக்கூறினார். பிரகஸ்பதியோ, வார்த்தா, தண்டநீதி என இரண்டு சாஸ்திரங்களாகப் பிரித்துக் கூறினார். உஸனர் தண்டநீதியொன்றே சாஸ்திரமென்றும், மற்ற சாஸ்திரங்கள் யாவும் தண்டநீதி சாஸ்திரத்தினின்றுமே யுண்டாயிற்றெனவும் கூறியுள்ளார். அன்விக்ஷிகி என்பது சாங்கியம், யோகம், உலோகாயதம் முதலிய தத்துவங்களைப் பற்றியது. திரயி என்பது வேதம். வேதத்தினின்றும் தர்மா தர்மங்கள் அறியப்படும். வார்த்தா என்பது விவசாயம் வர்த்தகம் முதலியவைகளைப்பற்றியது; அதில் பொருளின் விர்த்தி, வினியோகம் முதலியவைகளும் கூறப்படும். நியாய அநியாயங்களையும் பலாபலத்தை (பலமின்மை)ப்பற்றியும் கூறுவது தண்டநீதி. இத்தண்டநீதியையே இராஜரீக சாஸ்திரம் அல்லது அரசியல் நூல் எனக்கூறப்படுகிறது. அரசாங்கத்தைப்பற்றிக் கூறும் இந்த சாஸ்திரம் தற்கால நாகரிகத்தையும், நடையுடைபாவனைகளையுமொட்டிப் பல மேனாட்டு மேதாவிகளால் தேசங்களின் நிலைமைக்கேற்றபடி எழுதப்பட்டுள்ளது. மேனாட்டார் எழுதிய



இராஜ்ரீக சாஸ்திரமே ஆதாரமெனத் தற்பொழுது எல்லா நாட்டார்களும் அங்கீகரித்திருக்கின்றனர். மேனாடுகளில் உண்டாகும் இராஜ்யபுரட்சி ஒவ்வொன்றுக்கும் பிறகு சில மேதாவிகள் இராஜரீக சாஸ்திரங்களை நிர்ணயித்தனர். அதிகாரமும் கீழமைவுமே அரசாங்கத்தின் முதற்கொள்கையெனத் தெரியவருகிறது. அதிகார முறையும் அவ்வதிகார முறைமைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுமே கவர்ன்மெண்டின் இலட்சணமெனவுந் தெரியவருகிறது. இராஜரீக சாஸ்திரத்தில் 'அரசாங்கம்' என்னும் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கொண்ட பல சொற்கள் உண்டாவதாலும், அரசாங்கம் பலவிதமாக யிருப்பதாலும், ஆங்கில பாஷையின் வார்த்தையையும் அங்கங்கே உபயோகப்படுத்துவது இன்றியமையாததாக யிருக்கிறது. அக்காரணம்பற்றி, கவர்ன்மெண்டு என்னும் பதத்தை உபயோகப்படுத்தலாயிற்று. மனித சமூகம் உண்டான நாள்தொட்டு இன்றுவரை மானிட சமூகம் பல பரிணாமங்களடைந்தது போலவே, இராஜரீக சாஸ்திரமும் பல்வேறு விகாரமடைந்துள்ளது. மானிட சமூகத்தைப் போலவே, இராஜரீக சாஸ்திரமும் தொன்மை வாய்ந்தது. அரசாங்கமானது பார்வைக்கு மட்டும் வேற்றுமையின்றி எக்காலத்தும் ஒரே தன்மையாக யிருந்துவருகின்றதென ஒருவாறு புலப்பட்டாலும், அது அடிக்கடி ஸ்வரூபத்திலும், குணத்திலும், அளவிலும் மாறிமாறி வேறுபட்டு வருகிறது. பூர்வம் யதேச்சையாக மலைகளிலும் காடுகளிலும் நாடோடியாகத் திரிந்த காலத்திருந்த பழைய அதிகார முறைமைக்கும், பிறகு நகரங்களில்

உண்டான கிரீக்கிய அரசாங்க முறைமைக்கும், பின்னர், பாளையக்காரர்களால் பரிபாலிக்கப்பட்டுவந்த மத்திய காலத்து அதிகாரமுறைமைக்கும், இயந்திரசக்தியினைப் பெற்றார்போன்ற இக்காலத்திய அரசாங்க முறைமைக்கும் உண்டான விகற்பங்களே அரசாங்கத்தின் வேறுபாட்டுக்குக் காரணம். இங்ஙனம், மானிட சமூகத்தைப் பற்றிய ஸ்தாபனங்களின் வேறுபாட்டினின்றுமே, அரசாங்க முண்டாகி, அதன்வழியாக இராஜரீகசாஸ்திரமொன்றும் ஏற்பட்டது. பதார்த்தங்களின் வேறுபாடுகளே ஆராய்ச்சிக்குக் காரணமாய் நின்று விர்த்தியையுண்டாக்குகின்றன. ஸ்தூல பிரபஞ்சத்தின் கண்ணுள்ள ஜடபதார்த்தங்களும் ஜீவபிராணிவர்க்கங்களும், உருவத்திலும் குணத்திலும் அமைப்பிலும் வேறுபட்டு நானாவிதமாக யிருப்பதின் காரணமாக ஸ்தாவர சங்கம சாஸ்திரிகள் தோன்றி அவைகளை ஆராய்ச்சி செய்கின்றனர். ஜட பதார்த்தங்களும் பிராணிவர்க்கங்களும் வேறுபாடின்றி ஒரேமாதிரியாக யிருந்தால் பிரபஞ்சத்தின்போக்கு ஒரு வழியாக யிருந்து சாதாரணமாக நிற்கும். அவ்வழியொழிந்து பல வழிபொருந்தி வருவதால், பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்களை யறிய மனிதனுக்கு அவகாச மேற்பட்டது. அம்மாதிரியாகவே, மானிட சமூகவாழ்க்கையில், ஜாதி, ஜாதிக்கலப்பு முதலிய பல வித்தியாசங்கள் காணப்படுவதின் காரணமாக இராஜரீக சாஸ்திரம் உண்டாயிற்று. சகவாஸ முறைமையின் தன்மையைப் பற்றி வரும் மானிட சமூக சாங்கத்தின் ஆராய்ச்சியே இராஜரீக சாஸ்திரத்தின் இயல்பு எனச் சிலர் கூறுவர்.



மானிட சமூக சாங்கம் அடிக்கடி வேறுபாட்டையும் பெயர்ச்சியையுங் கொள்கின்றது. புதியன புகுதலும், பழையன கழிதலும், சிறியன பெரியனவாவதும், பெரியன சிறியனவாவதும், மானிட சமூக சாங்கத்தின் தன்மைகளாகும். மானிட சமூக சாங்கம் விர்த்தியாகிப் பெருகப்பெருக கிரியைகளும் கிரியைகளின் அங்கங்களும் அவைகளின் வேறுபாடுகளும் அபிவிர்த்தியடைகின்றன. ஸ்தூல பிரபஞ்சத்தில் மனிதவாழ்க்கையானது சுத்தமாகவும் இயற்கையாகவுமிருப்பது நீங்கி, வித்தியாசமாகவும் கலப்பாகவுமாறுகிறது. காலநிலையையும் இடநிலையையுங் கொண்டு, மானிட சமூக சாங்கம் படிப்படியாகப் பலவித நாமரூபங்களைக் கொண்டு நிற்பதால், அதைத்தழுவிவரும் அரசாங்கங்களின் வகைகளை யறிதல் அவசியமாகும். தவிர, அவ்வரசாங்கங்களின் வகைகளை யறிவதோடு சரித்திரங்களை அறிதலும் முக்கியமானது. மானிட சமூக சாங்கத்தைப்பற்றி மட்டும் கூறுவதைவிட அச்சமூக சாங்கத்தின் விர்த்தி விவரணங்களையும், காலத்தினாலேற்பட்ட இயக்கங்களையும், அவ்வியக்கங்களின் சரித்திரங்களையும் அறிதல் நலம். இங்ஙனம், விரிவுடன் அறிவதற்கே இராஜரீக சாஸ்திரமென்றும் அல்லது இராஜரீக சாஸ்திரத்தில் அறியப்படும் விஷயங்கள் இவையிவையென்றும் சில மேதாவிகள் கூறுவர். ஆகவே, மானிட சமூக சாங்கத்தின் தன்மை பூர்வம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தமையால் அது இனிவரும் வாழ்க்கைக்கும் ஆதாரமாகவே யிருக்கும். சரித்திரமும் இராஜரீக சாஸ்திரமும் இணைபிரியா நேசர்கள். சரித்திரக்காரர்

சரித்திரமே உயர்ந்த தென்றும், இராஜரீக சாஸ்திரக்
ஞர் அரசியல் நூலே உயர்ந்த தென்றும் அவரவர்
மனோபீஷ்டப்படி கூறுவர். சரித்திரமின்றி இராஜ
ரீக சாஸ்திரம் இல்லையென்பது உலகமறிந்ததே.
இராஜரீக சாஸ்திரத்தின் குறிப்புகள் சரித்திரத்திற்
காண்பதரிதாயின், அச்சரித்திரம் தன் பெருமையை
யிழக்கின்றது. சரித்திரத்திற்குப் பெருமை இராஜரீக
சாஸ்திரமேயாம். தவிர, அத்யாத்ம சாஸ்திரத்தை
யும் தர்மசாஸ்திரத்தையும் அது தழுவியிருத்தல் வேண்
டும். ஆகவே, இராஜரீக சாஸ்திரமானது, சரித்திரம்,
தர்ம சாஸ்திரம், அத்யாத்ம சாஸ்திரம், பொருள் நூல்,
நீதிசாஸ்திரம் ஆகிய யாவையும் தழுவி நிற்கும். ஆற்று
மணலில் பொன்மணி இறைந்திருப்பதுபோல், சரித்திர
த்திரட்சியில் அரசியல் நூல் இறைந்திருக்குமென்று
பண்டிதர் ஸீலி கூறியுள்ளார். சரித்திரத்தின் பலப்
பிரயோசனமே அரசியல் நூலென்றும், சரித்திரமே
இராஜரீக சாஸ்திரத் (அரசியல் நூல்)திற்கு மூலாதார
மென்றும் பண்டிதர் ஸீலி மீண்டும் கூறியுள்ளார். சரித்
திரமும் அரசியல் நூலும் ஒன்றையொன்று பற்றிவரும்
விஷயமாயினும், சரித்திரத்திற்கும் அரசியல் நூலுக்
கும் சம்பந்தமில்லையென்பதையும் நாம் கவனிக்கவேண்
டும். சரித்திரத்திற் கூறப்படும் கதைகளைப் பற்றியும்
காலக்குறிப்புகளைப்பற்றியும், படையெழுச்சி, வர்த்த
கம், விவசாயம் முதலிய சரித்திரங்களைப் பற்றியும் இரா
ஜரீக சாஸ்திரத்திற்கு யாதொரு சம்பந்தமுமில்லை.
ஆனால், சரித்திரத்தில் சமுதாயங்களின் விர்த்தி, மானிட
சமூக சாங்கம், அரசுரிமை முதலியவைகளைப்பற்றிக்



கூறுமிடங்களில் மட்டும் அரசியல் நூலுக்குச்சம்பந்தம்
ஏற்படுகின்றது. மற்ற விடங்களில் இல்லை. இராஜரீக
சாஸ்திரத்திற்கும் அர்த்தசாஸ்திரத்திற்கும் சம்பந்த
முண்டு. அர்த்த சாஸ்திரம், பொதுவாகத் தனம் தேடு
கின்றவழியில் மனிதனுடைய நடமாட்டத்தைப் பற்றி
க்கூறும். அது தன உற்பத்தி, தன விபாகம் முதலி
யவைகளைப் பற்றிக் கூறுவதுடன், இம்மைக் கண்ணே
தன உற்பத்திக்கு, அரசாங்க அமைப்பு காரணமாக
நிற்பதாலும், அர்த்த சாஸ்திரத்தை இராஜரீக சாஸ்
திரத்துடன் சேர்த்து சம்பந்தப்படுத்தியுள்ளார். பொ
ருளாதாரத்தின் சந்தர்ப்பத்தை யொட்டியே அரசு
என்பது ஸ்தாபிக்கப் பட்டதெனச் சிலர் கூறுவர்.
அரசாங்கத்தைப் பற்றிய இருப்புப்பாதை, ஸ்தல சுய
ஆட்சி ஸ்தாபனங்களில் பொதுப்பிரயோசனத்திற்குரிய
பாத்தியதைகள் ஆகிய இவையும் பிறவும் பொருளாதார
த்தையும் இராஜரீகத்தையும் சார்ந்து நிற்கும். அர்த்த
சாஸ்திரியொருவனுக்கு அவைகள் பொருளாதாரத்
தைப்பற்றியதாகவும், இராஜரீக சாஸ்திரக்ஞனொருவ
னுக்கு அவை அதிகார முறைமையைப்பற்றியதாகவும்
காணப்படும். குறித்த ஒரு காலத்தில், குறித்த ஒரு அர
சின் அங்கங்களைச் சேர்ந்த பிரமாணச்சட்டமும், இராஜ
ரீக சாஸ்திரத்தின் ஒரு பிரிவு என்றும் கூறப்படுகிறது.
ஒரு அரசாங்கத்திற்கும் மற்றொரு அரசாங்கத்திற்கும்
உண்டாகும் சம்பந்தா சம்பந்தங்களினால் ஏற்படும்
சர்வதேச சம்பந்த சட்டங்களையும் இராஜரீக சாஸ்திரத்
திற் சேர்ப்பதா வென்னும் விஷயத்தில் அபிப்பிராய
பேதங்கள் உண்டாயிருக்கின்றன. அரசாங்கம் ஒவ்

வொன்றிற்கும் உண்டாகும் சம்பந்தத்தினால் சர்வதேச
சம்பந்த சட்டமொன்று நிர்ணயிக்கப் படுவதால், அச்
சர்வதேச சம்பந்தச் சட்டம் இராஜரீக சாஸ்திரத்திற்
குட்பட்டதாகவேயாகும். நிற்க, இராஜரீக சாஸ்தி
ரத்திற்கும் ஜனசமூக சாஸ்திரத்திற்கும் நெருங்கின
சம்பந்தமுமுண்டு. ஜனசமூக சாஸ்திரமானது ஜாதி
சாங்கம், ஜாதிசாங்கத்தைப் பற்றிய அதிகாரமுறை
ஆகிய இவைகளைப்பற்றிக் கூறும். மனிதன் தன்னு
டைய சகவாசத்திற்குரிய இதரர்களோடு சம்பந்தம்
வைத்துக் கொள்ளுகையில் ஏற்படும் பலவந்த முறை
மையையும் நீதிமுறைமையையும் பற்றி ஜனசமூக சா
ஸ்திரம் கூறுவதுடன், மனிதர்களின் ஆசார அநுஷ்
டானங்கள், மதக்கொள்கைகள், வழிபடுதெய்வங்கள்,
ஜீவனவழிகள் ஆகிய இவைகளையும் அவைகளின் பரிணா
மங்களையும் பற்றி அது கூறும். அரசாங்க தத்துவத்
தையும் ஜன சமூகங்களின் உற்பத்தியையும் பற்றிக்
கூறும் ஜனசமூக சாஸ்திரத்தின் ஒருபகுதி இராஜரீக
சாஸ்திரமெனச் சிலர் கூறுகின்றனர். அரசு அரசை
ப்பற்றிய விவரம், ஸ்வரூபத்தன்மை, ஈனுமித அங்கங்
கள், அவைகளின் ஆவிர்ப்பவம், அபிவிர்த்தி ஆகிய
இவையாவையும் விரிவாகவும் தெளிவாகவும் கூறுவதற்
கே இராஜரீக சாஸ்திரமென ஜே. கே. பிளண்ட்ஸ்சிலி
கூறியுள்ளார். நிற்க, 'அரசு' என்பதின் பொருளும்,
அதின் முக்கிய குணங்களும் என்னவென்பதைப்பற்றி
ஆராய்வோம். இராஜரீக சாஸ்திரம், 'அரசு' என்ப
தின் இயல்பைப்பற்றிக் கூறும். ஆதலாற்றான், இதற்கு
அரசியல் என்று பெயர் வந்தது. அரசு என்பது பல



பொருளைக்குறிக்கும் ஒரு சொல். அரசு என்பதற்கு
இராஜ்யம், தேசம், சமூகம், சாங்கம் ஆகிய பொருள்க
ளுண்டு. ஐரோப்பாவிலுள்ள பிரான்சு, ஜர்மனி முதலிய
இராஜ்யங்களுக்கு அரசு என்னும் பெயரைத்தந்ததின்
பயனாக அவைகள் வல்லரசுகள் என அழைக்கப்படுகின்
றன. அரசு என்னுஞ் சொல்லை இங்கு தேசத்திற்கும்
உபயோகப்படுத்தலாம். மற்றும் அரசும் மததர்மமும்
(Church and the State) என்னுமிடத்தில், அரசு
என்னும் ஸ்தாபனமும் மததர்மம் என்னும் ஸ்தாபன
மும் என்ற பொருளையே அது குறிக்கும். அரசும்
மததர்மமும் என்ற யிடத்தில் அரசு என்பதற்கு அதி
கார மென்றும் கூறலாம். பின்னர், அரசும் மனித
னும் ((The State and the Individual) என்ற விடத்
தில் அரசு என்னும் சமூகமும் மனிதன் என்னும்
தனி நபரும் என்ற பொருளைக்குறிக்கும். இங்கு, அரசு
என்பதற்கு சமூகம் என்று பொருள். சமூகத்திற்கும்
தனி மனிதனுக்குமுள்ள தாரதம்மியத்தைக் காண்பிக்
கவே அப்பதம் ஈண்டு உபயோகப்படுத்தப்பட்டது.
'ஏழைகளுக்கு அரசு உதவி' (State aid to the poor)
என்பதில் அரசு என்னும் பதத்திற்கு சாங்கம் அல்லது
ஆட்சிபரிபாலனம் என்று பொருள். மேற்கூறிய பல
பொருள்களைக்கொண்டு இராஜரீக சாஸ்திரத்தில் 'அரசு'
என்பதென்ன வென்று நாம் அறியக்கூடும். அரசுக்கு
அங்கங்கள் அல்லது பிரகிருதி நான்கு என மேனாட்
டார் கூறியுள்ளார். பாரதநாட்டுப் பூர்வ இராஜரீக
சாஸ்திரக்ஞர்கள் அரசுக்குரிய உறுப்புகள் ஏழு என்று
கூறினர். சிறந்த புத்தியுள்ள மந்திரிகள், பல சனங்

களினால் விரும்பப்பட்ட தேசம், பகைவரால் வெல்ல முடியாத சிறந்த நகரம், கஷ்டத்தில் தாங்கத்தக்க பொக்கிஷம், அன்புள்ள சேனை, இன் சொல் மாறாத மந்திராலோசனை, தன்னைச்சேர்ந்தவர்களை ஆளும் வகை தெரிந்த அரசன் ஆகிய இவ்வேழும் பிரகிருதிகளெனப் படும். (சாந்திபர்வம்)

"படை குடி கூழமைச்சு நட் பரணாறு
முடை யானரசரு ளேறு"—(திருவள்ளுவர்)

சேனை, நாடு, பொருள், அமைச்சு, நட்பு, அரண் இவ்வாறங்கங்களையுமுடையவன் அரசருள் ஆண் சிங்கம் போன்றவன் எனக் கூறப்பட்டுள்ளது. ஈண்டு, குடி என்பதற்கு நாடு என்று உரை செய்யப்பட்டுள்ளது. மேனாட்டார், தேசம், ஜனத்திரள், ஐக்கியம், சாங்கம்‌ என நால்வகை உறுப்புகளைக் கூறியுள்ளார். அவைகளை ஆராய்வோம். முதன்முதல் தேசமில்லாமல் அரசு இல்லை. யூதர்கள் ஆங்காங்கு பல விடங்களிலுஞ் சிதறியிருப்பதினாலும், அவர்கள் ஒரு அதிகாரத்திற்கும் அல்லது ஒரு ஆட்சிக்கு முட்படாமல் பல்வேறு அதிகாரங்களுக்குட்பட்டிருப்பதால் அவர்கள் அரசு என்பதைக் கொண்டவர்களாக மாட்டார்களென்று கூறுகின்றனர். பொதுவாக ஒரு தேசத்தை அல்லது ஓரிடத்தைப் பல்வேறு மனித ஜாதிகள் கொண்டு வசித்து வருவதற்கு அரசு என்றுங் கூறலாம், என பண்டிதர் ஹாலந்து கூறியுள்ளார். இரண்டாவதாக, ஜனத்தொகை அவசியமானது. ஜன சஞ்சாரமும் ஜனவாசமுமில்லாத இடத்திற்கு அரசு என்று கூறமுடியாது. மூன்றாவது ஐக்கியம்; தேசத்திற்கும் ஜனத்தொகைக்



கும் நெருங்கின சம்பந்தமு மிருக்கவேண்டும். பூகோள அமைப்புப்படி தேசம் ஒன்றாயிருப்பினும், ஜனசமூகத்திற்கு நெருங்கின சம்பந்தமில்லையாயின் அத்தேசத்திற்கு அரசு என்றும் கூறார். உதாரணமாக, அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தின்கீழ் பற்பல சிறிய சிறிய தேசங்கள் இருப்பினும், அத்தேசங்களுக்குத் தனித் தனியே அரசு என்று கூறுவதில்லை; அவை மொத்தமாக ஒன்றுசேர்ந்து உண்டாகும் அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்திற்கு அரசு என்று கூறுவர். தேசமொன்று இருந்தபோதிலுஞ் சரி, ஜனத்திரள் இருந்தபோதிலுஞ் சரி, அல்லது இதர உலகத்திற்கு (தேசத்திற்கு)ச் சம் பந்தமின்றித்தனியே யொன்றாக அச்சனத்திரள் இருந் தபோதிலுஞ்சரி, அப்பொழுதும் அது அரசு ஆகமாட் டாது. மனிதவர்க்கத்தின் கணக்கற்ற கூட்டம் யாதா மொரு அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்படாததும் சொந்தமில்லாததுமான மனித சஞ்சாரமற்ற ஒரு தீவில் வைக்கப்பட்டிருப்பதாக எண்ணமுடியுமேயன்றி அரசு உள்ளதாக எண்ண முடியாது. தேசம், ஜனத்தொகை, ஐக்கியம் ஆகிய இம்மூன்றும் இருந்தும், சனங்களுக் குள் சம்பந்தமும் கூட்டுறவும் இல்லாமற்போனால் அரசு உண்டாகமாட்டாது. ஆனால், மேற்கூறிய சந் தர்ப்பத்திலுள்ள சனங்கள், ஒழுங்கான ஓர் அரசாங் கத்தின்கீழ் சம்பந்தமும் கூட்டுறவும் கொண்டு ஐக்கிய சமூகமாக வாழவும், அவர்களுக்குள்ளே சிலரை அதி காரஞ்செலுத்த நியமிக்கவும் முன்வருவார்களானால் அப்பொழுது அவர்கள் அரசு பெற்றவர்களாவார்கள். தவிர, அச்சனங்களுக்குள்ளே சிலர் தங்கள் தேக வலி

மையினால் பலாத்காரத்தைப் பிரயோகஞ்செய்தோ, அல்லது சூழ்ச்சியினால் (தந்திரத்தினால்) வஞ்சகஞ் செய்தோ மற்ற சனங்களைக் கீழ்ப்படுத்தி அதிகாரத்தையும் கீழ்மையையும் ஸ்தாபித்தால் கூட, அவர்கள் அரசு பெற்றவர்களாவார்கள். அரசு என்பதை ஸ்தாபிக்க ஒவ்வொருவருடைய அபிப்பிராயமும் நீதிநிறையும் ஆவசியமில்லை. உயர்ந்தவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதென்னுங் கிரமம் ஒன்றுமட்டும் இருந்தால் அரசுக்குப் போதும். எந்த விதமான கொடுங்கோன்மையாக யிருந்தபோதிலும், எவ்வித குரூர ஆதிபத்யமாகயிருந்தபோதிலும் சரி அதிகாரமும் கீழ்மையும் கிரமமாக நடந்துவந்தால் இராஜீய சாஸ்திரத்தில் அல்லது அரசியற்றுறையில் அரசு என்பதாகிவிடும். அரசு என்பதின் தன்மை இதுவேயாம். குறித்த தேச எல்லைக்குள் சட்டத்திற்குட்படும் ஜனங்களுக்கு அரசு எனப்படும் என்று அமெரிக்கா தேசத்து அத்யட்சகராயிருந்த உல்ஸன் கூறியுள்ளார். குறித்த எல்லைக்குட்பட்ட தேசத்தில் சாசுவித சட்டத்தைக்கொண்டு ஒரு சனசமூகம் தன் அதிகார உறுப்புகளைக்கொண்டு நியாயம் செலுத்தினால், அதற்கும் அரசு என்று தியோடோர் உல்ஸி கூறியுள்ளார். மனிதவர்க்கத்தின் பல்வேறு தொகுதி ஒரு தேசத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டும் அங்ஙனம் சுவாதீனப்படுத்தின மனிதக் கூட்டத்தின் பெருந்தொகையாளர்களின் அதிகாரமாகிலும் அல்லது விஷயங்களை யறியக்கூடிய வகுப்பின் தீர்மானமாகிலும் அச்சனங்களைக்கட்டுப் படுத்தி அதிகாரத்திற்குக் கீழ்படியும்படி செய்வதற்கு அரசு எனப்படும் என்று டி. ஈ. ஹா



லந்து கூறியுள்ளார். அரசு என்பதற்கும் சமூகம், கவரன்மெண்டு, சமுதாயம் ஆகிய இவைகளுக்குமுள்ள வித்தியாசத்தையும் கவனிப்போம்: சமூகத்திற்கும் தேச அமைப்புக்கும் சம்பந்தம் அதிகமாக இல்லையென்பது சிலமேனாட்டு இராஜரீக சாஸ்திரக்ஞர்களின் அபிப்பிராயம். சமூகமானது மனிதனைப்பற்றி மட்டும் அறிவிக்குமேயன்றி, அம்மனிதனுடைய சுற்றுப்பக்கங்களை அறிவிக்காது. மனிதனைப்பற்றி விசாரிக்கையில் அரசு என்பதைவிட சமூகத்திற்குப் பரந்த தன்மையுண்டாகிறது. ஒழுங்கானதும், ஒழுங்கீனமானதுமான எல்லா மனித சாங்கத்தையும் பற்றி அச்சமூகம் அறிவிக்கும். சமூகத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்கையில் மனிதனுடைய மத தர்மம், விவசாயவர்த்தக நடமாட்டம், கல்வி, குடும்ப அமைப்பு, தவறுகள் ஆகிய இவையாவும் வருகின்றன. அரசு என் [illegible] கவன்மெண்டு குறுகினதாகவே யிருக்கும். இராஜீய அதிகார முறைமையைத் தற்கால சாந்தியாகவைத்து அரசை நடத்தும் தொகையாளர்களுக்குச் சமூகம் என்றும் கூறுவர். ஒரு சாதியைச் சேர்ந்த நபர்கள், அரசு என்னும் அமைப்புக்கு ஓர் உறுப்பாக யிருப்பர்; ஆனால், அந்நபர்கள் கவரன்மெண்டுக்கு உறுப்பாக மாட்டார்கள். அரசு என்பதும் சமுதாயம் என்பதும் வெவ்வேறு அர்த்தத்தைக் கொடுக்கக் கூடிய பதங்களாகும். சமுதாயமானது ஒரு சாதியையாகிலும் அல்லது பல சாதிவர்க்கங்களைப் பற்றியாகிலும் கூறும். உதாரணமாக, பிரன்சு சாதியார், பிரிட்டிஷ் சாதியார், ஜர்மென் சாதியார் என்பதில் சாதியார் என்னுஞ்

சொல் சமுதாயத்தையே குறிக்கும். பொதுவான பாஷையும், பொதுவான வமிசமும் இருக்கும் சாதியார்களுக்கே சமுதாயம் என்பர். அரசுக்குப் பொது சமுதாயமொன்று அவ்வளவு ஆவசியமில்லையென்றும், அச்சமுதாயம் பொதுவாகயிருப்பதால் அது அரசுக்கு அதிக பலத்தைக் கொடுக்கிறது. அரசுக்குப் பொதுவான மதக்கோட்பாடுகள் இருத்தல்வேண்டுமென்று பூர்வம் ஐரோப்பிய இராஜரீக சாஸ்திரக்ஞர்கள் கூறி வந்தனர். பிறகு, மததுவேஷம் குறைந்து சமரஸமத உணர்ச்சி ஜனங்களுக்குள் உண்டானதும், மனிதன் தன் இஷ்டப்படி மததர்மத்தைக் கொள்ளலாமென்னும் நியமம் ஏற்பட்டு விட்டது. ஆகவே, அரசுக்குப் பொதுப்படையான சமுதாயமொன்றும், பொதுப்படையான பாஷையும், பொதுப்படையான மததர்மமும் வேண்டு[illegible]ம். அதிகாரமும் கீழ்மையும் ஒழுங்காக மட்டும் நடந்துவந்தால் போதுமென்பதும், இக்காலத்திய இராஜரீக சாஸ்திரக்ஞர்களின் துணிபு. அரசு உண்டான விதமும் அதைப் பற்றிய அபிப்பிராயமும் அடுத்த அத்தியாயத்திற் காண்க.

## 2. அரசின் மூலம்

இராஜரீக சாஸ்திரம் இன்னதென ஆராய்ச்சி செய்தவுடன், அரசு உண்டானதற்கு மூல காரணம் யாதென ஆராய்ச்சி செய்யவும் நம்மனம் நாடுகின்றது. மனிதர்கள் அனைவரும் யாதாமொரு அதிகாரத்தின் கீழ் இருந்து வரவேண்டுவதேன்? அங்ஙனம் ஏற்பட்டதற்குக் காரணமென்ன? பின்னர் கவர்ன்மெண்டும் சட்டமும் உண்டானதற்கு மூல காரணமென்ன? எனப் பல கேள்விகள் பிறக்கின்றன. கவர்ன்மெண்டின் ஆதியையறிவது கேவலம் கதையாக மட்டும் ஆகாது. கவர்ன்மெண்டின் ஆதியையறிவதற்கு வேறு காரணமுமுண்டு. ஆகவே, அதைப்பற்றியே நாம் இனி ஆராய்வாம். கவர்ன்மெண்டின் சரித்திர, கரும சாஸ்திர சம்பந்தங்களையும் பற்றி அறியவே அரசின் மூலதத்துவத்தை நாம் முதன்முதல் அறியவேண்டும். இவ்வறிவின் வழியாகவே, அரசின் அங்கங்களையும், அதின் நன்மை தீமையையும், அரசியலின் செங்கோன்மை கொடுங்கோன்மையையும் அறிய நமக்கு சந்தர்ப்பமுண்டு. அரசு ஏற்பட்டதைப் பற்றிய மூல காரணங்களைப் பலர் பல விதமாகக் கூறியுள்ளார். அப்பலவித அபிப்பிராயங்களையும் நாம் கவனித்து ஆராய்ச்சி செய்தால் தற்காலத்து அரசாங்க ஸ்தாபனங்களின் முறையும் ஒருவாறு அறியக் கூடும். மனிதர்களின் அன்யோன்னிய வாழ்க்கையின் ஒப்பந்தக் கோட்பாடு (theory of social contract) களினின்றுமே அரசு உண்டாயிற்றென கூறப்படுகிறது; இது

விஷயமாக இன்னும் விளங்க வைக்கவேண்டுமானால், மனிதவர்க்கத்தின் சரித்திரத்தையே ஆராய்ச்சி செய்யவேண்டும். மனிதவர்க்கத்தைப்பற்றிய சரித்திரம், அரசு உண்டானதற்கு முற்பட்ட காலமென்றும், அரசு உண்டாவதற்குப் பிற்பட்ட காலமென்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் காலவகையில், மனிதன் தன் ஸ்வபாவ நிலைமையிலேயே யுள்ளான். மனிதர்களால் செய்யப் படாததும், கட்டுப் படுத்தக் கூடிய சட்டங்கள் ஒன்று மில்லாமலும், மனிதனுடைய் பிரகிருதி குணத்தை யொட்டிய ஸ்வபாவ நியமங்களுக்கு மட்டும் ஆளாகி யதேச்சையாக அக்காலத்தில் மனிதன் திரிந்துவந்தான். அதுகாலை, எழுத்து மூலமாக உண்டான சட்டம் எங்கும் ஏற்படவில்லை. அங்ஙனம், எழுத்து மூலமாக யில்லாத அச்சட்டங்களுக்கு இயற்கைச் சட்டம் அல்லது ஸ்வபாவிக சட்டம் என்பர். இத்தகைய பூர்வீக ஒழுக்க வழக்கங்களைக் கொண்டு தனித்திருக்கும் வாழ்க்கையை வெறுத்து நாளடைவில், மனிதர்கள் சேர்ந்து வாழும் அன்னோன்னிய வாழ்க்கையை மேற்கொள்ள முயன்றனர். இங்ஙனம், சேர்ந்து வாழும் தன்மையைப் பெற்றவுடன் ஒவ்வொருவனும் தனித்தனியே தனக்கும் இதரர்களுக்குமுள்ள சம்பந்தத்தை யுணரலானான். பொதுவாகக் கூட்டு அதிகாரத்திற்குட்பட்டு மனிதன் நடக்க,வாரம்பித்ததும், அவன் பலருடைய பாதுகாப்பிலும் மேல் பார்வையிலும் இருக்கக் கூடிய நன்மையை யடையலானான். சமூக வாழ்க்கையிலுள்ள எல்லா மனிதர்களுடைய யோக க்ஷேமங்களைக் கவனித்து வருவதற்கே



பிரத்யேக மான சட்டங்களுண்டாயின. ஒருவனை யொருவன் தாக்காமலும் துன்புறுத்தாமலும், விரோதிக்காமலும் இருக்கவே சில நியமங்கள் திட்டப்படுத்தப்பட்டன. இந்நியமங்களுக்கே சட்டங்களெனப் படும். மனிதன் யதேச்சையாக ஸ்வபாவீக சட்டத்திற்குட்பட்டு, வேறொன்றையும் லட்சியப் படுத்தாமல் அனுபவித்து வந்த சுதந்தரம் ஒழிந்து, அதற்குப் பதிலாக, மற்றவர்களோடு சேர்ந்து வாழவும், வாழும் நிலைமையிலுண்டாகும் விபரீதங்களைத் தடுத்துக் காப்பாற்றவுமான சௌகரியத்தைச் சமூக சட்டங்களினின்றும் அனுபவிக்கலானான், ஸ்வபாவீக சட்டங்களுக்குப் பதிலாக மனிதர்களாற் செய்யப்பட்ட சட்டங்களுண்டாயின; இச்சட்டங்களால் மனிதன் சமூக உரிமையைக் கொண்டு சமூக கடமையை மேற்கொண்டு ஒழுகலானான். மனிதன் ஒவ்வொருவனும் தனக்குரிய உரிமையையும் பாத்தியதையையும் நன்கு அனுபவிக்கக் கருதியே, சமூகத்தை யுண்டாக்கி அன்னோன்னியமாகச் சேர்ந்து வாழ ஓர் உடன்படிக்கைக் குட்படலானான். மனிதன் எப்பொழுதும் சேர்ந்து வாழும் பிராணியாதலால் சமூகவாழ்க்கை அவனுக்கு இன்றியமையாதது. சமூக அமைப்பின் பலத்தினாலேயே தனி மனிதன் தன்னுடைய யோகக்ஷேமங்களை யுத்தேசித்தும் உரிமையையும் பாத்தியதையையும் பந்தோபஸ்தையும் உத்தேசித்தும் சமூக அன்னோன்னிய உடன்படிக்கைக் கோட்பாட்டுக்கு உட்பட்டு வரலாயினான். மனிதன் தன்னுடைய சுய நன்மையையும் சுய பாதுகாப்பையும் உத்தேசித்தே ஸ்வராஜ்யத்தை யொட்டிய அரசாங்கத்தின்

சட்ட திட்டங்களுக்கும் அல்லது பராஜ்யத்தை யொட்டிய அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க முயலுகின்றான். இம்மாதிரியே, ஒரு சமூகத்தினர் ஒன்றுசேர்ந்து தங்கள் சுயநன்மைக்காகவும், தனித்தனி மனிதனுடைய நன்மைக்காகவும் ஒருவனை நியமித்து அவன் கூறியபடி நடப்பதென்னும் உடன்படிக்கை யொன்றை செய்துகொண்டனர். அங்ஙனம் நியமிக்கப்பட்ட மனிதனுக்கே அரசன் என்று பெயர். இந்த முறைக்குக் கவர்ன்மெண்டு உடன்படிக்கை (Governmental Compact) என்று பெயர். ஐரோப்பாவில் 17-வது 18-வது நூற்றாண்டுகளிலுண்டான மத இயக்கம், இராஜ்ய புரட்சி இவைகளின் மூலமாக இராஜரீக சாஸ்திரக்ஞர்கள் சிலர் தோன்றி, புதிய புதிய அரசாங்க முறைமையை ஸ்தாபித்துள்ளார். அங்ஙனம் தோன்றிய அச்சிலர்களில், ஹாப்ஸ், லாக், ரூஸோ இவர்களே முக்கியமானவர்கள். முதலிரண்டு பேர் இங்கிலாந்திலும், ரூஸோ பிரான்சு தேசத்திலும் அரசாங்க முறைமையின் தத்துவத்தைச் சித்தாந்தப்படுத்தினர். அம்மூவர்களுடைய தத்துவங்களை யறிவாம்:—ஹாப்ஸ் அவர்களுடைய சித்தாந்தப்படி மனிதன் சுயகாரியமும், சுயநலமுங்கருதும் பிராணி. மனிதனுடைய செயல்களைச் சரிவர ஆராய்ச்சி செய்தால், தன்னைத்தான், திருப்தி செய்துகொள்வதும், தன் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்வதும், தன்னுடைய இலாபத்தையே நாடி நிறைவேற்றிக்கொள்வதுமாகவேயிருந்துவருகிறது. தவிர, அக்காரணங்களால், அவன் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் நாடுகிறான், பிறர்



கஷ்டப்படுகின்ற காலத்தில் இவனும் சேர்ந்து துக்கப்படுவதின் காரணம், தனக்கும் அத்தகைய கஷ்டம் வந்துவிடுமோவென்னும் பயத்தினாலேயேயாம். கஷ்டமும் சுகமும் தன்னைப்பற்றியே பிறரை நாடி, மனிதன் வருந்துவதும் களிப்பதுமாக யிருக்கிறான். ஆகவே, மனிதன் தனித்து வாழமுடியாதவனாய்ச் சமூக வாழ்க்கையைக்கொண்டு ஒப்பந்தக்கோட்பாட்டுக்கு உடன்படுகிறான். தவிர, மனிதன் ஒவ்வொருவனும் தன் காரியத்தையே பெரிதுங் கருதி வருந்நிலைமையிலிருப்பதால், சண்டையும் சச்சரவும், வேறுபாடுகளும் மற்ற பலவித வித்தியாசங்களும் ஏற்பட்டு சதா பயமும் கொடுமையும் கொலையும் களவுமே யுண்டாகும். இந்நிலைமையில் மனிதன் தனித்து எப்படியிருக்கமுடியும்? ஆதலாற்றான், மனிதன் தன்னைத்தான் காத்துக்கொள்ளவே, சனசமூக அமைப்பில் கலந்து ஒன்றுசேர்ந்து, யாதாமொரு அதிகாரத்தின்கீழ் எத்தகைய சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு வசிக்க விரும்புகிறான். இத்தகைய ஒப்பந்தத்தில் எல்லா மனிதர்களும் ஒருவனுடைய அதிகாரத்தின் கீழிருக்க சம்மதிக்கின்றனர். அவன் யதேச்சாபதியாகிறான். இத்தகைய உடன்படிக்கையினால் அவன் (யதேச்சாதிபதி) நன்மையும் இலாபத்தையு மடைந்தபோதிலும், அவ்வுடன்படிக்கைக்கு ஆதீனப்படாமல் நிராதீன யதேச்சாதிபதியாக ஆகிறான். அந்த யதேச்சாதிபதியின் கட்டளைப்படி அச்சமூகத்தினர் நடக்கக் கடமைப்பட்டவர்களாகின்றனர். இந்த உடன்படிக்கையைக்கொண்ட அரசுக்கு நிராதீன யதேச்சாதிபத்யம் (Absolute Monarchy)

என்று ஹாப்ஸ் கூறுகிறார். ஆனால், ஜான் லாக் அவர்கள் வேறுவிதமாகக் கூறியுள்ளார். ஹாப்ஸ் அவர்களுடைய சித்தாந்தப்படி மனிதன் ஒவ்வொருவனும் சண்டையுஞ் சச்சரவுங்கொண்ட நிலைமையிலிருக்கிறான் என்பதை ஜான் லாக் ஒப்புக்கொள்ளவில்லை. மனிதன் சண்டை சச்சரவு செய்யுந்நிலைமையிலிருக்கிறானென்று கூற ஜான் லாக் சம்மதிக்கவில்லை. மனிதன் ஒவ்வொருவனும், அவிவேகத்தாலும், சுயநலங் கருதி ஒழுகுந் தன்மையாலும், ஒழுங்கான சட்டதிட்டமொன்றுமில்லாததாலும் நியமத்துடன் கூடிய ஓர் ஏற்பாட்டுக்கு உட்படாமலிருக்கிறான். தவிர, இயற்கைச் சட்டங்களை யறிந்து நீதிபுரியும் தக்க நீதிபதியாகிலும் அல்லது அச்சட்டங்களை மீறி நடக்காவண்ணம் பாதுகாக்கக்கூடிய ஒரு அதிகாரமாகிலும் இல்லை. இக்காரணங்களினாலேயே ஸ்வபாவிக நிலைமையையும் அந்நிலைமையிலேற்பட்ட சுதந்தரத்தையும் விட்டுவிட்டு மனிதன் சமூக வாழ்க்கையின் ஒப்பந்தத்திற்குக் கட்டுப்படுகிறான். இங்ஙனம், உண்டாகும் ஒப்பந்தத்தில் ஏற்படும் தலைவன் அல்லது அதிபதி, சனசமூக வாழ்க்கையின் ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டவனாகிறான். ஹாப்ஸ் அவர்களுடைய சித்தாந்தத்தில் தலைவன் நிராதீனமாகவும் யதேச்சையாகவும் இருப்பதுபோல, இவருடைய சித்தாந்தத்திலில்லாமல் சனசமூக உடன்படிக்கைக்கு ஒத்து, அச் சமூகத்தில் அங்கத்தினனாயிருந்து, அச்சமூக ஒப்பந்தத்திற்குட்பட்டவனாயிருக்கிறான். இந்த ஒப்பந்தமுறையில் தலைவன் சமூக ஒப்பந்த முள்ளளவும் சமூகத்



தினரின் மனப்படி நடக்கக் கடமைப்பட்டவனாகிறான். இம்முறையை மீறி அத்தலைவன் நடப்பானானால், உடனே ஒப்பந்தம் நீங்கும். ஆகவே, இந்த ஒப்பந்தமுறைக்கு நிர்ணய இராஜ்யாதிபத்யம் (Limited Monarchy) என்று பெயர். மேற்கூறிய இருமுறையைவிட ரூஸோ அவர்களின் முறைவேறானது. ரூஸோ அவர்களின் சித்தாந்தத்தில் மனிதன் நாகரீகமற்ற காட்டு முரண்டனாய், நாகரிகப்பான்மையையின்னதென அறியாத அவிவேகியாய்த் தன்னந்தனியே காட்டுராஜாபோல இன்புற்றிருந்தான். இத்தகைய ஸ்வபாவிக நிலைமையிலுள்ள மனிதனைச் சமூக வாழ்க்கைக்குக் கொண்டுவர, கல்வி, தர்மநீதி முதலிய நாகரிக உணர்ச்சியை யூட்ட வேண்டுமென்பது ரூஸோ அவர்களின் சித்தாந்தம். வமிசம் பல வுண்டாகி விர்த்தியாகப் பழைய ஸ்வபாவிக நிலை மாறுகிறது. பழைய ஸ்வபாவிக நிலையில் மனிதன் தன்னுடைய தற்காப்புக்காகச் செய்யவேண்டிய பிரயத்தனங்களை விட ரூஸோ, அவர்களின் புதிய மாதிரியில் மனிதன் கொஞ்சமாகப் பிரயத்தனப்படுவதுடன், பிரயத்தனஞ் செய்ய இவன் மற்றொருவனை ஏற்படுத்தவுஞ் செய்கிறான். ஆகவே, மனிதன் தன்னுடைய ஸ்வபாவிக நிலைமையினின்றும் நீங்கி, சமூக வாழ்க்கையிற் பிரவேசித்துத் தன்னையொத்த இதரர்களோடு கலந்து உரிமையும் சுதந்தரத்தையும் பெறுகிறான். இதுபற்றியே, அவன் தன்னுடைய நபர் பந்தோபஸ்து, சொத்து பந்தோபஸ்து முதலியவைகளைக் காப்பாற்றும் நிமித்தம், சமூக வாழ்க்கையில் ஒருவரோடொருவர் சேர்ந்து, பூர்வம்

போமப்பாவிஷபாகக்கவசைகென்டை
பொருமலுடன்பெருவயிறுசோகையாண்டு
ஆமப்பாசொல்லுகிறேனவிழ்தங்கேளு
அப்பனேகுமட்டிச்சாற்படிதான்வாங்கி
வேமப்பாயிந்துப்புவிளருகக்கு
விதமாய்விராகனெடையைந்துசேர்த்து
வாமப்பாலோகமுடன் வாளரண்டு
வகைபொன்றாக்கியரைத்து விராகன்கூட்டே. 126

கூட்டடாசடுக்காய்தானிடையைங்கேளு
கூரானவிராகனெடையொன்பதாக
ஆட்டடாசரக்கெல்லாம்பொடியாய்ச்செய்து
அப்பனேபேய்ப்பழச்சாற்படிதான்விட்டு
மாட்டடாபனைவெல்லம் அதுகூறன்...
வகைசேரநறுக்கியிதிலிர்த்திட்டுப்போட்டு
காட்டடாலேகியம்போற்கிண்டிக்கொண்டு
கணபதியைப்பூசைபண்ணி கருதிக்கொள்ளே. 127

கொள்ளவேநோயர்சரீரம்பார்த்து
கொடுத்துவிடுமுள்ளிக்காய்பிரமாணத்தான்
அள்ளவேபேதியதுகாணுந்தெளிர்வே...
அப்பனேபொருநோச்சாதங்கொள்...
தள்ளவேபுளிபுகைபுரும்பாகாது
தனிமையாகப்பாலினோருக்கப்பதாக
பண்ணவேபத்தியமாயுண்டுவந்தால்
பறக்குமடாநோய்க்கெல்லாம்பறக்கும்பாரே. 128

முகவாதத்திற்குத்தயிலம்.
வேறு.

பறக்குமடாமுகவாதம் தயிப்புஸீரப்
பக்குவமாய்ச்சொல்லுகிறேன்பரிந்துகேளு
இறக்குமடாமண்ணிற்றூற்ற பூதகற்ஜை
எரிக்கம்பால்நல்லெண்ணெய்முன்றும் கூட்டி
பிறக்குமடாவொவ்வொன்றுபடிகாலாக
சேரானதேங்காய்ப்பாலிருநாழ்கூட்டி.



இறக்குமடாகல்வத்திலரைத்துக்கொண்டு
அப்பனேயடுப்பேற்றிக்காய்ச்சிடாயே. 129

காச்சடாமெழுகுபதம்வடித்துக்கொண்டு
கண்மூக்குமுகமதிலுங்கண்டத்தூனு
பாச்சிடாய்பகடு செய்தேக்கும்போதுபார்
மூன்றுநாம்பொழுதுபாம்ச்சியாட்டி
மேச்சிடாயித்தயிலங்காணும்போதே
மேதினியில்முகவாதமெய்க்கேபோச்சு
தாட்சிவராதிம்மருந்தைச்செய்தால்
பாருதவருதுபோக்கொன்றுந்தப்பாதாட்டே. 130

நீரடைப்புக்குகுடிநீர்
வேறு.

வெட்டப்பாநீரடைப்புக்கிவிழ்தங்கேளு
வுத்தமனேபொற்கடுக்காய்ஐந்தான்வாங்கி
கூட்டப்பாபொடிசெய்து வைத்துக்கொண்டு
குமரியுடன்சோற்றிலேபிரட்டிவைத்து
காட்டப்பாயிருள்ளிபடிகாற்போட்டு
கட்டாகயிடித்ததிலேபிசைந்துகொண்டு
நாட்டப்பாவடித்து...காண்டிறந்துவாங்கு
நலமானவெண்...ரம்பொரித்துப்போமே. 131

ஈளை...ருமல்சுவாசத்துக்குபுகை.

போட்டடேனேயிரு...மூன்றுசிகரங்கொள்ள
புனுகமுடனி...டைப்புபோகும்போகும்
வா...டட...சுயம்...ளையிருமல்கண்டால்
...ானதிரிபுகைதான்சொல்லக்கேளு
பாட்டுடனேபச்சைநொச்சிச்சாறும்வாங்கி
பரிவானசீலையிலேதுவைத்துவாட்டி
காட்டுடனேசூதமரிதாரம்ரண்டு
கட்டாகப்பொடித்ததிலேபாத்திக்கேளே. 132

கேளப்பாதிரிகொளுத்திமூக்கில்வாங்
குகிருமலையுடனிருமலெங்கேகெதிகெட்
டோடும் வாளப்பாயின்னமொருதிரிதான்

களைக் கொண்டு அநுபவத்தால் ஏற்பட்ட தெனக்
கூறியுள்ளார். சமூக ஒப்பந்தமென்னும் ஒரு பாவனை
யைக்கொண்டு அதனின்றும் நியாயப் பிரமாணிகன் ஒரு
வன் தன் சட்டத்தையேற்படுத்தினதாகக்கொள்ளலாம்.
இங்ஙனம் கொள்வதால், ஒவ்வொரு பொதுச் சட்டங்
களுக்கும் இதுவே நீதி நிறையின் அளவாக ஏற்படு
கின்றது. ஆகவே, தனி மனிதன் தன் இஷ்டத்தைக்
கொண்டு சமூகத்தை யடைந்தானெனக் கூறுதல் ஒவ்
வாது. ஏனெனில் அவனைச் சமூகத்தினின்றும் வேறா
கப் பிரிக்க முடியாது. சமூகத்துடன் பிரிக்கமுடியாத
ஒரு சம்பந்தத்தை இயற்கையாகவே அவன் பெற்றிருக்
கிறான். நாம் ஒவ்வொருவரும் சமூகத்தினிடை பிறந்
தோம்; நாம் சமூகத்தின் உறுப்பில் ஒன்று. சமூக
மும் நம்மில் ஒருபகுதி. ஆகவே சமூகமென்பது கேவ
லம் பரஸ்பர அநுமதியால் ஏற்பட்ட ஒரு சபையன்று;
அச்சபையிலுள்ள அங்கத்தினன் ஒருவன் வேண்டுமென்
றபோது சேர்வதும் வேண்டாமென்றபோது விட்டுப்
பிரிவதும் போன்ற சம்பந்தத்தை மனிதன் ஒருவன்
சமூக சாங்கத்தில் பெற்றிருக்க வில்லை. தவிர, அங்கத்
தினன் ஒருவன் அச்சபைக்குச் செய்யக் கூடிய கடமை
யைப் போலவும் அச்சபையில் அவனுக்குள்ள உரிமை
யைப் போலவும் இல்லாமல், மனிதன் சமூக சாங்கத்தில்
விலக்க முடியாத கடமையையும் நிராகரிக்க முடியாத
ஓர் உரிமையையும் பெறுகிறான். ஆகவே, தனி மனி
தன் தன்னுடைய சுயலாபத்தையும் நன்மையையுங்
கருதாமல், சமூகத்தையே பெரிதாகக் கருதி அச் சமூக
சாங்கத்தின் நன்மைக்காக உழைப்பவனைத் தேசாபி



மானி யென்றும் அத்தகைய நன்மையை யுத்தேசித்துச்
செய்யும் உணர்ச்சிக்குத் தேசாபிமானமென்றுங் கூறப்
படும். ஆகவே, அரசு என்பது சமூகத்தைச் சேர்ந்த
எல்லாருடைய நன்மைக்கும், யோக க்ஷேமங்களுக்கும்
நடு நாயகமாய் நிற்பதொரு ஸ்தாபன மாதலால், அது
சமூகத்தினருக்கும் அச்சமூகத்தின் சந்ததியார்களுக்
கும் ஆதாரமாயுள்ளது. அரசின் மூல காரணம் இவ்
வகைத்து. நிற்க, அரசைப் பற்றிய வேறு அபிப்
பிராயங்களையும் கவனிப்போம். அரசு என்பது தெய்
வீகத்தாலுண்டானதென்று சிலரும், பலாத்காரத்தால்
உண்டானதென்று சிலரும் கூறுகின்றனர். அதை
விசாரிப்பாம். அரசு தெய்வீகத்தாலுண்டானதென்
னுங் கொள்கை மேலைய நாடுகளில், 16வது 17வது
நூற்றாண்டுகளில் பரவியிருந்தது. அரசர்களுக்குத்
தெய்வத்தாலேயே அதிகாரங் கொடுக்கப் பட்டதென
சிலர் அபிப்பிராயப் பட்டனர். பிரஜாதிபத்திய அதிகார
முறை வளராமலிருக்கவே ஐரோப்பா நாடுகளிலிருந்த
கிறிஸ்துவ பாதிரிமார்கள் அரசு, பகவத் சங்கல்பத்தா
லுண்டான தென்றும், அரசன் தெய்வாம்சம் பெற்றவ
னென்றும் கூறிவந்தனர். உலக சிருஷ்டி காலத்தில்
ஆதாம் என்பவருக்கு முதன்முதல் அவ்வதிகாரங்
கொடுக்கப் பட்டதென்றும், அவன் வழியாக வாழை
யடி வாழையாய் வந்தவர்களும் பகவத் சங்கல்பத்தா
லேயே அதிகாரங்களைப் பெற்றன ரென்றும் கூறப்
பட்டது. இந்த கொள்கை பிறகு ஐரோப்பியர் களு
டைய மனதினின்றும் நீங்கிற்று. அக் கொள்கையை
எவரும் மேலைய நாடுகளில் இப்பொழுது நம்புவது

கிடையாது. பாரத நாட்டில் இது விஷயமாகப் பலர்
அவ்வெண்ணத்தை இக்காலத்திலும் கொண்டிருக்கின்
றனர். பாரத நாட்டிலும் பூர்வம் அரசன் எப்படி
யுண்டானான், இராஜ நீதி எப்படி யுண்டாயிற்று என்
பதை ஒருவாறு கவனிப்போம். முன்னொரு காலத்தில்,
பிரஜைகள் அரசனில்லாத காரணத்தால் ஜலத்திலுள்ள
மீன்கள் இளைத்த மீன்களைப்போல ஒருவருக்கொருவர்
பக்ஷித்துக் கொண்டு நாசமடைந்தார்களெனக் கேள்வி
பட்டிருக்கிறோம். பிறகு அச்சனங்கள், ஒன்றுகூடி,
கடுமையாகப் பேசுகிறவனையும், கடுமையாகத் தண்டிப்
பவனையும், பரதாரத்தை யபகரிப்பவனையும், விலக்குவ
துடன் நம்முடைய இந்த நிபந்தனையை மீறி நடப்ப
வனையும் விலக்கவேண்டும், என உறுதியான தீர்மானஞ்
செய்து கொண்டார்கள். அங்ஙனம், வேற்றுமை யின்றி
எல்லா சாதிகளுக்கும் நம்பிக்கை யுண்டாகக் கருதித்
தாங்கள் செய்து கொண்ட சபதத்திற்குத் தக்கபடி
அந்த பிரஜைகள் நடந்து வந்தார்கள். அவ்வித மிருந்
தும், துன்பமடைந்த பிரஜைகள் யாவரும் ஒன்று கூடி
பிரம்மதேவரிடஞ் சென்று, 'பகவானே! அரசனில்லாக்
காரணத்தால் நாசமடைகிறோம். எங்களைப் பரிபாலிக்
கத்தக்க அரசனை அளிப்பீராகில் நாங்கள் யாவரும்
அவரைப் பூசித்து வருகிறோம்' என்று வேண்டிக்
கொள்ள, பிரம்ம தேவர் மனுவை அவர்களுக்கு அர
சனாயிருக்கும்படி கட்டளையிட்டார். அரசனில்லாம
லிருந்தால், இவ்வுலகம் பயந்து நடுங்கி ஓடவேண்டு
மென்று இவ்வுலகத்தைக் காப்பதற்காக ஈஸ்வரரானவர்
இந்திரன், அக்கினி, யமன், வருணன், வாயு, குபேரன்,



சந்திரன், சூரியன் இவர்களுடைய உறுதியான தேஜோ
அம்சங்களை ஒன்றுசேர்த்து வலிமையான சரீரமும்
பராக்கிரமமுமுள்ளவனாக உலகத்தைப் பரிபாலிக்கத்
தக்க அரசனை உண்டுபண்ணினார். தவிர மகாபாரதத்
தில் மற்றொரு விடத்தில் கூறப்பட்டுள்ளதையுங் கவ
னிப்போம். யுதிஷ்டிரர் விதிப்படி பீஷ்மரைப் பூசித்
துக் கைகூப்பிக்கொண்டு கேட்கத்தொடங்கினார். 'பரத
குலத்தில் உதித்த அரசரான பிதாமகரே! அரசனென்
னும் இப்பதம் எங்ஙனமுண்டாகி உலகில் நடைபெற்று
வருகிறது. உதிரம், மாம்ஸம், இந்திரியம், சரீரம், பிரா
ணன், புத்தி, சுகம், துக்கம், ஆத்மா, பிறப்பு, இறப்பு
ஆகிய யாவும் மனிதர்கள் யாவருக்கும் சமமாயிருந்தும்
பெரிய புத்தியுள்ளவர்களும் சூரர்களுமான மனிதர்
களுக்கு எங்ஙனம் யஜமானனாயிருக்கக்கூடும்? சூரர்
களும் வீரர்களும் பெரியோர்களும் நிறைந்த பூமியை
எப்படி ஒருவன் ஆளத்தக்கவனாவான்'? என்று யுதிஷ்டி
ரர் கேட்க பீஷ்மர் பின் வருமாறு கூறுகிறார். 'ஆதி
யில் கிருதயுகத்தில் அரசனும் இராஜ்யமும், தண்டமும்
தண்டிப்பவனுமில்லாமல் பிரஜைகளனைவரும் தர்மத்
தாலேயே ஒருவரையொருவர் ரட்சித்து வந்தார்கள்.
அவ்விதம், தர்மத்தால் ஒருவருக்கொருவர் ரட்சிக்கப்
பட்டுவந்த மனிதர்கள் மிக்க தைனியத்தை யடைந்தார்
கள். சிரமமடைந்த அந்த மனிதர்களை அவிவேகம்
பிடித்துக்கொண்டது. அம்மனிதர்கள் மோகத்துக்கு
வசப்பட்டார்கள். அவிவேகத்தால் அறிவு குறைந்த
வுடன் அவர்களுடைய தர்மம் நாசமடைந்தது. தர்
மம் குறைந்ததும், அவர்களிற் சிலர் பகவானைச் சரண

மடைந்து ரட்சிக்கும்படி பிரார்த்தித்தனர். அப்பொ
ழுது பிரம்மதேவர் அரசனையும் அரசனுக்குரிய இராஜ்
யத்தையும், இராஜநீதி சாஸ்திரத்தையும் உண்டாக்
கினர். உலகத்திற்குபகாரத்திற்கும் தர்மார்த்தகாமம்
என்னும் திரிவர்க்கம் நிலைபெறுவதற்கும் வெண்ணெய்
போல வாக்கின் ஸாரமான இந்த வித்தை சொல்லப்
பட்டது. சிக்ஷைரக்ஷை இவ்விரண்டுடன் சேர்ந்து உல
கங்களைப் பாதுகாக்க ஆதாரமான தண்டத்துடன்கூடிய
இந்த நீதி சாஸ்திரம் உலகங்களில் தொடர்ந்து சஞ்
சரிக்கும். தண்டத்தால் உலகத்தைப் பயன்படச்செய்
வதாலும் தண்டஞ் செலுத்தும் வழியைக் கூறுவதா
லும் இந்நூல் தண்டநீதியென்று பிரசித்தமாய் மூவுல
கங்களிலும் வழங்கும். தர்மார்த்த காமமோட்சங்க
ளனைத்தையும் உபதேசிப்பதும், ஸந்திவிக்கிரஹ முத
லிய இராஜ்யத்தின் ஆறு குணங்களின் சாரத்தை முக்
கியமாகக் கூறுவதுமான இந்த நீதி சாஸ்திரம் வருங்
காலத்திலுள்ள மகாத்மாக்களிடம் நிலைபெற்றிருக்கும்.
யானையின் அடியில் மற்றெல்லாப் பிராணிகளின் அடி
களும் அடங்குவதுபோல ராஜகர்மங்களில் (இராஜ்ய
நீதி அல்லது அரசியல் அல்லது இராஜரீக சாஸ்திரம்)
மற்ற தர்மங்கள் யாவும் எப்பொழுதும் அடங்கினவை
யாகும். எல்லா தர்மங்களுக்கும் ராஜதர்மம் முக்கிய
ஆதாரமாகும். ஜாதிகள் யாவும் அரசனால் பரிபாலிக்
கப்பட்டு நிலைபெறுகின்றன. உலகில் தண்டநீதி குறைந்
தால், எல்லா தர்மங்களும் நாசமடையும். எல்லா
லோகங்களும், எல்லா தர்மங்களும், எல்லா நியமங்
களும், எல்லா கல்விகளும், எல்லா உலகங்களும், யோ



கங்களும் ராஜதர்மத்தில் நிலைபெற்றிருக்கின்றன. ஆகை
யால், உலகத்தில் ராஜதர்மத்தைவிடச் சிறந்த தர்மம்
வேறெதுவுமில்லை. இங்ஙனம், மகாபாரதத்தில் பூர்வம்
கூறப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் 17-வது நூற்றாண்
டில் தோன்றின ஹாப்ஸ், லாக், முதலானோருடைய
கொள்கையையும், ரூஸோ அவர்களின் கொள்கையையும்,
கிறிஸ்தவ பாதிரிமார்கள் 16-வது நூற்றாண்டில்
கொண்டிருந்த கொள்கையையும் மகாபாரதத்திற் காண
லாம். மனிதர்கள் முதன்முதல் அரசனின்றியும் இராஜ்ய
மின்றியும் தர்மத்தைக்கொண்டு யதேச்சையாக வாழ்ந்து
வந்தனரென்பதும் மகாபாரதத்திற் காணலாம். தவிர,
பலாத்காரத்தால் அரசு உண்டானதென்னுங் கொள்
கையைப்பற்றி விசாரிப்போம். அரசு முதன்முதல் உண்
டானது பலாத்கார தர்மத்தினின்றுமே யென்று சிலர்
கூறுகின்றனர். மனிதர்களுடைய பேராசையினாலும்,
சண்டையிட்டுப்போராடுங் குணத்தினாலும், மனிதர்
களைப் பிடித்து ஆட்படுத்தவும்; நாடு நகரங்களை
யனுசரிக்கவும், பலஹீனமுள்ளவர்களைப் பலமுள்ள
வர்கள் தாக்கி அடிமைப்படுத்தவுமான வழிகளுண்
டாகிப் பலமுள்ளவர்கள் தங்கள் வலிமையினால் அதி
காரத்தையும் கிழமையையும் உண்டாக்குவதால்,
அரசு உண்டாயிற்றென சிலர் சித்தாந்தப்படுத்தி
னர். இதற்கு நம் பாரத நாட்டின் பூர்வ இராஜரீக
சாஸ்திரம் 'மத்ஸாந்நியாய முத்பாவயதி', சிறிய மீன்
களைப் பெரிய மீன்கள் விழுங்கும் நியாய மென்று
கூறுகிறது. மெலியாரை வலியார் வலியுறுத்தி ஆட்
படுத்துவ தென்பதற்கே மேற்கூறிய நியாயம் எனக்

கூறப்படும். பலாத்காரத்தைக் கொண்டு பாகு பலத்தால் குடும்பத்திலிருந்து வமிசம், வமிசத்திலிருந்து சாதி, சாதியிலிருந்து சமூகமாக ஏற்படுத்துவதிலிருந்து இராஜ்யமும், இராஜ்யத்திலிருந்து சாம்ராஜ்யமுமாகக் கொஞ்சங் கொஞ்சமாக விர்த்தியாகும். அரசாங்கமே துன்பத்திற்குக் காரணமும், துன்பத்திற்குத் தாயும் தந்தையுமாகும் என்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் கூறியுள்ளார். ஆகவே, அரசு உண்டாவதற்குப் பலாத்காரமே காரணமெனக் கூறுவதும் ஒக்கும். சிறுதொகையாளர்களுடைய பேராசைக்காரணமாகப் பெருந்தொகையாளர்கள் ஆட்பட்டு சுதந்தரமிழந்து வருவதே தற்காலத்தில் அரசாங்கத்தின் குணமாகப் போயிற்றென சமூக சமத்துவக் கட்சியினர் கூறுகின்றனர். 'பலமே தர்மம்' அல்லது 'பலமே நீதி' என்னுங் கொள்கையே இராஜரீக சாஸ்திரத்தில் முக்கியதர்மமாகப் பலர் அங்கீகரித்துள்ளார். ஆனால், பலமே நீதி யென்னுங் கொள்கையைக் கொண்டுள்ளவர்கள் பலமிழந்தவர்களாயின், பலமே நீதி என்னுங் கொள்கையும் அவர்களுடைய பலமிழந்தது போலவே இறக்கும். பலமுள்ளவரையில் அதிகாரமும், அதிகாரமுள்ளவரையில் கிழமையும் உண்டாகு மென்பது இதனால் விளங்குகிறது. மனித சமூகத்தின் அன்யோன்ய சம்பந்தமும் கூட்டுறவும் பலம் பலஹீனத்தை யொட்டிய தர்மத்தினாலேயே யுண்டாயிற்றெனவும் கூறப்படுகிறது. அடிக்கும் ஒருகை, அணைக்கும் ஒருகை என்பதுபோல, கிழமைவு ஒருபக்கமும், ரட்சணம் ஒருபக்கமுமாக வுண்டாகிறது. ஆகவே, தகப்பனுக்



கும் மகனுக்கும் உண்டாகும் சம்பந்தத்தையும், புருஷனுக்கும் பெண்சாதிக்கும் உண்டாகும் சம்பந்தத்தையும், எசமானனுக்கும் வேலைக்காரனுக்கு முண்டாகும் சம்பந்தத்தையும் நாம் காணலாம். இதுபோலவே, அரசனுக்கும் பிரஜைகளுக்கும் உள்ள சம்பந்தம். இந்த சம்பந்தம் வேண்டுமென்றுண்டானதல்ல; ஒப்பந்தத்தினாலுண்டானதல்ல; மற்றும் உலக இயற்கையினாலுண்டானதென்று ஹாலர் என்பவர் கூறுகிறார். இந்த தர்மத்தினின்றுமே நிராதீன யதேச்சாதிபத்யம் ஸ்தாபிக்கப்பட்டதென தெரியவருகிறது. இதைப்பற்றி மீண்டும் அடுத்த அத்தியாயத்திற் காணலாம்.

# 3. அரசின் மூலதத்துவம்

அரசு உண்டானதின் மூலகாரணம் இன்ன இன்னவென்று கூறின பூர்விக இராஜரீக சாஸ்திரக்ஞர்களின் சித்தாந்தத்தைப் பற்றி முந்தின அத்தியாயத்திற் கூறினோம். இவ்வத்தியாயத்தில் தற்கால இராஜரீக சாஸ்திரக்ஞர்களின் சித்தாந்தத்தைப் பற்றி ஆராய்வோம். தற்கால இராஜரீக சாஸ்திரிக்ஞர்களின் சித்தாந்தத்தைச் சரித்திர பூர்வமாகவும், பரிணாம உருவமாகவும் பிரிக்கப் பட்டிருக்கிறது. அரசு உண்டான விஷயமாக ஒரு காலத்தைக் குறிப்பிட்டேனும் அல்லது ஓர் இயக்கத்தைக் குறிப்பிட்டேனும் அதை சம்பந்தப் படுத்திக் கூறமுடியாது. அரசு என்பதொன்று இல்லாமலிருந்து புதிதாக ஒருவரால் நூதனமாகக் கண்டு பிடித்ததல்ல. அரசு என்பது அபிவிர்த்தியினாலும் பரிணாமத்தினாலும் உண்டானது. நாளுக்கு நாள் கொஞ்சங் கொஞ்சமாக மனித சரித்திர ஆராய்ச்சியின் வழியாகவும், புராதன நிலைமையின் விகாரத்தாலுமே அரசு அபிவிர்த்தியடைந்தது. உலக சிருஷ்டிக்குப் பிறகு, மனிதன் தன்னுடைய ஒழுங்கீனமான தன்மையிலிருந்து நாகரிக முள்ளதும் ஒழுங்குள்ளதுமான மானிடசாங்கத்தையடைந்து அபிவிர்த்தி கொண்டு வந்ததின் பயனாக அரசு உண்டானதென பண்டிதர் பர்க்ஸ் கூறியுள்ளார். இங்ஙனம், பரிணமித்து வரும் வழியாக, மனிதர்கள் தேகபலத்தின் அபிவிர்த்தியையும் அறிவின் அபிவிர்த்தியையு மடைந்த பின்னர், அரசாங்கத்தை யுண்டாக்கினர் என்று கூறுவதை விட, முதன் முதல்



அவர்கள் தங்கள் தேகபலத்தையும் அறிவின் சக்தியையும் அபிவிர்த்தி செய்து, ஒருவருக்கொருவர் பேசவும் விஷயங்களை யறியவும் ஆவசியமானதைக் கொண்டு பாஷையைக் கண்டு பிடித்தனர் என்று கூறுதல் ஒக்கும். மிருகங்கள் அர்த்தமும் லட்சணமுமற்ற பயனிற் சொற்களை விடுத்ததினின்றும் பாஷையானது பரிணமித்தது போலச் சரித்திர காலத்திற்கு முன் நாகரிகமற்ற தன்மையிலிருந்த மனிதசாங்கம் வரவர ஒழுங்கான அரசாங்கமாகப் பரிணமித்ததென மேனாட்டு இராஜரீக சாஸ்திரக்ஞர்கள் கூறுகின்றனர். மனிதனுடைய சமூக சாங்க வாழ்க்கையின் எல்லா அன்னோன்னிய சம்பந்தமும் கூட்டுறவும், முறையே தேகவலிமை மனோவலிமை முதலிய தன்மை பக்குவமடைந்து வந்தது போலவே, அது அபிவிர்த்தியடைந்ததென்பதும் அன்னவர்களுடைய துணிபு. சமூக அபிவிர்த்தியைப் பற்றி ஆராய்ச்சி செய்யச் செய்ய அதினின்றும் மனதிற்கு எட்டாததும், புலப்படாததுமான பல நுண்ணிய பொருள்கள் காணப்படுகின்றன. சமூகசாங்கத்தின் உற்பத்தியை நாம் அறிய முயலுவோமானால், சமூக சாங்கத்திற்கு ஆதாரமாய் நிற்பது குடும்பம் எனப் புலப்படுகிறது. சமூக சரித்திரத்திற்குக், குடும்பமே முதல் பொருளாய்த் தனித்து நிற்கிறது. ஒரு தகப்பனார் பிள்ளைகளை யடக்கி ஆள்வதினின்றும் கோத்திரத்தலைமை அல்லது வமிசத்தலைமை யுண்டாகிக் கொஞ்சங் கொஞ்சமாக நாளடைவில் அரசாங்க ஸ்தாபனம் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது. ஸ்வபாவிகமான ஒரு குடும்பத்தினின்றுமே அரசு உண்டானதென்று அறிய

இடமுண்டாகிறது. முதல் ஒரு குடும்பம், பிறகு வமிசம், வமிசத்திலிருந்து சாதி, சாதியினின்றும் சமுதாயமாக அபிவிர்த்தி யடைந்ததெனக் கூறுகின்றனர். ஒரு தகப்பனுருடைய அதிகார முறையினின்றுமே அரசு உண்டானதெனக் கூறும் சித்தாந்தத்திற்கு வமிசத்தலைமை தாதை முறை யெனப்படும். இதைச் சிலவிடத்து சரித்திரமுகாந்தரங் கொண்டும், சிலவிடத்து அநுபவ பூர்வமாகவும் நிர்மானிக்கப் பட்டது. ஹரிஸ்டாடல் என்னும் தத்துவஞானியொருவர், மேலைய நாட்டில் முதன் முதல் இராஜரீக சாஸ்திரத்தைப் பற்றி எழுதியதில் பூர்வம் குடும்பமொன்றே ஆரம்பத்தில் உண்டானதென்றும், பல குடும்பங்கள் பிறகு ஒன்று சேர்ந்து சங்கசேர்க்கை யேற்பட்டு நித்திய வாழ்க்கைக்கு வேண்டியவைகளைச் சம்பாதித்துக் கொள்ளவும், சேகரித்துக் கொள்ளவும் வர கிராமமொன்று ஏற்பட்டதென்றும், பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து ஒரே சமூகமாகப் பரந்து பலப்பட்டவுடனே, அரசு உண்டாயிற்றென்று கூறியுள்ளார். அந்நாள் முதல் பல இராஜரீக சாஸ்திரக்ஞர் அச்சித்தாந்தத்தையே மேற்கொண்டு வரலானார். 19வது நூற்றாண்டில் உண்டான சரித்திர ஆராய்ச்சியின் பலனாக அச் சித்தாந்தத்தைப் பலர் ஒப்புக்கொள்ள வில்லை. வமிசத்தலைமை முறையினின்றும் அரசு எல்லா சமயங்களிலும் உண்டானதென்பதற்குப் போதிய முகாந்தரமில்லையென அவ்வாராய்ச்சியர் கூறினர். ஆனால், இவ்வாராய்ச்சியர் வமிசத் தலைமைமுறை தகப்பனின்றுமுண்டானதற்குப் பதிலாகத் தாயினிடத்து உண்டான



தென்று கூறினர். அதற்கு வமிசத் தலைமை தாய் முறை எனப்படும். குடும்பம் உண்டாவதற்கு முன்னர் மனிதர்கள் நாடோடிகளாக நிலையில்லாக் குழுவினர்களாகயிருந்தனரென்றும், அங்ஙனமிருந்து வருங் நாளில் அவர்களுக்குள்ளே புருஷன் பெண்சாதி என்னும் உறவு உண்டாகவில்லையென்றும் கூறி, அவர்களுடைய சம்பந்தா சம்பந்தங்களைத் தகப்பன் வழியாகக் கொள்ளாமல், தாய் வழியாகக் கொண்டனர் என்று இவர்கள் கூறினர். தவிர, வமிச பரம்பரையும் மாதர் வழியாகவே யுண்டானதென்னுங் காரணத்தைப்பற்றி, சகல சம்பந்தா சம்பந்தங்களும் பெண் வழியாகவே யுண்டாயிற்றென்றும் இவர்கள் சித்தாந்தஞ் செய்தனர். இங்ஙனம், வமிசத் தலைமை தாதை வழியாகவும் தாய் வழியாகவும் அல்லது புருஷன் வழியாகவும் பெண் வழியாகவும் உண்டாவதற்கு முன்னர் மனிதர்கள் நாடோடிகளாக நிலையற்ற குழுவினர்களாகி, ஒருவன் பல பெண்களோடு உறவாடியும், ஒருத்தி பல புருஷர்களோடு உறவாடியும் அகப்பட்ட உணவுபொருள்களை அனைவரும் பங்கிட்டுக்கொண்டும், ஒருங்குகூடி வாழ்ந்து வந்தனர். வமிச பரம்பரை மாதர் வழியாக உண்டானதென்பதால் மாதர்களின் ஆதிக்கம் அல்லது ஆட்சி என்பதல்ல. மனிதர்கள் நாடோடியாக யிருந்துவந்தது நின்று, ஸ்திரமான குடித்தனக்காரர்களாக ஆயினர் என்றும் கூறப்படுகிறது. ஆனால், இது ஒருவாறு சிலவிடத்தில் உண்மையாக விருப்பினும் எல்லாவிடங்களிலும் இங்ஙனமே பரிணமித்து வந்ததெனக் கூறுதல் முடியாதென்பதும் சில இராஜரீக சாஸ்திரக்ஞர்களின்

துணிபு. பூர்வம், மனிதர்களுடைய குடும்பம் இன்ன விதமாகத்தான் பரிணமித்ததென நிச்சயமாகக் கூறுதல் சாத்தியமன்று; ஏனெனில், ஓரோரிடத்துத் தாய் வழியாகவும் மற்றோரிடத்துத் தாதை வழியாகவும் பூர்வ குடும்பங்கள் பரிணமித்ததினால் எவ்வழி சரியான வழி யென்பது அறிதல் கூடுமானதல்ல. மனித சமூகத்திற்கு ஆதி எது என்பதும் அறிதல் சாத்தியமன்று. இப்பொழுதும் ஒருபெண்ணோடு ஒருமுறை மாத்திரம் விவாகம் முடித்து வாழும் குடும்பங்களே பலமாக உலகில் எங்கும் காணப்படுவதாலும், அக்குடும்பங்களுக்கு அநேகமாகத் தகப்பனே முதலாளியாக நின்று சகல பொறுப்பையும் நிர்வகித்து வருவதாலும், சமூக பரிபாலனமும் அரசும் அவ்வழிகளினின்றுமே யுண்டாயிருக்கவேண்டு மென்பதும் சிலருடைய துணிபு. ஆகவே, பூர்வ காலத்துக் குடும்பங்களின் பரிணாம வழியை நாம் எளிதில் அறிய முடியாமல் அவ்வளவு சிக்கலாயும் கடினமாயுமிருக்கிறது. சரித்திர வழியாகவேனும் அல்லது மற்ற பரிணாம சாஸ்திர வழியாகவேனும் ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வரமுடியாவண்ணமிருக்கிறது. ஆனால், பூர்வமிருந்த குடும்ப பரிபாலன முறைமைக்கும் தற்பொழுதுள்ள அரசாங்க பரிபாலன முறைமைக்கும் இடையே பலவிதமான பரிணாமங்களை மனித சமூக சாங்கம் அடைந்திருக்கவேண்டுமென்பது மட்டும் நன்கு புலனாகின்றது. தற்பொழுதுள்ள அரசாங்க பரிபாலன முறைமையைப் பல இராஜ்ய குடும்பங்கள் பற்பல வழியாக அடைந்துள்ளன. சில குடும்பங்கள் அந்தரங்கமாகவும் சில குடும்பங்கள் பகிரங்க



மாகவும் நாளடைவில் பரிணமித்து வந்தன. ஒரு குடும்பத்தில் பகிரங்கமாகப் பரிணமித்து வந்ததை மற்றொரு குடும்பம் அந்தரங்கமாகக் கிரகித்துப் பரிணமித்தும் வந்தது. இங்ஙனம், பல்வேறு துறையாகக் குடும்பங்கள் பரிணமித்ததினின்றுமே தற்கால அரசாங்க முறைமையுண்டாயிற்று. உதாரணமாக, பிரஜாதிபத்ய முறை தற்காலத்திலுள்ள நானாதேசங்களில் நானாவிதமாக உண்டாயிற்று. ஆகவே, நாம் இராஜாங்க அமைப்பைப்பற்றி ஒரே குறிப்பிட்ட சித்தாந்தத்திலடக்குவதென்பது ஒழுங்கல்ல. தத்துவஞானி பிளேட்டோ அவர்களின் அரசு சக்கர முறையைக் கவனிக்குமளவில், அரசு எந்தெந்தவிதமாகப் பரிணமித்ததென்பது நன்கு புலனாகும். குறித்த ஓர் இராஜ்ய மாறுதலினாலே அரசு வெவ்வேறாகப் பரிணமிக்குமென்பதும் பிளேட்டோ அவர்களின் கூற்று. பிரபுத்துவத்தினின்றும் பொருட்சுவான்தாராட்சி யுண்டாயிற்று; அதாவது பிரபுக்கள் சேர்ந்து பரிபாலித்துவந்த அரசாங்க முறையினின்றும் தனவந்தர்கள், நிலச்சுவான்தார்கள், இராணுவ உத்தியோகஸ்தர்களாகிய இவர்களால் சேர்ந்து பரிபாலித்து வரும் பொருட்சுவான்தாராட்சியாகப் பரிணமித்தது. பொருட்சுவான்தாராட்சியினின்றும் வகுப்பாட்சி யுண்டாயிற்று. (அதாவது ஒரு வகுப்பினரால் ஆளப்படும் ஆட்சி முறை.) வகுப்பாட்சியினின்றும் நிர்ணயமும் வினயமுமற்ற ஜனக்கூட்ட ஆட்சியுண்டாயிற்று. (இதற்கு சமவாய ஆட்சி எனக்கூறலாம்.) ஜனக்கூட்ட ஆட்சி (சமவாய ஆட்சி) யினின்றும் கொடுங்கோன்மையுண்டாயிற்று என பிளேட்டோ

ஞானி கூறியுள்ளார். அரிஸ்டாடல் அவர்கள் பிளேடோ
ஞானியின் அரசின் பரிணாமத்தைக் கண்டித்து ஏகாதி
பத்யத்தினின்று வகுப்பாட்சியும், வகுப்பாட்சியினி
ன்று கொடுங்கோன்மையும், கொடுங்கோன்மையி
னின்று பிரஜாதிபத்யமும் உண்டாகிறதெனக் கூறி
யுள்ளார். ஏகாதிபத்ய மென்பது சுயாதிபத்யம்.
ஒருவனால் பரிபாலிக்கப்பட்டுவரும் அரசுக்கு ஏகாதிபத்
யம் என்பர். கிறிஸ்து பிறப்புக்கு முன் கிரீஸ் முத
லிய மேலைய நாடுகளில் அரசின் பரிணாம வழி எவ்வகை
யாயிருப்பினும், அவ்வழியை இக்காலத்தவர்கள் ஒப்
புக் கொள்ளமாட்டார்களென தற்கால இராஜரீக
சாஸ்திரக்ஞர் அபிப்பிராயப்படுகின்றனர். மிஸ்டர்
ஜென்க்ஸ் என்பவர், அரசும் இராஜ்ய சமூகமும் உண்
டானதற்குக் காரணம் யுத்தப்பயிற்சியே என்று கூறி
யுள்ளார். தற்காலத்திலுள்ள எல்லா இராஜ்ய சமூக
மும் அரசும் யுத்தஞ்செய்து வெற்றியடைந்த தன்மை
யாலும் அல்லது யுத்தஞ்செய்து தோல்வியடைந்த
தன்மையாலுமே, யுத்தமொன்றையே காரணமாகப்
பற்றி நிலைபெற்றுவருகின்றன. தற்காலத்திலுள்ள
எல்லா இராஜ்ய குடும்பங்களும் (சமூகங்கள்) தாங்கள்
வாழ்வதற்கு யுத்தம் புரியவேண்டுவதையே இன்றி
யமையாததாகக் கொண்டன. ஏனெனில், அவர்களு
டைய இராணுவ ஸ்தாபனங்கள், படைவகை, இராணு
வமுஸ்திப்பு ஆகிய இவைகளைக் கொண்டு வெளிக்காப்
புக்காக அமைத்திருப்பதே முக்கிய சான்றாகும்.
இதைக்கொண்டே நாம் இராணுவ வாழ்க்கை அல்லது
யுத்தஞ்செய்தலையே முக்கியமாகக் கொண்ட வாழ்க்



கையினின்றுமே சமூக சாங்கம் உண்டாயிற்றென்றும்
நிச்சயமாகக் கூறுதல் முடியாது. ஏனெனில் சமூக
சமத்துவ வாதிகள் பொருளாதாரத் துறையினின்றும்
அல்லது பொருள் வரையறையினின்றுமே அரசு
உண்டானதென்றும் கூறுவதால் இராணுவ வாழ்க்கை
யினின்று முண்டானதென நிச்சயமாகக் கூறுதல்
முடியாது. சமூக சமத்துவவாதிகளின் சித்தாந்தப்படி
அரசு என்பது ஓர் சாங்கம் அல்லது ஓர் ஸ்தாபனம்.
அதில் தொழிலாளர்களின் கைப்பாட்டுழைப்பால் பொ
ருட்சுவான்தார்கள் இலாபத்தையடைந்து வருகிறார்
களென்றும், சமூக சமத்துவ வாதிகள் கூறுகின்றனர்.
இங்ஙனம், அரசு உண்டான விஷயமாகப் பற்பல அபிப்
பிராயங்களும் புராதன குடும்பங்களின் பற்பல பரிணா
மத்தால் பலிதமாகச் சமூகம் உருவெடுத்து வந்ததைப்
பற்றிய பலப்பல அபிப்பிராயங்களும் உண்டானதால்
அவைகளைப்பற்றி வீணில் ஆராய்ச்சி செய்வதை யொ
ழித்துத் தற்காலத்திலுள்ள ஓர் அரசு எங்ஙனம் விர்த்தி
யடைந்த தென்பதைக் கவனிப்போம். ஓர் அரசு
தன்னுடைய பூமிப்பரப்பை வெகுவிஸ்தீரணமாகக்
கொண்டுள்ளது. சரித்திர வாரம்பத்தில் இராஜ்ய
சமூகங்கள் பல சிறிய சிறிய குடும்பங்களாக யிருந்தன.
பூகோளப்படத்தை நாம் காண்போமானால், பல சிறிய
அரசுகள் பெரிய ஜனத்தொகையைக் கொண்ட பூமிப்
பரப்பை யாண்டுவருகின்றன வென்பதை நாம் அறிய
லாம். பூகோளத்திலுள்ள 52300000 சதுரமைல்
கொண்ட பூமிப்பரப்பில், பிரிட்டிஷ் சாம்ராச்சியம்
11516000 சதுரமைல் பூமியையும், ருஷியா 8660000

சதுரமைல் பூமியையும், சீனா 4277000 சதுரமைலையும் அமெரிக்கா ஐக்கிய அரசு 3567000 சதுரமைல் பூமியையுங் கொண்டிருக்கின்றன. பூமிப்பரப்பின் ஆதிக்கமே அரசின் பரிணாமம் என்று சிலர் கூறுவர். மற்றும் நிரந்தர நிர்ணயமும் நிச்சய விதிகளின் அநுஷ்டானமும் அரசின் பரிணாமத்திற்குக் காரணம் எனக்கூறுவர் சிலர். பழைய அரசாங்கம் விஸ்தீரணமுள்ள பூமிப்பரப்பைக் கொண்டால், அதிகாரநிர்ணயமும் நிச்சய விதிகளின் அநுஷ்டானமுமின்றி தாறுமாறாய் ஒன்றுக்கொன்று முரண்பட்டு வருதலை நாம் கண்டோம். குற்றங்களுக்குத் தக்க தண்டனையை விதித்து விசாரணையின்றியும், ஓரோரிடத்து அதிக தண்டனையும், மற்றோரிடத்து தண்டனையின்றியும் இருந்துவருதலையும் நாம் கண்டோம். வெறும் பெயருக்கு மாத்திரம் அதிகாரம் அப்பூமிப்பரப்பில் ஏற்பட்டதேயன்றி உள்ளபடி அதிகாரமுறை செலுத்தப்பட்டு வரவில்லை. ஆகவே, வரவர, அரசின் பரிணாமத்தால் தற்பொழுதுள்ள அரசாங்க ஸ்தாபனத்தில் தக்க அதிகார நிர்ணயமும் ஒழுங்கான விதிகளின் அநுஷ்டானமும் ஏற்பட்டது. மற்றும், அரசின் பரிணாம அபிவிர்த்திக்கு இராஜீய உணர்ச்சி காரணமென்றுங் கூறப்படுகிறது. பூர்வமிருந்த இராஜீய சமூகங்களில் இயற்கை யுணர்வு ஒன்றுமட்டும் இருந்ததே யொழிய பரிபக்குவமான இராஜீய உணர்ச்சி யில்லை. யாதாமொரு சமயத்தில் உடனே யாவரும் ஒன்று சேர்ந்து ஒரு சமூகமாக ஒரு காரியத்தில் பிரவேசிக்குந் தன்மையில்லாமையாலேயே அவர்களுக்குப் பூர்வம் இராஜீய உணர்ச்சி மட்டுபட்ட



தெனவும் சிலர் கூறுவர். தவிர, தற்காலத்திலுள்ள அரசில் பரிபாலன முறைகள் பலவிதமாகப் பிரிக்கப்பட்டு ஒன்றையொன்று மோதாமல் தனித்தனியே கூறிடப்பட்டு இருக்கின்றன. இதுகாரணமாக, இராஜீய பரிபாலனத்தையும் மதபரிபாலனத்தையும் வேறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பூர்வம், மத அதிகாரம் இராஜ்ய அதிகாரம் யாவும் ஒருவனிடத்தே யிருந்தது. தெய்வ ஆக்ஞை என்னும் ஓர்பலமான கொள்கையும் அக்காலத்தில் குடிகொண்டிருந்தது. தற்கால அரசில் சட்டங்கள் தர்மநீதியை யொட்டி ஜன சம்மதம் பெற்றிருக்க வேண்டுமென்னும் ஓர் ஒழுங்கை யநுசரித்தே செய்யப்பட்டன. பிரஜாதிபத்ய முறையின் விர்த்தியும், ஜனங்களால் பரிபாலிக்கப்படவேண்டுமென்னும் உணர்ச்சியும், ஜனங்களே தாங்கள் சகல அதிகாரங்களையும் வகித்து நிர்வகிக்க வேண்டுமென்னும் உணர்ச்சியுமே தற்காலத்து அரசின் பரிணாமம். குடியரசு எல்லா தேசத்திலும் இல்லையாயினும் சில தேசத்தில் பிரஜாதிபத்யமாகவும் மற்றுஞ் சில தேசத்தில் ஒப்புக்கு மட்டும் இராஜனை வைத்துக்குடிகளால் ஆட்சி செய்யும் முறையாகவும் இருந்து வருகின்றது. ஆகவே, இனி வருங்காலத்தில் குடியரசு ஒன்றையே உலகில் சாசுவித அரசாக ஸ்தாபிக்கப் பட்டு வருமென்பதற்கு ஐயமேயில்லை. ஏனெனில், குடியரசு உணர்ச்சி தற்காலத்தில் எங்கும் நன்கு ஊடுருவிப்பாய்ந்திருப்பதேயாம். இனி அரசின் அதிகாரத்தைப் பற்றிக் கூறுவோம். அரசின் அதிகாரம், சட்டம் உரிமை முதலியவைகளைப் பற்றி அடுத்த அத்தியாயத்திற் காண்க.

# 4. அரசின் அதிகாரம்

முந்தின மூன்று அத்தியாயங்களில் அரசு, அரசின் மூலம் அரசின் மூலதத்துவம் இவைகளைப் பற்றி ஒருவாறு கூறினோம். இவ்வத்தியாயத்தில் அரசின் அதிகாரமுறையும், அரசின் அதிகாரத்திற்கும் நபர் உரிமைக்கும் உள்ள சம்பந்தமும் கூறப்படும். அரசின் அதிகாரத்தைப்பற்றிக் கூறுகையில், இயற்கையாகவே தனிமனிதனொருவனுடைய உரிமையும் சுதந்தரமும் என்னவாகும் என்னும் எண்ணம் உடனே உண்டாகிறது. பார்வைக்கு அவ்விரண்டும் ஒன்றோடொன்று மாறுபடுந் தன்மையாகக் காணப்படினும், ஆராய்ச்சி செய்யுமிடத்து அவ்விரண்டுக்கும் நெருங்கின சம்பந்தம் உண்டென்பதை நாம் அறியலாம். அரசின் அதிகாரத்தைப் பற்றி இராஜ்யத்துறையில் பல விதமான அபிப்பிராயங்களையும் வியாக்கியானங்களையும் கொண்டு பலமேதாவிகள் பல வருடகாலமாகத் தர்க்கித்து வருகின்றனர். ஆதலால், அரசின் அதிகாரம் மிகவும் கடினமும் சிக்கலுமான விஷயமாகும். அரசு, நபர்களின் மீது சர்வாதிகாரம் பெற்றுள்ளதென்னும் அபிப்பிராயத்தினால், அரசின் அதிகாரம் மனிதனுடைய அபிவிர்த்திக்கு முட்டுக் கட்டை போன்றதென சில இராஜரீக சாஸ்திரிகள் கூறுகின்றனர். இது காரணம் பற்றியே அரசியல் ஞானிகளிற் சிலர் இராஜ்ய விஷயத்தைக் கசப்பான வஸ்துவென நிந்தித்து மிருக்கின்றனர். நபரைப் பற்றியும் நபருக்குரிய சாங்கத்தைப் பற்றியும், சாங்கத்திற்கு தனியாயுள்ள பல ஸ்தாபன விஷயங்களைப்



பற்றியும் தமக்குத் தடையின்றி வரம்பற்று நிராதீனமானதுமாய் எங்கும் நிறைந்த அதிகார முறைமையை அரசு செலுத்திவருவதே அரசின் அதிகாரமுறையென்று பண்டிதர் பர்க்ஸ் கூறுகிறார். இதை யோசிக்குமிடத்து அரசு கொடுங்கோன்மையாகவும் நபர் உரிமை பறிக்கப் படக்கூடியதாயும் காணப்படுகிறது. ஆகவே, அரசின் அதிகார வகையைப் பற்றி உள்ளபடி ஆராய்வோம். அரசு என்பது வினயமும் நேர்மையும் கொண்ட மானிட சமூகசாங்கம். மனிதன்மீது அதிகாரமும், அவ்வதிகாரத்திற்கு அம் மனிதனுடைய கீழமைவும் பற்றி நிற்பதின் காரணத்தாலே அரசு உண்டாகிறது. இந்த கீழமைவு என்னும் கீழ்ப்படிந்து நடத்தலை நபர்கள் விரும்பினாலும் விரும்பாவிடினும் இருக்கலாம். அரசு பிரத்யட்சமாக யிருப்பதற்கு அடையாளம் கீழமைவு ஒன்றே ஸ்தூலமாகவும் நிச்சயமாகவும் இருப்பதினாலேயேயாம். அவ்வரசின் அதிகார எல்லைக்குள் எங்கேனும், ஒருவனோ அல்லது ஒரு தொகையினரோ கட்டளையிடும் அதிகாரம், கீழ்ப்படிந்து நடத்தலுக்குரியதாகும். அங்ஙனம் கட்டளையிடப்பட்டுவரும் அதிகாரம் நியாயமாக வேணுமிருக்கலாம் அல்லது அநியாயமாக வேணுமிருக்கலாம். அங்ஙனம், அதிகாரஞ் செலுத்துபவனோ அல்லது செலுத்துபவர்களோ பலருடைய சம்மதம் பெற்றோ அல்லது சம்மதம் பெறாமலோ, பலாத்காரத்தாலோ அல்லது பயமுறுத்தியோ, பிறர் கீழ்படியுமாறு அதிகாரஞ் செலுத்துகின்றனர். எப்படியிருப்பினும், அவர்கள் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபிக்கின்றனர். அத்தகைய

அதிகாரம் இல்லையெனில் அரசு என்பது இராது. அவ்வதிகாரத்தைத்தான் சட்டம் என்பர். சட்டம் என்பது அரசினால் அதிகாரஞ் செய்யப்பட்ட கட்டளை. இதற்கு வரம்பு அல்லது நீதிவரம்பு உண்டா? அரசின் அதிகாரக் கட்டளைகளுக்கு ஒரு நிர்ணயம் அல்லது திட்டமுண்டா? இல்லை. ஒரு விதத்திட்டமும் நிர்ணயமுங்கிடையாது. ஏனெனில், அங்ஙனம் ஒரு நிர்ணயம் ஏற்படுமானால் அது அரசு என்பதற்கே விரோதமாகவும் அரசின் அதிகார மென்பதற்கே மாறுபாடாகவுமிருக்கும். சட்ட வரம்பு என்பது சட்டத்தைத் தயார் செய்யும் அதிகாரிகளால் ஏற்படுத்தும் ஓர் எல்லை யென ஏற்படும். சட்டம் தயார் செய்யும் அதிகாரமே அரசுக்கு அதிகாரமாயிருப்பதால் ஒரு வரம்பு ஏற்படுத்தினால், தன் அதிகாரத்தைக் கொண்டு அவ்வரம்பை நீக்க அதற்கு அவகாசமேற்படுகிறது. சட்டத்தைத்தயார் செய்து சட்ட அதிகாரங் கொடுக்கும் அரசுக்கு அதிகார வரம்பாகிலும் சட்டவரம்பாகிலுமிருப்பது அசம்பாவிதம். சட்டப்படி அல்லது நீதிமுறைமையின்படி அரசே சர்வாதிகாரங்கொண்டது. சட்டமும் அதிகாரமும் என்னும் விஷயத்தை ஆங்கில நீதி சாஸ்திரி ஜான் ஆஸ்டின் நன்கு விளங்க வைக்கிறார். 'நிச்சயபுத்தியைக் கொண்ட மேலானவனொருவன் தன்னை யொத்த மற்றொரு மேலானவனொருவனுக்குக்கீழ்ப்படியாமல், ஒரு சமூகத்தினுடைய கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படிந்து நடப்பானானால், அம்மேலானவன் அச்சமூகத்திற்கு அதிகாரியாகிறான். அச்சமூகம் (அம்மேலானவனுள்பட) சுதந்தரமும் இராஜீய உணர்ச்சியும் பெற்றதாகும். ஆகவே, ஜான் ஆஸ்டின்



கூறியபடி சுதந்தரமும் இராஜீய உணர்ச்சியும் கொண்ட அரசு ஓரதிகாரத்திற்குட்பட்ட ஜனங்களைக்கொண்டதாகும். அச்சமூகத்தில் அதிகாரஞ் செலுத்துவதும் கீழ்ப்படிந்து நடப்பதும் சகஜமாகும். ஆகவே, அதிகாரமும் கீழ்ப்படிமையுமே அரசு இருப்பதற்கு பரீட்சையாம். கீழ்படிந்து நடக்கும்படி செய்யும் அதிகாரத்திற்கே சட்டமெனப்படும். ஆகவே, உரிமை சட்டத்தினாலேற்படும் உரிமை' என்பதைப்பற்றி நாம் நன்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும். அரசின் அதிகாரத்தினாலோ அல்லது அரசின் அதிகாரத்தைப்பெற்றவராலோ ஒருவனுக்குப் பிரத்யேகமாகக் கொடுக்கப்படும் சுதந்தரம் அல்லது நன்மைக்கு உரிமை என்றுங் கூறுவர். நீதிமுறைமையிலும் தர்ம முறைமையிலும் உள்ள உரிமைக்கும் மேற்கூறினவழியாக வுண்டாகும் உரிமைக்கும் உள்ள பேதத்தையும் நாம் காணலாம். 18-வது நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில் பிரான்சு தேசத்திலுண்டான மகா இராஜ்ய புரட்சிக்குமுன்னர் பாளையக்காரர்கள் தங்களுக்குக்கீழ்ப்பட்டிருந்தவர்களிடமிருந்து மிக்க துன்பத்தை விளைக்கக்கூடிய பளுவான வரும்படியை வரியாக வசூலிக்க உரிமை பெற்றிருந்தனர். அது போலவே, ஒரு கொடுங்கோன் மன்னன் தன் கீழ்ப்பட்ட குரூர அதிகாரியொருவனுக்கு, அம்மன்னனுடைய ஆளுகைக்குட்பட்ட சனங்களின் உயிரைக் காப்பாற்றவும், உயிரை மாய்க்கவுமான உரிமையைக் கொடுக்கலாம். அரசு என்னும் சாங்கத்தில் தனிப்பட்ட மனிதனொருவனுக்கு அரசின் அதிகாரத்திற்கு விரோதமாக ஓர் உரிமை கிடையாது. ஆகவே, அதிகாரம், சட்டம், உரிமை ஆகிய இவைகள்

நீதி முறைமையையும் தர்ம முறைமையையும் விலக்கித் தன்னரசு பெற்றவைகளாக நிற்கும் என்று இங்ஙனம் கூறினதைப் பலர் கண்டித்துள்ளார். அரசே சர்வாதிகாரம்பெற்றும்,சட்டம்வரம்பற்ற தன்மையைப்பெற்றுமிருப்பதையும் சிலர் கண்டித்துள்ளார். மனிதனுடைய மதக்கொள்கையிலும் குடும்பவாழ்க்கையிலும் தலையிட அரசுக்கு உரிமை கிடையாதெனவும் வற்புறுத்தப்பட்டது. சிலவிடத்து அரசு தாராளமாக ஒருவருடைய உத்தரவின்றி சில விஷயங்களில் தலையிடலாம். மனிதனுடைய மதக்கொள்கையைப்பற்றி அரசு சட்டமொன்றைத்திட்டப்படுத்தி அதிகாரஞ்செய்வது தர்ம நீதிக்கு முற்றிலும் விரோதமானது. ஆதலால், இதைக்கொண்டு அரசுக்கு ஒரு எல்லையையுண்டாக்குவது எப்படி முடியும்? ஆனால் அரசின் அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஒருவனுக்காகிலும் அல்லது பலருக்காகிலும் ஒருசட்ட எல்லையைத் திட்டப்படுத்துவது ஆகும். அரசு சர்வ வல்லமையைக் கொள்ளாது; ஏனெனில் அவ்வரசைச்சுற்றுப் பக்கங்களிலுள்ள வேறு பல அரசுகளின் உரிமைகளைக் காக்க பகிரங்கமாகவும், தன்னுடைய எல்லைக்குள்ளேயுள்ள உரிமைகளைக் காக்க அந்தரங்கமாகவும், தனி நபர்களின் உரிமைகளைக் காக்கவுமாக யிருப்பதால், அரசுக்கு ஓர் எல்லையும் வரம்பும் உண்டு என்று பிளண்ட்ஸ்லி கூறுகிறார். இதர அரசுகளோடு ஓர் அரசுக்கு உடன்படிக்கை முதலிய ஒப்பந்தங்களிருப்பதால் அரசின் அதிகாரம் வரம்புக்குட்பட்டதெனவும் கூறுகிறார். ஆனால், இவையாவும் நீதி முறையைப் பற்றினவையேயன்றி சட்டப்



பிரமாண முறையைப்பற்றினவையாக மாட்டா. ஆக
லால், பிரமாணப்படி அரசு சர்வவல்லமையைக் கொண்
டதாகும். உரிமை (Right) என்னுஞ் சொல் சட்ட
முறையிலும் தர்ம நீதிமுறையிலும் வழங்குவதால்,
அச்சொல் உலகவழக்கை யொட்டிய நீதிமுறையிலும்,
தர்ம சாஸ்திரமுறையிலும் உபயோகப்பட்டு வருகின்
றது. பிரமாண முறையில் உரிமை என்னுஞ் சொல்லை
உபயோகப்படுத்துங் காலத்தில், அரசின் அதிகார
முறைமையை யநுஷ்டிக்கும்படி வற்புறுத்தும் அம்
சத்தில் பிரதிபலிக்கின்றது. அதாவது அரசின்
அதிகாரமுறையை யாதாமொருவன் மீதோ அல்லது
ஒரு விஷயத்தின் மீதோ செலுத்தும்படி பிரமாண
முறையில் அவ்வுரிமை வற்புறுத்துவதால், உரிமை என்
னுஞ் சொல் இந்த சந்தர்ப்பத்தில் உபயோகப்படுத்தப்
படுகிறது. அதிகாரம் என்னுஞ்சொல் பிரமாணத்
தைப்பற்றிய அதிகார மேன்மை வழியில் குறிக்கப்
பட்டுவருவதுடன், அதுவேறொன்றையும் குறிக்கும்.
அது, ஓர் அரசனுடைய அந்தஸ்து மேன்மை
யைக் குறிக்கும் சொல்லாகவும் பிரயோகிக்
கப்பட்டு வருகிறது. உதாரணமாக, ஐக்கிய அர
சாங்கமாகிய இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காத்லாந்து,
ஐயர்லாந்துக்கு ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியே அரச
ராக விருக்கிறார். இவ்வரச பதவி வெறும் அந்தஸ்தே
யன்றி பிரமாண அதிகாரத்தைக்கொண்ட அந்தஸ்தல்ல.
அதாவது, சிம்மாதனத்திலிருத்தல், அரசனென்ச்சனங்
களால் கொண்டாடப்படுதல் முதலிய பிருது இருந்த
போதிலும் தானாக ஓர் அதிகாரத்தையேனும் பிரமா

ணத்தையேனும் அவ்வரசர் கொண்டிருக்க வில்லை
என்பதாம். சட்ட அதிகாரம் யாவும் பிரிட்டிஷ் சாம்
ராஜ்ஜியத்தில் பார்லிமெண்டுக்கேயன்றி அரசனுக்கில்லை.
பார்லிமெண் டென்பது பிரமாண உரைப்படி அரசன்,
பிரபுக்கள், பொதுமக்கள் ஆகிய இவர்கள் சேர்ந்த சங்
கம். பார்லிமெண்டே பிரதான அதிபதி (ஏகாதிபதி).
ஒரு சட்டத்தை ஆவசியக மென்றுணர்ந்து அது
செய்யின், உடனே அது நிரந்தரமான சட்டமாகி
விடும். அச்சட்டத்தைப் பிரயோகிக்கும் விஷயத்தில்
அதற்கு நிபந்தனையாகிலும் ஒருவரம்பாகிலும் கிடை
யாது. அதாவது அதனுடைய ஆக்ஞா சக்கரத்திற்கு
வரையறவு படுத்தக்கூடிய நிபந்தனை யொன்றுங் கிடை
யாது. பார்லிமெண்டில் செய்யப்பட்ட சட்டங்களைப்
பற்றி ஆட்சேபனை முதலிய நிபந்தனைகளைச் செய்ய
பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ள எந்த நீதிஸ்தலத்திற்
கும் அதிகாரமில்லை. இதுகாலங்கண்ட வழக்கமாகவும்
சாலனமாகவும், பூர்விகர்கள் அனுஷ்டித்துவந்த பிர
மாண முறையாகவும் இருப்பது பற்றி, இது பிரிட்டிஷ்
இராஜ நீதியுடன் கலந்து நிற்கிறது. பார்லிமெண்
டால் மாற்ற முடியாத ஓர் உரிமையை பிரிட்டிஷ்
சாம்ராஜ்ஜியத்தில் எந்த மனிதனும் பிரத்யேகமாகப்
பெற்றிருக்கவில்லை; அம்மாதிரியாகவே பார்லிமெண்
டால் நீக்கமுடியாத ஒரு சுய ஆட்சி அதிகாரங்களை
எந்த ஸ்தல சுய ஆட்சிசபையும், குடியேற்ற நாடும்
பிரத்யேகமாகப் (பார்லிமெண்டின் சட்டமின்றி) பெற்
றிருக்கவில்லை. ஆகவே, பார்லிமெண்ட் ஒன்றுக்கே
சர்வாதிகாரமுண்டு. பார்லிமெண்ட் சட்டமின்றி ஓர்



அதிகார முறைமையுமில்லை யென்பதே. அமெரிக்கா
தேசத்து ஐக்கிய அரசாங்கத்தைக் (United States)
கவனிப்போம். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தின்
முறை பார்வைக்குச் சிக்கலாகக் காணப்படினும், இது
வும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தைப் போலவே யுள்ளது.
பார்வைக்கு அதிகாரவர்க்கம் அவ்வளவு தெளிவாகக்
காணப்படாததா யிருக்கும். ஐக்கிய அரசாங்கத்தைச்
சேர்ந்த ஓர் அரசின் அதிகாரமுறை, நிர்வாக வழியாக
விருப்பினும் அல்லது பிரமாண வழியாக விருப்பினும்
அது ஓர் எல்லைக்குட்பட்ட பிரமாணமாகும். அதுபோல
வேறுப்பட்ட அரசாங்கத்திலும்(FederalGovernment)
அல்லது உடம்பாட்சியிலும் உள்ள அதிகார முறை
யும் அவ் வரசாங்கத்திற் கதிபதியாயிருக்கும் அத்யட்சக
ரின் (President) அதிகாரமுறையும், அவ்வரசாங்கத்
தைச் சேர்ந்த காங்கிரஸ் என்னும் மகாசபையின் அதி
கார முறையும் ஆகிய யாவும் ஓர் எல்லைக்குட்பட்ட பிரமா
ணமாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பார்லி
மெண்ட் மகா சபைக் கிருப்பதுபோல, அமெரிக்கா
ஐக்கிய அரசாங்கத்து காங்கிரஸ் மகாசபைக்கு சர்வாதி
காரங்கிடையாது. காங்கிரஸ் மகாசபை யாதாமொரு
சட்டத்தைப் பிறப்பிப்பின் அச்சட்டங்களைப் பற்றி
ஆட்சேபிக்கவும், கட்டுப்படுத்துமா கட்டுப்படுத்தாதா
வென்று நிர்ணயிக்கவுமான ஓர் அதிகாரமும் உரிமை
யும் எந்த நீதிஸ்தலத்திற்கும் உண்டு. உதாரணமாக,
ஏற்றுமதிவரி யொன்றை பிறப்பித்தால் அது பிரமா
ணப்படி கட்டுப்படுத்தாது. ஆகவே, ஐக்கிய அரசாங்க
அதிபதிக்கும் காங்கிரஸுக்கும், ஐக்கிய அரசாங்கத்

தைச் சேர்ந்த அரசுக்கும் அரசின் அதிகாரம் கிடையாது. ஆனால், அதிகார மேன்மையானது வேறோரிடத்திலுள்ளது. எத்தகைய சட்டத்தையும் பிறப்பிக்கலாமென்னும் அதிகாரத்தைப்பெற்றிருக்கும் அச்சபைக்கே அதிகாரப் பிரமாணமுண்டு. ஐக்கிய அரசாங்கத்தின் இராஜநீதி (அரசியல்) யை மாற்றும் அதிகாரம் எந்த சபைக்கு உண்டோ அந்த சபைக்கே சகல சட்டங்களையும் பிறப்பிக்கும் அதிகாரமுண்டு. காங்கிரஸ் மகாசபையிலுள்ள பெரும்பான்மையோ (Majority)ரில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களும், ஐக்கிய அரசாங்கத்தைச் சேர்ந்த பல அரசுகளின் சட்டநிருபண சபையங்கத்தினர்களின் முக்கால் பங்கு தொகையைக் கொண்டவர்களும் ஆக இவ்விருவகையினரும் விசேஷசபை கூடி சங்கேதஞ்செய்து பிறப்பிக்கும் சட்டங்களே பிரமாணமாகும். இங்ஙனம் சங்கேதஞ் செய்து ஒன்று கூடும் இவ்விரு வகையினரே ஐக்கிய அரசாங்கத்தின் இராஜநீதியை மாற்றலாம். மற்றும், பிரான்ஸு தேசத்தைக்கவனிப்போம். பிரான்சு தேசாதிபதிக்கும் நிர்வாக சபைக்கும் (Chamber of Deputies) சட்டநிருபண சபைக்கும் (Senate) நிராதீன அதிகாரம் கிடையாது. மேற்கூறிய யாவருக்கும், பிரன்சு பிரஜாதிபத்ய அரசியல் சட்டங்களால் அதிகாரங்கள் வரையறுக்கப் பட்டுள்ளன. ஆனால், நிர்வாக சபையும் சட்டநிருபண சபையும் ஒன்றுகூடி ஆலோசித்துத் தனி தேசிய மகாசங்கமாகச் சேர்ந்து பிரான்சு தேசத்தின் அரசியல் முறையை மாற்றலாம். அது காலை, அத் தேசிய சபையின் அதிகாரம் பிரமாணமாவதுடன், சர்வாதிகாரம் பெற்ற சபையாகவும் அது



ஆகின்றது. நிற்க, மேற்கூறிய அரசின் அதிகாரதத்துவத்தைப் பற்றிப் பலர் கண்டித்துள்ளார். அரசின் அதிகார தத்துவமுறையைப் பெரும்பாலார் ஒப்புக்கொள்ளாமலிருக்கின்றனர். அவ்வதிகார தத்துவமுறையானது கேவலம் ஒப்பாசாரமாகவும் சுருக்கமாகவுமான நிலைமையிலிருக்கிறதென்றும், இராஜ்ய அதிகாரத்தின் மூல தத்துவத்தைக் குறித்துக்காட்டப் போதுமான காரணத்தைக் கொண்டிருக்கவில்லையென்றும், ஸ்வபாவிகமான பிரமாணங்களுக்குத் தப்பான அல்லது விபரீதமான எண்ணங்களை வெளியிட்டு வருகிறதென்றும் இம்மூன்று காரணங்களால் அரசின் அதிகார தத்துவமுறையை ஆட்சேபிக்கின்றனர். ஆஸ்டின் அவர்களுடைய சித்தாந்தத்தை, இந்தியாவில் சட்ட மெம்பராயிருந்த சட்ட நிபுணர் ஸர். ஹென்றி மெயின் அவர்கள் கண்டிக்கின்றனர். ஸர் ஹென்றி மெயின் அவர்களுடைய சித்தாந்தத்தைப்பற்றியும் சற்று அறிவோம். கீழ்நாடுகளில் (அதாவது இந்தியா, சீனா, ஜப்பான் முதலியவை) அநாதிகாலமாக வரும் வழக்கமே சர்வாதிகாரம் பெற்றதாயுள்ளது. கீழை நாட்டவர்களுக்குச் சட்டங்களைத் தயாரித்துப் பிறப்பிப்பதென்பதும் புதுமையாகவேயிருக்கிறது. கீழ் நாட்டைச்சேர்ந்த கொடுங்கோல் மன்னனொருவனும் மதாசாரத்தையும் பூர்வ சம்பிரதாயத்தையும் எல்லையாகக்கொண்டு அதிகாரமுறையைக் கட்டுப்படுத்தி வைக்கிறான். அதாவது, எவ்வளவு கொடுங்கோன்மையாகயிருப்பினும் அவனுடைய அதிகார முறையானது பூர்வ சம்பிரதாயத்திற்கும் மதாசாரத்திற்கும் கட்டுப்பட்டுள்ள

தென்பதேயாம். உதாரணமாக, இந்தியாவில் பஞ்சாப் மாகாணத்தையாண்ட இரஞ்சித் சிங் அவர்கள் பிறப்பிக்கும் ஓர் உத்திரவை எவனாகிலும் அவருடைய எல்லைக்குள் கீழ்ப்படியாது மீறி நடந்தால், உடனே அவன் மரண தண்டனையையாகிலும் அல்லது அங்க சேதன தண்டனையையாகிலும் அடைவான். இவ்வளவு யதேச்சையான அதிகாரத்தை அம்மன்னன் பெற்றிருந்தும், தன்னுடைய அதிகாரத்தை (ஆஸ்டின் அவர்கள் கூறும் அவ்வதிகாரமென்னும் சட்டத்தை)ச் செலுத்தவில்லை. ஏனெனில், பிரஜைகளின் ரட்சணைக்குரிய அல்லது இரட்சணைக்காதாரமாயுள்ள பிரமாணங்கள் யாவும் காலங்கண்ட வழக்கமாய்த்தொன்று தொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வந்ததால், இந்த பிரமாணங்கள் அல்லது அதிகாரங்கள் யாவும் உள்நாட்டு நீதிமன்றங்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. ஆகவே, ஆஸ்டின் அவர்களுடைய நீதி சாஸ்திரத்திற் கூறியபடி அதிகாரம், அரசு, பிரமாணம் (சட்டம்) ஆகிய இவைகள் கீழ்நாட்டு அரசாங்கங்களுக்கு ஒவ்வாததாகுமென்று ஸர் ஹென்றி மெயின் அவர்கள் கூறியுள்ளார். மேலைய நாடுகளிலும் அரசாங்கம் உண்டான விஷயமாகப் பல வியவகார மார்க்கங்களை ஆராய்ச்சி செய்கையில் பலாத்காரத்தாலேயே அல்லது வலிமையின் மிகுதியினாலேயே அரசு உண்டாயிருக்கவேண்டுமென்னும் ஒரு சித்தாந்தம் தவிர, ஏனைய சித்தாந்தங்கள் யாவும் சரித்திர மூலாதாரமாக ஒப்புக்கொள்ளவில்லை என்பதும் சிலமேதாவிகளின் துணிபு. இதக, ஆஸ்டின் அவர்கள் ஸர் ஹென்றி மெயின் ஆட்சேபித்தபடி



ஆட்சேபனைகளுண்டாகும் என்று எதிர்பார்த்தே அநாதிகாலமான வழக்கமே ஆதிக்கஞ்செலுத்துமென்னும் தன்மையைக் கருதியே, 'அதிகாரமானது எவ்வளவு தூரம் இடங்கொடுக்கின்றதோ அவ்வளவு தூரம் அதிகாரத்தை அவ்வதிபதி செலுத்துகின்றான்' என்று கூறியுள்ளார். ஆங்கிலேயர்களுடைய பூர்வ ஆசாரமே பிரமாணமானதை மேற்கூறிய ஆஸ்டின் அவர்களுடைய கூற்று விளங்கவைத்தது. அவ்வாங்கிலேயர்களுடைய பழைய ஆசாரமான பிரமாணங்கள், பார்லிமெண்ட் அதிகாரத்தால் சட்டமாக இயற்றப் பட்டவையல்ல. ஆனால், அவைகள் அடிக்கடி நீதிமன்றத்து நியாயாதிபதிகளால் வியாக்கியானஞ் செய்யப் பட்டு பற்பலவிதமாக மாறுதல்களை யடைந்திருக்கின்றன. ஆகவே, பழைய ஆசாரங்களின் வாயிலாக ஏற்பட்ட பிரமாணங்களைப் பார்லிமெண்டார் ஒன்றுஞ் செய்ய முடியாதென்னுங் காரணத்தைக் கொண்டு, அப்பார்லிமெண்டுக்கு ஓர் அதிகார வரம்பையுண்டாக்குவதென்பது அவ்வளவு திருப்திகரமானதல்ல. ஏனெனில், அப்பழைய ஆசாரப் பிரமாணங்கள் அடிக்கடி மாற்றப் பட்டுப் பார்லிமெண்டால் அங்கீகரிக்கப் பட்டு வந்த காரணத்தால், அப்பிரமாணங்கள் புதியனவாகி, பார்லிமெண்ட் நிராதீனமாய் சர்வாதிகாரம் பெற்றதாகும். ஆஸ்டின் அவர்களுடைய சித்தாந்தம் தற்கால நாகரிகப் பான்மையைக் கொண்ட அரசுகளுக்குப் பொருந்துமே யன்றி, நாகரிகமற்ற பூர்வ சமூக சாங்கத்தைக் கொண்ட அரசுகளுக்குப் பொருந்தாதென்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். இதக, விஷயமும் நாகரிகப் பான்மையுங்

கொண்ட சமூகசாங்கத்தைக் கொண்டிருப்பதே அரசு என்றும், அவ்வரசுக்கு உரூப்பாயுள்ள அதிகார சாங்கத்தால், நேராகவோ அல்லது மறைவாகவோ கட்டளையிடும் அதிகாரத்திற்குச் சட்டம் என்றும் கூறப்படும். ஏற்றத் தாழ்ச்சியும் விகற்பமுமின்றி ஒரே சீரான பிரமாணமெனக்கொள்ளப்பட்டு அரசாங்க அதிகாரத்தையும் பிரமாணத்தையும் பெற்ற நிர்வாகருத்தும் நிச்சய ஆசாரமுங் கொண்டதற்கே சட்டம் என உட்ரோ உல்ஸன் அவர்கள் கூறுகிறார். சட்டங்கள் மதசம்பிரதாயங்களையும் தர்மசாஸ்திரம் நீதிசாஸ்திர முதலிய சாஸ்திரங்களையறிந்த மேதாவிகளின் சித்தாந்தங்களையும் மூலாதாரமாகக் கொள்ளும். நிற்க, ஒருவனோ அல்லது சிலர் சேர்ந்து சாங்கமாகக்கூடியோ, மற்ற சமூகத்திலுள்ளவர் மீது அதிகாரத்தைச் செலுத்தச் சட்டப்படி யோக்கியதையுள்ளவர்களென்பதினால், இராஜ்ய அதிகாரமுறைக்கு முடிவான சேமஸ்தானம் எது என்பதை அறிய வழியில்லாமல் இருக்கின்றது. ஒரு கொடுங்கோன்மையான அரசாங்கத்தில் அரசுபுரியும் மன்னனுடைய இஷ்டமே சர்வாதிகாரப்பிரமாணம்: ஆனால் அம்மன்னன் கபடமும் வஞ்சனையுங்கொண்ட மந்திரியின் வசமாகிச் சித்திரப்பாவை போலிருக்கிறான்; ஆகவே, இதைக் கொண்டு அரசனுக்கு அதிகாரமும் அல்லது அரசைப் பற்றிய சட்ட நிரூபண சபையின் அதிகாரமும் பார்வைக்கு நாமரூபமாகவேனும், பொய்யாகவேனும், இன்னொருவனுக்கு உட்படைந்தேயிருந்த போதிலுங்கூட, அவ்வரசனுக்கும் அரசைப்பற்றிய சட்டநிரூபண சபைக்கும் பிரமாணப்படி அதிகாரமில்லை



யெனக்கூறுதல் முடியாது. இதுவிஷயமாகப் பல மேலைய நாட்டு இராஜரீக சாஸ்திரக்ஞர்கள் பல அபிப்பிராயங்களைக் கூறியிருக்கின்றனர். அரசுக்குப் புறத்தே மற்றொரு அதிகார முள்ள தென்றும், இவ்வதிகாரத்திற்குமுன் பிரமாண அதிகாரமெனக் கூறப்படும் அதிகாரம் தலை குனிந்து வணங்கவேண்டு மென்றும் பண்டிதர் டைஸி கூறியுள்ளார். முடிவான இராஜ்ய அதிகாரமானது, பிரமாண அதிகாரத்தைப் பெற்றவர்களின் ஆதீனத்தில் இல்லையென்று உத்தேசமான இரண்டொரு அம்சங்களால் பண்டிதர் ஸிட்ஜ்விக் நிரூபிக்கிறார். மகாஜனசபையாரால் நியமனம் பெற்ற பொறுப்பற்ற சர்வாதிகாரி யொருவன் சிலவருடகாலம் அரசுபுரிய முன்வருகிறான். அவன் மீண்டும் நியமனம் பெற இச்சையில்லாதவனானால் தன்னிஷ்டப்படி அதிகாரமுறையைக் கொள்கிறான். மீண்டும் அரசுரிமையைப்பெற இஷ்டப்படின் மகாசன சபையின் கருத்தையொத்து இஷ்டப்படி நடக்க முயலுகிறான். ஆகவே, அவன் பிரமாணப்படி சர்வாதிகாரம் பெற்றிருந்தாலும் இராஜ்ய அதிகாரத்தைப் பெற்ற மகாசன சபைக்குக் குனிந்து அதிகாரத்தைச் செலுத்துகிறான். ஆகவே, அவனுடைய அதிகாரம் முடிவான அதிகாரமாக மாட்டாது. மற்றும், எப்பொழுதும் ஒருமந்திரியின் வார்த்தைப்படி நடந்தும், மதாசாரியனொருவனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடந்தும் வரும் ஓர் அரசன், அம்மதாசாரியனுடைய வார்த்தைக்குக் கட்டுப் படாமற் போனால் என்ன ஆபத்து சம்பவிக்குமோ வென்னும் பயத்தாலோ அல்லது அத்தகைய பயமொன்று மில்லா

மலோ இருப்பினும், அம்மதாசாரியனுடைய வார்த்தைக்கு விரோதமாகப் போனால், அவனையே பிரத்யக்ஷ தெய்வமாகவோ அல்லது தெய்வாம்சம்பெற்ற மகாத்மாவாகவோ கருதியிருக்கும் பிரஜைகள் அரசனுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமற்போனாலும் போகலாம் என்னும் எண்ணத்தைக்கொண்டு அவ்வரசன் அம்மதாசார்யனுடைய வார்த்தைக்கும் சனங்களுடைய அபிப்பிராயத்திற்கும் கட்டுப்பட்டு வருகிறான். ஆகவே, அவ்வரசன் பிரமாணப்படி சர்வாதிகாரம் பெற்றவனாயிருந்தும் இராஜ்ய அதிகாரமற்றவனாகவே யிருக்கிறான். ஏனெனில், இராஜ்ய அதிகாரம் மதாசார்யனிடத்திலுள்ளதாலேயே. ஆகவே, இராஜ்ய அதிகாரமும் பிரமாண அதிகாரமும் பொதுவாக ஒன்றையொன்று தழுவி நிற்பதில்லை. ஓர் அரசில் மதாசார்யனும் மற்றொன்றில் பிரபுத்துவ வகுப்பினரும், இன்னொன்றில் நகரத்தார்களுடைய செல்வாக்கும், பின்னொன்றில் அரசனுடைய குணவிசேஷங்களும் ஆகிய இவைகளே அரசபரிபாலனத்திற்குப் பலமான அதிகாரங்களாம். மேலும் இராஜ்ய சர்வாதிகாரம் அநேகமாகப் பொது சனங்களின் வசத்திலேயே யிருக்கிறது. அப்படி யில்லையென்றாலும், பிரஜாதிபத்ய நாடுகளின் மொத்த சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு தொகையைக்கொண்ட வாக்குரிமைபெற்ற வாக்காளர்களின் வசத்திலேயே அவ்வதிகாரமுள்ளது. இது முற்றிலும் மிகையாமென்பாருமுண்டு. சட்டப்படி வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளைச் சட்ட நிரூபண சபைக்குத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும், இஃதொன்று



தவிர, வேறு அதிகாரங்களை அவர்கள் பெறவில்லை. அநேக அரசாங்கங்களில் அவர்கள் சட்டங்களைப் பிறப்பிக்கவும் அல்லது சட்ட சபையில் பிறந்த சட்டங்களை மாற்றவுமான அதிகாரங்களைப் பெறவில்லை. கிரேட் பிரிட்டன் என்னும் இங்கிலாந்தில், உதாரணமாக, பார்லிமெண்டானது தன்னுடைய இருப்பையறிந்து சட்டங்களைச்செய்ய சர்வாதிகாரம் பெற்றிருக்கிற தன்மையால், ஒரு சட்டத்தை யேற்படுத்தி வாக்காளர்களுக்குரிய சில உரிமைகளைப் பறிக்கச்செய்யலாம். தவிர, வாக்காளர்களிடத்திலேயே இராஜ்ய அதிகாரமுள்ளதென்போமானால், அவர்கள், மதாசாரியருடைய வார்த்தைக்கோ அல்லது பிரபுக் கட்சியினர்களுடைய வார்த்தைக்கோ அல்லது மற்ற யாதாமொரு கட்சியினர்களுடைய வார்த்தைக்கோ கட்டுப்படுவார்களானால், இராஜ்ய அதிகாரம் அவ்வாக்காளரிடத்தினின்றும் மறைகின்றதெனவுங் கூறலாம். ஆகவே, பிரஜாதிபத்யமுள்ள நாடுகளில் வாக்காளர்கள் எப்பொழுதும் நிரந்தரமாக ஒரு முடிவான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்களென்று கூறமுடியாதென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். தற்கால அரசில் சட்டஞ்செய்ய, வரம்பற்ற அதிகாரத்தைப்பெற்ற ஒரு பகுதியினரே காணக்கூடிய உறுதியான வகுப்பினராக ஆவர். பண்டிதர் ரீட்சி முதலானோரும், இராஜ்ய அதிகாரத்திற்கு முடிவான சேமஸ்தானம் பொது சனங்களிடத்தே யுள்ளதெனக் கூறுகின்றனர். எந்த வழியாக ஆராய்ச்சி செய்யினும், வாக்காளர்களின் மூலமாகவோ அல்லது அவர்களைத் தூண்டும் வகையினர்களின் மூலமாகவோ

அல்லது, வாக்காளர்களை வசப்படுத்தியும் பயமுறுத்தியும் மற்ற பல முறைகளைச்செய்தும் வாக்காளர்களை ஆதீனப்படுத்தும் மூலமாகவோ பார்க்கினும், கடைசியாக இராஜீய அதிகாரம் பொது சனங்களிடத்திலேயேயுள்ளதெனவும் அவர் அபிப்பிராயப்படுகிறார். ஜனங்களிடத்தில் இயல்பான ஓர் சக்தியிருக்கிறது. அச்சக்தியைக்கொண்டு அவர்கள் தங்களுக்கு வேண்டியதை சாதித்துக்கொள்கின்றனர். அவர்கள் பொதுவாக எந்த விதமான அரசாங்கமுறைமைக்கும் கட்டுப்பட்டிருப்பது அவர்களுடைய சம்மதத்தினாலேயேயாம். ஆகவே, பொது சனங்கள் இராஜீய அதிகாரத்தைப் பெற்றிருக்க, அவர்களுக்கு இராஜீய அதிகாரங் கொடுக்கப்படவேண்டுமென்பது மிகையென்றும் சிலர் கூறுகின்றனர். தேக வலிமையையும் சக்தியையுங்கொண்ட சனங்கள் இஷ்டப்படின் அல்லது வற்புறுத்தப்படின், இருக்கும் அரசாங்கத்தை மாற்றவுஞ்செய்வர். ஆனால், பலாத்காரத்திற்கு ஓர் எல்லையிருக்கவேண்டும். பலாத்காரம் மிதமிஞ்சிப் போகுமானால் அவர்கள் வருந்துவர். ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து இருப்பார்களானால், அவர்களே முடிவில் எசமானர்களாக ஆவர். நிற்க, இராஜீய அதிகாரம் சனங்களுடைய பலத்தால் நிற்றதென்பதைச் சிலர் கண்டிக்கின்றனர். கோடிக்கணக்கான சனங்கள் தங்கள் தேகவலிமையைக்கொண்டு அரசை ஸ்தாபிக்க முயன்றால், நல்ல யுத்த பயற்சியும், தற்கால சாஸ்திர முறையைக்கொண்ட யுத்ததளவாடங்களுங்கொண்ட பதினாயிரம் யுத்தவீரர்கள் அக்கோடிக்கணக்கான சனங்களின் முயற்சியை வீணாக்கி



அவர்களைக் கீழ்ப்படியும்படி செய்யக்கூடும். ஆகவே, தொகையின் பெருக்கமே பலமான அதிகாரத்திற்கு அடையாளமென்பது சிறிதும் பொருந்தாது. ஆகவே, முடிவான இராஜீய அதிகாரமானது பொதுசனங்களிடத்திலும் தொகைப் பெருக்கத்தினர்களிடத்திலுமில்லை. பின்னர், ஒன்றுசேர்ந்து ஒருபலமான காரியத்தைச் செய்யகூடிய திடமான தொகையினரிடத்தே முடிவான இராஜீய அதிகாரமுள்ளதெனச் சிலர் கூறுவர். இன்னும், ஒன்று சேர்ந்து பலமான காரியத்தைச் செய்ய அத்தொகையினர்களை யேவும் மனிதனிடத்திலோ அல்லது ஒரு சிறு குழுவினரிடத்தோ சர்வாதிகாரமுமுள்ளதென்றும் கூறப்படுகின்றது. ஏனெனில், அத்தனிமனிதனொருவனுக்கோ அல்லது அச்சிறுகுழுவினுக்கோ அத்திடமான தொகையினர் அடங்கி, அன்னவர் கட்டளையைத்தாங்கி நிற்பதே சான்றும். ஆகவே, இத்தகைய அதிகாரங்களின் முறையில் தனிமனிதனுடைய சுதந்தரம் என்னவாகும் என்பதைப் பற்றி அடுத்த அத்தியாயத்திற் காணலாம்.

# 5. மனித சுதந்தரம்

அரசின் அதிகார முறையானது தனிமனிதனுடைய சுதந்தரத்திற்கும் அரசுக்குமுள்ள சம்பந்தத்தை ஆலோசிப்பதோடு நிற்காது. ஏனெனில் அரசின் அதிகார முறையில் தனிமனிதனுடைய சுதந்தர நிலைமையும் அவனுடைய போக்கும் எத்தன்மையதாக விருக்கும் என்பதை சித்தாக்கப் படுத்தவும் அது முயலும். அரசின் அதிகார மென்பதும் மனித சுதந்தரமென்பதும் ஒன்றுக்கொன்று விரோதமானதெனப் பார்வைக்குப் புலப்படும். அரசின் அதிகாரத்திற்கு எல்லையில்லையென்றும், அரசு சர்வாதிகாரம் பெற்றதென்றும், அவ்வதிகாரத்திற்கு முன் மனிதனுடைய உரிமை யொன்றும் செல்லாதென்றும் அவ்வதிகாரத்திற்கு விரோதமாக மனிதனுக்கு ஓர் உரிமையுமில்லையென்றும் கூறப்படுவதால், மனிதனுக்கு உரிமையே யில்லையென்னும் முடிவுக்கு வரக்காரணமாகிறது. ஆனால், ஆழ்ந்து யோசிக்குமிடத்து அரசின் அதிகாரத்திற்கும் மனிதசுதந்தரத்திற்கும் நெருங்கிய அன்னியோன்னிய முறையுண்டென்பதை நாம் அறியலாம். தவிர, அதிகார சித்தாந்தமின்றி மனிதசுதந்தரத்தின் நிச்சயத்தன்மை பிரமாணமாக ஏற்படாது. மிக, சுதந்தரம் (Liberty) சுயேச்சை (Freedom), யதேச்சை (Free) என்னும் இச்சொற்கள் பல பொருள்களைக்கொண்டு பற்பல விதமாக உபயோகப்படுகின்றன. உதாரணமாக, யதேச்சாதிபத்தியம் (Free Monarchy) என்பதில் உபயோகப்படும் யதேச்சை என்னுஞ் சொல்லால் தழுவிவரும் அரசாங்கத்திற்கு நிர்



னை யதேச்சாதிபத்தியம் (Absolute Monarchy) எனப்படும். ஆகவே, யதேச்சாதிபத்தியம் என்பதற்கும் யதேச்சையான கவர்ன்மெண்டு (Free Government) என்பதற்கும் வெவ்வேறான தன்மையுண்டாகி, ஒன்றுக்கொன்று விரோத பாவம் ஏற்பட்டிருப்பதால், யதேச்சாதிபத்யம் என்ற இடத்தில் குறிப்பிட்ட யதேச்சை என்னுஞ் சொல்லும் யதேச்சை கவர்ன்மெண்டு என்ற இடத்தில் பிரயோகிக்கப்பட்ட யதேச்சை என்னுஞ் சொல்லும் முற்றிலும் ஒன்றுக்கொன்று விரோதமானது. மேலும், சங்கங்களின் சுதந்தரம், வகுப்பு சுதந்தரம், நகர்சுதந்தரம் ஆகிய சுதந்தரங்கள் என்பதால் அவைகள் ஒருதனி பாத்தியதைகளைப் பெற்றவைகளெனப்படும். அங்ஙனம் தனிபாத்தியதை என்பதால் பாத்தியதையில்லாத இனங்களில் தலையிடப்பட்டதாகக் கொள்ளப்படும். ஒப்பந்த சுதந்தரம் (Freedom of Contract) என்பதால் ஒரு கட்சியினர் மற்றொரு கட்சியினருக்குக்கட்டுப்பட்டிருப்பதைக்குறிக்குமல்லவா? ஒரு யதேச்சையான கோயில் (Free Church) அரசின் அதிகாரத்திற்குட்பட்ட கோயில்களில் இருக்கும் சுதந்தரத்தைக் காட்டிலும் குறைவான சுதந்தரமிருக்கலாம். ஆகவே சுதந்தரம் (Liberty) என்னுஞ் சொல் பார்வைக்குச் சாமானியமெனக் காணப்படினும், அதில் மிக்க சிக்கலான பொருள் அமைந்திருக்கும். ஒவ்வொருவனும் தாராளமான சுதந்தரத்தை அனுபவிக்கவேண்டுமென்றும், அச் சுதந்தரத்தைத் தடுப்பது அநீதியென்றும் சாதாரணமாக நாம் கூறுகிறோம். அங்ஙனம், நாம்கூறுகையில் சுதந்தரம்என்னுஞ் சொல்லின் பொருளையறியா

ம்லேயிருக்கிறோம். ஆனால், அச்சுதந்தரம் என்னும்பொ
ருளை ஆராய்ச்சி செய்யப்புகுந்தால், காலங்கண்ட வழக்க
மாகவும் புரான வழியாகவும் கூறப்படும் மனிதசுதந்த
ரத்திற்கு ஓர் எல்லையைக் கற்பிப்பதாகும் என்றும் சிலர்
கூறுகின்றனர். மனிதன் சுபாவிகமாக அரசுக்குச்சம்
பந்தமின்றி அனுபவித்துவரும் பிறப்புரிமை என்னும்
இயற்கை சுதந்தரம், அரசு என்னும் சங்கத்தால் கட்
டுப்படக்கூடியதாகும். இதையே ரூஸோ என்பவரும்
அன்னோன்னிய வாழ்க்கையின் ஒப்பந்தத்தால் மனி
தன் இயற்கையான சுதந்தரத்தையும் இஷ்டப்படி ஒரு
காரியத்தைச் செய்வதில் தங்குதடையற்ற உரிமையும்
இழக்கிறான் என்று கூறியுள்ளார். இது பிழை
யென்பாருமுண்டு. ரூஸோ அவர்கள் கூறியபடி அத்
தகைய சுதந்தரம் முடியாதென்றும், மனிதனொருவன்
எங்கும் பிரசன்னமான சர்வவல்லமையைப் பெற்றிருந்
தால்மட்டும் முடியுமேயன்றி, வியவகார முறையில்
சாமானியமாக முடியாதென வேறு சிலர் அபிப்பிராயப்
படுகின்றனர். ஒரு மனிதன் தனக்கிஷ்டமான காரிய
மொன்றில் தடையற்ற உரிமையைக்கொண்டு செய்யப்
பிரயத்தனப்படுகையில் வேறு பலருக்கும் அதே காரி
யத்தைச் சிந்தித்து அவர்களிஷ்டமானபடி தடையற்ற
உரிமையைக்கொண்டு செய்யப் பிரயத்தனப்படுவார்க
ளானால் என்னவாகும் என்பதை யோசிக்குமிடத்து
'சுதந்தரம்' 'உரிமை' என்னுஞ் சொற்களுக்கு ஓர்
அர்த்தத்தைக் குறித்துக்காட்டுவது பிழையென விளங்
கும். ஒருவருடைய தூண்டுகோலின்றியும் அல்லது
யாதாமொரு வழியின் பிரயத்தனமின்றியும், வெளி சம்



ஸர்க்கமொன்றுமின்றியும் நிச்சயிக்கும் மனோசக்திக்
கும், நிச்சயித்தபின் ஒரு காரியத்தைச் சாதிக்கச் செய்
யும் வல்லமைக்கும் சுதந்தரம் எனப்படும் என்று அமெ
ரிக்கா கிரந்த கர்த்தா லைபர் என்பவர் கூறியுள்ளார்.
இம்முடிவான அர்த்தத்தைக்கொண்ட பொருளில்
சுயேச்சையான பதார்த்தமொன்றேயுண்டு; அப்பதார்த்
தமொன்றே வெளி சம்ஸர்க்கமும் மற்றொருவருடைய
பிரயத்தனமு மில்லாமல் தானாகவே நிச்சயிக்கவும்,
நிச்சயித்தபடி செய்யவுமான சக்தியைப் பெற்றுள்
ளது. அப்பதார்த்தமே பராபரவஸ்து. அப்பராபர
வஸ்துவாகிய கடவுள் ஒருவரன்றி வேறொருவரால்
அங்ஙனம் நிச்சயிக்கவும் நிச்சயித்தபடி செய்யவும்
முடியாது. ஆகவே, மனிதன் சாமானியமாகக் கை
யாளப்படாத நிலைமையில், அவன் வெளி சம்ஸர்க்கத்
தையும் அரசின் ஆதரவையும் விரும்புகிறான். ஆகவே,
சுதந்தரமென்பது ஒருவன் தன்னிஷ்டப்படி செய்யுங்
காரியத்தில் வேறொருவன் செய்யுங் காரியத்திற்குத்
தடையின்றி யிருத்தலாம். இத்தகைய சுதந்தரம்
ஓர் எல்லைக்குட்பட்டதாயினும் முரண்படக் கூடாத
தாயிருக்கிறது. ஒருவனுடைய சுதந்தரமென்பது மற்
றொருவனுடைய சுதந்தரப் பறிப்பு என்பதல்ல. சுதந்
தரத்திற்கு இத்தகைய வியாக்கியானஞ் செய்தே 1789ம்
வருடத்தில் பிரான்சு தேசத்தில் மனித உரிமைகளின்
நிர்ணய பிரதிக்கினை ஷரத் அங்கீகரிக்கப் பட்டது.
மற்றொருவனைத் துன்பப்படுத்தாமல் எல்லாக் காரியத்
தையுஞ் செய்வதே சுதந்தர மென்பார். ஒவ்வொரு
மனிதனும் தன் மனோபீஷ்டப்படி அல்லது மனதிற்

குத் தோன்றியவாறு செய்யலாம். ஆனால், அவன் மற்றொருவன் அவனிஷ்டப்படி செய்யுங் காரியத்தில் தடையின்றிருக்க வேண்டுமென்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் கூறுகின்றார். ஆகவே, அதிகார முறையைச் செலுத்துவதற்கும் சுதந்தரத்திற்கும் யாதொரு முரண்பாடுமில்லை யென்பது நன்கு விளங்கும். சுதந்தரமானது தடைபடுவதினின்றும் நீங்கித் தாராளமாக விளங்கத் தடைபடும் பதார்த்தங்களையேனும் அல்லது வழிகளையேனும் அப்புறப்படுத்துவதற்கு ஓர் சக்திவேண்டுவதால், சுதந்தரம் அதிகாரத்தைப் பற்றியும் அதிகாரத்தின் ஆதீனத்திலிருந்தும் வரும். ஆகவே, அரசுஎன்பதே தன்னுடைய பிரஜைகளின் சுதந்தரத்திற்கு ஜவாப்தாரியாகிறது. அப்பிரஜைகளின் உரிமைகளைப் பிரமாணமாக்கி அதிகாரமுறையைக் கொண்டு அங்கீகரிக்கச் செய்து, அச்சுதந்தரத்தைக் காக்கும் பொறுப்பாளியாக அவ்வரசு நிற்கிறது. ஆகலால், முற்றுமுடிதலான அல்லது பூர்ணமான சுதந்தரத்தை எவனும் பெறமுடியாது. எல்லோராலும் அனுபவிக்கப் படும் சுதந்தரத்தை எல்லாமனிதர்களும் அனுபவிக்க, ஒவ்வொருவனுடைய காரியத்திற்கும் கட்டாயத் தடை யொன்று ஏற்படுத்த ஆவசியமுண்டாகிறது. கட்டாயத்தடை யொன்றை ஏற்படுத்த அரசுக்கு சாத்தியமேயன்றி வேறொன்றுக்கும் சாத்தியமில்லை. ஆகவே, அரசு, கட்டாயத் தடையொன்றை ஏற்படுத்தி நபர்சுதந்தரத்தை நிர்ணயிக்கிறது. இத்தகைய சுதந்தரத்திற்கு நகர சுதந்தரம் அல்லது ஜன சுதந்தரம் (Civil Liberty) என்று பெயர். அரசின் அதிகாரமுறையொன்றினாலேயே நபர்



சுதந்தரம் ஸ்தாபிக்கப்படும். இங்ஙனம், நபர் சுதந்தரத்தை நிர்ணயிக்கும் அரசு, அந்நபர்கள் சுதந்தரமின்றியில்லாமல் தாராள உரிமையைப்பெறும் வழியையும் ஸ்தாபிக்கவேண்டிய கடமையைக் கொள்ளவில்லையாவென்னும் விஷயத்தில் அபிப்பிராய பேதம் உண்டு. நபர் உரிமையைக்காக்கும் விஷயமாக ஓர் நிர்ணயத்தை யுண்டாக்கிப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு இல்லையென்றும், ஒருவனுடைய சுதந்தரத்தில் மற்றவர் தலையிடாமற்படி தடுத்து ஆளும் கடமையை அரசு வகிக்கப் பாத்தியப்படவில்லையென்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் 19-வது நூற்றாண்டில் தோன்றின பல மேதாவிகள் நபர் உரிமையைக் காக்கும் கடமை அரசாங்கத்ததேயென்றும், ஒருவனுடைய சுதந்தரத்தில் மற்றவர் தலையிடாமற்படி தடுத்து ஆளும் பொறுப்பை அரசாங்கமே வகித்துள்ளதென்றும் கூறுகின்றனர். இது விஷயமாக அரசாங்கம் என்பதைப் பற்றிக் கூறப்படும் அத்தியாயத்திற்காண்க. சுதந்தரம் என்னுஞ்சொல் நகர சுதந்தரம் அல்லது ஜனசுதந்தரம் என்பதோடு ஒருதேச விடுதலையையுங் குறிக்கும். அப்பொழுது அதை சமுதாய சுதந்தரம் (National Liberty) அல்லது தேச சுதந்தரம் என்பார். மேற்கூறிய இரண்டையும் விட்டுத் தனியே இச்சுதந்தரம் என்னும் சொல் மற்றொன்றையும் குறிக்கும். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம், பிரான்சு, கிரேட் பிரிட்டன் (Great Britain) ஆகிய இம்மூன்றும் யதேச்சையான அல்லது சுயேச்சையான அரசாங்கத்தை யனுபவித்து வருகின்றன வென்று கூறுகையில் ஜனங்களால் ஸ்தா

பிக்கப்பட்டு ஜனங்களுடைய பொறுப்புக்குட்பட்டு வரும் அரசாங்கங்களென தெரியவரும். சுதந்தரம் என்பதும் அரசாட்சிக் குரிய அல்லது பிரமாணமான சுதந்தரம் என்பதும் பிரஜாதிபத்தியத்தையே குறிக்கும். அதாவது, ஜன ஆட்சி ஸ்தாபனத்தை குறிக்கும். சரித்திர முறையாக ஆராயுமிடத்து சர்வசன சம்மதமும் ஆதிபத்யமுமின்றி சிறுபான்மையோரால் அரசாங்க அதிகாரத்தை நிர்வகிக்கின்ற முறைக்கும் நாம் பிரமாணமான சுதந்தரமென்று கூறுகிறோம். இங்கிலாந்தில் வாக்காளர்களின் தொகையை அதிகப்படுத்தி விசாலமான சீர்திருத்தங்களை 1832-ம் வருஷத்தில் உண்டாக்கினதற்குமுன் அரசாங்க அதிகாரமானது ஆங்கில சமுதாயத்தில் சிறுபான்மையோருடைய ஆதீனத்திலேயே யிருந்தது. பிறகு, பொதுஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாக இராஜீய உணர்ச்சியைக் கொண்டு, அரசாங்கத்தின் கொடுங்கோன்மையினின்றுங் காப்பாற்ற அச்சிறுபான்மையோரை வற்புறுத்தி வந்தனர். இத்தகைய வற்புறுத்துதலைக் கொண்ட நிலைமைக்கும் பிரமாணமான சுதந்தரமென்னலாம். ஆனால், ஜனங்களுடைய ஆதிக்கத்தைக் கொண்ட அரசாங்கத்திற்கே தான் பிரமாணமான சுதந்தரமென உறுதியாகக் கூறலாம். ஒருசமுதாயத்தில் சிறுபான்மையோருடைய ஆதிக்கத்தினாலேயே நடந்துவரும் அரசாங்கத்திற்கு அவ்வண்ணம் கூறுவோமானால், பெருந்தொகையாளர்களுடைய இராஜீய அந்தஸ்துக்கு ஒரு குறைவைக் கற்பிப்பதாகும். ஐரோப்பிய க்ரந்த கர்த்தாக்கள் பலர், கவர்ன்மெண்டையும் அரசையும் ஒன்றுபடுத்தித்



தாறுமாறு செய்கின்றனர். அரசு, சமூக சங்கத்திற்கு மூலாதாரமென்றும், அச்சமூக சங்கத்தின் அதிகாரத்தால் கவர்ன்மெண்டு (அரசாங்கம்) ஏற்பட்டு அக்கவர்ன்மெண்டின் அதிகாரம் நிர்ணயிக்கப்படுகிறதென்பதை விளங்கவைக்க வேண்டுமென்று பண்டிதர் பர்க்கஸ் கூறுகிறார். அரசாட்சிக்குரிய உபாயங்களைக் கொண்டு சாதாரணமாக நடப்பிப்பதற்கே அரசாங்கமென்பர். ஆகவே, சமூக சங்கம் என்னும் அரசு கவர்ன்மெண்டின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி அல்லது ஓர் எல்லைக்குட்படுத்தி மனிதனுக்குச் சில பாத்தியதைகளைக்கொடுத்து அப்பாத்தியதைகளில் கவர்ன்மெண்டு தலையிடாமற்படி செய்யவுங்கூடும். இத்தகைய பாத்தியதைகளுக்கு நகர சுதந்தரம் அல்லது சன சுதந்தரம் எனப்படும் என்றுங் கூறப்படுகிறது. அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தில், மேற்கூறிய அபிப்பிராயப்படி அரசின் சங்கம் அவ்வரசாங்க ஆட்சிக்குரிய பிரமாணங்களைப் பிறப்பிக்கவும் மாற்றவுமான சபைக்குள்ளிருக்கும். இந்த சபையின் அதிகாரத்தால், ஒரு நபருடைய பேசுஞ்சுதந்தரம், மதசுதந்தரம் இவைகளில் அந்நாட்டைச் சேர்ந்த கவர்ன்மெண்டு தலையிடக்கூடாதென தீர்மானிக்கப்பட்டது. கவர்ன்மெண்டானது ஏற்றுமதித் தீர்வையை சுமத்தாமலிருக்கலாம்; ஒப்பந்தங்களைச் சமப்படுத்த சட்டமொன்றை யுண்டாக்காமலிருக்கலாம்: இன்னும் கௌரவப்பட்டங்களைக் கொடுக்காமலுமிருக்கலாம். ஆகவே, பர்க்கஸ் அவர்கள்" கூறியபடி அரசாட்சியை நடப்பிக்கச் சட்டங்களைச் செய்பவர்கள் மனிதனுக்கு அளிக்கும் எல்லா

பாத்தியதைகளுக்கும் நகர சுதந்தரம் அல்லது சன சுதந்தரம் ஆகும். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தைப்போலவே அரசாங்கங்களெல்லாம் இருந்தால், பர்க்கஸ் அவர்கள் கூறும் நகர சுதந்தரம் இன்பமாகவும் பிரயோசனமுள்ளதாகவுமிருக்கும். இந்த சித்தாந்தத்தை இங்கிலாந்து, பிரான்சு, இதாலி முதலிய அரசாங்கங்களுக்குப் பிரயோகித்தால், மகத்தான கஷ்டம் உண்டாகும். இங்கிலாந்தில் நாயகமாயிருப்பது பார்லிமெண்ட் மகாசபை. மேற்கூறிய வியாக்கியானப்படி பார்லிமெண்ட்சபையே அரசு. அதுவே லௌகிகமானதும் ஒழுங்கானதுமான கவர்ன்மெண்டாகும். ஆகவே, தன்னுடைய அதிகாரத்தைக் கொண்டு தனக்குத்தானே பிரமாணப்படி தள்ளமுடியாத நபர் உரிமைகளைப்பாதுகாக்கும் படியான பொறுப்பை யேற்றுக் கொள்ள அது சிக்கிக்கொள்ளாது. இந்நிலைமையில் இங்கிலாந்தில் அரசாட்சிக்குரிய சட்டத்தில் ஜன சுதந்தரமில்லையெனப் புலப்படும். இப்படிக் கூறுவதால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டில் ஜன சுதந்தரமென்பதே இல்லையாதென்றும் முடிவுக்கு வரலாயிற்று. பர்க்கஸ் அவர்கள் இங்கிலாந்தில் அரசாட்சிக்குரிய சட்டத்தில் பிரத்யேகமாக சனசுதந்தரமில்லையென்றும் ஆனால் பிறகு உண்டான சட்டங்களினால் (Statute) ஏற்பட்டிருக்கிறதென்றும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலும் பிரான்சு அரசாங்கத்திலும் கவர்ன்மெண்டினுடைய தயவிலேயே சனசுதந்தரத்தின் பகுதி ஒவ்வொன்றும் நிலைத்திருக்கிறதென்றும் கூறுகிறார். இவ்விஷயமாக அபிப்பிராயபேதமுமுண்டு. இதுகாறும் சுதந்தரம், அதி-



காரம் என்னும் விஷயமாக நாம் கூறிவந்த தெல்லாம் சட்டசம்பந்தத்தைப் பற்றியதாகும். தனிமனிதனொருவனுக்கும் அரசுக்கும் அல்லது தனிமனிதனொருவனுக்கும் சமூகத்துக்குமுள்ள அன்னோன்னிய பாத்தியதையைப்பற்றிய விஷயத்தில் சட்ட சம்பந்த முறையானது ஒரு பாகமாகும். அரசு என்னும் சாங்கத்தில் தனி மனிதனொருவனுடைய பாத்தியதையின் சிறப்பைப் பற்றி நிர்ணயிப்பதே முக்கியமானது. ஏனெனில், அங்ஙனம் நிர்ணயிப்பதினின்றுமே கவர்ன்மெண்டின் அதிகார எல்லையும் அதிகாரப் பிரமாணமும் தெரிய வரும். சமூக அன்னோன்னிய வாழ்க்கையின் ஒப்பந்தத்தின் சித்தாந்தத்தில் இரண்டுவித அபிப்பிராயங்கள் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டன. ஒன்று, மனிதன் ஆத்மதிருப்தி பெற்ற தனிப்பட்டவனென்றும், சமூக ஒழுங்குக்காக அவன் சேர்கிறானென்றும் தெரியவருகிறது. இதனால், அரசு எண்ணிக்கைக்குரிய மொத்த நபர் கூட்டலாக ஆகும். அப்பொழுது அது நபர் உரிமையில் தலையிட நியாயமில்லை; ஆனால் ஒருவன் இன்னொருவனுடைய சுதந்தரத்தில் தலையிடாதபடி காக்கமட்டும் அதற்கு பொறுப்புண்டு. இவ்வபிப்பிராயங் கொண்ட சித்தாந்தத்திற்கு சமூக அணு சேர்க்கைக் கோட்பாடு (Monadistic theory of Society) என்று பெயர். இந்த சித்தாந்தத்திற்கு விரோதமாக மற்றொரு சித்தாந்த முண்டு. அந்த சித்தாந்தத்திற்கு சமூகசாங்க உறுப்பிலக்கணம் (Organic theory of Society) அல்லது அரசின் உறுப்பிலக்கணம் என்று பெயர். இந்த சித்தாந்தமே வெகுவாய்த் தற்கால

இராஜரீகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சமூக சாஸ்திரத் துறையிலும் நடமாடிவருகிறது. இச்சித்தாந்தத்திற்கு மூலம் எதுவாகயிருந்த போதிலும், 19-வது நூற்றாண்டின் இடை காலத்தில் ஜெர்மன் கிரந்தகர்த்தாக்களால் இது கையாளப்பட்டு மிக்க சிறப்படைந்தது. இந்த சித்தாந்தத்தில் தனி மனிதனுக்கும் அரசுக்குமுள்ள சம்பந்தத்தை வேற்றுமைப்படுத்திச் செய்வதை முற்றிலும் களைந்து, அவ்விரண்டையும் ஒன்றுபடுத்தி வைப்பதே முக்கிய தத்துவமாம். இது அன்னோன்னிய ஒப்பந்தம், அன்னோன்னிய ஊழியம், மீறப்படாத பாத்தியதைகள் அல்லது உரிமை என்று கூறப்படும் கருத்துக்கள் யாவையும் நிராகரிக்கின்றது. இந்த சித்தாந்தப்படி அரசும் நபரும் ஒன்றே; ஒரே வஸ்துவைச் சேர்ந்தது. சமூக சராங்கத்தால் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டது. தேகத்திற்குக் கை எப்படியோ, மரத்திற்கு இலை எப்படியோ, அம்மாதிரியே சமூகத்திற்கு மனிதன். ஆகவே, அவன் அதோடும், அது அவனோடும் கலந்து இருக்கிறது என்பதாம். கை என்னும் அவயவத்தைத் தேகத்தினின்றும் எப்படி பிரிக்க முடியாதோ அப்படியே சமூகத்தினின்றும் மனிதனைப்பிரிக்க முடியாது. தவிர, ஒரு செடி எப்படி வளருகின்றதோ, அப்படியே அரசு கொஞ்சங் கொஞ்சமாகப் பற்பல இலாக்காக்களைக் கொண்டு வளருகின்றதென்றும், மனிதன் மட்டும் அவ்வரசுக்கு பீஜம் என்றும் சிலர் கூறியுள்ளார். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் அவர்கள் அங்ஙனம் சமூகத்தைச் செடி கொடிகளுக்கும் மிருகங்களு



க்குமுள்ள விருத்தியை ஒப்பிட்டுக்கூறாமல் வேறுமாதிரியாகக் கூறுகிறார். முளையிலிருந்து எங்ஙனம் தேகம் விருத்தியாகி உருவத்திலும் அளவிலும் பெருகுகிறதோ, அங்ஙனம் சமூகங்கள் சிறு குழுவிலிருந்து அளவிலும் விஸ்தீரணத்திலும் பெருகிற்று என்றும், மனிதனுடைய தேகத்திலுள்ள தத்துவங்களில் நரம்பு, இரத்தப்பை, குழாய், ஜீரணக்கருவிகள், வயிறு, இருதயம், தோல், மூளை, மண்டை, நுரையீரல், முதுகெலும்பு முதலியவையிருப்பதுபோல அரசிலும், அரசன், மந்திரி, கர்மாதிகாரர்கள், விவசாயம்; வர்த்தகம், பாதை, தந்தி தபால், கால்வாய், ரெயில், துறைமுகம், துர்க்கம் முதலிய பல உறுப்புகள் இருக்கின்றனவென்றும் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் கூறியுள்ளார். அரசாங்க உறுப்பானது மற்ற உறுப்புகளைப்போல அதற்கு ஏற்பட்ட கடமையில் மட்டும் இருக்கவேண்டுமென்றும், அக்கடமையானது இரட்சணையும் காவலுமேயென்றும், இவ்விரண்டுக்குப் புறம்பாக வேறொன்றையுஞ் செய்யக்கூடாதென்றும் ஸ்பென்ஸர் கூறுகிறார். தவிர சிலர் அரசு என்பது மனிதனேயென்றுங் கூறுகின்றனர். பிளண்ட்ஸிலி என்பவர் அரசு ஆண் என்றும் மததர்மம் (Church) பெண் என்றும் இருபாலாகப் பிரித்துள்ளார். அரசு அல்லது சமூகம் ஒரே மனிதனாகவுள்ளதென்பதால், அது ஒரே அறிவையும் ஒரே உணர்ச்சியையும் ஒரே தேகத்தையும் கொண்டிருக்கவில்லையாதலால், சமூகமே மனிதன் என்பது ஒவ்வாதென்று மற்றுஞ்சிலர் கூறுவர். எப்படியிருப்பினும் கர்மத்தொகுதியும் அன்னோன்னிய ஆதரவும் மானிட

வர்க்கத்தின் நன்மைக்கு இன்றியமையாதது போலவே, தனிப்பட்ட மனிதப்பிரிவும், மனித வேறுபாடும், தனிப்பட்ட செய்கையும் மானிடவர்க்கத்தின் நன்மைக்கு இன்றியமையாததெனக் கூறப்படுகிறது. அரசுகளின் அன்னியோன்னிய சம்பந்தத்தைப்பற்றி அடுத்த அத்தியாயத்திற் காண்க.

# 6. அரசுகளின் பரஸ்பர சம்பந்தம்

நாம் வாசாஞானத்தைப்பற்றிய கற்பனை சமத்காரத்தால் அறிவோமானால் ஒவ்வொரு அரசும் தனித்தனி சுதந்தரமான ஏகப்பொருள் என்பதாகும்." அதனுடைய அதிகாரம் எல்லைக்குட்படாதது. வெளி அதிகாரத்தைப்பெற்ற எதற்கும் கீழ்ப்படிந்து நடக்கக்கூடியதன்று; அதாவது வேறெப்பொருளுக்கும் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து நடக்கக்கூடியதன்று. இதர இராஜீய சம்பந்தமான சாங்கமெதற்கும் கட்டுப்படுத்தக்கூடிய சம்பந்தம் இதற்கு இல்லை. ஆகவே, அத்தகைய தனிப்பட்ட நிலைமையில் இருப்பதினாலேயே அரசு ஒன்று இருக்கிறதெனத் தெரியவருகிறது. இராஜீய சுதந்தரமே அதின் முக்கியமான தன்மையாகும். ஸ்வபாவிக நிலைமையில் அரசு தனித்தனியாகவேயுள்ளதெனக் கொள்ளவேண்டுமென்பதே ஹாப்ஸ் அவர்களுடைய சித்தாந்தம். இது உண்மையாக யிருப்பினுங்கூட, ஆலோசிக்குமிடத்து அனுஷ்டான முறையில் கலக்கற்ற வழியாக ஒரு அரசு மற்றொரு அரசோடு அன்னியோன்னிய சம்பந்தத்தைப் பெற்று வருகிறது. ஒரு அரசிலுள்ள சனங்களுக்கும் மற்றொரு அரசிலுள்ள ஜனங்களுக்கும் உண்டாகும் போக்குவரவுகள், வியாபாரம், வர்த்தகம், கொடுக்கல் வாங்கல் முதலிய பல விஷயங்களை ஆராய்ச்சி செய்யுமிடத்து ஒவ்வொரு அரசும் தனித்தனியே ஏக வஸ்துவாக யிருப்பதென்னும் சித்தாந்தம் முற்றிலும் சிதறு

கிறது. ஒரு தேசத்திலுள்ள பிரஜைகள் அடுத்ததேசத்திலுள்ள கலைஞானம், தொழில்வகை, சித்திரம், நாகரிகம் முதலியவைகளை யங்கீகரித்துவருதலை தற்காலத்தில் நாம் பிரத்யட்சத்தில் காண்கிறோம். இராஜ்ய உணர்ச்சியும், சமூக உணர்ச்சியும், கல்விஞான உணர்ச்சியும் உள்ள ஒரு தற்கால அரசு, மற்ற இதர அரசுகளோடு சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பது சகஜமாக ஆயிற்று. தவிர, இராஜ்ய முறைமையில் ஒரு அரசு மற்றொரு அரசோடு பிரிக்கப்பட்டிருந்த போதிலும், அங்ஙனம் பிரிக்கப்பட்டிருக்கும் அரசில் உள்ள சனங்கள் அவ்விரண்டரசுக்கும் பொதுவாக யிருக்கும் பாஷையைப் பேசுகின்றனர். ஆகவே, ஒரு அரசு மற்றொரு அரசோடும், ஒரு தேசம் மற்றொரு தேசத்துடனும், ஒரு ஜனசமூகம் மற்றொரு சனசமூகத்துடனும் பரஸ்பர சம்பந்தத்தைப் பெற்றுவருவதே தற்கால நாகரிகமாகவும் அனுஷ்டானமாகவும் ஆயிற்று. நோக்குமிடத்து இச்சம்பந்தம் இன்றியமையாததாகவும் காணப்படுகிறது. யுத்தவிதியைத் நிர்மாணிக்கையிலும் அல்லது நிர்ணயிக்கும் பொழுதுகூட, ஒவ்வொரு அரசும், தனித்தனியே சுதந்தரத்தைக் கொண்டு செய்தபோதிலும், பொதுவாக, இதர அரசுகளின் வியாபாரங்களுக்குத் தடை வாராதபடியும், உலக இராஜ்யங்களின் வர்த்தகங்களுக்குப் பாதகம் ஏற்படாமற்படியும் நிபந்தனைகளை ஒவ்வொரு அரசும் செய்கின்றது. இங்ஙனம், அவ்வரசுகள் தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ, அல்லது உலகத்திலுள்ள சுதந்தர அரசுகளின் பாத்தியதை



களுக்குத் தடையில்லாதபடியோ அல்லது அவ்வரசுகளோடு நெருங்கின போக்கு வரவு முறையைக் கொண்டோ செய்யும் நிபந்தனைகள் யாவும் சாசுவித மானவையல்ல. அவ்வாறு ஒரு அரசு மற்ற அரசுகளோடு சம்பந்தப் பட்டு வருவதால் சட்டங்களுக்கு சர்வதேச சம்பந்தச் சட்டம் என்று பெயர். சர்வதேச சம்பந்தச் சட்டமொன்று உண்டாவதால் ஓர் அரசுக்குரிய அதிகாரத்திற்கும் மற்ற அரசுகளுக்குரிய அதிகாரங்களுக்கும் விவாத மேற்படாமல் சமரஸமாக யிருக்குமாவென்னும் கேள்வியும் உண்டாகும். சர்வதேச சம்பந்தச் சட்டத்தை ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் மூன்று முறைகள் மூன்றுகாலங்களில் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. ஐரோப்பாவில் ரோம சாம்ராஜ்ய அப்யுதயம் உண்டான காலம் வரை, ஐரோப்பியர்கள் சமரஸமான சர்வதேச சம்பந்தச் சட்டத்தைப் பெற்றிருந்ததாகக் காணவில்லை; அக்காலத்தில் ஒவ்வொரு அரசும் அல்லது ஒவ்வொரு சமூகமும் அதனதன் இனத்தையும் பொது பாஷையையுங் கொண்ட மற்ற அரசுடனும் அல்லது சமூகத்துடனும் சம்பந்தம் வைத்துக் கொண்டதேயன்றி இனம், பாஷை, மதம் முதலியவை வித்தியாசமாயிருக்கும் சமூகத்தினருடன் யாதொரு சம்பந்தமும் வைத்துக் கொள்ளவில்லை. ஆனால், சில அரசுகள் இராஜதந்திரத்தையும், சிநேகபாவத்தையும், மத ஒற்றுமைப் பாட்டையுங் கொண்டு சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்ததாகவுந் தெரிய வருகிறது. பிறகு, ரோமசாம்ராஜ்ஜியம் ஐரோப்பாவில் நடுநாயகமாய் விளங்கி எங்கும் சர்வாதிகாரம் பெற்று வந்தமை

யால், எங்கும் நிறைந்த அவ்வதிகாரமே முறையாக ஏற்பட்டது. ஒரு ஸாம்ராஜ்யத்தின் சர்வவியாபக அதிகார உணர்ச்சியே குடிகொண்டிருந்தது. அதினால், பல சிற்றரசுகள் அந்த ஸாம்ராஜ்யத்துடன் சம்பந்தம் கொண்டு அதன் அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. பின்னர், சர்வவியாபகத்துவ அதிகாரத்தை யொழிக்க மதகுருக்களின் ஆதிக்கம் உண்டாயிற்று. பின்னர், அவைகளினின்றும் பாளையக்கார ஆதிபத்யம் அல்லது உம்பிளிக்கை முறையுண்டாயிற்று. இது 17-ம் நூற்றாண்டுவரை இப்படியே யிருந்து வந்தது. பிறகு அந்நாள் முதல் இந்நாள் வரை, இராஜீய சுதந்தரத்தையும் தேச அதிகாரத்தையும் அடிகோலியாகக் கொண்டு சர்வதேச சம்பந்தச் சட்டம் உண்டாயிற்று. ஐரோப்பாவில் 16-வது 17-வது நூற்றாண்டுகளில் உண்டான யுத்தத்தின் கொடுமையினின்றுமே, இராஜீய சமூகங்களையும் அரசுகளையும் தற்கால நாகரிகத்திற்குத் தக்கபடி சீர்திருத்தி அமைக்கவேண்டுமென்று ஓர் உணர்ச்சியுண்டாகி அதன்படி நடந்து வருகிறது. பொதுவாக, எல்லோருக்கும் ஒருவன் தலைவனென்பதும், அவன் இராஜ்யாதிகாரியாகவேனும் மத அதிகாரியாகவேனும் இருப்பதும் என்னும் கொள்கை முற்றிலும் ஐரோப்பாவில் ஒழிந்தது. அதினின்றுமே பலமான உணர்ச்சி தோன்றி சர்வதேச சம்பந்தச் சட்டம், ஒருவரோடொருவர் அணைந்து ஆதரிக்கும் ஸ்வபாவிகமான மானிடத் தன்மையைக் கருதியே யுண்டாயிற்றெனச் சிலர் கூறுவர். இச்சிலருடைய சித்தாந்தப் படி மனிதனுக்கு மனிதன் ஓர்வித இயற்கையின் ஆகர்ஷண சக்தியினால் ஒருவனோ



டொருவன் சேர்ந்து உதவிசெய்யுந் தன்மை ஸ்வபாவிகமாகவே யுண்டாயிருப்பதால், எத்தகைய சட்ட திட்டங்களை யுண்டாக்குவதினின்றும் அத்தன்மை ஏற்படாதென்பதாம். இத்தன்மை அரசு என்னும் சாங்கமும் சட்டம் என்னும் ஒரு நிர்ணயமும் உண்டாவதற்கு முன்னரே அநாதியாக யுண்டானது. மேற்கூறிய சித்தாந்தத்தைப் பல இராஜரீக சாஸ்திரஜ்ஞர் ஒப்புக் கொள்ளவில்லை யென்றாலும் அந்த சித்தாந்தத்தினால், அரசு ஒவ்வொன்றுக்கும் பரஸ்பர உரிமையும் கடமையும் ஏற்படுத்துவதற்கு ஒரு அவகாச மேற்பட்டதென்பார். பின்னர் 18-வது 19-வது நூற்றாண்டின் இராஜீய புரட்சியினாலும், மதகுருக்களின் ஆதிக்கத்தை யொழிக்க வேண்டுமென்னும் உணர்ச்சியினாலும் புதிய புதிய மாறுதல்கள் தோன்றி ஐரோப்பாவில் பல நாடுகள் பூர்ண சுதந்தரத்தை ஸ்தாபித்தன. அந்நாளில், சத்துரு தேசத்து பிரஜைகளின் சொத்தை நேசதேசத்தவர்கள் பறிமுதல் செய்து, பிறகு யுத்தம் முடிந்தவுடன் மீண்டும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்கிற சர்வதேச சம்பந்தச் சட்டமொன்று நிர்மானிக்கப் பட்டது. அதற்கு அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஆஸ்திரியா முதலிய வல்லரசுகள் சம்மதித்தன. தவிர, கடல் சுதந்தரத்தைப் பற்றியும் மத்தியஸ்த அரசுகளின் வியாபாரம் துறைமுகம் முதலியவைகளைப்பற்றியும் சட்டங்கள் உண்டாயின. இவைகளைக் கொண்டே யுத்த ஆரம்பத்திற்குமுன் நேசதேசத்தினர்களும் சத்துரு தேசத்தினர்களும் சர்வதேச சம்பந்தச் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டு அந்தந்த அரசாங்கத்தார் அவரவர்களு

டைய பிரஜைகளுக்கு அச்சட்டங்களின் திட்டங்களை
யும் யுத்தகாலத்தில் ஒவ்வொருவரும் அநுசரிக்கவே
ண்டிய முறைமையும், நடுக் கடலில் கைப்பற்றப் படும்
கப்பல்கள், பிடிபடும் மனிதர்கள் ஆகிய எல்லாவற்றை
யும் பற்றி ஒரு விளம்பரத்தைப் பகிரங்கப் படுத்துகின்
றனர். தவிர, சர்வதேச சட்டங்களின் முறைகளை
யநுஷ்டிக்கப் புதிய நியமனங்களும் ஸ்தாபிக்கப் படு
கின்றன. ஆங்கு, யுத்தகாலத்தில் கடலில் பிடிபடும்
கப்பல்களைப் பற்றியும் கபர்களைப் பற்றியும் விசாரிக்கப்
படும், சர்வதேச சம்பந்த சட்டங்கள் சுதந்தரமாயுள்ள
அரசுகளுக்கே செல்லும். ஒவ்வொரு அரசும் தனித்தனி
யே சுயாதீனம் கொண்டிருக்கும், அரசுகளின் அல்லது
சமுதாயங்களின் பூர்ண சமத்துவமே சட்டங்களில்
சிறப்புவாய்ந்ததென நீதி சாஸ்திரக்ஞர் கூறுவர். இந்த
சர்வ தேசசம்பந்த சட்டங்களின்படி பல துய்வரிய
விஷயங்கள் உண்டாகின்றன. ஒருதேசத்திற்குப்பக்கத்தி
லுள்ள கடலுக்கும், அத்தேசத்தின் அரசாங்க அதி
காரத்திற்கும் உள்ள சம்பந்தம் படையெழுச்சியில்
பிடிக்கபடும் காடு ககரம், ஒருதேசத்தைச் சேர்ந்த பயர்
கள், வெளிதேசங்களில் வசிக்கையில் அவர்களுடைய
விஷயத்தில் அத்தேச அரசுக்குரிய பொறுப்பு ஆகிய
இவையும் பிறவும் சேர்ந்தே சர்வதேச சம்பந்த சட்
டங்களாகின்றன. மற்றும், இந்த சர்வதேச சம்பந்த சட்
டங்களில் யுத்தவிஷயமாகப் பல நிபந்தனைகள் ஏற்பட்
டிருக்கின்றன. யுத்தமானது மனித ஸ்வபாவத்திற்கு
ஒத்ததாகயிருக்க வேண்டும்; இரகசிய கொலை, விஷம்
வைத்தல், சில விஷகுண்டுகளை உபயோகப்படுத்துதல்



முதலியவைகளை நீக்க வேண்டும்: இருதிறத்தாரும்
போக்குவரவுக்குரிய அத்தாவசியங்களுக்குத் தற்கால
சாந்தியாக சமாதானத்தைக் கொடிகளின் அடையாளங்
களால் தெரியப் படுத்தவேண்டும்: யுத்தகாலத்தில் மத்தி
யஸ்த கட்சியைச் சேர்ந்த தேசங்களின் உரிமைகளையும்
காரியங்களையும் தடுக்காதபடி ஏற்பாடு செய்யவேண்டும்
என்னும் இவ்விஷயங்களே பலவாறாக அச்சர்வதேச
சம்பந்த சட்டங்களில் காணப்படும். தவிர மத்யஸ்த
சட்டம் ஒன்று, மத்தியஸ்த கட்சியைச் சேர்ந்த தேசங்
களின் வியாபாரம் முதலியவைகளைப் பாதுகாக்குஞ்
சட்டத்திற்கு மத்யஸ்த சட்டமெனப்படும். இந்த சர்வ
தேச சம்பந்த சட்டமானது பரஸ்பர அரசுகளின்
ஒழுங்கான நிலைமைக்கு ஒருசங்கேதமாக ஏற்பட்டதே
யன்றி, அச்சட்டபடி ஓர் அரசு கட்டாயமாக நடக்க
வேண்டுமென்னும் நியதி கிடையாது. அங்ஙனம் அந்
நியதியின்றி சட்டங்களை மீறும் அரசுக்குத் தண்டனை
விதிக்கக் கூடிய நிலைமையில் மற்றொரு அரசும் இல்லை.
வேண்டுமானால், சட்டத்தை மீறி நடந்த அரசோடு யுத்
தாரம்பஞ் செய்யலாம். அதுவே தவிர, ஒரு மனிதன்
அரசாங்க எல்லையில் ஒரு சட்டத்தை மீறி நடந்தால்,
அவனைத் தண்டிப்பதென்னும் நியதியைப்போல் அச்
சர்வதேச சம்பந்த சட்டங்களில் அவ்வரசுக்கு இல்லை.
இக்காரணம் பற்றியே சர்வதேச சம்பந்த சட்டங்களை
ச்சட்டமெனக் கூறுதல் ஒக்காதெனப் பலர் வாதித்
துள்ளார். சட்டத்தின் முக்கிய கொள்கை வற்புறுத்து
தல் அல்லது பலவந்தம் செய்தல், ஆதலால், சர்வதேச
சம்பந்தச் சட்டம் சட்டமாக மாட்டாதென ஆஸ்டின்

அவர்கள் கூறியுள்ளார். ஆனால், இச்சர்வ தேச சம்பந்த சட்டமானது நீதி தர்மத்தையும் ஜாதீய மரியாதையையும் கௌரவத்தையும் பற்றி நிற்கும் என்றும் ஆஸ்டின் அபிப்பிராயப்படுகிறார். ஒரு அரசு மற்றொரு அரசைக் கீழ்ப்படுத்தி அதிகாரஞ் செலுத்துகையில்தான் சட்டம் என்றாகும் என்றும் சிலர் கூறுவர். ஆனால், சர்வதேசங்களும் ஒன்று கூடி ஒரு சபையை உண்டாக்கி அச்சபையின் தீர்மானப்படி நடக்கவேண்டுமென்று ஓர் ஒப்பந்தம் ஏற்படுமானால், அப்பொழுது அச்சர்வ அரசுகளும் ஓரரசாகி அவ்வரசுக்குத் தனித்தனி அரசும் கட்டுப்பட்டு வருமானால் அதிகாரமானது நடைபெறும். அப்பொழுது கூட சர்வதேச சம்பந்தச் சட்டமானது பெயருக்குமாத்திரமே யிருக்குமே யொழிய, வியவகார முறைப்படி யிருக்க மாட்டாது. என்றாலும், தற்கால தீர்மானப்படி சர்வ தேசசம்பந்தச் சட்டமானது கட்டுப்படுத்தகூடிய ஒரு நிபந்தனையாக ஆயிற்று. ஓர் அரசு அச்சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் மீறி நடக்குமானால், அவ்வரசு தன் மரியாதையையும் அந்தஸ்தையும் இழப்பதுடன் அவ்வரசின் விஷயமாக மற்ற வேறு அரசுகள் தலையிடவுஞ் செய்யும். ஆகவேதான், இச்சட்டங்களுக்காக சர்வதேச சம்பந்த பஞ்சாயத்து சபை யொன்றும் அவசிய மென்பதைப் பலர் தெரிவித்தனர். ஒரு அரசுக்கும் மற்றொரு அரசுக்கும் விவாத மேற்படுமானால், அல்லது சர்வதேச சம்பந்த சட்டங்களினின்றும் அபிப்பிராய பேதமுண்டாகி அதனால் மனஸ்தாபம் ஏற்படுமானால், அவ்வரசுகளின் விவித அபிப்பிராயத்தையும் அதினால் ஏற்படும் வழக்கையும்



தீர்க்க மத்யஸ்த அரசு ஒன்று தேவை என்பதும் தீர்மானிக்கப்பட்டது. 17-வது 18-வது நூற்றாண்டுகளில் இத்தகைய அனுஷ்டானம் வெகுவாக யில்லையாயினும் 19-வது நூற்றாண்டில், யுத்தங்களின் மிதமிஞ்சின செலவுகளையும் வியாபார வர்த்தக நிலைமையையும், பொருளாதார இருப்பையும் பற்றி அத்தகைய பஞ்சாயத்தின் ஆவசியம் ஏற்பட்டு சண்டையின்றி வழக்குகளைத் தீர்க்கும்படியான ஒரு முறை யுண்டாயிற்று. இத்தகைய பஞ்சாயத்து முறை அனுஷ்டான பூர்வமாக 19-வது நூற்றாண்டில் ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் உண்டான வழக்கிலும் மற்ற இதுபோன்ற நூறு வழக்குகளிலும் பஞ்சாயத்து முறை யனுஷ்டிக்கப்பட்டு தீர்மானிக்க பட்டுள்ளன. நிற்க, இத்தகைய பஞ்சாயத்து முறை சாசுவிதமாகவே யிருத்தல் வேண்டுமென்றும், யுத்தத்திற்கு பிறகு சமாதான உடன்படிக்கை விஷயமாக நிரந்தர சபை யொன்று இருக்க வேண்டுமென்றும் புனராலோசனை செய்து 1899-ம் ஆண்டில் ஹேக் என்னுமிடத்தில் நடந்த சமாதான கான்பரன்சில் எல்லா வல்லரசுகளும் சபைகூடி கையெழுத்திட்டன. அந்த நாள் முதல் நிரந்தரமான பஞ்சாயத்து சபை ஸ்தாபிக்கபட்டது. அந்த பஞ்சாயத்தில் உலகத்திலுள்ள கீர்த்திபெற்ற நீதிசாஸ்திரக்ஞர்கள் நியமிக்கப்பட்டனர். 1907-ம் வருடத்தில் அங்கே மற்றொரு சபை கூடி 45 அரசுகளின் பிரதிநிதிகள் சேர்ந்து சில சர்வதேச சம்பந்தமான சட்டங்களைத் திருத்தினதுடன் யுத்த முறைகளின் நடவடிக்கையைப் பற்றியும் சில மாறுதல்களைச்செய்தனர். 1917-ம் வருடத்தில் ஒரு

சபையும் கூடிற்று. பின்னர் யுத்தம் முடிந்தவுடன் மற்
றொரு சபையும் 1920-ம் வருடத்தில் கூடிற்று. இந்த
சபையில் அரசின் சுதந்தரம், அந்தஸ்து, அரசின் முக்கிய
விஷயங்கள் ஆகிய இவைகள் ஒன்றும் நிர்மாணிக்கப்
படமாட்டா. சமீபமாக சர்வதேச சம்பந்த சட்டங்
களும் பஞ்சாயத்து சபைகளும் வெகுதிருப்தியுடனி
ருக்கின்றனவென்று பல இராஜரீக சாஸ்திரக்ஞர் கூறு
கின்றனர். நிற்க, உலகத்திலேயே இப்பொழுது யுத்த
மே கூடாதென்றும் யுத்தத்தினாலேயே பற்பல உற்
பாதங்களுண்டாகின்றன வென்றுங் கொள்கையைப்
பலர் கொண்டிருக்கின்றனர். யுத்தத்தை வெறுப்பவர்
களின் தொகை உலகில் அதிகம் என்பதே நாம் அறிந்
தது. மற்றும் சிலர் ஓர் அரசுக்கும் மற்றொரு அரசுக்
கும் உண்டாகும் வழக்கு முதலிய விவாதங்களைத்தீர்ப்ப
தற்கு யுத்தமே சரியான தென்றும் பஞ்சாயத்து சபை
வீணென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஓர் அர
சுக்கு முக்கியமாகத்தோன்றக்கூடிய விஷயங்களை அது
எந்த பஞ்சாயத்து சபையாலும் நிர்மாணிக்கும் படியாக
விடாது என்றும், ஒவ்வொரு சமுதாயமும் அதனதன்
அந்தஸ்தையும் மானத்தையுங் காக்க இரட்சகரென்றும்
ஸர் ராபர்ட் பின்லே அவர்கள் கூறுகிறார். அரசு என்
னும் விஷயத்திலும் சமுதாயம் என்னும் விஷயத்திலும்
இத்தகைய அபிப்பிராயங்களை விடுத்தவர்கள் தனி மனித
னுடைய விஷயத்தில் மட்டும் அத்தகைய அபிப்பிரா
யத்தை விடாமற்படி பல தளைகளையுண்டாக்கி வருவ
தேன்? ஓர் அரசு தன்னுடைய மரியாதையைக் காக்
கும் விஷயத்தில் எப்படி அதுவே இரட்சகத்துவத்



தை வகிக்கின்றதோ, அங்ஙனமே ஒருமனிதன் தன்னு
டைய அந்தஸ்தைக்காக்கும் விஷயத்தில் இரட்சகனாக
ஏன் இருக்கக்கூடாது? ஒரு மனிதனுடைய அந்தஸ்
தைக்காக்கும் விஷயத்தில் அவன் இரட்சகனாயில்லா
மல் சட்டமும் அரசும் இரட்சர்களாக யிருப்பதையும்
பல தீவிர அரசியல் ஞானிகள் கண்டித்திருக்கின்றனர்.
ஆகவே, நாம் இனி அரசு எந்தெந்த விதமான உருவங்
களைக் கொண்டு ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றதென்பதை
ஆராய்வோம். அரசின் உருவம் அல்லது அரசின் விதம்
என்ன என்பதை அடுத்த அத்தியாயத்திற் காணலாம்.

# 7. அரசின் வடிவம்

எல்லா அரசுகளும் தேசம், ஜனத்தொகை, ஐக்கியம், அதிகார சாங்கம் இவைகளைக் கொண்டிருக்க வேண்டு மென்னும் பொது விதியொன்று இருந்த போதிலும், அரசுகள் ஒன்றுக் கொன்று தேச எல்லையிலும், ஜனத்தொகையிலும், அதிகார சாங்கத்தின் அமைப்பிலும் வித்தியாசப் படுகின்றன. ஆகவே, அவைகளின் வித்தியாசங்களை யுணர்ந்து, அவ்வித்தியாசங்களுக் கேற்றபடி பிரிப்பது முக்கியமாம். அரிஸ்டாடல் ஞானியின் காலந்தொட்டு அரசுகள், தங்கள் வித்தியாசங்களுக் கேற்ப ஒவ்வொரு வகையாக யேற்பட்டு ஒவ்வொரு பெயரைக் கொண்டு விளங்கி வருகின்றன. அரிஸ் டாடல் அவர்கள் காலத்திருந்து பல இராஜரீக சாஸ்திரக்ஞர் அரசுகளின் வடிவங்களைப் பிரித்துக் கூறிவந்தனர். தேசத்தின் எல்லையளவைக் கொண்டு அரசுகளைப் பிரிப்பதும், ஜனத்தொகையின் சங்கியைக் கொண்டு பிரிப்பதும் அசம்பாவிதம். ஆனால், அரச சாங்கத்தின்படி அரசுகள் பிரிக்கப்படுகின்றன; அதாவது, பரிபாலன முறையைக் கொண்டு அல்லது அவைகளின் அரசாங்க உறுப்புகளைக் கொண்டு அரசுகள் பிரிக்கப்படுகின்றன. சிலர், அரசுகளைப் பிரித்தல் கூடாதென்றும், ஏனெனில் அவைகள் யாவும் தன்மையில் ஒன்றுக்கொன்று பேதப்படாமல் சமமாக யிருப்பதினா லென்றும் கூறுவர். நிற்க, மேற்கூறிய



வழியாகயுண்டாகும் வகுப்பின் பிரிவைக்கவனிப்போம். அதிகாரமுறையைப் பற்றியிருக்கும் நபர்களின் தொகையைக் கொண்டே அரசாங்கங்களின் வகுப்பு பிரிக்கப்பட்டது. அதிகாரமுறையானது தனிமனிதனிடத்திலிருக்குமானால், அம்முறைக்கு யதேச்சாதிபத்யம் அல்லது ஏகாதிபத்யமெனப்படும். அதிகார முறையானது தனிமனிதனொருவனிடத்தி லில்லாமல் சிலரிடத்து இருக்குமானால், அம்முறைக்கு பிரபுத்துவம் என்றும் பிரபுக்களினரசாட்சி யென்றும் (Aristocracy) கூறப்படும். அதிகாரமுறையானது சிலரிடத்தினின்றும் நீங்கி பொதுசனங்களின் ஆதரவைப்பற்றிய சங்கத்தாரிடம் அவ்வதிகாரம் இருக்குமானால், அம்முறைக்கு சமூக ஆட்சி (Polity) எனப்படும் என்று ஹீரோ டோடஸ் கூறியுள்ளார். ஆனால், அரிஸ் டாடல் அவர்கள் இன்னும் சற்று முன் நோக்கிச் செல்கிறார். அரசாங்கம் விதிமுறையைக் கொண்ட தொன்றும் விபரீதமான முறையைக் கொண்டதொன்றுமாக இருவகைப்படுத்தி அரிஸ்டாடல் கூறுகிறார். விதிமுறையை யனுஷ்டிக்கும் அரசுகள் சமூகம் முழுமைக்கும் நன்மையை நாடி வருமென்றும், விபரீதமான முறையை யனுஷ்டிக்கும் அரசுகள் அரசையாளும் அதிபதியொருவனுக்கும், அல்லது அரசின் அதிகாரத்தை வகிக்கும் சிறு தொகையாளர்களுக்கும் நன்மையை நாடிவருமென்றும் அவர் கூறியுள்ளார். யதேச்சாதிபத்யம் அல்லது ஏகாதிபத்யமானது முழு சமூகத்தின் நன்மையைக் கருதி ஒருவனால் பரிபாலிக்கப்படும். பிரபுத்துவமும் சமூக ஆட்சியும், சிறு தொகையினராலும் பொதுசன சாங்

கர்த்தாராலும் முறையே முழு சமூகத்தின் நன்மையைக் கருதி பரிபாலிக்கப்படும். இங்ஙனம் பரிபாலிக்கப்பட்டுவரும் வகைக்கு விதிமுறையை யனுஷ்டிக்கும் சமநிலை அரசு என்று கூறப் படும். விபரீதமான முறையில், கொடுங் கோன்மை என்பது ஒரு கொடுங்கோல் மன்னன் தன்னுடைய சுய நன்மைக்கும் சுய பிரயோசனத்திற்கும் விதிமுறையைக் கடந்து அரசாளுவது; மற்றும் வகுப்பாட்சி என்பது ஒருவகுப்பினர் தங்களுடைய சுய நன்மைக்கும் சுய பிரயோசனத்திற்கும் விதிமுறையைக் கடந்து அரசாளுவது. தவிர ஜன ஆட்சி என்பது ஒரு ஜனக் கூட்டத்தார் தங்களுடைய சுய நன்மையைக் கருதி ஆளுவது என்று அரிஸ்டாடல் கூறியுள்ளார். ஜன ஆட்சி (Democracy) என்னுஞ் சொல்லை நீக்கி தற்கால இராஜரீக சாஸ்திரக்ஞர் மேற்கூறிய ஆளுகைக்குக் குறிக்காமல், அதற்கு சமவாய ஆதிக்கம் அல்லது வம்பராட்சி அல்லது குப்பா சாட்சி (Ochlocracy) என்று கூறினர். அரிஸ்டாடல் அவர்கள் அரசுகளின் பலவடிவங்களைக் கூறினதுமன்றி, படிப்படியாக ஒன்றன் பின்னொன்றாய் அரசுகள் பரிணமிப்பதையுங் கூறியுள்ளார். பூர்வம், அரசாங்கம் மன்னர்களால் அரசாளப் பட்டு வந்தன. அக்காலத்தில், தேச மெல்லை சிறியதாகவும் ஜனத் தொகை குறைவாகவும் அதிகாரத்தை வகிக்கக் கூடிய தீரபுருஷர்கள் வெகு குறைவாகவுமிருந்தமையால் அரசாங்கங்கள் அத்தீர புருஷர்களைக் கொண்டு நடந்ததின் காரணமாக ஏகாதிபத்ய அரசாங்கங்கள் உண்டாயின. பிறகு அரசாங்கங்களை நடத்தப் பல தீர புருஷர்கள் அல்லது சாமர்த்திய சாலிகள்



உண்டாகவே, ஒரு மனிதனுடைய ஆதிபத்யத்தை சம்பாதிக்காமல் அவர்கள் கூடி பிரபுத்துவ ஆட்சியையுண்டாக்கினர். சில சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தினர். அப்பிரபுக்கள் வரவர பொதுசனங்களின் திரவியத்தால் தனவந்தர்களாகி, அத்தனத்தால் அவர்களுக்கு அந்தஸ்தும், ஏற்றமும் உண்டாகத் தலைப்பட்டு அவர்கள் ஒரு வகுப்பாக, ஆயினர். அவ்வகுப்பினர் தங்கள் சுய நன்மையை நாடி ஆட்சி புரிந்து வந்தமையால் அவர்கள் வகுப்பாட்சியை ஸ்தாபித்தனர். வரவர அவ்வகுப்பாட்சி கொடுங்கோன்மையாக மாறிற்று. ஒரு வகுப்பினர்களை ஆட்படுத்தி மிதமிஞ்சின அதிகாரங்களைச் செலுத்தி, மற்ற வகுப்பினர்களின் நன்மையை நாடாமல் இருந்தமையால் வகுப்பாட்சியினின்றும் கொடுங்கோன்மை யுண்டாயிற்று. பிறகு, கொடுங்கோன்மை நாட்டையும் சமூகத்தையும் அலங்கோலஞ் செய்து சுதந்தரமும் உரிமையும் இல்லாமல் ஜனங்கள் இருந்தமையால், உடனே கொடுங்கோன்மை நீங்கி, அதினின்றும் ஜன ஆட்சி யுண்டாயிற்று. சிலர் அரசாங்க ஒழுங்கை முதல் ஏகாதிபத்யம், பிறகு கொடுங்கோன்மை, பிறகு பிரபுத்துவம், பின்னர் வகுப்பாட்சி, பின்னர் சமூக ஆட்சி, கடைசியாக ஜன ஆட்சி என முறைப்படுத்திக் கூறியுள்ளார். இம்முறை மீண்டும் மீண்டும் கீழும் மேலுமாகவும் மேலுங் கீழுமாகவும் மாறிமாறி வரும். கால சக்கரமானது எங்ஙனம் மாறிமாறி வருமோ, ஜனனமரண சக்கரம் எங்ஙனம் மாறி மாறிவருமோ அங்ஙனமே மேற்கூறிய அரசு சக்கரமும் மாறி மாறிவரும். மேற்கூறிய அரசாங்க

வகை முதலிலிருந்து ஆரம்பித்து கடைசி வரை வந்ததும், மீண்டும் முதலிலிருந்து கடைசி வரை வருவதுமாக யிருக்கும். இம்மேற்கூறிய அரிஸ்டாடலின் சித்தாந்தம் பிரான்சு தேசத்து அரசு அமைப்பில் நிதர்சனமாக ஆயிற்று. 18-வது நூற்றாண்டில் பிரான்சு தேசத்திலிருந்த ஏகாதிபத்யம் கொடுங்கோன்மையாக யிருந்தது பற்றி இராஜீயப் புரட்சியுண்டாகி ஏகாதிபத்யத்தை யொழித்து பிரபுக்கள் சிலர் ஒன்று சேர்ந்து ஆட்சி புரிந்தனர். இப்பிரபுக்கள் சிலகாலம் ஆட்சி புரிந்தும் பொது சனங்களுடைய நன்மை கருதப் படாதிருந்ததும் மீண்டும் இராஜ்ய புரட்சியுண்டாகி ஜகோபன் கட்சியினர் ஏற்பட்டு பிரபுத்துவத்தை யொழித்து குடியரசை அந்த ஜகோபின் கட்சியினர் ஸ்தாபித்தனர். ஜகோபின் கட்சியினர் ஸ்தாபித்த குடியரசில் நாடு சீர்குலைந்து புரட்சி யுண்டாகவே, சர்வ சனங்களையும் அடக்கியாளும் ஒரு வீரன் * நேபோலியனாக வந்து இராணுவ யதேச்சாதிபத்யத்தை ஸ்தாபித்தான். ஆகவே அரிஸ்டாடல் அவர்களின் சித்தாந்தப்படி அரசு பரிணமித்து வந்தது. ஆனால், பல தற்கால இராஜரீக சாஸ்திரக்ஞர் அச்சித்தாந்தத்தையும் அதன் பரிணாம வழியையும் ஒப்புக் கொள்ளவில்லை. ஏனெனில், அரிஸ்டாடல் கூறும் விதமாக ஜன ஆட்சி யென்பது ஜனங்களின் ஆதீனத்தில் இராஜ்ய அதிகாரம் இருப்பதென்பதானால் இங்கிலாந்தை அமெரிக்கா ஐக்கிய அரசுடன் ஒப்பிட

* நெபோலியன் சரிதம் எஸ். கிருஷ்ண ஸ்வாமி சர்மா அவர்களால் எழுதப் பட்டுள்ளது. அதில் மேற்படி விஷயங்களைப் பார்க்கக் காணலாம். இப்புத்தகம் விலை ரூபா 1-8-0.



நேரிடும் என்றும், அல்லது அரசுரிமை பெற்ற யதேச்சாதிபத்யம் அல்லது ஏகாதிபத்யம் என்பதால், இங்கிலாந்தை ருஷியா பர்ஷியா முதலிய அரசாங்கங்களோடு ஒப்பிட நேரிடுமாதலால், அரிஸ்டாடல் சித்தாந்தம் அசம்பாவிதமெனக் கூறுவர். தவிர, தற்கால இராஜரீக சாஸ்திரத்தில் ஏற்பட்ட படி ஐக்கிய அரசாங்கம் ஏகத்துவ அரசாங்கம் ஆகிய இவைகளின் வித்தியாசங்களை அரிஸ்டாடலின் சித்தாந்தம் கூறவில்லை. தவிர, நிர்வாக முறையையும் சட்ட பரிபாலன முறைமையையும்பற்றிய அரசாட்சி சட்டங்களின் வழியால் ஏற்படும் அரசுகளின் வித்தியாசங்களையும் அச்சித்தாந்தம் கூறவில்லை. நிற்க, 18-வது நூற்றாண்டின் இடைகாலத்தில் மாண்டஸ்கியூ என்பவர் அரசுகளின் வடிவங்களை குடியரசு, யதேச்சாதிபத்யம், கொடுங்கோன்மை என மூன்றாகப்பிரித்தார். இவருடைய சித்தாந்தப்படி குடியரசில் ஜனங்கள் முழுதும் அல்லது ஜனங்களில் ஒரு பகுதியரேனும் அதிகாரத்தை வகிப்பர் என்றும், யதேச்சாதிபத்யத்தில் ஸ்திரமாகவும் ஊர்ஜிதமாகவும் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களைக் கொண்டு ஒருவன் அதிகாரத்தை வகிப்பானென்றும் கொடுங்கோன்மையில் சட்டதிட்டமின்றி இஷ்டப்படி மனம் போனபடி ஒருவன் தன் லாபத்திற்கு அதிகாரத்தை வகிப்பானென்றும் தெரியவருகிறது. ரூஸோ அவர்கள் அரசுகளின் வடிவங்களை யதேச்சாதிபத்யம், பிரபுத்துவம், பிரஜாதிபத்யம் என மூன்று வகையாகப் பிரித்தார். அங்ஙனம் பிரித்ததிலும் பிரபுத்துவத்தை மூன்றாக பிரித்துள்ளார், ஸ்வாபாவிகம், பாரம்பரியம், நியமனம் என மூன்று வகை

யென ரூஸோ அவர்கள் கூறியுள்ளார். தவிர கலப்பு தவிர அரசாங்கமொன்றுண்டென்றும் தெரிவிக்கிறார். 18வது நூற்றாண்டிலும் 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பல இராஜரீக சாஸ்திரக்ஞர் அரசுகளின் பிரிவைப் பற்றிப் பலவிதமாகக் கூறினபோதிலும், அவை தற்கால அரசுகளின் வடிவத்திற்கும் ஒழுங்குக்கும் ஒத்ததல்ல. பிளண்ட்ஸிலி என்பவர் தனிமையாக ஓர் அரசைக் கூறுகிறார். அதற்கு தேவதாட்சி (Theocracy) என்று பெயர். இந்த அரசு கடவுளின்றும் நேராகவே யுண்டானதென்றும், அல்லது தெய்வாம்சம் அல்லது தெய்வ பலத்தைக் கொண்டு நேராக யுண்டானதென்றும் கூறப்படுவதுடன் இந்த அரசு மானிட அதிகாரத்தை அங்கீகரிப்பதில்லை. ஆட்சி செலுத்தும் மனிதர்கள் அவ்வதிகாரத்தைப் பெற்றிருப்பவர்களல்லரென்றும் கண்ணுக்குப் புலப்படாத ஓர் உயர்ந்த சார்வபௌமனுக்கு ஊழியனாக நின்று அதிகாரஞ் செலுத்துகின்றனரென்றும் இவ்வரசை ஸ்திரப்படுத்துபவர்களின் கொள்கையென்றும் பிளண்ட்ஸிலி கூறியுள்ளார். இக்கொள்கையைக் கொண்ட அரசு யதேச்சாதிபத்தியமாகவாகிலும் பிரபுத்துவமாகவாகிலும் பிரஜாதிபத்தியமாகவாகிலும் இருக்கக் கூடும். இக்கொள்கையையும் அக்கொள்கையைப்பற்றி வரும் அரசையும் அசம்பாவிதமான தற்கால இராஜரீக சாஸ்திரக்ஞர் நிராகரித்துள்ளார். மேற்கூறிய இவர்கள் தவிர வேறுபலரும் அரசுகளின் வடிவங்களைப்பற்றிப் பலவிதமாகக் கூறியுள்ளார். 19-வது நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஜர்மெனி தேசத்தைச்சேர்ந்த வான்மோக் என்பவர் அரசுகளில் தாதைவழி அல்லது ஆடூஉ வழிப்



பாடு (Patriarchal) தேவதாட்சி, கொடுங்கோன்மை, வகுப்பாட்சி, பாளையக்காராட்சி, பிரமாணாட்சி என பிரித்துள்ளார். ஆனால் நவீன இராஜரீக சாஸ்திரக்ஞர்கள் அரசுகளின் பிரமாண முறையைக்கொண்டு அரசாங்கங்களின் அமைப்புகளையும் திட்டங்களையும் ஆராய்ந்து அரசுகளைப் பிரித்து வந்தனர். உதாரணமாக அமெரிக்கா ஐக்கிய அரசாங்கமானது ஐக்கிய அரசாங்கமாகவும் அல்லது உடம்படாட்சியாகவும் இங்கிலாந்து தேசத்தின் அரசாங்கம் ஏகத்துவ (Unitary) அரசாங்கமாகவும் இருப்பதால் இவ்விரண்டு அரசாங்கங்களின் வித்தியாசங்களையும் பிரிவுகளையும் பற்றி ஆராய்வோம். ஏகத்துவ அரசாங்கம் என்கிற யூனிடெரி கவரன்மெண்டில் மாகாண அதிகாரங்கள், ஜில்லா அதிகாரங்கள் ஆகிய பரிபாலனம் யாவும் மத்திய அரசாங்கம் என்கிற சென்ட்ரல் கவரன்மெண்டினால் ஏற்படுத்தப்பட்டும் அதின் ஆதீனத்திற்குட்பட்டும் இருக்கும். அம்மாகாண அதிகாரங்களையும் ஜில்லா அதிகாரங்களையும் மாற்றவும் ஒழிக்கவும் மத்திய அரசாங்கத்துக்குப்பிரமாணப்படி அதிகாரமுண்டு. இம்முறையையே இங்கிலாந்து, பிரான்ஸ், இதாலி ஆகிய இத்தேசங்கள் பற்றியிருப்பதால் இத்தேசங்களின் அரசாங்கங்களுக்கு ஏகத்துவ (Unitary) அரசாங்கம் எனப்படும். ஜர்மெனி அரசாங்கமும் அமெரிக்கா ஐக்கிய அரசாங்கமும் மேற்கூறிய முறையையனுஷ்டிக்காமல் வேறு முறையைத்தழுவி வருவதால் அவ்வரசாங்கங்களுக்கு ஐக்கிய அரசாங்கம் அல்லது உடம்பாடாட்சி (Federal Government) எனப்படும். இந்த ஐக்கிய அரசாங்கத்தில் மாகாண அரசாங்கமும்

மத்திய அரசாங்கமும் தங்கள் தங்கள் அதிகாரங்களைப் பூர்வ அல்லது பழைய வழியிலிருந்து பெறுகின்றன. ஒன்றையொன்று ஒழிக்கவும் மாற்றவும் பிரமாணப்படி அதிகாரம் மேற்கூறிய இரண்டும் பெறவில்லை. நிற்க இவ்விரண்டு முறையில் மேற்கூறிய இரண்டு வித்யாசங்களைத்தவிர வேறு வித்தியாசங்களு மிருக்கின்றன. அவை பார்லிமெண்டரி கவரண்மெண்டு, பொறுப்பாட்சி, (Responsible Government) காபினட் கவரன்மெண்ட் (மந்தணசபையாட்சி) என்றும் பொறுப்பில்லா ஆட்சி (பார்லிமெண்டரி யல்லாத கவரன்மெண்டு) என்றும் பிரிக்கப் பட்டுள்ளன. முதல் மூன்று வகை அரசாங்கங்களும் நிர்வாக சபையானது சட்ட நிருபண சபையால் நியமிக்கப்பட்டு வருவதுடன் அந்த நிர்வாக சபையானது சட்ட நிருபண சபையின் இஷ்டகாலம் வரை அதிகாரஞ் செலுத்திவரலாம். இங்கிலாந்திலும் பிரான்சிலும் இப்படித்தான் நடந்து வருகிறது. பொறுப்பில்லா ஆட்சி பார்லிமெண்டரியல்லாத கவரன்மெண்டு என்கிற இவ்விரண்டு வகையில் நிர்வாக சபையானது சட்ட நிருபண சபையால் ஸ்தாபிக்கப்படவில்லை; தவிர, நிர்வாக சபையை நீக்கவும் சட்டநிருபண சபைக்கு அதிகாரமில்லை. இம்முறையைத்தான் அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம் கொண்டிருக்கிறது. நிற்க, தற்காலம் உலகத்திலுள்ள அரசாங்கங்களின் வகையை ஒருவாறு கூறக்கூடுமாயினும், அங்ஙனம் கூறுவதால் ஒருவித பிரயோசனத்தையும் நாம் அடையப்போவதில்லை. ஆனால், அவ்வரசாங்கங்களின் பிரிவுக்குக் காரணமாயிருக்கும் மூலத்தை நாம் முதல்முதல் ஆராய்ந்தால், பின்னர், அம்



மூலத்திலிருந்து ஏற்பட்டுப் பலவகையான அரசாங்கங்கள் மாறினதை நாம் எளிதில் அறியலாம். முதல் முதல் அரசாங்கப் பிரிவுக்கு மூலகாரணம் ஏகநாயகத்துவம் வெகுநாயகத்துவம் என்னும் இவ்விரண்டு அரசுகளே. ஏகநாயகத்துவம் (Despotic Rule) என்பதில் அரசாங்க அதிகாரம் யாவும் ஒருவனிடத்தி லிருப்பது. வெகுநாயகத்துவம் (Democratic Rule) என்பதில் அரசாங்க அதிகாரம் வெகு ஜனங்களிடத்திலாகிலும் அல்லது வெகு ஜனங்களுடைய பிரதிநிதிகளிடத்திலாகிலும் இருப்பது. முதல் வகையில் ருஷியா, (யுத்தத்திற்கு முன்) துருக்கி, பர்ஷியா ஆகிய இவைகள் சேரும். இரண்டாவது வகையில், இங்கிலாந்து, அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம், பிரான்ஸு ஆகிய இவைகள் சேரும். முதல் வகையிலும் சில பிரிவுகளுண்டு; ஏகநாயகத்துவம் என்பது கொடுங்கோன்மையைக் குறிக்கும் என்றாலும், கொடுங்கோன்மைக்கும் ஏகநாயகத்துவத்திற்கும் வித்தியாசமுண்டு. ஏகநாயகத்துவம் கொடுங்கோன்மையின்றி செங்கோன்மையாகவுமிருக்கக்கூடும். இரண்டாவது வகையில் கூறப்பட்ட வெகுநாயகத்துவத்திலும் சில உட்பிரிவுகளுண்டு. அவை நிர்ணய இராஜ்யாதிபத்யம், (Limited Monarchy) பிரஜாதிபத்யம் (Republic) எனவாம். நிர்ணய இராஜ்யாதிபத்யத்தில் அரசனொருவனை ஒப்புக்காக அல்லது பெயருக்காக வைத்திருப்பர். பிரஜாதிபத்யத்தில் நிர்வாகம் யாவும் ஜனங்களால் நியமிக்கப்பட்டவர்களிடத்திலேயே யிருக்கும். ஆகவே மனுடிகளில் பூர்வமிருந்து இன்றுவரை இராஜரீக சாஸ்

திரத்தில், யதேச்சாதிபத்யம், ஏகநாயகத்துவம், பிரபுத்துவம், வகுப்பாட்சி, தேவதாட்சி, பாளையக்காராட்சி, வம்பாராட்சி, பிரஜாதிபத்யம், ஐக்கிய அரசாங்கம், ஏகத்துவரசாங்கம், நிர்ணயராஜ்யாதிபத்யம், பொறுப்பாட்சி, பார்லிமெண்டரி அரசாங்கம் ஆகிய இவையும் பிறவுமாக ஏற்பட்டன. ஏகநாயகத்துவம் என்னும் மகா பிரிவிலும் வெகுநாயகத்துவம் என்னும் மகா பிரிவிலுமுள்ள உலக இராஜ்யங்களைக் கூறுவோம். அபிஸீனியா, ஆப்கனிஸ்தானம், மொராகோ, பர்ஷியா, துருக்கி, ருஷியா ஆகிய இவைகள் ஏகநாயகத்துவத்தைக் கொண்டவை. ருஷியா யுத்தத்திற்குப் பிறகு ஏகநாயகத்துவத்தை நீக்கி போல்ஷிவிக் அரசாங்கமாக மாறியிருக்கிறது. வெகு நாயகத்துவத்தில் நிர்ணய இராஜ்யாதிபத்யம், பிரஜாதிபத்யம் என இரண்டு பிரிவுண்டு. நிர்ணய இராஜ்யாதிபத்யத்தில் ஏகத்துவம், ஐக்கியம் அல்லது உடன்பாடு என இருவகையுண்டு. ஏகத்துவத்தில் பார்லிமெண்டரி, பார்லிமெண்டரியல்லாத என இருவகையுண்டு. பார்லிமெண்டரி அரசாங்கத்தின்முறையை, பெல்ஜியம், டென்மார்க், கிரீஸ், இதாலி, ஜப்பான், நார்வே, இங்கிலாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், போர்த்துகல், ருமேனியா முதலிய தேசங்கள் கொண்டிருக்கின்றன. பார்லிமெண்டரியல்லாத முறையில் லக்ஸம்பர்க், மான்டிநீக்ரோ, ஸர்வியா, சையாம், பிரஷ்யா, ஜர்மெனி அரசுகள் முதலிய தேசங்கள் அரசாங்கத்தைக்கொண்டிருக்கின்றன. பின்னர், ஐக்கிய அல்லது உடம்பாடாட்சி முறையில் பார்லிமெண்டரி, பார்லிமெண்டரியல்லாத முறையென இருவகைப்படும்.



பார்லிமெண்டரி முறையில் கன்டா, ஆஸ்திரேலியாவும், பார்லிமெண்டரியல்லாத முறையில் ஜர்மென் சாம்ராஜ்யமும் ஆஸ்திரியா ஹங்கேரியும் சேரும். நிற்க, பிரஜாதிபத்தியத்திலும் ஏகத்துவம், உடம்பாடு என இரண்டுண்டு. ஏகத்துவத்தில் பார்லிமெண்டரி, பார்லிமெண்டரியல்லாத முறையென இருவகையுண்டு: பார்லிமெண்டரி முறையில் பிரான்ஸும் சீனாவும், பார்லிமெண்டரியல்லாத முறையில் தென் அமெரிக்காவிலுள்ள பல தேசங்களும் சேரும். உடம் பாடாட்சியிலும் பார்லிமெண்டரி, பார்லிமெண்டரியல்லாத முறையென இருவகையுண்டு. பார்லிமெண்டரி முறையில் ஸ்விட்ஜர்லாந்தும், பார்லிமெண்டரியல்லாத முறையில் மெக்ஸிகோ, அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம் (United States) வெனிஜுலா, பிரேஜில் முதலிய தேசங்களும் சேரும். பிரஜாதிபத்ய இனத்தில் பலவகை பிரிவுகள் இருப்பது போல ஏகநாயகத்துவத்தில் இல்லை. இங்ஙனம், உலகத்திலுள்ள தேசங்களின் அரசாங்கங்களை இனவாரியாகப் பிரிக்கப்பட்டவுடன் அவ்வரசாங்களின் சட்டங்கள், முறைகள், பிரமாண வழக்கங்கள் ஆகிய இவைகளைப் பற்றியும் ஆராய்வோம். யாதாமொரு அரசின் முறைக்கு அல்லது ஏற்பாட்டுக்கு அரசியல்என்பர். அரசியல் என்னுஞ் சொல்லுக்கு ஆங்கிலத்தில் கான்ஸ்டிடியூஷன் (Constitution) என்பர். இவ்வாங்கில பதத்திற்கு அரசியில் என்பதுமட்டுமல்ல; வேறு பல பொருள்களுமுண்டு; பிரமாணம், நிபந்தனை, ஏற்பாடு, சட்டம் என பொருள்களும் அப்பதத்திற்குள்ளடங்குகின்றன. அமெரிக்காவில் அப்பதத்திற்கு 'எழுத்து மூலமாக வுண்டான

ஒரு பிரமாணம் என்பர். பொதுவாக அப்பதமானது ஓர் அரசின் நிரந்தர மூலாதாரமான சட்டத்தைக் குறிக்கும். அச்சட்டம் எழுத்து மூலமாக வேனும் அல்லது எழுதப்படாமல் வழக்கத்தின் மூலமாக வேனும் இருக்கலாம். அரசாங்கத்தின் அதிகார முறைகள், பரிபாலிக்கப் பட்டு வரும் பிரஜைகளின் உரிமைகள், அரசாங்கத்துக்கும் பிரஜைகளுக்கும் உள்ள அன்னோன்னிய சம்பந்தம் ஆகிய இவைகளைத் திட்டப்படுத்தி ஒன்று சேர்த்த விதிகள் அல்லது நியமங்களுக்கு பிரமாணம் (Constitution) என்று பண்டிதர் உல்ஸி கூறுகிறார். அரசாங்கத்தில் நேராகவோ, மறைவாகவோ சகல அதிகாரங்களையுஞ் செலுத்தியும், அதிகாரங்களை வினியோகப் படுத்தியும் வருவதற்குள்ள எல்லா விதிகளுக்கும் பிரமாணம் என்று டைஸி கூறியுள்ளார். மேற் கூறிய விதிகள் அல்லது நியமங்கள் சில தேசங்களில் பிரமாண பத்திரங்களாக எழுதப்பட்டும், சில தேசங்களில் அனாதிகாலமாக வரும் வழக்கங்களை அநுஷ்டானமாகக் கொண்டும் வரும். இங்கிலாந்து தேசத்தின் அரசியலைப் பார்க்கையில் அனாதிகாலமாக வந்த வழக்கங்களிற் பல பிரமாணங்களாக ஏற்பட்டிருக்கின்றன. இந்த வழக்க அனுஷ்டானங்கள் சிலசமயங்களில் சட்ட ஆதாரங்களுள்ளவைகளாக நீதிமன்றங்களில் பிரயோகிக்கப்பட்டும் சிலசமயங்களில் அவை பொதுசன அபிப்பிராயத்தையும் அனாதிகாலமாக ஏற்பட்டு வருகின்றதென்னும் மரியாதையையுங் கொண்டு அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றன. காபினட் முறை என்னும் மந்தண சபை யமைப்பு முறையானது இங்கிலாந்தில்



ஒருசங்கேதமாக ஏற்பட்டு வருகின்றதேயன்றி சட்டப் பிரமாணங் களினாலல்ல; இங்கிலாந்தில் காபினட் சபை என்கிற நிர்வாக சபைக்கு மந்திரிகளை நியமிப்பதில் காமன்ஸ் மகாசபை யங்கத்தினர்களிற் பெரும்பாலோரின் சம்மதம் பெற்றும் ஒரே இராஜீய கட்சியையேனும் அல்லது இராஜீய கட்சிகள் பல ஒன்றுசேர்ந்த தொகுதியையேனும் சேர்ந்திருக்குமவர்களைப் பிரபு சபை என்கிற லார்ட் சபை, ஜனசபையென்கிற காமன்ஸ் சபையாகிய இவ்விரண்டு சபைகளின் அங்கத்தினர்களினின்றும் பொறுக்கியெடுத்து நிர்வாக மந்திரிகளாக மந்தண சபைக்கு நியமித்துவருவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சிறப்பான ஓர் அம்சம். இது வெகுகாலமாக ஏற்பட்டு வரும் வழக்கம். ஹங்கேரி தேசத்து அரசியலிலும் இது போன்ற அனாதி காலவழக்கம் பிரமாணமாக ஏற்பட்டு வருகின்றது. ஆஸ்திரியாவுடன் ஹங்கேரி சேர்ந்து அன்னோன்னிய சம்பந்தம் ஏற்பட்ட நாள்முதற் கொண்டு ஹங்கேரி தனக்கு ஏற்பட்ட பழைய வழக்க அனுஷ்டானங்களையே கொண்டு அரசியல் நடத்திவருகிறது. நிற்க, எழுத்து மூலமாக யாதொரு பிரமாண சட்டமுமின்றி இங்கிலாந்தும் ஹங்கேரியும் சில அனுஷ்டானங்களைச் சட்டங்களாக ஆதரித்துவருவது போல ஏக நாயகத்துவத்தைச் சேர்ந்த ருஷியா, துருக்கி இவ்விரு அரசுகளும் எழுத்து மூலமான பிரமாணங்களின்றி இஷ்டமான சிலவைகளைச் சட்டங்களாக ஆதரித்து வந்தன. எழுத்து மூலமாகப் பிரமாணச் சட்டங்கள் ஏற்படாத இராஜ்ஜியங்கள் வெகு குறைவு. கடந்த 150 வருடகாலத்திற்குள் வல்லரசுகள் பல எழுத்து

மூலமான பிரமாணச் சட்டங்களைத் தயாரித்து வந்தன.
அமெரிக்கா குடியேறின நாடுகளே முதன் முதல் வழி
காட்டின. 1776-ம் வருடத்தில் எழுத்து மூலமான
பிரமாணங்களை கரோலின, நியூஜர்ஸி, மேரிலாந்து முத
லிய அரசுகளும், 1777-ம் வருடத்தில் நியூயார்க்,
ஜார்ஜியா முதலிய அரசுகளும், 1780-ம் வருடத்தில்
மாஸ சூஸெட்ஸும் முறையே தயாரித்தன. 1791-ம்
வருடத்தில் பிரான்ஸ், மகா இராஜ்ய புரட்சியின்
ஆரம்பத்தில் பிரமாணசட்ட மொன்றைத் நிர்மானித்
தது. பிறகு இராஜ்ய புரட்சியால் உண்டான ஒவ்
வொரு அரசாங்கமும் 19-வது நூற்றாண்டில் புதிய
புதிய பிரமாணச் சட்டங்களைத் தயாரித்தன. 1813ம்
ஆண்டில் நெபோலியனோடு ஐரோப்பிய இராஜ்ஜியங்கள்
போர் தொடுத்த காலத்தில்பல இராஜ்ஜியங்கள்பிரமாண
சட்டங்களைத் தயாரித்தன. அமெரிக்கா, முதன் முதல்
18-வது நூற்றாண்டில் வழிகாட்டினதிலிருந்து எண்
ணிறந்த அரசுகள் எழுத்து மூலமான பிரமாண சட்
டங்களைத் தயாரித்து வந்தன. அமெரிக்காவின் பிரமா
ணமானது அநேகமாக இங்கிலாந்து தேசத்தை யாண்டு
வந்த மன்னர்கள் அப்போதைக்கப்போது இங்கிலீஷ்
வியாபாரிகளுக்குக் கொடுத்துவந்த சாஸனங்களை யனுச
ரித்ததேயாம். எழுத்து மூலமான பிரமாணங்களே சகல
அரசுகளிலுமிருக்கின்றன. இங்கிலாந்திலும் ஹங்கேரி
யிலும் சில வழக்கமாக வந்தன வென்றாலும் பெரும்
பாலும் இங்கிலாந்தில் எழுத்து மூலமான பிரமாணங்
களே ஆதாரமாக யிருக்கின்றன. உதாரணமாக மாக்னா
கார்ட்டா என்னும் மகா சாஸனம் உரிமைப் பிரமாணம்.



(1689) 1701-ம் வருடத்திய செட்டில்மெண்ட் சட்டம்,
வாக்குரிமை செலுத்தும் பாத்தியதையும், ஜனங்க
ளுக்குப் பிரதிநிதியாக வரும் பாத்தியதையும், 1832,
1867, 1884, 1885-ம் வருடங்களில் உண்டான சட்
டங்கள் ஆகியவைகளே சான்றும். ஒருதேசத்திற்கு
மூலாதாரமாயிருக்கும் சட்டங்கள் யாவும் எழுத்து மூல
மாகவே யிருக்க வேண்டுமென்கிற நியமமும் கட்டாய
முமில்லை; யாதாமொரு பிரமாணம் வழக்கமாக
அனாதி காலந்தொட்டு ஏற்பட்டு அதற்கு சனங்கள்
கட்டுப்பட்டு வருவார்களானால், அதுவே எழுத்து மூல
மான பிரமாணத்திற்கு மேலாக ஆதாரமாகும்.
உதாரணமாக, அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்திற்கு
அதிபதி ஸ்தானம் சேர்ந்தாற்போல மூன்றும் முறை
ஒருவனே நியமிக்கப்படக் கூடாதென்னும் பிரமாணம்
எழுத்து மூலமாக இல்லையாயினும், அது வெகுகால
மாக ஏற்பட்டு வந்ததால், அதுவே முக்கிய பிரமாண
ஆதாரமாக ஆயிற்று. இதாலியிலும், இதாலிதேசத்து
மூலாதாரப் பிரமாணப்படி, மந்தணசபை யமைப்பு
இங்கிலாந்தைப்போல பார்லிமெண்ட் சபையின் பெருந்
தொகையாளர்களின் சம்மதத்தின்பேரில் மந்திரிகள்
நியமிக்கப்படவேண்டுமென்று இல்லையாயினும், முத
லாவது விக்டர் எமான்னியூல் மன்னன் காலத்திருந்து
வழக்கமாக வந்தது பற்றி அது இன்னும் அனுஷ்டானத்
திலிருந்து பிரமாணப்படி ஆதாரமுள்ளதாக ஆயிற்று.
நிற்க, எழுத்து மூலமான பிரமாணங்களினால் அரசாங்க
அதிகாரங்களுக்கு விரோதமாகவும் தடையாகவுமாகிற
தென்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். மற்றுஞ்

சிலர், ஏற்கனவே, அரசாங்கத்திற்கு அதிகார எல்லையை யிட்டுக்கொடுத்து அதற்கு மீறி நடக்காமற்படி சட்டங்களை யமைத்தும் வந்ததினால் எழுத்து மூலமான அரசியல் பிரமாணங்கள் அனாவசிய மென அவர்கள் கூறுகின்றனர். அங்ஙனம் தயாரிக்கும் எழுத்து மூலமான பிரமாணங்களை கவர்ன்மெண்டின் சட்ட நிரூபண சபை மாற்ற அதிகாரம் பெற்றுள்ளதா வென்னும் கேள்வியும் பிறக்கின்றது. அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தின் பிரமாணப்படி அங்ஙனம் மாற்ற முடியாது. ஆகவே, யோசிக்கு மிடத்து அரசாங்கங்களின் அதிகார எல்லையைத் தீர்மானிப்பது சட்டபிரமாணமல்ல வென்றும், காலங்கண்ட வழக்கத்தின் அனுஷ்டானத்தாலும் பொதுஜன அபிப்பிராயத்தின் வலுவாலுமே தீர்மானிக்க முடியுமென்றும், நிதர்சனமாகிறது. அரசியல் பிரமாணங்களை மாற்றவோ, புதிப்பிக்கவோ, அல்லது சேர்க்கவோ இஷ்டப்படின், சில அரசாங்கங்கள் மிகவும் கோணலான முறைகளை யனுசரித்து வருகின்றன. ஸ்விட்ஜர்லாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்க ஐக்கிய அரசாங்கம் இவைகளில் ஜனசம்மதத்தின் பேரில், அல்லது பொது ஜனங்களின் பெரும்பாலோருடைய சம்மதத்தின் பேரிலேயே அரசியல் பிரமாண சட்டங்கள் மாற்றவும், சேர்க்கவும் ஆகும். இவ்வகையாக ஐரோப்பா, அமெரிக்காக்கண்டங்களில் அரசு வற்பட்டு, அதின் வழியாகப் பல அரசாங்க வகைகள் தோன்றித் தற்காலத்தில் நடந்து வருகின்றன. அரசு உண்டான வகை, அரசுகளின் மூலதத்துவங்கள், அரசுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம், அரசு ஒன்றுக்



கொன்று ஏற்பட்ட அன்னியோன்னியம், அரசுகளின் பல்வகை வடிவம் ஆகிய இவைகளை மேலைநாட்டார்களின் சித்தாந்தப்படி ஒருவாறு கூறினோம். மேலைநாடுகளில் கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக எண்ணிறந்த இராஜீய புரட்சிகள் தேசமெங்கும் உண்டாகி, இராஜீய புரட்சிதோறும் எண்ணிறந்த இராஜரீக சாஸ்திரக்ஞர்கள் தோன்றி வந்தனர். ஐரோப்பா கண்டத்து சரித்திரம் கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக வெகு அற்புதமான சுதந்தர உணர்ச்சியை எவனுக்கும் கொடுக்கக்கூடியதாக யிருக்கிறது. ஐரோப்பா கண்டத்து இராஜீய புரட்சிகளில் மன்னர்களை மகாசனங்கள் நாற்சந்தி மூலையில் நிறுத்தித் தலைகளைக் கொய்ததும், பிரபுக்கள் மகாசனங்களை வருத்தி அன்னவர்களின் இரத்தத்தைப் பிழிந்ததும், மகாசனங்கள் பிரபுக்களைக் கண்ட யிடத்திலும் துண்டுதுண்டாக வெட்டிப் பிரபு வம்சத்தையே யொழிக்கச் சூறையாடினதும், பிரஜாதிபத்யம் என்னும் உணர்ச்சியால் குடியரசு கட்சிகள் ஆங்காங்கு தோன்றி கிளர்ச்சி செய்ததும், மிகவும் ஆச்சரியமான சம்பவங்களாம். ஐரோப்பா கண்டத்துப் பல தேசங்கள் அடிக்கடி செய்து வந்த இராஜீய புரட்சிகளினாலேயே இராஜ்ய அமைப்புகள் பல உண்டாகி, நானாவித பிரமாணங்களும், அரசியல் திட்டங்களும் ஏற்பட்டன. தற்பொழுது, ஐரோப்பா கண்டத்துப் பல்வகை அரசுகளும், அமெரிக்காக் கண்டத்து அரசுகளும், மனிதனுடைய சுதந்தர உரிமையை வெகு மேன்மையாகக் காப்பாற்றும் வண்ணம் அரசியல் திட்டங்களை யுண்டாக்கின. இங்ஙனம்,

77462

அத்தேசங்கள் பிரஜைகளின் சுதந்தரங்களையும் உரிமைகளையுங் காக்கப் பலவிதமான பாதுகாப்புச் சட்டங்களைத் திட்டப்படுத்திவந்தும், ஐரோப்பா கண்டத்தில் இராஜீயத் துறையில் தீவிர ஞானங்கொண்ட வாதிகள் பல தோன்றி நவீன சில சித்தாந்தங்களை ஸ்தாபித்தனர். சமூக சமத்துவ வாதம் (Socialism) என்றும், அராயகத்துவ வாதம் (Anarchism) என்றும், போல்ஷிவிக்வாதம் (Bolshevism) என்றும் சாங்க சாமிய வாதம் (Syndicalism) என்றும் பல சித்தாந்தங்கள் இராஜீயத் துறையில் ஏற்பட்டு சமீப காலமாக மேஜாடுகளைக் கலக்கச் செய்கின்றன. மேற்கூறிய சித்தாந்தங்கள் யாவும் ஜனநாயக உணர்ச்சியைப் பற்றியவையாகும். அவைகளைப் பற்றியும், அவைகளின் ஸ்தாபகர்களைப்பற்றியும் அரசு விஷயமாகவும், அரசாங்க விஷயமாகவும், சமூக விஷயமாகவும் அன்னவர்களுடைய அபிப்பிராயங்களைப்பற்றியும் ஒருசிறிது ஆராய்வாம்.

# 8. அரசைப்பற்றிய நவீன சித்தாந்தம்

சமூக சமத்துவ வாதமானது முதன்முதல் ஐரோப்பா கண்டத்து ஜர்மெனியைச் சேர்ந்த காரல் மார்க்ஸ் என்பவரால் சித்தாந்தப் படுத்தப்பட்டது. காரல் மார்க்ஸ் அவர்கள் 1818-ம் வருடத்தில் பிறந்து நீதி சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், பொருளாதார சாஸ்திரம், சரித்திரம் முதலிய சாஸ்திரங்களை ஜெர்மெனி சர்வகலா சாலைகளில் பயின்று நல்ல மேதாவி யெனப் பெயர் பெற்றார். அவர், இராஜீயத்துறையிலிருந்து தீவிர மான கொள்கையைக் கொண்டிருந்ததினால், ஜர்மெனி யைவிட்டுத் துரத்தப் பட்டார். பாரிஸ் நகர்வந்து அவர் பல தீவிர கொள்கையாளர்களோடு சம்பந்தம் பெற்று, ஆங்கு சமூக சமத்துவ வாதத்தைச் சித்தாந்தப் படுத்தினார். இவருக்கு முன்னரே, சில பிரன்சு தீவிர கொள்கையாளர் சமூக சமத்துவ வாத உணர்ச்சியைப் பெற்றிருந்தார்களென்றாலும், அச்சமூக சமத்துவ வாதத்தை நன்கு ஐரோப்பாவில் சித்தாந்தப் படுத் தினது காரல் மார்க்ஸ் அவர்களே யாவர். பாரிஸ் நக ரினின்றும் அவர் துரத்தப்பட்டுப் பின்னர் இங்கிலாந்து வந்தடைந்தார். சமூக சமத்துவமானது ஒரு தேசத்திலுள்ள பூஸ்திதி, பொருள் ஸ்திதி இவ்விரண் டும் பொதுவாக சமூகத்தைச் சேர்ந்தது. அவ்விரண் டும் ஜனாதிபத்யத்தைக் கொண்ட அரசுக்குப் பாத்திய தையே தவிர, மற்ற அரசுக்குக் கிடையாது என்பதாம். அதாவது தேசத்திலுள்ள நிலங்களும் மூலதனமும்

ஒருவர் இருவர் அல்லது சிலருடைய ஆதீனத்திலிருந்து அவர்களே அனுபவித்து வருகின்றதென்னும் நியாயத்துக்கும் அனுஷ்டானத்திற்கும் மாறுபாடாக, சமூக சமத்துவ வாதமானது உண்டாகி நிலங்களும் மூலதனமும் பொதுவாக எல்லாரும் சேர்ந்த ஒரு சமூகத்திற்குச் சொந்தமேயன்றித் தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமல்ல என்னும் நியாயத்தால் சித்தாந்தப் படுத்தப்பட்டது. இத்தகைய சமூகபாத்தியதையானது கொஞ்சங் கொஞ்சமாக விர்த்தியடையும் நியாயத்தில் நம்பிக்கை யற்றவர்களாய், அப்பாத்தியதை திடீரென்று ஒருவித புரட்சியினாலும் பலமான பரிவர்த்தன முறையாலும் உண்டாகும் என்று அச் சமூக சமத்துவ வாதிகளிற் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். ஆனால், சிலர் முதலில் ஒரு கைத்தொழிலிலிருந்து மற்றொரு கைத்தொழிலுக்கும் பின்னர் அதினின்று கொஞ்சங் கொஞ்சமாக நாளடைவில் சமூக பாத்தியதை உலகெங்கும் உண்டாகும் என்றும் அபிப்பிராயப் படுகின்றனர். சமூக சமத்துவாதிகளிற் சிலர் நிலங்களும் மூலதனமும் சமூகத்தின் ஆதரவிலேயே கட்டாயமிருக்கவேண்டுமென்றும், மற்றுஞ் சிலர், தனிப்பட்ட நபர்கள் பிறருக்கு உபத்திரவமின்றி சில்லரையாக வைத்துக் கொண்டிருந்தால் பாதகமில்லையென்றும் அபிப்பிராயப் படுகின்றனர். எப்படியிருப்பினும் பொதுவாக சமூக சமத்துவ வாதிகள் அனைவரும் ஜனாதிபத்யத்தையே மூலாதாரமாகக் கொண்டு, தனத்தை ஆதாரமாகப் பெற்றுவரும் முறைமையை யொழிப்பதில் ஏகோபித்திருக்கின்றனர். சமூக சமத்துவ வாதிகள், அராஜகத்



துவ வாதிகள், சங்க சாமிய வாதிகள் ஆகிய இவர்களுக்குள்ள வித்தியாசம் அநேகமாக ஜனாதிபத்ய அரசாங்க முறையிலேயன்றி வேறெதிலுமில்லை. சமூக சமத்துவவாதிகள் பார்லிமெண்டரி முறையை யனுசரித்த பிரஜாதிபத்யத்தை யங்கீகரிக்கின்றனர். இம்முறையினால், தற்காலத்தில் அரசாங்கங்களில் இருந்துவரும் தீமைகள் ஒழிந்தும், தனவந்தர்களின் ஆதிக்கம் நீங்கியும் போகும் என அவர்கள் நம்புகின்றனர். ஆனால், அநாயகத்துவ வாதிகளும், சங்க சாமிய வாதிகளும் பார்லிமெண்டரி முறையைச் சம்மதிக்காமல் கண்டனஞ் செய்து, சமூகத்தின் இராஜ்ய அமைப்பை வேறு மாதிரியாக நடத்த இச்சிக்கின்றனர். மேற்கூறிய மூன்று வாதிகளும் ஜனாதிபத்யத்தை முதன்மையாகக் கொண்டு, தனிப்பட்ட மனிதர்களுக்குப் பிரத்யேகமான உரிமைகளையும், ஸ்வபாவிக மல்லாமல் சம்ஸர்க்கத்தினால் ஏற்பட்ட சமத்துவ இன்மையையும் அவர்கள் நிராகரிக்கின்றனர். அம் மூன்று வாதிகளும் தற்பொழுது சமூகத்திலுள்ள தொழிலாளர்களை யாதரிப்பவர்கள். கைமுதலைக் கொண்டு அல்லது மூலதனத்தைக் கொண்டு கூலிகொடுத்து தொழிலாளர்களை யமர்த்தி, அவர்களால் தனத்தையும் விசேஷ பாத்தியதைகளையும் அனுபவித்து வரும் அனுஷ்டானத்தை முற்றிலும் ஒழிக்கக் கங்கணங் கட்டினவர்களே அம் மூன்று வாதிகளுமாவார்கள். காரல் மார்க்ஸ் அவர்களுடைய கொள்கைப்படி மானிட சமூக சாங்கமானது சடப்பொருள்களின் நிலைமையினின்றுமே யுண்டாயிற்றென்றும், அது பொருளாதார வழியையே பற்றி வந்த

தென்றும், இராஜீயத் துறைகளின் பிரமாணம், சட்டம்,
மதக்கொள்கை, தத்துவம் ஆகிய இவைகள் யாவும்
பொருள் நூலின் காரிய பாகத்திலின்றுமே யேற்பட்
டன வென்றும் தெரியவருகிறது. பொருளாதார
வழியினாலேயே மனிதர்களுக்குச் சுதந்தர உணர்ச்சியும்
நன்னடக்கையு முண்டாகிற தென்றும் அவர்கள் அபிப்
பிராயப் படுகிறார்கள். ஐரோப்பாவில் தனவந்தர்களுக்கும்
பிரஜைகளுக்கும் அல்லது பிரபுக்களுக்கும் பிரஜைகளுக்
கும் உண்டான மகா புரட்சியினால் பிரபுக்களின் ஆதிக்
கம் நீங்கிற்று. இனி பிரஜைகளுக்கும் தொழிலாளர்
களுக்கும் உண்டாகப்போகும் மகா புரட்சியினால்
தொழிலாளர்களுடைய ஆதிக்கமே ஸ்திரப்படப்
போகிற தென்றும் அவர் கூறியுள்ளார். ஆகவே,
அவர், மற்றொரு புரட்சியை எதிர்பார்க்கிறார். நாட்
டின் சகல தொழில்களும், தொழில்களைச் சேர்ந்த
ஸ்தாபனங்களும் விவசாயம் முதலிய பலபண்ணைகளும்
தனிமனிதர்களுடைய ஆதீனத்திலும் ஆதாவிலும்
இருக்கக் கூடாதென்றும், அவையாவும் அந்நாட்
டைச் சேர்ந்த பிரஜாதிபத்ய அரசின் ஆதீனத்தி
லிருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். சமூக
மானது தொழிலாளி ஜாதி யென்றும் முதலாளி
ஜாதியென்றும் இரண்டாகப் பிரிந்திருக்கிறதென்றும்
சமூக சமத்துவ உணர்ச்சி யுண்டானால் ஒரே ஜாதியாக
ஏற்படுமென்றும், அங்ஙனம் ஒரே சாதியாக வேற்படு
வதற்குச் சமூக சமத்துவ வாதத்தைப் பற்றியிருக்கும்
அரசாங்கமேயிருத்தல் அவசியமென்றும் அவர் கூறியுள்
ளார். உலகிலுள்ள சமூக சமத்துவ உணர்ச்சியுள்ள



வர்களுக்கு நிறவித்தியாசமாகிலும், பாஷை வித்தியாச
மாகிலும், மதவித்தியாசமாகிலும் இல்லை யென்றும் இது
காறும் சரித்திரத்திலுண்டான இராஜீய புரட்சிகளெல்
லாம் ஒரு குழுவினருடைய நன்மைக்காக யுண்டான
வையென்றும், இனி சமூக சமத்துவ உணர்ச்சியால்
உண்டாகப்போகும் மகாபுரட்சியே சர்வ சனங்களின்
நன்மைக்காகுமென்றும் அவர் கூறியுள்ளார். பணக்
காரர்கள் தங்கள் பணச்செருக்கினால் பலவந்தத்தினா
லும், பயமுறுத்துதலினாலும் பணமில்லாத சாமானி
யர்களை வற்புறுத்திக் கீழ்ப்படியும்படி செய்து வந்தன
ரென்றும் அங்ஙனம் செய்துவந்ததின் காரணமாகவே
அரசு உண்டானதென்றும் அச்சமூக சமத்துவவாதி
கள் கூறுகின்றனர். தவிர, அரசானது இனி தொழிலா
ளர்களிடத்தே யிருக்குமென்றும் தனிமனிதனுக்குப்
பிரத்தியேகமான சொத்து பாத்தியதை யில்லை யென்
றும், அரசாங்க நிர்வாகமானது தற்பொழுது சில குழு
வினர்களால் தங்களுடைய சுயநன்மையையுத்தேசித்து
நடத்தப்பட்டு வருகின்றதென்றும். சமூக சமத்துவ
வாதிகளின் பிரகடனப் பத்திரிகைகள் கூறுகின்றன.
சமூக சமத்துவவாதிகளின் ஆதீனத்தில் அரசு என்னும்
நாமதேயமே யிராதென்றும் அச்சமூக சமத்துவவாதி
கள் கூறுவர். பின்னர் அநாயகத்துவவாதிகள் என்
போர் சமூக சமத்துவ வாதிகள்போலவே மேற்கூறிய
அவ்விருசாதி சண்டையில் நம்பிக்கையுள்ளவர்கள். அச்
சண்டையின் பொருட்டு வெடி குண்டுகளை உபயோகப்
படுத்து கின்றனர். கவான்மெண்டானது எங்ஙனம்
குண்டுகளை பிரயோகிக்கின்றதோ, அங்ஙனமே அவர்

களும் உபயோகிக்கின்றனரெனக் கூறப்படுகிறது. அரா
யகத்துவ வாதிகள், தற்காலத்திலுள்ள அல்லது தற்
பொழுது நடைபெற்று வருகின்ற அரசாங்கங்களில்
பலாத்காரத்தினாலேயே அதிகாரம் நடத்தப்பட்டுவரு
வதினால் அவ்வரசாங்கங்களை அவர்கள் ஒழிக்கத்தங்கள்
கொள்கையை ஸ்திரப்படுத்துகின்றனர். எல்லா வழியி
லும் சர்வ சுதந்தரத்துடன் இருக்கும் அரசாங்கமொன்
றையே அவர்கள் அங்கீகரிக்கின்றனர். அவர்கள் தண்
டநீதி சாஸ்திரம், போலீஸ் முதலியவைகள் அனாவசிய
மென்றும், ஒருஜாதியார் மற்றொருஜாதியார்களை யடக்
கியாள்வதற்காகவே அவைகளை உபகரணங்களாக உப
யோகப்படுத்தி வருகின்றனரென்றும், சுதந்தரமே மிக
வும்மேன்மையான பொருள் என அவர்கள் கருதுகின்ற
னர். சமூகத்தினாலாவது அல்லது அரசாங்கத்தினாலாவது
ஏற்படும் தடைகளை உதறித்தள்ளி சர்வ சுதந்திர ஸ்தாப
னஞ்செய்வதே முக்கியமான கடமையென அவர்கள்
கூறுவர். இந்த அராயகத்துவ வாதத்தை முதன் முதல்
சித்தாந்தப்படுத்தினவர் மைகல் பெகூனின் என்பவர்.
அவர் ருஷியா தேசத்தவர். அவர் கி. பி. 1814ம் வரு
டத்தில் பிறந்து இராணுவ கலாசாலையில் கல்விபயின்று,
பல யுத்தங்களில் தேர்ச்சி யடைந்து, கடைசியாக யுத்
தங்களின் கொடுமையை யுணர்ந்து நீங்கினர். 1843ம்
வருடத்திலிருந்து அராயகத்துவ உணர்ச்சியைக்கொண்
டு பல கஷ்டங்களை அவர் அனுபவித்தார். அவர் பிரான்சு
தேசத்தில் இருந்த காலத்தில் செய்த ஓர் உபந்நியாசத்
திற்காக நாடு கடத்தப்பட்டார். அங்கிருந்து ஜர்மெனி
க்குப் புப்பட்டு வந்தார். ஜெர்மென் அரசாங்கமும்



ஆஸ்திரிய அரசாங்கமும், ருஷிய அரசாங்கமும், முறை
யே பெகூனின் அவர்களை சிறைபடுத்தி ஆயுள் பரியந்தம்
சிட்சை கொடுத்தன. கடைசியாக, ருஷியாவில்
சில வருட காலம் சிறையில் அவஸ்தைப்பட்டுப் பின்னர்
ஒருவருக்குந் தெரியாமல் தப்பித்துக் கொண்டு ஜப்பான்
போய்ச் சேர்ந்தார். பிறகு ஜப்பானிலிருந்து அமெரிக்
காவுக்கும், அமெரிக்காவிலிருந்து லண்டனுக்கும் வந்
தார். அவருடைய சித்தாந்தம் ஐரோப்பாவிலுள்ள
லத்தின் வம்சத்தார்களினால் மிகவும் ஆதரிக்கப்பட்டு வந்
தது. அவருடைய கொள்கைப் படி அரசு என்பது
வெறும் சரித்திர நாமமே யன்றி உண்மையில் ஒரு
சமூகமல்ல; அது பலாத்காரத்தையும் வற்புறுத்துதலை
யும் கொள்ளையையும் ஹிம்ஸையையும் யுத்தத்தையும்
இராச்சிய ஆசையையும் பற்றியே சரித்திரத்தில் ஏற்
பட்டது. அது உண்டான நாள்முதல் இன்றுவரை சமத்
துவ இன்மையையும் மிருக சக்தியையுமே தெய்வ
கடாட்ச மெனக் கொண்டு வருகிறது. அரசு என்பது
ஓர் அதிகாரமாகவும் பல முள்ள வஸ்துவாகவுமாயிற்று;
மிருக பலத்தையே பூஷணமாகக் கொண்டது. பலத்
காரத்தை யொழிக்க அது பாடுபடவில்லை; நன்மையைச்
செய்ய அதிகாரஞ் செலுத்துங் காலத்திலும் பலாத்
காரத்தையும் வற்புறுத்துதலையுங் கொண்டு சுதந்தரத்தை
நீக்கிக் கெடுதலைச் செய்கிறதென்றும் அதிகாரமே சுதந்
தரப்போக்குக்கு விரோத மென்றும், நன்மையென்பது
இயல்பாகவே இன்பமாக யிருந்தும், அதிகாரஞ் செலுத்
தப்பட்ட வுடனே நீதி முறைவழுவித் தீமையை யடை
கிறதென்றும் அரசைப்பற்றி அவர் கூறியுள்ளார். தவிர,

மனிதன் நன்மையைச் செய்வது அதிகாரத்தினாலாகிலும் வற்புறுத்துதலினாலாகிலும் இல்லையென்றும், அவன் காருண்யமும் பக்தியுங்கொண்டே நன்மை செய்ய இஷ்டப்படுகிறானென்றுங் கூறி, அத்தகைய தேசத்தன்மையினாலேயே சுதந்தரம், தர்மநீதி, மனித அந்தஸ்து இவைகள் உண்டாகின்றனவென்றும் பெகூனின் அவர்கள் கூறியுள்ளார். பின்னர், அவருடைய சிஷ்யர்களிலொருவரான குரோபாட்கின் என்பவர், நாட்டின் உற்பத்தி சரியாகவும் வகையாகவும் ஏற்படுத்தினால், நாட்டிலுள்ளோர் அனைவரும் சௌகரியமாக ஜீவனோபாயஞ் செய்ய, கொஞ்ச நாழிகை உழைப்பே போதுமென்றும் கூறினார். தவிர, தொழில் செய்விதென்பதும் கூலி கொடுப்பதென்பதும் இருக்கக்கூடாதென்றும், சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் உற்பத்திப் பொருள்களைச் சேர்ந்து உண்டாக்கி அவைகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்றும் ஒருவனுடைய சுகத்திற்காகப் பலர், நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைக்கும் அநுஷ்டானம் ஒழியவேண்டுமென்றும் கூறினார். அவர், மீண்டும், நாட்டில், பலாத்காரமாகிலும் வற்புறுத்துதலாகிலும், சட்டமாகிலும், அதிகாரத்தைச் செலுத்தும் அரசாங்கமாகிலும் இருக்கக்கூடாதென்றும் கூறியுள்ளார். நாட்டிற்கு வேண்டிய சகல காரியங்களும் நாட்டின் சமூகத்தினராலேயே செய்யப்படவேண்டுமென்பதும் அவருடைய கொள்கை. சமூகத்தின் சம்மதத்தினாலேயே நல்லொன்றும் உண்டாக வேண்டுமென்றும், அதிகாரத்தினாலாவது, ஒரு சிறு தொகையாளர்களின் ஆதிக்கத்தினாலாவது



உண்டாக முடியாதென்றும் அவர் கூறியுள்ளார். சிறு தொகையாளர்களுடைய ஆதிக்கம் எங்ஙனம் சுதந்தரத்திற்குத் தடையுண்டாகிறதோ அங்ஙனமே பெருந்தொகையாளர்களுடைய ஆதிக்கமும் உண்டாகிறதென்றும், ஆதலால், அரசாங்க முறையானது சமூகத்தைச் சேர்ந்த எல்லாருடைய சம்மதம் பெற்றிருக்க வேண்டுமென்றும் அநாயகத்துவ வாதிகள் கூறுகின்றனர். சாங்க சாமியவாதிகளோ, தொழிலாள சாங்கங்களின் கூட்டுறவை யுண்டாக்கி, அதின் மூலமாகச் சகல தேச காரியங்களையும் நடத்துவதென்னுங் கொள்கையைக் கொண்டவர்கள். சமூக சமத்துவ வாதிகள் எங்ஙனம் பார்லிமெண்டைக்கொண்டு பிரஜாதிபத்ய முறையில் அரசை நடத்த முயலுகின்றனரோ, அங்ஙனமே, இவர்கள், தொழிலாளர் சங்கத்தின் மூலமாக அரசை நடத்த முயலுகின்றனர். இவர்கள் பொதுவாக நாட்டில் உற்பத்தியை யுண்டாக்குபவர்களும், உண்டான உற்பத்திப் பொருள்களை யுண்பவர்களுமாக இரு கட்சியை அல்லது இரு சாதியைக் கூறுகின்றனர். தொழில் முறையைப்பற்றியே, கட்சி சண்டை யேற்படும் என்னுங் கொள்கையை இவர்கள் கொண்டவர்கள். இராஜீயத் துறையில் இவர்களுக்குப் பிடிப்பு இல்லை. அத்தொழில் முறைக்கு வேலை நிறுத்தம், பகிஷ்காரம், வேலையை நாசமாக்குதல், முதலாளிகளுக்கு நஷ்டத்தைக் கொண்டுவருதல் முதலியவைகளே உபாயங்களாம். சாங்க சாமிய வாதிகள் அரசாங்கங்களுக்கு எதிரியானவர்கள். மற்றும், இவர்களுக்குள்ளே பல பிரிவினருமுண்டு. நாட்டின் கண் உண்டாகும் உணவுப் பொருள்

கள்யாவையும் சமூக சாங்கம் விநியோகப் படுத்த
வேண்டுமென்றும், தற்பொழுது எங்ஙனம் தபால்
காரர்கள் கடிதங்களை வீட்டுக்கு வீடு கொடுத்து வரு
கின்றனரோ, அங்ஙனமே விநியோகிகள், வீட்டுக்கு
வீடு உணவுப் பொருள்களைக் கொடுத்து வரவேண்டு
மென்றும் மேற்கூறின அநாயகத்துவ வாதிகள் அபிப்
பிராயப்படுகின்றனர். இத்தீவிர கொள்கையாளர்களின்
சித்தாந்தங்களைப் பலர் ஐரோப்பா முதலிய கண்டங்
களில் கண்டனஞ் செய்து வந்தும், பொதுவாக, அநே
கர் அக்கொள்கைகளில் விருப்புற்றிருக்கின்றனர். தற்
பொழுது மேலைய நாடுகளிலும், கீழை நாடுகளிலும்,
பாரத நாட்டிலும் அத்தகைய கொள்கை பெரும்பாலும்
மனிதர்களுடைய மனதிற் புகுந்து ஓர் உணர்ச்சியை
யுண்டாக்கி வருகின்றது. அரசாங்கங்களின் அதிகார
அட்டூழியங்களும், தனவந்தர்களின் மிகமிஞ்சின சுக
போகங்களும், பிரபுக்களின் பிரத்யேக பாத்யதைகளும்
தொழிலாளர்களின் ஓழியா வறுமையுமே மேற்கூறிய
உணர்ச்சிக்குக் காரணம். பூர்வம், பல்வேறு இராஜீய
வாதிகள் தோன்றி அவரவர்களின் கட்சிக்குச் சாதக
மாகப் பற்பல சட்டதிட்டங்களை யேற்படுத்தி அரசு
நடத்திவந்ததை யறிந்த பலர், மகா சனங்களின் சுதந்
தரமற்ற வாழ்க்கையையும், கஷ்ட ஜீவனோபாயங்களை
யும், சமூகத்தின் பெயரால் சிறு பான்மையோர் அனுப
விக்கும் யதேச்சையான முறையையுங் கண்டு, சமூகத்
தை மாற்றவும், அரசை யொழித்துப் புதிய வழியாக
ஸ்தாபிக்கவும் முன் வந்தனர். 1915-ம் வருடத்தில்
உண்டான ஐரோப்பா யுத்தத்திற்குப்பிறகு, கடந்த



மூன்று வருடங்களாக ஐரோப்பா கண்டத்தின் பெரிய
தொரு பாகத்தைக்கொண்ட ருஷியா தேசம் இராஜீ
யத்துறையில் பற்பல மாறுதல்களையடைந்து வருகிறது.
ஆங்கு, போல்ஷிவிக் கட்சியினர் தங்கள் சித்தாந்தத்தை
நிலைநிறுத்தி ஆதிக்கஞ் செலுத்துகின்றனர். லெனின்
என்பவர் அக்கட்சிக்கு முக்கியர். போல்ஷிவிக் கட்சி
யினர்களுடைய சித்தாந்தம் ஏகதேசம் சமூக சமத்
துவ வாதிகளின் சித்தாந்தத்தைப் போன்றது. நில
உரிமை சமூகத்தினருடையதென்றும், தனிப்பட்ட
மனிதனுடைய தல்லவென்றும் அவர்கள் கூறுகின்றனர்.
போல்ஷிவிக் கட்சியினர் பெரும்பாலும் தொழிலாளர்
களே. அவர்களுக்கும் ஜாதி வேற்றுமை முதலியவை
கிடையா. அநர்யகத்துவ வாதிகளைப்போலவே இவர்
களும் பலாத்காரத்தை உபயோகப் படுத்துகின்றனர்.
யுத்த உபகரணங்களாகிய வெடி-குண்டு எறிதல், துப்
பாக்கிப் பிரயோகஞ் செய்தல் முதலியவைகளைக் கையா
ளுகின்றனர். போல்ஷிவிக் கட்சியினர் பலாத்காரத்தை
உபயோகப்படுத்துவதினின்றுமே அக்கட்சியினரிடம்
அநேகருக்கு வெறுப்பு உண்டாகிறது. பொதுவாக
போல்ஷிவிக் சித்தாந்தம் பலாத்காரத்தை நீக்கி ஆன்ம
சக்தியைக் கொண்டதாயின் அது சர்வ சிலாக்கியமா
யிருக்கும்.

# 9. அரசும் அரசனும்

நடந்த எட்டு அத்தியாயங்களில் மேனாடுகளில் அரசு விஷயமாக உண்டான சித்தாந்தங்களையும், அவ்வரசின் பரிணாமங்களையும், அவ்வரசு இராஜீய புரட்சிகள் தோறும் கொண்ட விகாரங்களையும், தற்காலத்தில் அவ்வரசுகளின் முறைகளையும், இனி அவ்வரசு எங்ஙனம் இருக்கவேண்டு மென்று கூறின சில நவீன கொள்கையாளர்களின் சித்தாந்தங்களையும் பற்றி ஒருவாறு கூறினோம். அரசு விஷயமாகப் பல மேதாவிகள் மேனாடுகளில் தோன்றி வெவ்வேறு சித்தாந்தங்களை ஸ்திரப்படுத்தினர். இனி நம் பாரத நாட்டில் அரசு உண்டானதைப் பற்றியும், அரசின் காரணமாக ஏற்பட்ட பிரகிருதிகளைப் பற்றியும், அரசனைப் பற்றியும், தர்மசாஸ்திர நீதி சாஸ்திரங்களைப் பற்றியும், சமூக முறையைப்பற்றியும், ஜனங்களுக்கும் அரசுக்கும், ஜனங்களுக்கும் அரசனுக்கும் உள்ள அந்யோன்னிய சம்பந்தங்களின் முறைமையைப் பற்றியும் நாம் ஆராய்வோம். மேனாடுகளில் உண்டான அரசின் விகாரங்களுக்கும் பாரதநாட்டில் உண்டான அரசின் பரிணாமத்திற்கும் வித்தியாசமுண்டு. தவிர, மேனாடுகளில் அரசின் தத்துவவழிக்கும் பாரத நாட்டின் அரசு தத்துவவழிக்கும் வித்தியாசமுண்டு. மேனாட்டு இராஜீக சாஸ்திரஞர்களுக்கும், பண்டை பாரதநாட்டு இராஜீக சாஸ்திரஞர்களுக்கும் வித்தியாசமுண்டு. மேனாட்டு இராஜீக முறைக்கும் நம் நாட்டு இராஜீக முறைக்கும் வேறுபாடுமுண்டு. இராஜீக முறை



யில் தற்பொழுது மேனாடுகள் முற்போக்கடைந்தனவாயினும், அம்முறையை பாரதநாடு அனுஷ்டிப்பதினால் பல துன்பங்களும் பல அசந்தர்ப்பங்களு முண்டாகின்றன. ஒரு தேசத்திற்கு நன்மை என்பது மற்றொரு தேசத்துக்கும் நன்மையாக யிருக்கமுடியாது; தேசத்திற்குத் தேசம் பாஷையிலும், அனுஷ்டானத்திலும், மதவழிபாடுகளிலும், சீதோஷ்ணஸ்திதிகளிலும், வாழ்க்கைப் பயன்களிலும் வேறுபாடுண்டு. மேனாடுகளில் இராஜீக சாஸ்திரம் சாதாரணமாக இராஜ்ய வழிகளையும் ஜனங்களின் உரிமை முதலிய பாத்தியதைகளையும் நீதிதர்மம், தர்மநீதி முதலியவைகளையுங் கொண்டு நிற்கும். பாரத நாட்டில் இராஜீக சாஸ்திரம் இம்மைக்கும் மறுமைக்கும் சாதகமாயிருக்கும் ஆத்தும தத்துவ சாஸ்திரமாகவும் கொள்ளப்படுகின்றது. தெய்வபக்தியும், ஆஸ்ரம வழிபாடும், சிஷ்டாசாரமும், வேத உபநிடதங்களின் ஆராய்ச்சியும், புராண காலட்சேபமும், தனுர்வித்தை முதலிய யுத்தசாஸ்திரமும் ஆகிய யாவும் இராஜீக சாஸ்திரத்தில் அடங்கியிருக்கின்றன. பாரதநாட்டு இராஜீக சாஸ்திரத்தில் சோதிடம், வானசாஸ்திரம் காமசாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், முதலிய பல சாஸ்திரங்களும் அடங்கியிருக்கும். மேனாடுகளில் இராஜீக சாஸ்திரஞர்களின் அபிப்பிராயங்களெல்லாம் சித்தாந்த மாவதுபோல, பாரதநாட்டில் அபிப்பிராயங்களெல்லாம் சித்தாந்தமாக ஏற்படவில்லை; இராஜீக சாஸ்திரமானது பாரத நாட்டில் ஒரு சாஸ்திரமாக அநாதிகாலந் தொட்டு பிரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்டதென்பதே கொள்ளப்

படுகிறது. பிறகு, பல சாஸ்திரக்ஞர் அவ்வாறு சாஸ்திரத்தையொட்டிச் சுருக்கியும், காலப்படி மாற்றியும் வந்தனர். பிரஜா ரட்சணத்திற்காகவே இராஜரீக சாஸ்திரம் சிருஷ்டிக்கப்பட்ட தென்பதே பாரதநாட்டுப் பூர்வீகர்களின் துணிபு. பாரதநாட்டில் தோன்றின பல இராஜரீக சாஸ்திரக்ஞர்களுக்குள்ளே வெகு சாமானியமான விஷயங்களில் வித்தியாசம் ஏற்பட்டதேயன்றி, இராஜரீக முறைமையிலாகிலும் இராஜனுக்குரிய தர்மங்களிலாகிலும் யாதொரு வித்தியாசமுமில்லை. அரசு, அரசின்மையைக் கொண்டிருக்க வேண்டுமென்றாகிலும் அவர்களில் எவரும் கூறவில்லை. அவர்களனைவரும் அரசனுள்ள இராஜாங்கத்தையே கூறிவந்தனர். அரசு உண்டானதற்கு முன்னர், அல்லது அரசாங்கம் ஏற்படாததற்கு முன்னர், அல்லது அரசன் நியமிக்கப்படாததற்கு முன்னர், மனிதர்கள் எங்ஙனமிருந்தன ரென்பதை நாம் முதன் முதல் விசாரிப்போம். பாரதநாட்டு சாஸ்திரப்படி நான்கு யுகங்கள் உள. யுகந்தோறும் தர்மம், அனுஷ்டானம், இராஜரீகம், யுத்தமுறை, மனிதசாங்கம் ஆகிய யாவும் வேறுபடுகின்றன. கிருதயுகத்தில் தர்மம் நான்கு பாதங்களையும், திரேதாயுகத்தில் தர்மம் மூன்று பாதங்களையும், துவாபரயுகத்தில் தர்மம் இருபாதங்களையும் கலியுக ஆரம்பத்தில் தர்மம் ஒன்றையும் பின்னர் ஒன்றுமே யில்லாமலிருத்தலையும் கொண்டதென புராணங்கள் கூறுகின்றன. கிருதயுகத்தில் மனிதர்கள் நல்ல தர்மவான்களாகவும், சத்திய நெறியுள்ளவர்களாகவும், யோகம், யக்ஞம் முதலியவைகளை யநுஷ்டித்துவந்தவர்



களாகவும், ஒருவித நிபந்தனையுமின்றி யதேச்சையாக ஒவ்வொருவரும் அவ்வவர் ஸ்வதர்மத்தை யனுஷ்டித்து வந்தவர்களாகவு மிருந்தனரெனக் கூறப்படுகிறது. அந்த யுகத்தில் அரசன் ஒருவனுமில்லை. இராஜ்யமென்பதும் அரசு என்னும் நாமமென்பது மில்லை. இராஜரீக சாஸ்திரமும் ஏற்படவில்லை. தண்டனைக்குரிய நீதி சாஸ்திரமும், தண்டனை செலுத்துபவர்களும் தண்டனைக் குள்ளாகுபவர்களும் இல்லை. ஒவ்வொருவரும் ஸ்வபாவிக தர்மததால் ரட்சித்து வந்தனர். ஒருவன் சுதந்தரத்தில் மற்றொருவன் தலையிடுவதும், ஒருவன் பொருளை மற்றொருவன் களவாடுவதும், ஒருவன் மீது மற்றொருவன் அதிகாரஞ் செலுத்துவதுமான முறை யாதொன்றுமில்லை. வனங்களில் வசிக்கும் மிருகசாதிகளும், பட்சிசாலங்களும் கூட உபத்திரவமின்றி யதேச்சையாக வாழ்ந்துவந்தன. மனிதர்களுடன் தாராளமாக மிருகங்கள் நடமாடுவதும், பட்சிகள் தாராளமாக மனிதர்களுடன் வசிப்பதுமாக அக்காலம் இருந்தது. மனிதனுக்கு மனிதன் ஒருவித வித்தியாசத்தையும் வேறுபாட்டையுமறியான். இயற்கையின் அமைப்பு ஒருநிலைப்பட்டு வெகு அழகாக யிருந்தது. மனிதர்கள் தங்களிஷ்டப்படி புசிப்பதும் களிப்பதும், கடவுள் வழிபாடு செய்வதுமாக யிருந்தனர். மெலியாரை வலியார் அடக்கியாள்வதும், சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை அடக்கியாள்வதும் வறிஞர்களைத் தனவந்தர் வற்புறுத்தி அடக்கியாள்வதும், தாழ்ந்த சாதியினர்களை உயர்ந்த சாதியினர்கள் துன்புறுத்தி யாள்வதும், ஸ்திரீகளைப் புருடர்கள் அடிப்படுத்தி யாள்வதுமான தோற்றங்கள் அக்

காலத்தில் மனிதர்களுக்குள்ளே யில்லை. அங்ஙனம் அவர்கள் அரசு இல்லாமலும் அரசன் இல்லாமலும், அதிகாரமில்லாமலும் ஒருவரை யொருவர் நேசத்தாலும், பக்தியினாலும், தர்மத்தாலும் காப்பாற்றி வந்தனர். அவர்கள் சுதந்தரத்துடன் சமத்துவத்தைக் கொண்டு வாழ்ந்து வருகையில், வரவர காலப் போக்கினால் அவர்களுக்குள்ளே வேற்றுமை யுண்டாயிற்று. 'நான்' 'நீ' என்றும், 'உன்னிலும் நான் உயர்ந்தவன்,' 'என்னிலும் நீ தாழ்ந்தவன்' என்றும் அவர்களுக்கு வேற்றுமை புத்தி யுண்டாயிற்று. தர்மம் குறைந்தது. தர்மத்தால் ஒருவரை யொருவர் ரட்சிக்கப் பட்டு வந்தவர்கள் தைரியத்தை யடைந்தனர். தைரியம் வந்தவுடன் அவர்களுக்கு அவிவேக முண்டாயிற்று. அவிவேகத்தால் பொருளாசை, காமம், குரோதம், மோகம், முதலிய குணங்களுக்கு வசப்பட்டார்கள். அறிவு அழிந்தது. தர்மக் குறைவாலும் அறிவின் குறைவாலும், மோகத்திற்கு வசப்பட்ட அவர்கள் யாவரும் தம்மிடமில்லாத பொருளை யடைய வேண்டுமென்னும் லோப முள்ளவர்களானார்கள். விருப்பமுள்ள வஸ்துக்களை யடைய வேண்டுமென்னுங் காமம் லோபத்திற்குள்ளான மனிதர்களைத் தன் வசமாக்கிக் கொண்டது. காமத்திற்குள்ளான அச்சனங்களை ரசமென்னும் போகவிடாய் கைப்பற்றிக் கொண்டது. அவ்விதம் மேன்மேலும் ஆசைபிடித்து அம் மனிதர்கள் யாவரும் இன்னது செய்யத்தக்கது இன்னது செய்யத்தகாத தென்னும் பகுத்தறிவற்றவர்களானார்கள். பேசத்தக்கது பேசத்தகாதது, புசிக்கத்தக்கது புசிக்கத்தகாதது,



குற்றமுள்ளது குற்றமில்லாதது ஆகிய இவையனைத்தையும் கைப்பற்றினார்கள். தர்மமனைத்தும் நாசமடைந்தது. நாசமடைந்த காரணத்தால் இராஜரீக சாஸ்திர முண்டாகி அரசும் அரசனும் அரசுக்கு வேண்டிய அங்கங்களும் அரசனுக்கு வேண்டிய சகாயங்களும் உபாயங்களும் ஆகிய இவைகள் ஏற்பட்டன. தர்ம லோபங்கொண்ட அப்பிரஜைகளை யெல்லாம் ரஞ்சனஞ் செய்த காரணத்தால் ராஜா என்று கூறப்பட்டான். அவனால் பூமி, தர்மம் ஓங்கிச் செழித்துப் பிரசித்தி பெற்ற காரணத்தால் ஸர்துக்கள் இப்பூமிக்குப் பிருதிவி என்று பெயர் வழங்கினார்கள். பிறகு பிரஜைகளினின்றும் வேலைக்காரர்கள், துணைவர்கள், நேசர்கள் புரோஹிதர்கள், மந்திரிகள், ரித்விக்குகள், ஆசாரியர்கள் ஆகிய இவர்கள் ஏற்பட்டார்கள். பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதிகளென நான்கு சாதிகளுமுண்டாயின. ஆதியில் தர்மத்தால் ஒருவருக்கொருவர் காப்பாற்றிவந்த நிலைமை நீங்கி, வேற்றுமை யுண்டான மனித சாங்கத்தில் அரசும் அரசனும், அரசனுக்கு வேண்டிய குழுவினர்களும் ஏற்பட்டவுடன், அக்கூட்டத்தினின்றும் யக்ஞதான தர்மஞ்செய்யும் ஜாதியென்றும், துன்பத்தை நீக்கி ரட்சித்த காரணத்தால் பாகுபலங் கொண்ட ஜாதியென்றும், வாணிகமும் கோரட்சணையும் விவசாயமும் செய்யும் ஜாதியென்றும், ஊழியம் செய்யும் சாதியென்றும் நான்கு வகை சாதிகள் உண்டாயினர். அங்ஙனம் அவ்வாதி மனிதசாங்கத்தினின்றும் நால்வகை சாதிகள் ஏற்பட்டும், அவர்களுக்குள்ளே உயர்வு தாழ்வு என்பது வெகு நாள் வரை

இல்லாமலிருந்து கடைசியாக வரவர வித்தியாசம் ஏற்பட்டது. இந்த நால்வகை மனித சாக்கத்தை மேனாட்டு முறைப்படி முதல் சாங்கமாகிய பிராம்மண வகுப்பாட்சி (Oligarchy) என்றும், இரண்டாவது சாங்கமாகிய க்ஷத்திரிய வகுப்பை பிரபுத்துவம் (Aristocracy) என்றும், மூன்றாவது சாங்கமாகிய வைசிய வகுப்பை தனாதிபத்தியம் (Timocracy) என்றும், நான்காவது சாங்கமாகிய சூத்திர வகுப்பை வம்பராதிக்கம் அல்லது கும்பாட்சி (Mobacracy or Ochlocracy) என்றும் கூறலாம். மேற்கூறிய நால்வகை வகுப்பும் ஒன்று சேர்ந்து செலுத்தும் ஆட்சிக்கு பிரஜாதிபத்யம் (Democracy) என்னலாம். ஆகவே, பாரதநாட்டில் அரசு உண்டான நாள் முதல், அரசன் ஏற்பட்ட காலம் முதல் அரசாங்கமானது பிரபுத்துவ முறையாகவிருந்து வந்ததென எளிதில் ஊகிக்கலாம். ஆனால் மேனாட்டு பிரபுத்துவ ஆதிக்கத்திற்கும் பாரத நாட்டு பிரபுத்துவ ஆட்சி முறைக்கும் வித்தியாசமுண்டு. அரசனை அபிஷேகஞ்செய்வது ஒன்றே அரசுக்கு மிக முக்கியமானது. அராஜகமான ராஜ்யத்தில் தர்மம் நிலை பெறாது. ஜனங்களும் ஒருவரையொருவர் பட்சிப்பார்கள். அரசனும் வீரர்களுமில்லாத ஒரு இராஜ்ஜியத்தை ஆளும் எண்ணத்துடன் மிகப் பலசாலியான ஒருவன் ஒருகால் வரத்தொடங்கினால் அதில் இருப்பவர்கள் அவனை எதிர்கொண்டு ஆராதிப்பது மிக நல்லது எனக் கூறப்படுவதால் பலாத்காரத்தைக் கொண்டவன் அரசனாவானென்பது தெரிசனமாகிறது. பலாத்காரத்தால் அரசு உண்டாகுமென்று மேனாட்டு இராஜதந்தி



ரிகளாற் கூறினது கண்டு பொருந்தும். பாரத நாட்டில் அநாதிகாலமாக ஏற்பட்ட அரசு யதேச்சாதிபத்ய மாகவே யிருக்கிறது. யதேச்சாதிபத்யம் என்னுஞ் சொல் மேனாடுகளில் வழங்குவது போலன்று. யதேச்யாதிபதி சாதாரணமாக மேனாடுகளில் கொடுங்கோன் மன்னனாகயிருப்பது போல பாரத நாட்டில் இல்லை. பாரத நாட்டிலுள்ள யதேச்சாதிபத்யத்தைச் சேர்ந்த அரசனுக்கு சர்வசுதந்தர மிருந்தபோதிலும், அவனுக்குரிய கடமைகளைப் பிரமாணமாக திட்டப்படுத்தினமையால், அவன் அப்பிரமாணத்திற்குப் புறம்பாகப்போக முடியாது. அரசன் இராஜரீக சாஸ்திரங்களின் நிபந்தனைக்கும், அறிஞர்களின் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டு பிரஜாபரிபாலனஞ் செய்வதால், அவன், தற்காலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தைப்போன்ற நிர்ணய இராஜ்ஜியாதிபதி எனக்கூறலாம்; அவனுடைய அரசுக்கும் நிர்ணய இராஜ்ஜியாதிபத்யம் எனக் கூறலாம். பின்னர், பண்டை அரசு பிரஜாதிபத்ய முறைமையையே கொண்டிருந்ததென்றும், அரசன் அப்பிரஜா முகத்திற்குப் பிரதிநிதியாக் யிருந்தானென்றும், அரசனுடைய நியமனம், வீழ்ச்சியாவும் பிரஜைகளின் ஆதீனத்திலேயே யிருந்தன வென்றும் கூறப்படுகிறது. பூர்வம் பகவான் தேவர்களுடைய இஷ்டப்படி பூமியை யரசாள விரஜஸ் என்பவனை மானஸபுத்திரராக அவதரித்தார். அவன் அரசாள இஷ்டப்படாமல் சந்நியாஸத்திலேயே மனதைச் செலுத்தினான். அவனுக்கு கீர்த்திமான் என்னும் ஒரு பிள்ளையுண்டு. அவனும் அப்படியே ஞானத்தில் புத்தியைச் செலுத்தினான். பிறகு கீர்த்திமானுக்

குப் புத்திரரான கர்த்தமரும் அங்ஙனமே தன் புத்தியைச் செலுத்தினர். கர்த்தமருடைய புத்திரன் அனங்கன் இராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டு பிரஜைகளை ரட்சித்துவந்தான். அவனுக்கு அதிபலன் பிறந்து, அவனும் பிரஜைகளை ரட்சித்துவந்தான். அதிபலனுக்கு வேனன் பிறந்தான். அவன் ராகத்வேஷங்களுக்கு வசப்பட்டு பிரஜைகளிடம் தர்மமின்றி நடந்தான். அவனைத் தர்மமறிந்த ரிஷிக்கூட்டங்கள் மந்திரபலத்தால் கொன்றனர். அவ்வேனனிடமிருந்து ரிஷிகளின் மந்திரசக்தியால் ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்குப் பெயர் பிருது. பிறந்த பிருது ரிஷிக்கூட்டங்களைப்பார்த்து உங்களுடைய சகாயம் எனக்கு இருக்குமானால் நான் இந்த பார்த ராஜ்யத்தையாண்டு தர்மத்தை ரட்சிப்பேன் என்றான். தவிர, பூர்வம் அரசனில்லாக் காரணத்தால் மனிதர்கள் யாவரும் ஒன்றுகூடி பிரம்ம தேவரிடஞ் சென்று, பகவானே! அரசனில்லாத காரணத்தால் நாசமடைகிறோம். எங்களைப் பரிபாலிக்கத்தக்க அரசனை அளிப்பீராகில் நாங்கள் யாவரும் அவனை அங்கீகரிக்கிறோம் என்று வேண்டிக் கொள்ள, பிரம்மதேவர் மனுவை அவர்களுக்கு அரசனாகயிருக்கும்படி கட்டளையிட்டார். மனு சந்தோஷமில்லாமல் 'இராஜ்யத்தையாண்டு வருவது மிகக் கடினம்; இக்காரியத்தில் எனக்குப் பயமுண்டாகிறது' என்று பிரஜைகளைப்பார்த்துக் கூறினர். இவ்விதஞ் சொன்ன மனுவை நோக்கிப் பிரஜைகள் சொல்லத் தொடங்கினர்கள். 'ஓ! மனுவே! நீர் பயப்படவேண்டாம். நாங்கள் உமக்கு வேண்டிய தனத்தை விர்த்திசெய்கிறோம். பசுக்களிலும்



பொன்னிலும் ஐம்பதிலொன்றையும், தான்யத்தில் பத்தில் ஒன்றையும் கோசத்தைப் (பொக்கசம்) பெருகச் செய்வதற்காகக் கொடுக்கிறோம். இந்திரனுடன் தேவர்கள் தொடர்வது போல எங்களில் பிரதான மனிதர்கள் ஆயுதத்தையும் வாகனத்தையும் கொண்டு உம்முடன் தொடர்ந்து வருவார்கள். ராஜரே! இவ்விதம் பிறர் எதிர்க்கத்தகாத பலம் பெற்று பிரதாபத்துடன் எங்கள் யாவரையும் சுகமாகவாழச் செய்யும். உம்மால் நன்கு பாதுகாக்கப் பட்ட நாங்கள் செய்யும் எவ்வித தர்மத்திலும் நாலிலொருபாகம் உம்மைச் சேரட்டும். அரசரே! சிரமமின்றிச் சேரும் இவ்விதமான தர்மத்தால் பெருமையுடன் அரசராக விளங்கி, சத்துருக்களை வெல்லப்புறப்பட்டு அவர்களின் கொழுப்பை யடக்கி எப்பொழுதும் எங்களுக்குத் தர்மத்தை யுண்டுபண்ணும்' என்று சொல்லினர். இதை யோசிக்குமிடத்து பூர்வமிருந்த ரிஷிக்கூட்டங்களோ மனித சமூக சாங்கமென்றும் அச்சமூக சாங்கத்தினாலேயே அரசன் அங்கீகரிக்கப் பட்டானென்றும் அங்ஙனம் அங்கீகரிக்கப் பட்ட அரசன் அச்சமூகத்தின் தலைவனையே கருதினானென்றும் தெரியவருகிறது. பிறகு மனு நியமனத்தால் பிரஜைகளின் வார்த்தைகளினின்றும் மேனாட்டார், அன்னோன்னிய வாழ்க்கையின் ஒப்பந்தக் கோட்பாடு (Theory of Social Contract) என்னும் முறையால் அரசும் அரசனும் உண்டாயிற்றெனக் கூறுவதற்கிணங்கி, ஓர் பலமான ஒப்பந்தம் பிரஜைகளுக்கும் அரசனுக்கும் உண்டாயிற்றென்றும், 'அந்த ஒப்பந்தம் கேவலம் பொருளையும் வஸ்துவையும் மட்டும் சேர்ந்தி

ராமல் மேன்மையான தர்மத்தையும் சேர்ந்திருக்கிற
தென்றும் நன்கு தெரியவருகிறது. மற்றும், அரசன்
அச்சமூக சாங்கத்திற்குப் புறம்பானவனாகாமல், அச்
சமூகத்திற்கு ஓர் உறுப்பாய் இருக்கிறான். பிரஜை
கள் அரசனைத் தம் முதல் சரீரமாகவும், அரசன் பிர
ஜைகளைத் தன் ஒப்பற்ற சரீரமாகவும் பாவிக்க வேண்
டும் என்பது மகாபாரதத்திற் கூறப்படுகிறது. * தவிர,
‘அரசர்களுக்கு மனிதர்களின் சேர்க்கையொன்றே
சோகமின்றிப் பெரிய சந்தோஷத்திற்குக் காரணமா
கும். சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட பூமி, ஜலம், பாஷா
ணம், காடு, மலை, மனிதர்கள் என்னும் அரசர்களுக்குரிய
அறுவகை அரண்களுள் மனிதர்கள் என்னும் அரணா
னது விரோதிகள் வெல்லத்தகாததாகும்! என்று யுதிஷ்
டிரருக்குப் பூர்வம் பீஷ்மர் கூறியருளினார். இத்தகைய
சித்தாந்தங்களை யோசிக்குமிடத்து பாரத நாட்டில்
பூர்வமிருந்து உண்டான அரச பிரஜாபத்ய முறையி
லேயே ஏற்பட்டும், நிர்ணயிக்கப்பட்ட பிரமாணங்க
ளால் கட்டுப்பட்டும் வந்ததாகத் தெரியவருகிறது.
மேனாடுகளில் பற்பல நாமங்களால் அழைக்கப்படும்
அரசுகள்போல பாரத நாட்டில் இல்லையாயினும், செங்
கோன்மை கொடுங்கோன்மை என்னும் இருவகை மட்
டும் இருந்தன. அரசனில்லாத அரசு பாரத நாட்டில்
கிடையாது. மேனாடுகளில் குடியரசு அல்லது பிர
ஜாதிபத்யம் என்று வழங்கிவரும் பிரான்ஸ, அமெரிக்
கா ஐக்கிய அரசாங்கம் இவைகளிலும் அரசன் என்
னும் பெயரைக் கொண்டு ஒருவன் இல்லையாயினும் அரச
னுடைய ஸ்தானத்தில் ஒருவன் தலைவன் (President)



என நியமிக்கப்பட்டு வருகிறான். ஆகவே, ஒவ்வொரு
அரசும் நேராகவோ அல்லது மறைவாகவோ, அந்தரங்
கமாகவோ அல்லது பகிரங்கமாகவோ அரசனையாகிலும்
அல்லது அரசனைப்போன்ற தலைவனையாகிலும் கொண்
டிருக்கிறது பிரத்யட்சம். மேனாடுகளில் வழங்கும் நிர்
ணய இராஜ்யாதிபத்யத்தில் அரசனுக்கு சுதந்தரமற்ற
தன்மையிருப்பது போல, பூர்வம் பாரத நாட்டிலிருந்த
அரசர்களுக்கு சுதந்தரமில்லாமலில்லை. பாரத மன்னர்
களுக்கு சுதந்தரம் இருந்து வந்தது. ஆனால், அச்சுதந்
தரம், இராஜ தர்மத்தை யனுசரித்திருக்க வேண்டு
மென்றும் நிர்ணயம் மட்டும் இருந்தது. இராஜரீக சாஸ்
திரத்தில் அரசனுக்கு ஏற்பட்ட கடமை, விதி முதலிய
வைகளுக்கு அநீதமாகச் செய்ய இடங்கொடுக்கவில்லை.
அரசனுக்கு விதி யொன்றைத் திட்டப்படுத்தின பிரகா
ரம், அரசனைச் சேர்ந்த குழுவினர்களுக்கும் பிரஜை
களுக்கும் தனித்தனி விதிகள் அந்த சாஸ்திரத்தில் ஏற்
பட்டிருந்தன. ஆகையால், பூர்வம் இருந்த அரசுகளும்
அரசர்களும், மனிதர்களும் பிரமாணத்தால் கட்டுப்பட்
டுத் தம்தம் கடமையைச் செய்து வந்தனரென்பது
நன்கு விளங்கும். மற்றும், பூர்வம் அரசர்களுக்கு
பிரஜைகளாலேயே பட்டாபிஷேகம் நடந்து வந்ததாக
வுந் தெரியவருகிறது. உதாரணமாக, அயோத்தியை
யாண்ட தசரத சக்கரவர்த்தி மூப்படைந்து, தன் அர
சைத் தன்மகன் இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்
வதற்கு, அயோத்தியைச் சேர்ந்த நகரங்களிலுள்ள
வித்வான்கள், கிராமங்களிலுள்ள சாமான்ய ஜனங்கள்
யாவரும் வரவழைக்கப்பட்டு அவர்களுடைய சம்மதத்

தைக்கேட்டதாகவுந் தெரியவருகிறது. மற்றும், பாரதப் போர் முடிந்து யுதிஷ்டிரன் ஹஸ்தினபு ராஜ்யத்தை யாள, குடிகளுடைய சம்மதத்தையும் வித்வான்களுடைய சம்மதத்தையும், ரிஷிக்கூட்டங்களினுடைய சம்மதத்தையும் பெற்ற பின்னரே பட்டாபிஷேகம் செய்துகொண்டான் என்பதாகவுந் தெரியவருகிறது. இவை போன்ற பல உதாரணங்களால், பூர்வமிருந்த பாரத அரசர்கள் பிரஜைகளின் சம்மதம் பெற்றே காரியங்களைச் செய்து வந்தனரென்பது நன்கு புலனாகும். இன்னும் அரசனுடைய கடமையும் அவனுக்கு ஏற்பட்ட விதியும் என்ன என்பதையும் சற்று ஆராய்வோம். அரசன், பூமியை செழிக்கச் செய்வதும் ராஜசூய முதலிய யாகங்களைச் செய்வதும், நிலை பெறுவதும் பிரஜைகளைப் பரிபாலிப்பதும், எல்லா பிராணிகளிடத்திலும் தயை செய்வதும், யுத்தத்தில் சரீரத்தைவிடுவதும் தன் கடமையான சிறந்த தர்மமெனத்தெரிந்து கொள்ள வேண்டும். உலகத்தின் தருமத்திற்குக் காரணம் அரசனே. மரியாதை யற்றதும், பிறர் பொருளில் ஆசையுள்ளதுமான உலகமனைத்தையும் தர்மத்தால் அத்திலெறச்செய்து தானும் பரிசுத்தனாக விளங்குகிறான். அரசன் காப்பாற்றாவிடில் பிரஜைகளில் பலஹீனர்களின் திரவியங்களைப் பலசாலிகள் அபகரிப்பது மன்றி, எதிர்த்து வருபவர்களையும் கொன்று விடுவார்கள். அரசன் பரிபாலியாவிடில் எவரும் எனதென்னும் ஸ்வதந்தரத்தை வகிக்கமுடியாது. அரசன் பரிபாலியாவிடில் ராஜ்யம் பலவிதமாக அழியும்; வர்த்தகமும் கிருஷியும் நடைபெறா; எவ்வித வரப்புகளும் மாறிவிடும். அரசன் எப்பொழு



தும் முதலில் தன்னையும் சத்துருக்களையும் ஜயிக்கவேண்டும். கோட்டைகள், எல்லை, பட்டணத்தின் உபவனம் உத்யானவனம், ஜனங்கள் கூடுமிடங்கள், இரகசியமான பலவிடங்கள், நகரின்நடு, அரண்மனை இந்தவிடங்களில் காக்க தகுதியுள்ள ஆள்களை வைக்கவேண்டும். நன்றாகப் பரீக்ஷிக்கப் பட்டவர்களும் புத்திமான்களும், பசிதாக சிரமங்களைப் பொறுப்பவர்களுமான புருஷர்களை இரகசிய தூதர்களாக அரசன் நியமிக்கவேண்டும். அளவற்ற அறிவுள்ள அரசன் பிரஜைகளைக் காக்க வேண்டி அந்தப் பிரஜைகளிடமிருந்து ஆறில் ஒரு பாகம் கப்பத்தையும் வாங்கவேண்டும். பிரஜைகளைச் சந்தேகமின்றித் தன் மக்களைப்போலப் பார்க்கவேண்டும். வியவகாரங்களைப் பார்க்கும்போது எந்த மனிதனிடமும் அரசன் சிநேக புத்தி பாராட்டக் கூடாது. அரசன் எல்லா அருத்தங்களையும் அறிந்த அறிஞர்களை வியவகாரங்களை விசாரிப்பதற்கு ஏற்படுத்த வேண்டும். இராஜ்யம் அந்த வியவகாரங்களில் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கிறது. தங்கமும் ரத்தினமும் எடுக்கு மிடத்திலும் உப்பளத்திலும் சுங்கச்சாவடியிலும் தானியங்கள் முதலியவைகள் விற்குமிடத்திலும் ஏற்றுமதி செய்யுமிடத்திலும் யானைக் கூட்டமுள்ள விடத்திலும் அமைச்சர்களை அல்லது நம்பிக்கை யுள்ளவர்களும் ஹிதஞ் செய்யக் கூடியவர்களுமான மனிதர்களை அரசன் நியமிக்கவேண்டும். கிணறு முதலிய நீர் நிலைகளை வெட்டச்செய்ய வேண்டும்; தண்ணீர் விருப்ப முள்ள முன்னோர்களால் வெட்டப் பட்ட கிணறுகளை அப்படியே சுத்தஞ்செய்ய வேண்டும். புற்கூரையுள்ள வீடுகளைச் சேற்றினால் பூச

வேண்டும். சித்திரைமாதத்தில் அக்கினி பயமில்லாதிருக்கவேண்டி அப்புற்களை முன்னதாகவே எடுத்துவிட வேண்டும். அரசன் ரட்சிக்க வேண்டிய ஏழு அங்கங்களான அமைச்சர்கள், கோசம், தண்டம், நண்பர்கள், நகரம் கிராமம் இவைகளைத் தன்னுருவமாகக்கொண்ட இராஜ்யத்தை அரசன் விசேஷ முயற்சியுடன் காத்துவர வேண்டும். அரசன் தர்மப்படி காரியங்களைச் செய்து பூமியையும் நகரிலுள்ள சனங்களையும் நன்கு பரிபாலித்துப் பரலோகத்தில் சுகமாக விளங்குவான். பிரஜைகளை நன்கு பரிபாலித்து வரும் அரசன் தர்மங்களையெல்லாம் செய்தவனாவான். லோபிகளையும் மூர்க்கர்களையும் காரியங்களில் ஏவாமல், அர்த்த காமங்களில் ஆசையற்றவர்களும் நல்ல அறிவுள்ளவர்களுமான யோக்யர்களை எல்லாக் காரியங்களிலும் நியமிக்க வேண்டும். காரியங்களில் சாமர்த்தியமில்லாத அவிவேகிக்குக் காரியங்களில் அதிகாரம் கொடுத்தால் அவன் காமக் குரோதங்களையடைந்து தனதிஷ்டசித்திக்காகத் தப்பு வழியிற் சென்று பிரஜைகளைத் துன்பப்படுத்துவான். அவிவேகத்தால் பிரஜைகளை சாஸ்திரங்களில் கூறப்படாத வரிகளால் துன்பப்படுத்தும் அரசன் அப்பொருள் மூலமாகவே, தானே தனக்குத் துன்பத்தைச் செய்து கொள்ளுவான். பாலை விரும்பிய மனிதன் பசுவின் மடியை அறுத்தால் பாலை அடைய முடியாதது போல நீதிக்கு விரோதமாகப் பிடிக்கப்படும் இராஜ்யம் வளர்ச்சியடையாது. அரசனால் நன்கு பரிபாலிக்கப்படும் பூமியானது, திருப்தியுள்ள தாயார் பாலைப்பெருகச் செய்வதுபோலத் தானியத்தையும் பொருளையும் சேர்த்தவர்



களிடமிருந்தும் பிறர்களிடமிருந்தும் எப்பொழுதும் பெருகச் செய்யும். பிரஜைகளைக் காப்பதும் பிராணிகளிடம் பெருங் கருணை புரிவதும் அரசர்களுக்கு மிக்க உத்தம தர்மமாகும். ஜனங்கள் யாவரையும் எப்பொழுதும் அரசன் தருமப்படியும் விடாமுயற்சியுடனும் பரிபாலிப்பதுடன், தர்மமுள்ள ஜனங்களைத் தானத்தால் பூஜிக்கவும் வேண்டும். ஏழைகளுக்கும் கதியற்றவர்களுக்கும் கிழவர்களுக்கும், பதியிழந்த ஸ்திரீகளுக்கும் யோக க்ஷேமத்தையும் ஜீவனத்தையும் எப்பொழுதும் செய்விக்க வேண்டும். வைஸ்யர்களுக்கு நன்மொழியையும் ரட்சணையையும் தானத்தையும் அடிக்கடி அவர்களின் இருப்பிடத்தையும் நிலம் முதலியவற்றின் பிரிவையும் வேண்டியவற்றையும் செய்து கொடுக்கவேண்டும். வைஸ்யர்களிடம் எப்பொழுதும் பயனைக் கொடுத்துவர வேண்டும். அவர்கள் ராஜ்யத்தையும் தொழிலையும் அப்படியே கிருஷியையும் விர்த்தி செய்வார்கள். கிருஷியையும் பசுக்காத்தலையும் வர்த்தகத்தையும் செய்யும் மனிதன் திருட்டுப்பயத்தாலும் அதிகாரிகளின் பயத்தாலும் சிறிது சந்தேகத்தை அடைவானாகில் அதனால் அரசன் இகழ்ச்சியுள்ளவனாவான். அரசன் தருமத்திற்காக இருக்கிறானேயல்லாமல், தன் இஷ்டங்களைச் செய்கிறதற்காக இருக்கவில்லை. உலகத்தை ரட்சிப்பவன் அரசன். அவன் தர்மத்தை செய்வானாகில் தெய்வத்தன்மைக்குத் தக்கவனாவான். அவன் அதர்மத்தைச் செய்வானாகில் நரகத்தின் பொருட்டே செல்வான், பிராணிகள் தர்மத்திலிருக்கின்றன. தர்மம் அரசனிடத்திலிருக்கின்றது. ஆகவே, முனிகள்

இரண்டு உலகங்களையும் உத்தேசித்து "இவன் தர்மத்தைக் காப்பவனாயிருப்பான்; இவன் பெரிய நிலைமையையடைந்தவஸ்து" என்று அரசனை உண்டு பண்ணினார்கள். எவனிடம் தர்மம் விளங்குகிறதோ அவனை அரசனாகச் சொல்லுகிறார்கள். காலத்தில் வருஷிக்கும் மேகமும் தர்மத்தைச் செய்யும் அரசனென்னும் சம்பத்தாம் பிரஜைகளைச் சுகமாகப் போஷிக்கும். பலத்திலிருக்கும் அரசன் பலமில்லாத ஜனத்தினிடம் வரி வாங்கக் கூடாது. அரசனுடைய தேசத்தில் அரசனைச் சேர்ந்த பலபுருஷர்கள் எப்பொழுது நீதியின்றி நடக்கிறார்களோ 'அப்பொழுது அஃது அரசனுக்குப் பெரும் பாவமாகும். எப்பொழுது ராஜ்யத்தில் தேச நன்மையையோ அரசனது குணங்களையோ சொல்லிக்கொண்டு முக்கியமான தர்மத்தைச் செய்கிறார்களோ அப்பொழுது அரசன் விருத்தியடைவான். பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள ஜனங்களை அரசன் தன் பந்து சனங்களைப் போலப் பரிபாலிக்க வேண்டும். தர்மந் தெரியாத எந்த அரசன் பலத்தால்மாத்திரம் பிரவிர்த்திக்கிறானோ, அவனிடமிருந்து, அறம் பொருள் இரண்டும் விரைந்து விலகி ஓடும். துஷ்டர்களும் மிக்க பாபிகளுமான மந்திரிகளுள்ளவனும் தர்மத்தைக் கெடுப்பவனுமான அரசன் உலகத்திற்குக் கொல்லத் தக்கவனாவான். மற்றும், அரசன் சகாய முள்ளவனானாலும், சகாய மில்லாதவனானாலும் ராஜ்யத்திற்குவந்து, 'நான் உங்களுக்கு அரசன். எப்பொழுதும் உங்களைப் பாது காத்து வருகிறேன் தர்மப்படி எனக்கு வரியைக்கொடுங்கள்; என்னைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்? என்று சொல்லவேண்டும்.



அவர்களும் (ஜனங்களும்) அங்கு வந்து அவ்விதஞ் சொன்னவனை அரசனாக வரிப்பார்களானால் க்ஷேமமுண்டாகும் என்று பீஷ்மர் யுதிஷ்டிரனுக்குக் கூறினார். தவிர, கூட்டங்கள் (மனித சமூக சாங்கம்) எப்பொழுதும்ஒரே அபிப்பிராயத்தைத் தொடர்ந்தனவாய் அரசன் முயற்சிக்க வேண்டும். ஒற்றுமையாலும் பலத்தாலும் பராக்கிரமத்தாலும் பொருள்களும் அடையப்படும். ஒற்றுமையான நடையுள்ள அவைகளிடம் வெளியிலுள்ளவர்களும் சிநேகத்தைச் செய்வார்கள். உத்தமமான கூட்டங்கள் மிகச் சிறந்த தர்மமுள்ள வியவகாரங்களைச் சாஸ்திரத்தால் உள்ளபடி கண்டு கொண்டு நிலைக்கச் செய்பவைகளாய் வளர்ச்சியடையும். திரவிய முள்ளவைகளும் சௌரிய முள்ளவைகளும் ஆயுத மறிந்தவைகளும் சாஸ்திரங்களின்கரை கண்டவைகளுமான அந்தக் கூட்டங்கள் மிக்க மூடர்களைக் குரூரமான துன்பங்களிலிருந்து மீட்டு வைக்கும். கோபமும் வேற்றுமையும் பயமும் தண்டித்தலும் துன்புறுத்தலும் அடக்குதலும் கொலையுமாகிய நிகழ்ச்சிகள் உடனே கூட்டங்களைச் சத்துரு வசப்படுத்தும். ஆகையால், அரசன் அக்கூட்டத்தலைவர்களை முக்கியமாகப் பூசிக்கவேண்டும். உலகநடை பெரும்பாலும் அவர்களாதீனத்திலேயேயிருக்கிறது. கூட்டத்தலைவர்கள் ஒன்று சேர்ந்து அக்கூட்டத்தின் ஹிதத்தை இரகஸியமாகச் செய்ய வேண்டும்.' அவ்விதமின்றி வேறு விதமாகயிருந்தால் கூட்டம் தனியாகப் பிரிந்து கலைவதுடன் அதன் பொருள்களும் நாசமடையும். 'குலங்களிலுண்டான கலகங்களை அக்குலத்தைச் சேர்ந்த பெரியோர்கள் உபேட்சை செய்

தால் அவை அக்குலத்திற்கு நாசத்தைச் செய்யும். ஆகவே அரசன் உட்பயத்தை ரட்சித்துக்கொள்ள வேண்டும. வெளியிலுள்ளபயம் பலமானதன்று. உட்பயம் உடனே வேர்களையறுக்கும். இராஜ்யமானது பிரஜைகளின் சகாயமில்லாமல் ஆளமுடியாது. சகாயமில்லாமல் எவ்வித பொருள்களும் அடையமுடியா. எப்பொழுதும் அடைந்த பொருள்களை ரட்சிக்கவும் முடியாது. அரசன் தன் இராஜ்ஜியத்திலிருந்தும், பிறராஜ்யத்திலிருந்தும் பொக்கிஷத்தை உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். இராஜ்யத்திற்கு மூலமான தர்மமானது பொக்கிஷத்திலிருந்தன்றோ பெருகுகிறது. ஆகையால் அரசன்பொக்கிஷத்தை உண்டுபண்ணிக் கொள்ளவேண்டும். அதனை ஆதரித்து ரக்ஷிக்கவேண்டும். இரட்சித்துக் கொண்டு உலகத்திற்கு உபகாரஞ்செய்யவேண்டும். கெட்ட ராஜ்யத்தில் சுகமிராது. கெட்டதேசத்தில் ஜீவனமிராது. எவ்விடத்தில் ஜீவனமிருக்கிறதோ அது தேசமாகும். எவன் குடிகளை வருத்தவில்லையோ அவன் அரசனாவான். தர்மமறியாத அரசனுடைய தேசத்திலுள்ள பிரஜைகள் நிக்ரஹத்தை (சிறைச்சாலையை) யடைந்து நாசமடைவார்கள். எவன் நன்றாக பிரஜைகளை ரட்சிக்கவில்லையோ அவன் அரசனென்று பெயருள்ள திருடனாவான். எவன் பிரஜைகளிடம் அன்பு பாராட்டுகிறானோ அவன் உலகத்திற்குப் பிதாவாகிறான். எந்த அரசனுடைய பிரஜைகள் வரியைச் சுமந்தித் துன்பப் படுத்தப் பட்டவர்களும் எப்பொழுதும் பயமுள்ளவர்களுமாய்த் துன்பங்களால் நாசமடைகிறார்களோ அந்த அரசன் அவமானத்தை அடைகிறான். மயிலானது



சரத் காலத்தில் சப்தியாமலிருப்பது போல, அரசன் எப்பொழுதும் மந்திராலோசனையை வெளி விடாமல் காக்க வேண்டும். மயில் இனிமையான குரலும் உடம்பின் அழகும் தன் செய்கையில் சாமர்த்தியமும் பொருந்தியிருப்பதுபோல அரசன் அழகான சொற்களுள்ளவனும் சம்பத்துள்ளவனும் சாஸ்திரங்களில் சமர்த்துள்ளவனாக யிருக்கவேண்டும். நீரருவிகளில் மயில் நாட்டமுள்ளதாயிருப்பது போல, வரவு செலவுகளில் ஜாக்கிரதை யுள்ளவனாயிருக்க வேண்டும். மயிலானது இருக்கிற மரத்திலிருந்து அதிகச் செழுமையுள்ள மரத்துக்குச் செல்வதுபோல உலகிலுள்ள வரவு செலவைக் கண்டு வரவு அதிகமும் செலவு குறைவுமாகவுள்ள கார்யங்களில் செல்லவேண்டும். இங்ஙனம், மகாபாரதத்தில் பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு இராஜ தர்மத்தை யுபதேசித்தார். மற்றும் காமந்தகர், பிரகஸ்பதி, சுக்கிரர் முதலானோரும் பிறகு சாணக்யரும் இராஜரீக சாஸ்திரத்தை யுண்டாக்கினதிலும் இராஜ்ய தர்மத்தையும் அரசனுடைய கடமையையும் பற்றி வெகு விரிவாகக் கூறியிருக்கின்றனர். அரசனுடைய கடமை மிகவும் கடினமையாகக் காணப்படுவதால், அவனுக்குப் பரிபாலன வழியில் மிக்க பொறுப்பிருந்ததாகத் தெரியவருகிறது. பிரஜைகளுக்கும் அனாதிகாலமாக ஏற்பட்டிருந்த தர்ம பிரமாணங்களுக்கும் ஆதின முள்ளவனால் அரசன் அரசை வகித்துவந்தான். பாரத நாட்டில் பூர்வம் சிற்சில மன்னர்கள் அங்குமிங்கும் கொடுங்கோன்மையை வகித்து சுயேச்சாதிபதியாகயிருந்தனரேன்றி, பொதுவாக பாரத மன்னர்கள் பிரஜைகளுக்குட்

பட்டே யிருந்தனரென்பது பிரமாணமாகும். ஆகவே, இந்தியாதேசத்தில் கிறிஸ்து பிறப்புக்கு முன்னர் சாதாரணமாக அரசு யாவும் அநேகமாக அரசனைக்கொண்ட பிரஜாதிபத்யமாகவே யிருந்தனவென்பது நம் துணிபு. தவிர, அரசன் தனக்கும் பக்ஷபாதமில்லாத வியவகாரத்துடன் பிரஜைகளைக் காப்பதற்கும் மந்திராலோசனை சபையை யமைத்து, அதற்கு எல்லா சாதிகளினின்றும் பிரதிநிதிகளைப் பொறுக்கி யெடுத்தானென்றும் தெரிய வருகிறது. வித்தைகளைக் கற்றவர்களும் சமர்த்தர்களும் பிரம்மசர்யத்தை முடித்தவர்களும் பரிசுத்தர்களுமான நான்கு பிராம்மணர்களையும், பலசாலிகளும் ஆயுத பாணிகளுமான பதினெட்டு க்ஷத்திரியர்களையும், நிறைந்த பொருள் உள்ள இருபத்தொரு வைசியர்களையும், வணக்க முள்ளவர்களும் முந்திய காரியங்களில் பரிசுத்தர்களா யிருந்தவர்களுமான மூன்று சூத்திரர்களையும் ஒரு சூதனையும் அமாத்யர்களாகச் செய்ய வேண்டும். இன்னும், நான்கு பிராம்மணர்கள் மூன்று சூத்திரர்கள், ஒரு சூதர் ஆக எட்டு மந்திரிகளின் நடுவில் அரசன் ஆலோசனையைத் நிர்மாணிக்க வேண்டும். இவ்வாறு இருப்பதால் பிரஜைகளின் பிரதிநிதிகளைக் கொண்டே அரசன் அரசைப் பரிபாலித்து வந்தானென்பது நன்கு விளங்கும். அம் மந்திரிகளினுடைய நியமனம் அரசனுடையதா அல்லது பிரஜைகளினுடையதா வென்னும் விஷயம் நன்கு தெரியவில்லையாதலால் அரசனுடையதாகவே யிருக்கலாமென நாம் ஊகிக்கலாம். நிற்க, கிறிஸ்து பிறந்த காலத்திருந்து பாரத மன்னர்கள் பூர்வ இராஜரீக சாஸ்திரத்தை யநுஷ்



டிக்க முயன்றார்களென்றாலும் காலத்தின் மாறுபாட்டினால், பிரஜைகளும் அரசர்களும் தங்கள் தங்கள் ஸ்வதர்மானுஷ்டான நிலைமையினின்றும் வழுவினவர்களாய் இருந்துவந்தனர். அக்காலத்தில் சிற்சில மன்னர்கள் செங்கோன்மையையும் சிற்சில மன்னர்கள் கொடுங்கோன்மையையும் வகித்து வந்தனர். மன்னர்களிற் சிலர் சுயேச்சாதிபத்யம்கொண்டு தன்னரசு செலுத்தி வந்தன ரென்பது மிகையல்ல. பிரஜைகள் தற்கால அரசாங்கங்களில் பற்பல உண்மைகளைப் பெற்றுவருகிறார்களென்றும், பூர்வம் பிரஜைகள் அங்ஙனம் உரிமையுடன் இல்லையென்னும் நவீன இராஜரீக சாஸ்திரஜ்ஞர்கள் ஒருவாறு கூறினபோதிலும், பூர்வம் அரசாண்ட மன்னர்களின் கீழிருந்த பிரஜைகள் தற்கால சுதந்தர மன்னர்களின் கீழ்வாழும் உரிமைப் பிரஜைகள் பஞ்சத்தாலும் பிணியாலும் வறுமையாலும் சிறைவாசத்தாலும் கஷ்டப்படுவது போல கஷ்டப்படவில்லை. அவர்கள் நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையுங்கொண்டு திருப்தியுடனிருந்து வந்தனர். கிராமங்களிலும் நகரங்களிலும் பட்டணங்களிலும் பிரஜைகள் வர்த்தகத்தையும் கிருஷியையும் விர்த்தி செய்துவந்தனர். பூர்வம் கிராமங்கள் உண்டான விதமும் கிராமங்களின் பரிபாலன முறையையும் சற்று ஆராய்வோம். அரசன் கிராமங்களைப் புதிது புதிதாக அமைக்கவேண்டும். புதிய புதிய கிராமங்களில் குடிவளம் பெருகச் செய்யவேண்டும். அரசன் தன் தேசத்தில் மிகுந்த ஜனத்தொகையுள்ள நகரங்களினின்றும் பட்டணங்களினின்றும் பிரஜைகளை அக்கிராமங்களில் குடியேற்ற

வேண்டும். மற்றும் அன்னிய தேசங்களினின்றும் ஜனங்களை குடிபுகச் செய்யவேண்டும். கிராமங்கள் குறைந்த பட்சம் நூறு பெருந்தனக்காரர்களின் குடும்பங்களையும் ஐந்நூறு குடியானவர்களுடைய குடும்பங்களையும் ஒன்று அல்லது இரண்டு குரோசம் மைல் எல்லையையும் கொண்டிருக்கும். கிராம எல்லைகள் நதியையாவது மலையையாவது காட்டையாவது தோப்பையாவது அரசமரத்தையாவது கற்றாலையாவது கொண்டிருக்கும். எண்ணூறு கிராமங்களுக்கு மத்தியில் ஒரு சிறு கோட்டை (ஸ்தானீயம்) இருக்கவேண்டும்; நானூறு கிராமங்களின் மத்தியில் துரோண முகம் (தலைப்பட்டினம்) இருக்கவேண்டும்; இருநூறு கிராமங்களின் மத்தியில் கார்வாதிகம் இருக்கவேண்டும்; பத்து கிராமங்களின் மத்தியில் சங்கிரகணம் இருக்கவேண்டும். நிலங்களைத் தாராளமாக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் விடவேண்டும். விடப்பட்ட நிலங்கள் சாகுபடியாகாமல் இருந்தால் அதைப்பறி முதல் செய்து இன்னொருவருக்குக் கொடுக்கப்பட வேண்டும். என்றிவ்வாறு கிராம அமைப்பு உண்டாயிற்றென கூறப்படுகிறது. தவிர அக்கிராமங்களின் பரிபாலன முறையில் அரசன் கிராமத்திற்கு ஒருதலைவனை நியமிக்க வேண்டும். பத்து கிராமங்களுக்கு ஓர் அதிபதியையும் இருபதுக் கொருவரையும் முப்பதுக் கொருவரையும் நூறு கிராமங்களுக் கொருவரையும் ஆயிரம் கிராமங்களுக்கு ஓர் அதிபதியையும் நியமிக்க வேண்டும். கிராமத் தலைவன் கிராமத்திலுள்ள விஷயங்களையும் அதிலுள்ள



தோஷங்களையும் கவனிக்கவேண்டும். கவனித்த விஷயங்களைப் பத்துகிராமங்களுக்குப் பதியாயிருப்பவன் இருபது கிராமங்களுக்குப் பதியாயிருப்பவனிடமும், இவன் முப்பது கிராமங்களுக்குப் பதியாயிருப்பவனிடமும் அவன் யாவற்றையும் நூறுகிராமங்களுக்குப் பதியாயிருப்பவனிடமும் அறிவிக்கவேண்டும். கிராமாதிகாரியானவன் கிராமத்திலுள்ள புசிக்கத்தக்கவைகளைப் புசிக்கவேண்டும். பத்துகிராமங்களுக்குத் தலைவனாயிருப்பவன் அந்த கிராமங்களிலுண்டாகும் பொருள்களால் போஷிக்கத் தக்கவன். இராஜ்யத்திலுள்ள கிராமமானது அரசனுடைய அதிகாரியின் ஆதீனமாயிருக்கும். ஆயிரம் கிராமங்களுக்குப் பதியாயிருப்பவன் இராஜ்யாதிகாரியுடன் சேர்ந்து, தான்யம், பொருள் இவைகளின் போகங்களுடன் சிறிய பட்டணத்தை அனுபவிக்கத் தக்கவனாவான் என்றிவ்வாறு பூர்வ இராஜநீதி சாஸ்திரக்ஞர்கள் கூறினர். கிராம சமுதாய அமைப்பு இப்பாரத நாட்டில் அநாதிகாலமாக சுதந்தரத்துடன் ஏற்பட்டுவந்தது. கிறிஸ்து பிறப்புக்குப் பின்னர் வெகுகாலமளவும், மொகலாய அரசாட்சி காலத்திலும் பாரதநாட்டு கிராம அமைப்பும் கிராம பரிபாலன முறைமையும் யாதொரு விசேஷ மாறுதலின்றி அவ்வண்ணமே யிருந்தது. பிரிட்டிஷ் துரைத்தனத்தார் வந்த நாள் தொட்டே பூர்வமிருந்த கிராம சமுதாய அமைப்பு, கிராமபரிபாலன முறை யாவும் சங்கிலிக் கோர்வை போலிருந்தது அழிந்து, அறுபட்ட சங்கிலிபோல் துக்கடி துக்கடியாய்ப் போயின. மற்றும், பூர்வ அரசாங்கங்களின் பரிபாலன

முறையை இரண்டாம் பாகத்திற் காண்க. இந்துக்களுடைய அரசும் அரசனும் பூர்வம் இவ்வண்ணம் இருந்தது போலவே முகம்மதிய அரசும் இருந்ததா வென்பதையும் சற்று கவனிப்போம். நம் பாரத நாட்டில் முகம்மதிய அரசாட்சி சில நூற்றாண்டுகள் வரை நடந்து வந்தமையாலும், இனி பாரதநாட்டின் வருங்கால அரசாட்சிக்கு முகம்மதியர்களும் இந்துக்களைப் போலவே உரிமையுள்ளவர்களானதினாலும் அவர்களுடைய அரசையும் அரசனையும், இராஜரீக சாஸ்திரங்களையும் பற்றி ஒருவாறு ஆராய்வோம்.

# 10. முஸ்லிம் அரசும் சமூகமும்

முஸ்லிம் அரசையும் சமூகத்தையும் பற்றி நம் பாரத நாட்டில் வெகுகாலமாகப் பலருக்கு ஒன்றும் தெரியாதிருந்தும், இந்தியாவில் 'மொகலாய அரசாட்சி காலத்தில் ஏற்பட்ட அரசாங்க அமைப்பின் வழியாக ஒரு சிறிது அவைகளின் தொன்மையை யறிய அவகாச மேற்பட்டது. என்றாலும், முஸ்லிம் அரசின் பூர்வ அமைப்பையும் சமூகசாங்கத்தின் ஏற்றத்தாழ்ச்சிகளையும் பற்றி தற்பொழுது பாரத நாட்டிலுள்ள இந்து முஸ்லிம் பலருக்கு ஒன்றுமே தெரியாது. ஐரோப்பா கண்டத்தில் ரோம சாம்ராஜ்யம் சிறந்த அதிகாரத்தை நடத்தி வந்தற்கு முன்னரே பூர்வமுஸ்லிம்கள் அரேபியா, பாரஸீகம், ஈராக், ஸிரியா, எகிப்து முதலிய பல விடங்களில் சிறு சிறு கூட்டத்தினராக விருந்து நாடோடிகளாக யிருந்து வந்தனர். குதிரைகளின்மீதும், கோவேறுக் கழுதைகளின்மீதும் ஒட்டகங்களின்மீதும் ஏறிச் சென்று மலைமலையாகத் திரிந்துவந்தனர். அவர்களுக்குள்ளே பலமுள்ளவனே பெரியவனாகவும் தலைவனாகவுமிருந்துவந்தான். என்றாலும், அச்சிறு கூட்டத்தார் தங்கள் உணவு பொருள்களையும், மற்ற சாமான்களையும் பொதுவாகவே ஒருவருக்கொருவர் வித்தியாசமின்றி அனுபவித்து வந்தனர். ஒருவன் பல ஸ்திரீகளைச் சேர்ந்து வாழவும், பலமாதர்கள் ஒரு

வனைச் சேர்ந்து வாழவுமான நிலைமையிலேயே அவர்கள் இருந்துவந்தனர். மத்திய ஆசியா கண்டத்தின் பெரும் பாகத்தையும், ஆப்பிரிக்கா கண்டத்தின் வடபாகத்தையும், ஐரோப்பாகண்டத்தின் ஒருமூலையுமே அவர்கள் தங்கள் நடமாடும் இடங்களாக வைத்துக்கொண்டனர். ஐரோப்பா கண்டத்திலிருந்து சிறு கூட்டத்தார்களும் ஆசியா கண்டத்திற்கு வந்தனரென்றும் கூறப்படுகிறது. அக் கூட்டத்தார் வரவர பெருகி வியவஸ்தைகளை யுண்டாக்கத்தலைப்பட்டனர். ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாருடன் சண்டை செய்து துரத்துவதும், தோல்வியடைந்த கூட்டத்தார் வெற்றியடைந்த கூட்டத்தாருக்குப் பணிவிடை செய்வதுமாகப் பூர்வம் இருந்து வந்தது. கூட்டத்தைச் சேர்ந்தமனிதர்கள் பொதுவாகத் தங்கள் சுதந்தரங்களை யனுபவித்திருந்தபோதிலும் அக் கூட்டத்தாரின் தலைவனுக்கு ஆதீனப்பட்டிருந்தே வந்தனர். அவன் தன்னிஷ்டப்படி அக்கூட்டத்தினரை நடத்தி வந்தான். அவனுடைய அதிகாரத்தைக் கட்டுப் படுத்தக்கூடிய பிரமாணமாகிலும், மத நிபந்தனையாகிலும் கிடையாது. அவனுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, அவனிலும் மேம்பட்ட பலமுள்ளவன் ஒருவனாலேயேயாகும். அங்ஙனம் கட்டுப்பட்ட பிறகு பழைய அதிகாரத்தை நடத்தி வந்தவன் புதிய அதிகாரத்தைக்கொண்ட பலமுள்ளவனுக்கு அடங்கி மற்ற மனிதர்களைப் போலவே நடப்பான். சிற்சில காலங்களில் வெற்றியடைந்த பலமுள்ளவனை மீண்டும் தோல்வியடையச்செய்ய, அத்தோல்வி



யடைந்தவன் தனக்கு வேண்டிய மனிதர்களுடன் அக்கூட்டத்தினின்றும் பிரிந்து, தனிக்கூட்டமொன்றைக்கொண்டு, நாளடைவில் புதிய புதிய மனிதர்களைச் சேர்த்துக் கூட்டத்தைப் பெருக்குவான். இங்ஙனம் அக்கூட்டங்கள் அடிக்கடி மாறுபாட்டையும் பரிணாமத்தையுங்கொண்டு கடைசியாக பலமான இரண்டொரு கூட்டங்களாயின. சிறு சிறு கூட்டங்கள் பெரிய கூட்டங்களாகச் சேர்ந்தன. அக்கூட்டத்தார்களுக்குள்ளே மனிதனுக்கு மனிதன் வேறுபாட்டைக் கொண்டிருந்தான். பத்து அல்லது பதினைந்து ஒட்டகங்களை வைத்துக்கொண்டிருப்பவன் உயர்ந்தவன் என்றும் இரண்டொரு வாகனங்களைக் கொண்டிருப்பவன் தாழ்ந்தவன் என்றும் இத்தகைய வித்தியாசங்கள் உண்டாயின. வர வர அவ்வித்தியாசங்கள் முதிர்ந்து பலமடைந்தன. அக்கூட்டத்தார் பலவிதமான மதக்கொள்கையைக் கொண்டிருந்தனர். மூர்த்தி பூசையையும், இயற்கைப் பூசையையும், அவர்கள் கொண்டிருந்தனர். பிறகு கிறிஸ்து பிறந்தவுடன் யூதர்களும் அவர்களைச் சேர்ந்த சிலரும் கிறிஸ்துவ மதத்தைக் கொண்டனர். கிறிஸ்துவ மதத்தினர்களுக்குள்ளே பலமான கட்சிகளுண்டாகி சதா சண்டையும் சச்சரவும் நடந்து வந்தன. மாதர்கள் கற்பழிக்கப்பட்டனர். ஏழைகளின் உயிரைத் திரணமாக நினைத்து மத பூசாரிகள் துன்புறுத்தி வந்தனர். எகிப்து, கான்ஸ்டாண்டிநோபல் முதலிய பல இடங்களில் இரத்த வெள்ளம் ஆறாய்ப்பெருகிற்று. மத வெறிப்பிடித்துப் பலர் தலைவிரி கோலமாயிருந்

தனர். கிறிஸ்து பிறந்த முதல் ஐந்து நூற்றாண்டுவரை கான்ஸ்டாண்டிநோபல் முதலிய பல ஐரோப்பிய பட்டணங்களிலும், ஆப்பிரிக்காவைச் சேர்ந்த அலெக்ஸாண்ட்ரியா முதலிய நகர்களிலும் கிறிஸ்தவ மதக்கொள்கையின் வேறுபாட்டினால் மனிதர்கள் பட்ட தொல்லைக்கு எல்லையில்லை, குடும்பங்கள் குடும்பங்களாக அழிந்தன. சனங்கள் சுதந்தரமின்றி மிருகங்களைப்போலிருந்தனர். அரசாங்கமென்பது சங்கமின்றி சுழல் காற்றுபோல சுழன்று கொண்டிருந்தது. மேற்கு ஆசியாவிலும் மனிதர்கள் மிகவும் வருந்தியிருந்தனர். இஸ்லாம் மதக்கொள்கையை ஸ்தாபித்த முகம்மத் நபி அவர்கள் மதப்பிரசாரஞ் செய்யப் புறப்படும்வரை சனங்கள் அரசு இன்றியும் சரியான சமூக சங்கமின்றியும் மத்திய ஆசியாக் கண்டத்திலிருந்து வந்தனர். அரபியர்கள் பாலைவனங்களில் வசிப்பவர்களென்றும் நகரங்களில் வசிப்பவர்களென்றும் இருவகையினராக யிருந்தனர். பாரசீகத்தில் நிலச்சுவான்தார்களும் மதபூசாரிகளும் பலமுள்ளவர்களாய் எல்லா உரிமைகளையும் கொண்டிருந்தனரேயன்றி, சாமான்ய சனங்களுக்கு ஒன்றுமேயில்லை. யதேச்சாதிபத்யம் எங்கும் தலைதூக்கியிருந்தது. பிரஜைகள் உரிமையின்றியும் சுதந்தரமின்றியும், வெகு கஷ்டப்பட்டுப் பிராணனைக் கையில் பிடித்தவண்ணம் வாழ்ந்துவந்தனர். முகம்மத்நபி அவர்கள் பழையமதக் கொள்கையின் விபரீதங்களைக் களைந்து புதிய மத சித்தாந்தத்தை யுண்டாக்க முன் வந்தார். அவருடைய சித்தாந்தத்தை முதன் முதல் இரண்டொருவர் அங்கீகரித்து அவருடன் சேர்ந்தனர்.



அநேகர் அவருக்கு விரோதமாகவே யிருந்தார். நாள் செல்லச் செல்ல, முகம்மத்நபி அவர்களுடைய பெரு முயற்சியால் புதிய மதக்கொள்கையை யவலம்பிக்க ஒருவர் பின் ஒருவராகப் பலர் வந்தனர். முகம்மத்நபி அவர்கள் புதிய மதக்கொள்கையை யாதரித்தவர்களுக்கு நாயகராகவிருந்தார். அவர் தன் மத சித்தாந்தத்தைப் பலப்படுத்தி அம்மதத்தைத் தழுவினவர்களுக்கு சுதந்தரமும் உணர்ச்சியும் கொடுத்தார். புதிய கோட்பாடுகளையும் பிரமாணங்களையும் உண்டாக்கி மனிதனுக்கு மனிதன் கொண்டிருக்கும் வேற்றுமையை யொழித்து, கடவுள் முன்பாக எல்லா முஸ்லிம்களும் சமமானவர்கள்; ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்ச்சி கூடாதென்பதை முகம்மத்நபி முதன் முதல் ஸ்தாபித்தார். யுத்தமும் சமாதானமும் எல்லா முஸ்லீம்களுக்கும் பொதுவானதென்றும், இதர மதத்தினர்களோடு சண்டையாகிலும் சமாதானமாகிலும் செய்ய முஸ்லீம்களில் தனிமனிதனொருவனுக்கும் அதிகாரமில்லை யென்றும் முகம்மத்நபி இரண்டாவது பிரமாணமாகச் செய்தார். வீடுவாசல் முதலிய குடியிருப்பில்லாத முஸ்லீம்கள் வசிக்க மசூதிகளில் ஒருபாகம் அவர்களுக்கென்றே விட்டு வைக்க வேண்டுமென்று முகம்மத்நபி கட்டளையிட்டார் தவிர, முகம்மத்நபி அவர்கள் மத சித்தாந்தத்துடன் முஸ்லீம்களின் சுதந்தரத்தையும் வாழ்க்கையையும் சீர்திருத்தி அவர்களுக்கு நாயகமாக நின்று அரசை ஸ்தாபித்து அதிகாரஞ்செலுத்தினார். அவர் குற்றஞ் செய்தவர்களுக்குத் தண்டித்தலையும் விதித்து நீதிபதியாகவுமானார். நபிகள் நாயகம் அவர்கள் மதஸ்தாபகராகவும், அரசராக

வும், நீதிபதியாகவும், தர்மபிரதிஷ்டாபகராகவும், பிரஜா பந்துவாகவும் இராணுவ சேனாதிபதியாகவுமிருந்துவந்தார். அவர் சண்டைக்குப் புறப்படுகையில் தம்முடைய முஸ்லீம்களுக்கு குடும்ப வாழ்க்கையை நடத்துபவர்களையும், மாதர்களையும், பல ஈனர்களையும் பாலர்களையும், குழந்தைகளையும் ஏழைகளையும் வருத்தக்கூடாது; போருக்கு வாராத குடும்பங்களினுடைய வீடுவாசல்களையழிக்கக்கூடாது; அவர்களுடைய உணவுப்பொருள்களையும் மற்றபொருள்களையும் கவரக்கூடாது; பழங்கள் கொடுக்கும் விருட்சங்களையும், பேரீச்சமரங்களையும் வெட்டக்கூடாது. சிறைபட்டவர்களைத் துன்புறுத்தாமல் மரியாதையாகக் காப்பாற்றவேண்டும் என்று உபதேசித்தார். மற்றும், அவர் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் பொருளும் பரிசுத்தமானவையென்றும், பிறர் அவைகளைப் பறிக்கவோ அழிக்கவோ அதிகாரம் வகிக்கவில்லையென்றும் பிரமாணத்தையுண்டாக்கினர். முகம்மத்நபி அவர்கள் வீரராக வெற்றியடைந்து வருகையில், அவருடைய வீரர்கள் யுத்தத்தில் கிடைத்த பொருள்களுக்காக மனஸ்தாபமடைவதைக்கண்டு, உடனே, யுத்தத்தில் கிடைக்கும் பொருள்கள் யாவையும் பங்கிடுவது தலைவனுடைய இஷ்டம் என்றும், கிடைத்த பொருள்களில் ஐந்தில் ஒருபாகம் ஏழைகளையும் அங்கஹீனர்களையும் காப்பாற்றுவதற்கு அரசைச் சேரவேண்டுமென்றும் அவர் ஒரு பிரமாணத்தை ஏற்படுத்தினர். இதற்கு அல்-அன்பால் என்று பெயர். இது திருகுர்ஆனில் ஓர் அதிகாரமாகக் கூறப்பட்டுள்ளது. முகம்மத்



நபி காலத்திற்கு முன் அராபியர்களும் மற்ற குழுவினர்களும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுத் துக்கடித் துக்கடியாயிருந்தவர்களைக் கொஞ்சங் கொஞ்சமாக அணைத்து ஆதரித்து ஒரு சமுதாயத்தைப் பலமாக ஸ்தாபித்து பிரஜாதிபத்யம் என்னும் உணர்ச்சியைத் தழுவும் ஓர் அரசையும் அவர் ஏற்படுத்தினர். அரசுக்குரிய சுதந்திரங்களையும், அரசனுக்குரிய கடமைகளையும், ஒரு அரசுக்கும் மற்றொரு அரசுக்கும் உண்டாகும் சம்பந்த சட்டங்களையும் அவர் ஏற்படுத்தினர். முகம்மத் நபி அவர்கள் மதினமா நகருக்கு வந்ததும், யூதர்களுக்கும் நஜ்ரானிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் அந்த நிபகற்பத்திலுள்ள அனைவருக்கும் இஸ்லாம் மதம் நன்கு ஸ்தாபிக்கப்பட்டவுடன் கொடுத்த சாஸனமே பிற்காலத்தில் முஸ்லீம் அரசாங்கங்களுக்கு முக்கிய பிரமாணமாக ஆயிற்று. முஸ்லீம் அல்லாதவர்களையும் முஸ்லீம்களுடன் சமமாகப் பாவித்து நடத்த வேண்டுமென்று, அவர்களைத் தனியாகத் துவேஷத்துடன் துன்புறுத்தக் கூடாதென்றும், இஸ்லாம் மத தர்மத்திற்கு ஹானிவருகையில் முஸ்லீம் யாவரும் மதத்தைக் காப்பாற்ற சேனைகளில் சேர்ந்து போருக்குப்போவதால், முஸ்லீம் அல்லாதவர்கள், முஸ்லீம் அரசாங்கங்களிலுள்ளவரையில் விசேஷ வரியொன்றை அரசாங்கத்திற்குக் கட்டவேண்டுமென்றும் முகம்மத் நபி அவர்கள் பிரமாணஞ் செய்துள்ளார். இஸ்லாம் மதமானது தன்னுடைய பிரஜைகளுக்கு ஓர் உயர்ந்த பிரமாண சாஸனத்தைக் கொடுத்திருக்கிறது. மனித கடமையையும், மனித உரிமையை

யுங் காப்பாற்றக் கூடிய நிலைமையில் அரசின் பிரமாணம்
ஏற்படுத்தப்பட்டது. வரி நிர்ணயஞ் செய்யப்பட்
டது. சட்டத்திற்குமுன் அனைவரும் ஒன்றேயென்று
தீர்மானஞ் செய்யப்பட்டது. சுய ஆட்சியின் தத்து
வத்தையும் பிரமாண பிரதிஷ்டை செய்திருக்கிறது.
அரசாங்கத்தை வகிக்கும் அரசனுக்கு அதிகார நிர்
ணயம் எல்லைப் படுத்தப்பட்டதுடன், நீதி தர்மத்
தையும் மத தர்மத்தையும் அனுசரித்துச் செய்யப்
பட்ட சட்டங்களுக்கு அரசாங்க நிர்வாக அதிகாரிகள்
கீழ்ப்படிந்தவர்களென்னும் நிபந்தனை செய்யப்பட்
டது. முகம்மது நபி அவர்கள் காலத்திற்குப் பிறகு
அரசையும் மத ஸ்தாபனத்தையும் நிர்வகிக்க கலீபா
மார்கள் ஏற்படுத்தப்பட்டனர். முதன் முதல் இந் நிய
மனம் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த எல்லா இஸ்லா
மானவர்களுடைய சம்மதத்தின்பேரிலேயே நடந்து
வந்தது. பிறகு பற்பல காரணத்தால் அந்நியமனம்
சிற்சில சமயங்களில் ஜனங்களால் நியமிக்கப்பட்டும்,
சிற்சில சமயங்களில் தாங்களாகவே நியமித்துக்கொண்
டும் வந்தனர். நபிகள் நாயகம் இறந்தவுடன் அபுபகர்
முதலாவது கலீபா முஸ்லீம்களால் தெரிந்தெடுக்
கப்பட்டார். அவர் இராஜ்ய அதிகாரத்தையும் மத
அதிகாரத்தையும் பெற்றார். அபுபகர் இராஜ்ய
நிர்வாகம் பிரஜாதிபத்ய மாகவே யிருந்தது. அரசி
யல் காரியங்கள்யாவும் ஜனங்களுடைய பிரதிநிதிகளைக்
கொண்டே நடந்துவந்தன. முதல் கலீபாமார்கள்
தங்கள் பிரஜைகளுக்காகப் பல பிரயாசையுடன் அரசி
யல் நடத்திவந்தனர். அவர்களுடைய கண்ணியமும்



ஜீவகாருண்யமும், சத்திய நெறியும், தியாகபுத்தியும்
தர்ம சிந்தையும் மிக்க பாராட்டத்தக்கவை. அபுபகர்
அவர்கள் கொஞ்சகாலமே அரசு நடத்தினர். பிறகு,
உமர் அவர்கள் இரண்டாவது கலீபாவாக வந்ததும்
முஸ்லீம் அரசை வெகு நன்றாகச் சீர்திருத்தி, முஸ்
லீம் சமூகத்திற்கும் பிரஜைகளுக்கும் வேண்டிய நன்
மைகளைச் செய்தார். கலீபாமார்களிடத்தில் அரசு
இருந்தவரையில் அவர்களுக்கு அதிகார நிர்ணயம்
ஏற்படுத்தப்பட்டு பிரஜாதிபத்ய முறையிலேயே, இராஜ
ரீகம் நடந்துவந்தது. அரசைச்சேர்ந்த நிர்வாக விஷ
யம், போலீஸ் விஷயம், இராணுவ விஷயம், அன்னிய
நாட்டு விஷயம், அரசிறை விநியோகம் முதலிய யா
வும் கலீபாமார்களிடமே அதிகாரமிருந்த போதிலும்,
நிர்ணயிக்கப்பட்ட பிரமாணங்களுக்குப் புறம்பாக
அவர்கள் செல்ல அதிகாரம் பெறவில்லை. நீதிசாஸ்
திரக்ஞர்கள் அல்லது நியாயாதிபதிகள் அரசாங்கத்திற்
குக் கீழ்ப்பட்டவர்களல்ல. அவர்களுடைய தீர்மானத்
திற்கு மறுபேச்சு கிடையாது. நியாயாதிபதிகள் குற்ற
வாளிகளைத் தண்டித்த பிறகு அத்தண்டனையை மாற்ற
கலீபாமார்களுக்கு அதிகார மில்லை. ஏழைகளுக்கும்
தனவந்தர்களுக்கும், அதிகாரிக்கும் பயிரிடுங் குடியான
வனுக்கும் சட்டம் ஒன்றுதான். சட்டத்திற்குமுன்
நபர் வித்தியாசங்கிடையாது. இங்ஙனம் முதல் கலீ
பாமார்கள் ஆண்டவரை வெகு ஒழுங்காக யிருந்தது.
பிறகு அவ்வொழுங்கு தவறி பற்பல மாறுதல்களடை
ந்து, அரசன் தன்னிஷ்டப்படி செய்யவும் நடத்தவும்
ஏற்பட்டான். தவிர, முதல் கலீபாமார்கள் அரசாண்ட

காலத்தில் இராஜாங்க விஷயங்களைப்பற்றி ஒவ்வொரு முஸ்லீமும் பகிரங்கமாக அறிந்து வந்தான். இராஜாங்க விஷயம் குடுமந்திரமாக இல்லை. வெள்ளிக்கிழமை தோறும் ஜும்மா தொழுகைக்குப் பிறகு கலீபா அவர்கள் அரசாங்கத்தின் புதிய நியமனங்களையும், புதிய விசேஷ சம்பவங்களையும், இனி நடக்க உத்தேசிக்கும் காரியங்களையும் பற்றிக் கூறுவார். அவர்கள் ஏழை எளியவர்களையும் உபசரித்து அவர்களுடைய கஷ்டங்களை நிவாரணஞ் செய்துவந்தனர். பிரஜைகளின் முறையீடுகளை நேராகவே கவனித்து வந்தனர். அபுபகர் அவர்கள் பெரிய இராஜ்யாதிபதியாக யிருந்தும், அவர் மரணமடையுங்காலத்தில் தம் சந்ததியார்களுக்கு வைத்துவிட்டுப் போன ஆஸ்தி ஒரு ஒட்டகமும், ஓர் அடிமை வேலைக்காரனும், ஒருஜதை உடுப்புமேயாம். அலி அவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் அரசாங்கத்தார் தமக்கென்று கொடுத்த திரவியத்தை ஏழைபரதேசிகளுக்கும் அங்க வீனர்களுக்கும் தர்மஞ் செய்தார். உமர் அவர்களுடைய பரிபாலனம் மிக்க சிறப்ப வாய்ந்தது. அவர் பிரஜைகளுக்கு விவசாயத்தை விர்த்தி செய்தார். விவசாய விர்த்திக்காகவேண்டி திரவியம் செலவழித்துக் கால்வாய் முதலிய நீர்ப்பாசன வசதிகளையுண்டாக்கினர். நிலவரியை மிகவும் ஒழுங்காகவும் ஜனங்கள் தாங்கக் கூடியதாகவும் நிர்ணயித்தார். மானிய ஏற்பாடு, பாளையக்கார முறை முதலியவைகளை அவர் நீக்கினர். பயிரிடும் சாமானிய குடிகளுக்கு மிக்க துன்பகரமாயிருப்பன யாவையும் அவர் ஒழித்தார். முதல் கலீபாமார்கள் அரசாளுகையில் அவர்



களுக்கு உதவி செய்யவும் சகல விஷயங்களின் சாதக பாதகங்களை எடுத்துக் கூறவும் நல்ல மூதறிஞர்கள் மந்திரிசபையினர் போலிருந்து வந்தனர். முதல் கலீபாமார்களான அபுபகர், உமர், உஸ்மான், அலி ஆகிய இவர்கள் அரசாண்டதற்குப் பின்னர் முஆவியா என்பவன் முஸ்லீம் அரசுக்கும் இஸ்லாம் மத பதவியான கிலாபத்துக்கும் அதிபதியாக ஆயினன். இவன் அரசுக்கு வந்ததும் மிகவும் கொடுமையான சூழ்ச்சி செய்ததனாலேயே இவன் மிகவும் குரூரமும், காருண்யமற்றவனும் குரோதமுங் கொண்ட கொடுங்கோன் மன்னனானன். பிரஜாதிபத்ய முறையில் பரிபாலிக்கப்பட்டு வந்த அரசு இவன் காலத்திருந்து யதேச்சாதிபத்யத்தைக் கொண்டு கொடுங்கோன்மையைப் பற்றிவந்தது. பிரஜைகள் சுதந்தரமின்றியும் உரிமையின்றியும் இருந்தனர். நீதியும் சத்தியமும் ஒழிந்தது. முஸ்லீம் சமூகத்தினர்களுக்குள்ளே பல பிரிவுகள் உண்டாயின; கலீபாமார்கள் சமூகத்தாரால் தெரிந்தெடுக்கப் பட்டு வந்த அனுஷ்டானம் நீங்கி, முஆவியா காலத்திலிருந்து அரசனே தன்னுடைய ஸ்தானத்திற்கு ஒருவரை முற்கூட்டியே நியமித்து வரலாயிற்று. முஸ்லீம் சமூகத்தினர்களில் மூன்றுவித பிரிவுகளிருந்தனர். உம்மயாதி வம்சத்தினர், ஆபாஸ்ஸைத் வம்சத்தினர், பாதிமைத் வம்சத்தினர்களாக மூன்று வம்சத்தினர்களிருந்தனர். இம்மூன்று வம்சத்தினர்களும் முறையே டமாஸ்கஸ், பாக்தாத், எகிப்து முதலிய தேசங்களைப்பரிபாலித்துவந்தனர். உம்மயாதி அரசாட்சியானது யதேச்சாதிபத்தியத்துடன் கூடியது. ஆபாஸ்ஸைத் வம்சத்தினர்

களில் முதல் ஐந்து கலீபாமார்களுடைய அரசாட்சிக்குப் பிறகு அல்மாமூன் அவர்கள் அரசுக்கு வந்ததும் அரசாங்கத்தை நடத்தப் பல சபைகள் ஏற்பட்டன. முஸ்லீம் சமூகத்தினர்களின் பிரதிநிதிசபையும் ஸ்தாபிக்கப்பட்டது. அபாஸ்ஸைத் வமிசத்தினர்களில் ஆண்ட முதல் கலீபாமார்களுடைய காலத்தில் இஸ்லாம் மதக்கல்வியும் மற்ற அபிவிர்த்தியும் சிறப்படைந்து வந்தது. பாக்தாத் நகரை யுண்டாக்கின அல்மன்ஸூர் அவர்கள் காலத்திலிருந்தே அபாஸ்ஸைத் வமிசத்துக்கு ஓர் பெருமையும் அரசாங்க முறையு முண்டாயிற்று. அவர்களுடைய அரசாங்க முறையை அமுலுக்குக் கொண்டுவர ஒரு நிர்வாக சபையும் பிரஜைகளின் வரிமுதலிய அரசாங்க வருமானத்தை வசூலிக்க அரசிறை சபையும் முதல் முதல் ஸ்தாபிக்கப் பட்டன. பிறகு அரசாங்கத்தைச் செவ்வனே நடத்தப் பல அதிகார முறைகளைச் செய்ய பல இலாக்காக்களையும் அவர்கள் ஸ்தாபித்தனர். இலாக்காக்களுக்கு திவான் என்று பெயர். திவான் உல் கராஜ் என்பது அரசிறை இலாகா. திவான்-உத்-திய என்பது அரசாங்கத்தைச் சேர்ந்த சொத்துக்கள் இருக்கும் இலாகா. திவான்-உஸ்-ஜிமாம் என்பது தணிக்கை இலாகா. திவான்-உல்-ஜண்ட் என்பது யுத்த இலாகா. திவான்-உல்-மவாலி வா-இல்-கில்மான் என்பது அடிமைகளையும் வியவகாரஸ்தர்களையும் காப்பாற்றும் இலாகா. திவான்-உல்-பரீத் என்பது தபால் இலாகா; திவான்-உஸ்-ஜிமாம் அனன்வகாத் என்பது அரசனுடைய அரண்மனை காரியாலயம்; திவான்-உர்-ரஸாயில் என்பது நியாய ஸ்தல இலாகா; திவான்-உட்-டோகியா என்பது



மனுசெய்யும் இலாகா; திவான்-அஹான் நிஜிர்-வீ இல் மஜாலிம் என்பது முறையீடுகளைக் கவனிக்கும் இலாகா. திவான்-உல்-அஹ்தாஸ்-வ-அஷ்ஷுர்தா இராணுவமும் போலீஸும்; திவான்-உல்-ஆடா என்பது தர்ம இலாக்கா. காதீப்-உல்-ஜிபாஜே என்பது முஸ்லீம் இல்லாத மற்றவர்களைக் காக்கும் இலாகா. மேற்கூறிய ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒவ்வொரு அதிகாரியுண்டு. அவருக்கு ராஹீஸ் அல்லது ஸதர் என்று பெயர். இவர்களுக்குக் கீழே பல இன்ஸ்பெக்டர்கள் மேல்பார்வைக்காக யிருந்தனர். அவர்களுக்கு முஷ்ரை அல்லது நாஜிர் என்று பெயர். இவ்விலாகாக்கள் தவிர அன்னிய நாட்டு மந்திரிகளிடமிருந்துவரும் பிராதுகள் முதலியவைகளைக் கவனிக்க ஹாஜிப் என்னும் பெயரைக் கொண்ட ஓர் உத்தியோகமும் இலாகாவுமிருந்தது. அரசருக்கு தேசத்தின் சகல விஷயங்களையும் கூறி ஆலோசிக்க வஜீர் என்னும் பிரதான மந்திரியொருவருமுண்டு. அபாஸ்ஸைத் வம்சத்து அரசர்கள் பாக்தாதுக்கும் மக்காவுக்கும் பெரிய அகன்ற பாதையையும் மற்ற பல ரஸ்தாக்களையும், நல்ல தோப்புகளையும், வழிப்போக்கர்கள் தங்க முஸபர்கானா என்னும் சத்திரங்களையும், வியாபார ஸ்தலங்களையும், அவைகளின் பந்தோபஸ்திற்காக போலீஸ் ஊழியர்களையும் ஸ்தாபித்தனர். வியாபார ஸ்தலங்கள் ஒவ்வொன்றிலும் வர்த்தகசங்கம் இருந்ததுடன், நகரங்களிலும் மற்ற பெரிய பட்டணங்களிலும் பெரிய வர்த்தக சங்கங்களுமிருந்தன. வியாபாரிகளுடைய மரக்கால், படிக்கல் முதலிய அளவு கருவிகளைப் பரிசோதிக்க உத்தியோகஸ்தர்களுமிருந்தனர். வியவ

சாயம் விர்த்தியாயிற்று. தேசத்தின் நிலைமையைப் பற்றியும், ஜனங்களின் வாழ்க்கையைப் பற்றியும் அரசனுக்கு அடிக்கடி தெரிவிக்கத் தனி உத்தியோகஸ்தர்களும் இலாக்காக்களு மிருந்தன. அல்-மாமூன் அவர்களுடைய அரசாட்சியிலும் அவருக்குப் பிறகு வந்த இரண்டு மன்னர்களுடைய அரசாட்சியிலும் பிரஜைகள் மிக்க சுதந்தரத்துடன் சுகித்து வாழ்ந்து வந்தனர். இஸ்லாம் அரசுகளைப் பரிபாலிக்கும் அரசனுக்குச் சில நிபந்தனைகளையும் முஸ்லிம் சமூகத்தினர் உண்டாக்கினர். பிரஜைகளிடம் அவன் நடக்கவேண்டிய முறை, ஜனங்களுக்கு அவன் செய்யும் நன்மைகள், அவர்களுடைய சுதந்தரம் முதலியவைகளைக் காக்கும் விதம் ஆகிய இவையாவையும் குறிக்கும் சிறந்த ஓர் இராஜரீக சாஸ்திரத்தை ஹிமாம்-பக்கருடீன் ராஜீ அவர்களால் முதன் முதல் எழுதப்பட்டுப் பிறகு முகம்மத் பின் அலி பின் டாபா டாபா அவர்களால் பெருக்கப்பட்டும் வந்தது. அந்த இராஜரீக சாஸ்திரத்திற்கு கிதாப் ஹி தாரிக் உத் தவால் என்று பெயர். இதை கிதாப் உல் பக்கிரீவிஹில் ஆதாப் உல் ஸல்தானியாத் வா தவால் உல் இஸ்லாமியா என்று கூறுவாருமுண்டு. இந்த சிறந்த நூலில் அரசனுடைய கடமை, அரசன் பிரஜைகளுக்குச் செய்யுங் கடமைகள், அரசாங்கத்தைப் பரிபாலிக்க வேண்டிய முறைக்கு அனுகுணமான பிரமாணங்கள் பொருளாதார சம்பந்தமான முறைகள் ஆகிய இவைகளைக் கூறப்பட்டிருப்பதுடன் அரசன் அறிவும் ஞானமும் உலக அனுபவமும் தெய்வபக்தியும் சாஸ்திர ஆராய்ச்சியுமுள்ளவனாக யிருக்கவேண்டு



மென்றுங் கூறப்பட்டுள்ளது. அரசன் மிக்க ஜீவகாருண்ய முள்ளவனாக யிருக்கவேண்டுமென்றும் இதுவே எல்லா குணங்களிலுஞ் சிறந்ததென்றும் அந்நூலில் கூறப்பட்டுள்ளது. சதா குடிகளுக்கு நன்மையைச் செய்பவனாகவும் நன்மையைச் செய்வதில் ஆசை கொண்டவனாகவு மிருக்கவேண்டும். முகம்மத் நபி அவர்கள் எங்ஙனம் ஒவ்வொரு காரியத்திற்கும் தம்மைச் சேர்ந்த சிஷர்களைக் கேட்டுச் செய்தாரோ அங்ஙனம் ஒவ்வொரு முஸ்லீம் அரசனும் தேச நிர்வாக விஷயங்களைத் தம் பிரஜைகளுடன் கலந்து அவர்கள் சம்மதப்படி செய்யவேண்டுமென்றும் அந்நூலில் எழுதப்பட்டுள்ளது. தேச காரியங்களை நடத்தும் அரசன் அத்தேசத்தின் பணவருவாயில் ஜனங்களின் வாழ்க்கை, ஜனங்களின் நபர் பந்தோபஸ்து, சொத்து பந்தோபஸ்து முதலியவைகளையும் நாட்டின் சமாதானம் குற்றஞ் செய்பவர்களைத் தண்டித்தல் முதலியவைகளையும் சரிவர கவனிக்க வேண்டுமென்றும் அதில் கூறப்பட்டுள்ளது. பிறகு பிரஜைகள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும், கொடுங்கோன்மையை நடத்தும் அரசனுக்குப் பிரஜைகள் கீழ்ப்படிந்து நடக்க அவசியமில்லையென்றும் அதில் கூறப்பட்டுள்ளது. இபின் ரஷ்த் அவர்கள் ஜனங்களுக்கின்றி தனக்காக அரசாளும் அரசனே கொடுங்கோன் மன்னன் எனக் கூறியுள்ளார். எகிப்து தேசத்தை யாண்டுவந்த பாதிமைத் வமிசத்தார்கள் நல்ல கல்விகேள்விகளை யுடையவர்கள். இவர்கள் நபிகள் நாயகம் அவர்களுடைய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய அரசாட்சியில் எகிப்து தேச

மெங்கும் விசித்திரமான கல்விக்கழகங்கள் புத்தகசாலைகள், கலைஞான சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. கணக்கற்ற வித்தியார்த்திகள் கல்விச்சாலைகளில் கல்வி பயின்று வந்தனர். இவர்களுடைய அரசாங்கம் கூடிய வரையில் பிரஜாதிபத்யத்தை யனுசரித்து வந்ததாகக் கூறப்படினும் அரசன் சர்வாதிகாரங்கொண்ட யதேச்சாதிபதியாகவே யிருந்துவந்தான். துருக்கி சுல்தான்கள் பலர் இவ்வழியாகவே யாண்டுவந்தனர். ஸ்பெயின் முதலிய தேசங்களிலும், பூர்வம் ரோமசாம்ராஜ்யத்தைக் காட்டிலும் பெரிதான பூமிப் பரப்பை முஸ்லீம்கள் ஆண்டு வந்த இடங்களிலும் இஸ்லாம் அரசு ஆரம்பத்தில் பிரஜாதிபத்யமாகக் காணப்படினும், பிறகு பொதுவாக இராணுவ அதிகாரத்தைக் கொண்ட யதேச்சாதிபத்யமாகவே எங்கும் இருந்து வந்தது. ஆகவே, அவர்களையொட்டி இந்தியாவில் ஆண்ட மொகலாய சக்ரவர்த்திகளும் இராணுவ வழியை யனுசரித்த யதேச்சாதிபதி யாகவும், அவர்கள் அரசு இராணுவ யதேச்சாதிபத்யமாகவு மிருந்துவந்ததுடன், இந்தியாவின்கண் ஆண்ட மொகலாய சாம்ராஜ்யம் பல அதிகார நிர்வாகங்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அது பாரதநாட்டுப் புராதன கிராம சமுதாயத்தையாவது இந்து சமூகத்தையாவது அழிக்கவும் மாற்றவும் பாடுபடவில்லை. டில்லிமா நகரையும் அதைப் போன்ற பல பெரிய பட்டணங்களையும் நகரங்களையும் கைப்பற்றி ஆங்குள்ள வர்த்தகம் கைத்தொழில் முதலியவைகளை மட்டும் ஆதீனப் படுத்திவந்தார்களே தவிர அநாதிகாலமாகப்பாரதநாட்டில் ஏற்பட்டிருந்த சமுதாய



வாழ்க்கையைச் சீர்குலைக்கச் செய்யவில்லை. தவிர, மொகலாய அரசில் அரசனுக்குச் சர்வாதிகாரமும் இருந்தது. அவனே நியாயாதிபதியாகவும், அவனே சட்டஞ் செய்பவனாகவும், அவனே அதிகார நிர்வாகியாகவும் இருந்தான். குர்ஹான் கட்டளைப் படியும் மற்ற இஸ்லாம் பிரமாணங்களை ஆதாரமாக அவர்கள் கொண்டிருந்த போதிலும், அனுஷ்டானத்தில் மட்டும் அவர்கள் அரசுக்கு வேண்டிய அம்மூன்று அதிகார முறைமைகளையும் தாங்களே முக்கியமாக வகித்து வந்தனர். மொகலாய சக்கரவர்த்திகளிற் சிலர் ஜனங்களுக்கு நன்மையைச் செய்திருந்த போதிலும் பிரஜைகளுக்கு சுதந்தரமும் உரிமையும் குறைவாகவே யிருந்ததெனக் கூறலாம். வாக்குரிமை பாத்தியதை முதலியவைகள் கிடையா. மொகலாய ராஜ்யத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஊழியனும் இராணுவத்தைச் சேர்ந்தவனே. இராணுவ சேனாதிபதிகளிற் சிலர் தண்டயாத்திரை செய்து, கிடைத்த பொருள்களைத் தாங்களே சுவாதீனப்படுத்திக்கொள்வர். ஒருவித நியமமும் ஒழுங்கும் இல்லை. ஜனங்களிடமிருந்து வரி வசூலிப்பதிலும் அப்படியே தானிருந்தது. என்றாலும், ஜனங்கள் வறுமையின்றியும் பஞ்சமின்றியும் சதா சுகித்து வாழ்ந்து வந்தனர். மொகலாய சாம்ராஜ்யம், கல்வி அபிவிருத்திக்காகத் தனியாகப் பண வினியோகஞ் செய்யவில்லை. அரசன் தன் சந்தோஷத்தால் கொடுப்பது தவிர வேறு நிர்ணய வினியோகமில்லை. கல்விச்சாலைகள் அநேகமாக மதக் கொள்கையைக் கொண்டு மஸூதியைச் சேர்ந்து வந்ததால், மத காரி

யங்களுக்குப் பணங்கொடுக்கும் பொழுது அவைகளுக்கும் கொடுக்கப்படும். சிறந்த சிற்பசாரிகள், கைத்தொழிலாளர்கள், நெசவு வேலையர் முதலானோர்களை அரசாங்கமே தங்கள் வேலைகளுக்கு அமர்த்தி வந்தனர். ஆகவே, இஸ்லாம் அரசு முதன் முதல் குடியரசாக விருந்து, பிறகு நிர்ணய இராஜ்யாதிபத்யமாகிப் பின்னர் இராணுவ யதேச்சாதிபத்யமாக ஆயிற்று.

# அரசின் உறுப்புகள்

## 11. அதிகாரப் பிரிவினை.

முந்தின பத்து அத்தியாயங்களில் அரசு உண்டான விதம், அரசின் மூலதத்துவம், அரசின்வகை முதலிய விஷயங்கள் கூறப்பட்டன. அரசியலை நடத்துதலிலே ஒன்றற்கொன்று துணையாகிய அங்கங்களது இயல்பையும் அவைகளின் மாட்டு உண்டான அதிகாரப் பிரிவினைகளையும்பற்றி இப்பொழுது கூறுவோம். அரசின் உறுப்புக்குப் பொறுப்பாயிருப்பது அதிகாரப்பிரிவினை. அவை சட்டநிருபணம், நிர்வாக பரிபாலனம், நியாயஸ்தாபனம் ஆகிய இம்மூன்றே அரசியல் அங்கங்களாகும். ஒவ்வொரு அரசாங்கமும் நவீனமுறைப்படியாக வேனும் புராதன முறைப்படியாகவேனும் ஆட்சி செய்ய, மேற்கூறிய மூன்று பிரிவினைகளை இன்றியமையாதனவாகக்கொள்ள வேண்டும். சட்ட நிருபண சபையைச் சேர்ந்தவனுடைய கடமைக்கும், நிர்வாக பரிபாலன அதிகாரியொருவனுடைய கடமைக்கும் நீதிபதி ஒருவனுடைய கடமைக்கும் வித்தியாசமுண்டு. முதன் முதல் அரசாங்கம் தன்னுடைய அரசியலை நடத்த சட்டங்களை யுண்டாக்கிக் கொள்ள வேண்டும். பார்லிமெண்ட் சபை, நகர சபை, அரசாட்சிக்குரியபிரமாணங்களைத் நிர்மாணிக்கக்கூடும் மகாசபை ஆகிய சபைகளே பொதுவாகச் சட்டநிருபணசபை களெனப்படும். இச்சபை பூர்வம் இருந்த அரசாங்கங்களுக்குஅவ்வளவு அத்தியாவசியமின்றி யிருந்ததாகக் காணப்படினும், நவீன

நாகரிகப்படி பரிபாலிக்கப்பட்டுவரும் அரசாங்கங்களுக்குச் சட்ட நிரூபண சபை மிகவும் ஆவசியமானது. சட்டம் நியாயமா அநியாயமா என்று தீர்ப்பு சொல்லுவதற்கு முன்னும், சட்டத்தைக் கொண்டு அதிகார பரிபாலனஞ் செய்வதற்கு முன்னும், சட்டங்களை நிரூபிப்பது ஆவசியமான தாகையால் சட்டநிரூபணஞ் செய்யும் பொறுப்பானது, அரசாங்க அதிகாரங்களுக்குள்ளே மிகவும் முக்கியமானது. சுதந்தரங் கொண்ட ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் சட்டநிரூபணமானது மிகவும் சிறந்ததும் முதன்மையானது மாகும் என்று நீதிபதி ஸ்டோரி என்பவர் கூறுகிறார். பார்வைக்கு நிர்வாக பரிபாலனமானது கைப்பாடு போன்றதால் அது இரண்டாவது பட்சமெனத் தோற்றும். விசாரிக்குமிடத்து, நிர்வாக பரிபாலனமானது அரசாங்க அதிகாரப் பிரிவினைகளில் மிகவும் பொறுப்புவாய்ந்ததும் விசேஷமானது மாகும். சட்டங்கள் எவ்வகையாக நிரூபணஞ் செய்தபோதிலும், அச்சட்டங்களை ஆராய்ச்சி புத்தியுடன் கையாள்வது நிர்வாக பரிபாலனமேயாம். அன்னிய நாட்டு விஷயங்களில் நிர்வாக அதிகாரிகள், சட்டநிரூபண சபைக்குக் காரியஸ்தர்கள் என்னும் எண்ணத்தைவிட்டு, மிக்க ஆராய்வுடன் சுயபுத்திகொண்டு அவர்கள் பரிபாலிக்க வேண்டுமென்பது சில தேசத்தார்களுடைய சித்தாந்தம். பலாத்காரத்திற்கு ஆதாரமாக நிற்கும் இராணுவம், கப்பற்படை, போலீஸ் இவைகள் நிர்வாக அதிகாரத்தின் ஆதீனத்திற்குட்பட்டவை. இவை நிர்வாக பரிபாலன சபைக்கு அங்கங்கள் எனவும் கூறலாம்.



ஆகவே, இந்த நிர்வாக பரிபாலன அதிகாரிகளுடன் பொது ஜனங்கள் நித்தம் பழகி வருபவர்களாகின்றனர். இராணுவம், கப்பற்படை இவ்விரண்டையும் ஒதுக்கிப் பார்த்தாலும் நிர்வாக பரிபாலன அதிகாரிகளே ஒவ்வொரு தேசத்திலும் அதிகமான தொகையினர்களாகின்றனர். உதாரணமாக, அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தில் நகர நிர்வாக பரிபாலன அதிகாரிகள் மட்டும் 3 லட்சம்பேர்களிருக்கின்றனர். சட்டநிரூபண சபை என்கிற காங்கிரஸ் மகாசபையில் 476 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். 140 நீதிபதிகளே அங்கு யிருக்கின்றனர். இதுபோலவே, ஒவ்வொரு அரசாங்கத்திலும் நிர்வாக உத்தியோகஸ்தர்களின் தொகை அதிகமாகவே யிருக்கும். நிற்க அரசாங்கத்தின் நீதிஸ்தாபனமானது நாட்டில் உண்டாகும் குற்றங்களைப் பற்றிய விசாரணை, வழக்கு, வியாச்சியம் முதலியவைகளில் சட்டங்களைப் பிரயோகித்துத் தீர்ப்பு செய்வதேயாம். இது, பார்வைக்கு சட்ட நிரூபண அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டதென ஒருவாறு புலப்பட்டபோதிலும், பொதுஜனங்களின் இலாபநஷ்டங்களுக்கு உண்மையில் மிக்க பொறுப்புள்ளது. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தில் இது அரசாட்சிக்குரிய பிரமாண அநுஷ்டானத்திற்கு மிக்க பொறுப்புள்ளதாகும். தற்காலத்திய பிரஜாதிபத்ய அரசாங்கமுறை உண்டான ஆரம்பகாலத்திலும், 18-வது நூற்றாண்டில் உண்டான இராஜரீக சாஸ்திரங்களிலும், அரசாங்க அதிகாரப் பிரிவினைகளாகிய இம்மூன்றும் தனித் தனியே யமைக்கப்படவேண்டுமென்றும், அங்ஙனம் பிரிக்கப்பட்ட ஒவ்வொ

ன்றிற்கும் தனித் தனி மனிதர்கள் பரிபாலிக்க வேண்டு
மென்றும், ஒன்றையொன்று அடக்கியாளாமல் சுயாதி
காரம்பெற்றதாக இருக்கவேண்டுமென்றும் சித்தாந்தப்
படுத்தப்பட்டது. இவ்வகையால் பொதுஜனங்களின்
சுதந்தரம் காப்பாற்றப்படுமென்றும், ஜனங்களின் நபர்
பந்தோபஸ்துக்கு ஒரு ஜவாப்தாரித்துவம் ஏற்படு
மென்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு அதிகாரப்
பிரிவினைக் கோட்பாடென்பர். 18-வது நூற்ற
ண்டிலிருந்தவர்கள் இக்கோட்பாட்டைப் புதிதாக
ஸ்தாபிக்கவில்லை. ஏற்கனவே, அரிஸ்டாடல் ஞானி
காலத்திருந்தே இது ஏற்பட்டது. ரோம சாம்ராஜ்ய
அரசாட்சிக்குரிய பிரமாணங்களில் இதைப்பற்றிக் குறிக்
கப்பட்டுள்ளது. 'சட்டநிரூபண அதிகாரமும் நிர்வாக
பரிபாலன அதிகாரமும் ஒரே சபையினருக் கேனும்
அல்லது அரசனொருவனுக் கேனும் ஒன்றாகயிருந்தால்,
நாட்டில் சுதந்தரம் என்பது இராது; ஏனெனில், அச்
சபையினரோ அல்லது அவ்வரசனோ கொடுங்கோன்
மையான சட்டங்களைச் செய்யவும், கொடுங்கோன்மை
யாக நிர்வாக பரிபாலனஞ் செய்யவும் கூடும் என்று
மாண்டஸ்கியூ என்பவர் கூறுகிறார். இன்னும்,
'நீதிஸ்தாபனமும் மற்ற இரண்டு அதிகாரப் பிரிவினைகளி
னின்றும் பிரிக்காமற்போனால், அப்பொழுதும் சுதந்
தர மென்பதிராது; ஏனெனில், அது சட்ட நிரூபண
அதிகாரத்துடன் சேர்க்கப்பட்டால், பொது ஜனங்க
ளுடைய உரிமையையும் நபர் பந்தோபஸ்தையும் தன்
னிஷ்டப்படி செய்து கொள்ளும்; நீதிபதியே சட்ட
நிரூபகராக ஆவார்; நீதிபதி நிர்வாக பரிபாலன அதி



காரத்தையும் வகிப்பவரானால், அவர் கொடுங்கோன்
மன்னனாகவே யாகவேண்டும்' என்று மாண்டஸ்கியூ
கூறுகிறார். பிளாக்ஸ்டோன் என்பவரும் அவ்வண்
ணமே கூறுகிறார். 'கொடுங்கோன்மையான அரசாங்கங்
களில் சட்ட நிரூபணஞ் செய்வதும், பரிபாலனஞ்
செய்வதுமாகிய அதிகாரம் ஒருவனுக்காகிலும் அல்
லது ஒரு குழுவினருக்காகிலும் கொடுக்கப்படும்; இவ்
விரண்டு அதிகாரங்களும் ஒன்று சேர்ந்தால் சுதந்தர
மென்பது இராது' என்று பிளாக்ஸ்டோன் கூறுகிறார்.
ஆனால், தற்கால பிரிட்டிஷ் இராஜரீக சாஸ்திரக்ஞர்கள்
மேற்கூறியவர்களின் சித்தாந்தங்களைக் கண்டனஞ்
செய்திருக்கின்றனர். இங்கிலாந்தின் அரசாங்க நிர்
வாக மந்தண சபை (Cabinet) தற்கால மிருப்பது
போல உறுதியுடன் பக்குவமாகாத தருணத்தில் அவ்
விருவர், பிரிட்டிஷ் அரசாட்சிக்குரிய பிரமாணங்களைக்
கொண்டு சித்தாந்தஞ் செய்தார்களென்றும், அவர்க
ளிருந்த காலத்தில் மந்தண சபை ஏகோபித்த அபிப்
பிராயத்துடனில்லாமல் விவித அபிப்பிராயங்கொண்
டிருந்தவர்களைக் கொண்டிருந்ததென்றும் தற்காலத்த
வர்கள் கூறுகின்றனர். பிரிட்டிஷ் அரசாட்சிக்குரிய பிர
மாணத்தில் அரசனுக்கும் பார்லிமெண்ட் சபை யிரண்
டுக்கும் சம அதிகாரம் உண்டாயிற்றென்றும், அவர்க
ளில் ஒருவருக்கொருவர் உயர்ந்தவரல்லவென்றும்,
அவ்வொவ்வொருவர்களிடத்தும் நீதி சபையானது
அநேகமாக சுயாதீனங்கொண்டதாக ஏற்பட்டதை
மாண்டஸ்க்கியூ தெரிந்து கொள்ளாமல் கூறினா
ரென்றும் தற்கால பிரிட்டிஷ் இராஜரீக சாஸ்திரக்ஞர்

களில் அநேகர் கூறுகின்றனர். மந்தண சபை அல்லது மந்தண சபையிலுள்ளவர்கள் பிரமாணப்படி இப்பொழுதும் அரசாங்க ஊழியர்களாக ஏற்படுத்தப்பட்டவர்களென அறியப்படுகிறது. உண்மையில், அவர்கள் மந்தண சபையில் ஏகோபித்து ஒன்றாயிருப்பதினாலும், சட்ட நிரூபண சபையில் அங்கத்தினர்களாகயிருப்பதினாலும் வழக்கத்தை யொட்டி அரசாங்க ஊழியர்களென வந்ததே யன்றி, பிரமாணப்படி இல்லை. 18-வது நூற்றாண்டில் சித்தாந்தப்படுத்தப்பட்ட அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை யநுசரித்தே பிரான்ஸும் அமெரிக்காவும் அதிகாரங்களைப் பிரித்தன. ஜன சுதந்தர தத்துவத்தைக் கொண்டு அதிகாரப் பிரிவினைகள் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது. அமெரிக்காவில் ஐக்கிய அரசுகள் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் மேற்கூறிய அச்சித்தாந்தத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முதல் முதல் அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பிரித்து அரசியல் நடத்தப்பட்டது. அந்த அரசுகளுக்குரிய கவர்னர் பதவிகளும் சட்ட நிரூபண சபையும் தனித்தனியே தாராள தேறுதலைக்கொண்டு நடைபெற வேண்டுமென்று அரசாட்சிக்குரிய பிரமாணங்களில் சேர்க்கப்பட்டது. 1780-ம் வருஷத்திய மாஸசூஸெட்ஸ் அரசின் அரசாட்சிக்குரிய பிரமாணத்தில் வெகு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:—

"இந்த அரசுக்குரிய கவர்ன்மெண்டில் சட்ட நிரூபண இலாகா எக்காலத்தும் நிர்வாக பரிபாலன இலாகாவையும் நியாய இலாகாவையும் அடக்கி அதி



காரஞ் செய்யக்கூடாது; நிர்வாக பரிபாலன இலாகாவும் எப்பொழுதும் சட்ட நிரூபண இலாகாவையேனும் நியாய இலாகாவையேனும் அல்லது இரண்டையேனும் அடக்கி அதிகாரஞ் செய்யக்கூடாது. முடிவில், கவர்ன்மெண்டானது மனிதர்கள் பொருட்டின்றி சட்டப்பிரமாணங்களின் பொருட்டெனக் கருதவேண்டும்" என்று பகிரங்கப்படுத்தப்பட்டது. இப்பிரமாணத்தையே அமெரிக்கா ஐக்கிய அரசு அங்கீகரித்தது. சட்ட நிரூபணம் நிர்வாக பரிபாலனம், நியாயஸ்தாபனம் ஆகிய இம்மூன்று அதிகாரங்களும் ஒருவனிடமோ அல்லது சிலரிடமோ அல்லது பெருந்தொகையாளர்களிடமோ, பரம்பரை பாத்தியதையாகவோ, தெரிந்தெடுக்கப்பட்டோ அல்லது நியமிக்கப்பட்டோ வந்தாலும் கொடுங்கோன்மைக்கு இலட்சணமாகும் என்று ஐக்கிய அரசவாதிகள் கூறுகின்றனர். நிற்க, சட்ட நிரூபண சபையானது சனங்களால் தேறுதல் வழியாக ஸ்தாபிக்கப்பட்டும், நிர்வாக பரிபாலன அதிகாரிகள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டும் அல்லது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவராலோ அல்லது பலராலோ நியமிக்கப்பட்டும், சட்ட நிரூபண சபை நிர்வாக பரிபாலன அதிகாரிகள் ஆகிய இவர்களின் சம்பந்தமின்றி யதேச்சையாக உத்தியோகங்களை வகிப்பதும், ஊதியம் பெறுவதுமாக நீதிபதிகள் தெரிந்தெடுக்கப்பட்டும் வரினும், நிர்வாக பரிபாலன அதிகாரிகள் தங்கள் உத்தியோக பதவியிலிருக்கையில் செய்யும் குற்றங்களுக்கும் கடமைத்தவறுதல்களுக்கும் நியாயஸ்தலத்தின் முன்பாக நியாயாதிபதியால் விசா

ரிக்கப்படின் மேற்கூறப்பட்ட முறைமைக்கு முரண்
பாடாகுமெனச் சிலர் கூறுகின்றனர். இதுமிகையே.
உத்தியோக பதவியிலிருக்கும் ஒருவன் குற்றஞ் செய்
யின், குற்றத்திற்காக விசாரணை தொடங்குகையில்,
அவன் அவ்வுத்தியோக பதவியை யிழந்து சாதாரண
மனிதனாகிறான். சட்டமானது நிர்வாக அதிகாரிக
ளால் அமுலுக்குக் கொண்டு வந்ததும், நியாயஸ்தலங்
களால் விசாரிக்கப்பட்டும் வந்தாலும், அப்பொழுதும்
அச்சட்டமானது சட்ட நிருபண சபையாரால் நிர்மா
ணிக்கப்பட்டதாகும். அத்தகைய சட்டமும் நியாய
மற்றதும் கொடுங்கோன்மையாகவுமே யிருக்கும்.
நிர்வாக அதிகாரிகளும், நீதிபதிகளும் அச்சட்டத்தை
அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் படியாகத்
தானிருக்கும். ஆகவே, கவர்ன்மெண்டின் அதிகாரப்
பிரிவினைகளாலும் பொதுஜனங்களுடைய சுதந்தரம்
ஜவாப்தாரித்துவ மாகவில்லை யென்று வெகுவாய்ப் பிரிட்
டிஷ் இராஜதந்திரிகள் கூறுகின்றனர். பிரான்ஸு
தேசத்திலும் கவர்ன்மெண்டின் அதிகாரப் பிரிவினை
களின் கோட்பாடு அங்கீகரிக்கப்பட்டது. 'அதிகாரப்
பிரிவினை ஸ்தாபிக்கப்படாத சங்கங்களில் சட்டப்
பிரமாணமில்லை' என்று சுதந்தர நிர்ணயத்தில் 16-வது
ஷரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இப்போது விதியை
யனுசரித்தே பிரான்ஸு தேசத்தில், பிரமாணப்படி
ஸ்தாபிக்கப்பட்ட சட்ட நிருபண சபையைக் கலைக்க
அரசனுக்கு அதிகாரமில்லை யென்றும், மந்திரிகளை
யும், மற்ற நிர்வாக அதிகாரிகளையும், சட்ட நிரு
பண சபைக்கு நியமிக்கப்பட அருகதையற்றவர்களென்



றும், சட்டசபையைக் கூட்ட அரசனுக்கு அதிகார
மில்லையென்றும், பிரேரபணைகளைத் தள்ளவும் தீர்
மானங்களை நீக்கவுமான முழு அதிகாரமும் அரசனு
க்கு இல்லை யென்றும், ஆனால் அவைகளில் சிறிதளவு
அதிகாரம் உண்டென்றும், ஜனங்களால் தெரிந்தெடுக்
கப்பட்ட சிலர் மத்யஸ்தர்களாக ஏற்படுத்தப்பட்டன
ரென்றும், அரசாட்சிக்குரிய பிரமாணத்தில் தீர்மானிக்
கப்பட்டுள்ளது. நிற்க, 19-வது நூற்றாண்டில் கவர்ன்
மெண்டின் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு அநேக
மாக மாறிற்று. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரசாட்சிக்
குரிய பிரமாணங்களின் மாதிரியைக் கொண்டே உல
கத்திலுள்ள பல அரசுகள் அவ்வழியையனுஷ்டிக்க
முன்வந்தன. மாண்டஸ்கியூ காலத்திலிருந்து பிரிட்டிஷ்
மந்தண சபையைச் சேர்ந்த நபர்களிடமே சட்டநிரு
பண அதிகாரமும் நிர்வாக பரிபாலன அதிகாரமுமா
கிய இரண்டும் விர்த்தியடைந்து வருகிறது. ஆகவே,
இங்கிலாந்தில் ஜனசுதந்தரம் இல்லை யென்றாகிலும் பறிக்
கப்பட்டதென்றாகிலும் கூறமுடியாது என்று கூறு
கின்றனர். அமெரிக்கா, பிரான்ஸு முதலிய தேசங்
களைக் காட்டிலும் இங்கிலாந்தில் ஜன சுதந்தரம் குறை
வென்றும், பிரஜா சுதந்தரம் சரியானபடி காக்கப்பட
வில்லை யென்றும் நவீன இராஜ்ய நீதி வாதிகள்
கூறுகின்றனர். மந்தணசபையைச் சேர்ந்த 18 அல்
லது 20 அங்கத்தினர்களே பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நிர்வாக
பரிபாலன அதிகாரங்களைச் செய்து வருகின்றனர்.
தவிர, அவர்கள் சட்டநிருபணம் செய்யும் வழியை
யுங் காண்பிக்கின்றனர். சட்டநிருபண சபையாகிய

பார்லிமெண்ட் ஜனசபையிலுள்ள பெரும்பாலர் மந்தண சபையினர்களைத் தாங்கி ஆதரிப்பதினால் சட்ட நிருபணம் செய்யும் முறையையும் அவர்களே செய்கின்றனர். அங்ஙனம் பார்லிமெண்ட் ஜன சபையின் பெரும்பாலர் மந்தணசபை மெம்பர்களை ஆதரிக்காமற்போனால், உடனே அவர்கள் மந்தண சபையைவிட்டு விலகுகின்றனர். இராஜீநாமா செய்கின்றனர். நிர்வாக பரிபாலன அதிகாரிகள் சட்டநிருபணஞ் செய்யும் அதிகாரத்தை வகிக்கும்வரை உத்தியோகத்திலிருக்கின்றனர். அரசரும் மந்திரிகளும் நிர்வாக பரிபாலன அதிகாரங்களை நடத்துகிறார்களென்றும், பார்லிமெண்ட் சபைகள் சட்டங்களை நிருபணஞ் செய்கின்றனவென்றும் கூறப்படுகிறது. இங்கிலாந்தில் நியாயாதிபதி ஸ்தானங்கள்பட்டும் சுயேச்சையாகவே யிருக்கின்றன. நன்னடக்கையுள்ள பரியந்தமோ அல்லது ஜீவகாலயுள்ள மட்டுமோ அந்நீதிபதிகள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். ஆகவே, பிரிட்டிஷ் அரசாட்சியிலும் அதிகாரப்பிரிவினை ஏற்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது. மேலும், பார்லிமெண்டரி கவர்ன்மெண்டைக் கொண்ட பிரான்ஸிலும் இதாலியிலும் இப்பொழுது அவ்வரசாங்கங்களில் அதிகாரப் பிரிவினை கோட்பாடு அனுஷ்டிக்கப்பட்டுவருவதாகவும் காணப்படவில்லை. பிரான்ஸ் தேசத்தில் சட்டநிருபண சபையினரால் தலைவர் அல்லது அக்ராசனர் (President) தெரிந்தெடுக்கப்படுகிறார். அவருடைய மந்திரிகள் பிரமாணச் சட்டப்ர இல்லாவிடினும் வழக்கத்தைக் கொண்ட அனுஷ்டானப்படி சேம்பர் ஆப் டிப்யூடிஸ் (Chamber of Deputies)



என்று கூறப்படும் மகா சபையிலுள்ள பெருந்தொகையாளர்களின் பிரதிநிதிகளாகவே யாகின்றனர். இதாலியிலும் இராஜ்ய கட்சியைச் சேர்ந்த ஒரு சாராரால் நடத்தப்படும் மந்தணசபையைக் கொண்டே இதாலி தேச மன்னன் இராஜ்ய பரிபாலனஞ் செய்கிறான். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்திலும் அதிகாரப் பிரிவினை கோட்பாட்டின்படி யில்லாமல் அதிகாரங்கள் கூடிய வரையில் ஒன்று சேர்க்கப்பட்டே வருகின்றன. அதிகாரப்பிரிவினை கோட்பாட்டின் அனுஷ்டானம் மாறுதலுடன் ஐக்கிய அல்லது ஒப்பந்த கவர்ன்மெண்டில் நடந்து வருகிறது. என்றாலும், நிர்வாக பரிபாலன அதிகாரிகளுக்குச் சட்ட நிருபண அதிகாரத்தில் பங்கு இல்லாமலில்லை. காங்கிரஸ் மகாசபையால் தீர்மானிக்கப்படும் சட்டங்களை ரத்துசெய்யவோ அல்லது ஒதுக்கவோ தலைவர் (President) சிறிதளவு அதிகாரம் பெற்றிருப்பதாலும், தலைவருடைய ஸ்ரீமுகங்களால் சபையைக் கூட்டும் தொடக்க அதிகாரம் இருப்பதாலும், நிர்வாக பரிபாலனமும் சட்ட நிருபணமும் பிரிவினைக் கோட்பாட்டின் முறையைக் கொள்ளவில்லை என விளங்குகிறது என்று கூறுகின்றனர். தவிர ஸினேட் (Senato) என்னும் சட்டசபைக்கு உத்தியோக நியமனங்களும் உடன்படிக்கைகளை உறுதிப்படுத்தும் அதிகாரங்களு மிருப்பதால் அல்லது செய்துவருவதால், சட்டநிருபணசபை, நிர்வாக பரிபாலன சபைகளால் செய்யப்பட்ட சட்டங்களின் பிரமாண நியாயத்தைக் கொண்டு நீதிமன்றங்கள் தீர்ப்பு செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றன. ஆனால்

ஸ்டேட் கவர்ன்மெண்டு என்கிற அரசுகளில் (அதாவது அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்துடன் சேர்ந்துள்ள பல அரசுகள்) அதிகாரப் பிரிவினை கோட்பாடு, கூடியவரையில் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கவர்னர், நிர்வாக பரிபாலன உத்தியோகஸ்தர்கள், சட்ட நிரூபண சபையினர், நீதிபதிகள் ஆகிய அனைவரும் தனித்தனியே ஜனங்களின் தேர்தல்களில் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்களில், கவர்ன்மெண்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களைக் குற்றஞ்சாட்டி இதர ஜனங்களைப்போல நியாயஸ்தலங்களுக்குமுன் கொண்டுவரக்கூடாது; சட்ட நிரூபண சபையில் தீர்மானிக்கப்படும் சட்டங்களின் நியாய அநியாயங்களைப்பற்றிக் கேட்கவோ கூறவோ நீதிமன்றங்களுக்கு அதிகாரமில்லை. கவர்ன்மெண்டுக்கு மூன்றாவது அங்கமாகிய சட்ட நிரூபண சபையின் அதிகாரத்தினின்றும், நிர்வாக பரிபாலனத்தையும் நியாயஸ்தாபனத்தையும் காப்பாற்றவே, இம்முறை அத்தேசங்களில் அநுஷ்டிக்கப்படுகிறது. இந்த முறையினால் பிரஜைகளின் சுதந்தரம் குறைவுபடுவதுமல்லாமல் நிர்வாக பரிபாலன அதிகாரிகளுக்கு அதிக பலத்தையுமுண்டாக்கச் செய்கிறது. சட்ட நிரூபண சபைக்கு நிர்வாக பரிபாலன அதிகாரம் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்னும் விஷயமாகப் பலத்த அபிப்பிராய பேதங்கள் உண்டாயிருக்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, சட்ட நிரூபண சபைக்கு நிர்வாக பரிபாலனம் கீழ்ப்பட்டிருப்பதுடன், சட்ட நிரூபண சபைக்குப் புறம்பாகவோ அல்லது அதிகமாகவோ ஒன்றைச் செய்ய அதிகார சுதந்-



தரம் பெற்றிருக்கக் கூடாது. நியாயஸ்தாபனம் மேற்கூறிய இரண்டுக்கும் கட்டுப்படாமல் பிரத்யேகமாக சர்வ சுதந்தரங்களையும் பெற்றிருக்க வேண்டும். சட்ட நிரூபணசபையின் ஆதரவாலும் நியாயஸ்தாபனத்தின் தீர்மானத்தாலுமே பிரஜைகளின் சுதந்தரம் நிலைபெற்று நிற்கும். பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளிற் பலர் தற்காலத்தில் இங்கிலாந்திலுள்ள மந்தணசபை (Cabinet)க்குச் சட்டநிரூபணம், நிர்வாக பரிபாலனம், நியாயஸ்தாபனம் ஆகிய இம்மூன்று அதிகாரங்களின் சேர்க்கையிருந்து வருவதனால் அரசாட்சி வெகு நன்றாக நடத்தப்பட்டு வருகின்றதெனக் கூறுகின்றனர். இங்கிலாந்து தேசத்தார், தங்கள் அரசாட்சி முறையை எவ்வளவு சிலாகித்துக் கூறினபோதிலும், மந்தணசபைக்கு ஏற்பட்டிருக்கும் அம்மூன்று அதிகாரங்களின் சேர்க்கை பிரஜா சுதந்தரத்திற்குப் பாதகம் என்பது நமது அபிப்பிராயம். இங்கிலாந்தில் பிரஜா சுதந்தரம் அவ்வளவு முதிர்ந்ததாகவும் தாராளமாகவும் இருப்பதாகவுந் தெரியவில்லை. பூர்வமிருந்த அரசாட்சி முறையைவிட தற்கால முறை சிறப்பாக இருந்தபோதிலும் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் தீவிர இராஜீய உணர்ச்சிக்கு இம்முறை அவ்வளவு சிலாக்கியமென்று கூற இடமில்லை.

# 12. சட்ட நிரூபண சபை

முன் அத்தியாயத்தில் அரசாங்கத்தின் அதிகாரப் பிரிவினைகளைப்பற்றிப் பொதுவாகவும், அவைகளின் அபிப்பிராய பேதங்களையும் ஒருவாறு கூறினோம். இப்பொழுது சட்டநிரூபண சபையைப் பற்றி ஆராய்வோம். நிர்வாக பரிபாலனமானது முக்கியமாக அரசாங்க காரியங்களைப் பற்றிய அனுஷ்டானமாகும். இதற்குக் காரியப் பொறுப்பு அல்லது கருமப்பொறுப்பு எனப்படும். சுறுசுறுப்பும் காரியங்களை ஒன்று சேர்த்து ஒழுங்காகச் செய்வதும் இதற்கு முக்கியமாம். நியாய ஸ்தாபனத்திற்குச் சரியான சட்டப் பிரமாணங்களைத் தக்கபடி பிரயோகிப்பதும், நியாய அநியாயங்களின் விவேசனங்கொண்டு தர்க்க சாஸ்திர முறைப்படி சட்டங்களையும் பிரமாணங்களையும் தக்கபடி நிர்மாணிப்பதுமே முக்கியமாம். சட்ட நிரூபணமோ அவ்விரண்டினும் வேறதாய் ஆராய்ச்சியை மேற்கொண்டு நிற்கும். சட்ட நிரூபணத்திற்கு அநேகர் ஆவசியம். ஏனெனில் ஒவ்வொருவரும் அவரவருக்கேற்ற சூட்சும புத்தியைக் கொண்டு ஆராய்ச்சி செய்வதால் பலர் இச்சட்ட நிரூபணத்திற்கு ஆவசியமாகும். பல நோக்கத்தையும் பற்பல எண்ணங்களையும், பற்பல அபிப்பிராயங்களையும், பற்பல விஷயங்களின் அநுபவ ஆராய்ச்சியையுங் கொண்ட பல சமூகத்தினர் சட்ட நிரூபண சபைக்கு இருப்பது முக்கியமாகும். சட்ட நிரூபண சபைக்கு இவ்வளவு அங்கத்தினர்கள்தானிருக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை. மனிதர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க,



விஷய ஆராய்ச்சி மேன்மேலும் விர்த்தியாகும் என்று கூறப்படுகிறது. 1789-ம் வருடத்தில் ஏற்பட்ட பிரான்ஸ் மகாசபை 1200 அங்கத்தினர்களைக்கொண்டிருந்தது. பிறகு, அச்சபை வெறும் கம்பளிக் கூட்டமாகிக் காரியங்கள் ஒன்றும் நடைபெறாமலிருந்தது. தற்பொழுது உலக இராஜ்யங்களில் உள்ள மகாஜன சபைகளில் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரிலுள்ள ஜனப்பிரதிநிதி மகாசபையில் (House of Representatives) 1913-ம் வருடத்தில் 435 அங்கத்தினர்களிருந்தனர். பிரிட்டிஷ் சனசபை என்கிற காமன்ஸ் பார்லிமெண்ட் சபையில் 670 அங்கத்தினர்களிருக்கின்றனர். பிரான்சு மகாசனசபையில் (Chamber of Deputies) 597 அங்கத்தினர்களிருக்கின்றனர். இடாலி மகா சபையில் 508 அங்கத்தினர்களிருக்கின்றனர். ஸ்பெயின் தேசத்து காங்கிரஸ் என்னும் மகாசபையில் 406 அங்கத்தினர்களுமிருக்கின்றனர். இவ்வளவு சங்கியையைக் கொண்ட மகா சபைகளில் தேசகாரியங்கள் சரிவர நடைபெறுமென்னும் எண்ணத்தைக் கொண்டு அச்சபைகளை நடத்த சில முறைகள் அநுஷ்டிக்கப்பட்டன. இத்தகைய பெரிய சபைகளில் மூலைக்குமூலை அங்கத்தினர்கள் எழுந்திருந்து கண்டபடி பேசுவதும், பேசினவனே திரும்பத் திரும்பப் பேசுவதும் ஒழுங்கின்றி வெறும் சந்தைக் கூட்டமாக முதன் முதல் இருந்துவந்ததினால், பல மேதாவிகள் ஒன்று சேர்ந்து சபையின் காரிய நடவடிக்கைகளை ஒழுங்காக நடத்தச் சில நிபந்தனைகளை யுண்டாக்கிப் புதிய முறைகளை ஸ்தாபிக்கப்பட்டன. சட்டத்தை யுண்டாக்குவதற்குரிய அல்லது சட்டத்தை யுண்டா

க்குவதற்கான காரியங்கள் எவையோ அவைகளை மட்
டும் குறிப்பாகச் செய்து முடிப்பதே சபையின் முறை
யாகும் என்று பலரறிந்து அவ்வண்ணம் செய்தனர்
உலகத்திலுள்ள இராஜ்யங்களைச் சேர்ந்த சட்ட சபை
கள் எல்லாம் முக்கியமான மூன்று இலட்சியங்களைப்
பிரதானமாகக் கொண்டிருக்கின்றன. (1) கலகமில்
லாமல் ஒழுங்காகவும் சாமர்த்தியமாகவும் காரியங்களை
முடித்தல், (2) தலைமாடு கால்மாடு தெரியாமல் ஆத்தி
ரத்துடனும் விபரீத புத்தியுடனும், குறுகின நோக்கத்
துடனும் காரியங்களைச் செய்யாமற்படி தடுத்தல் (3)
பிரயோசனமில்லாத வாதங்களின் விருத்தியைத் தடுத்
தல் ஆகிய இவையாம். 'ஒரு பருவத்தில் கூடும் மகா
சபையின் அநுஷ்டான முறையை நன்கு கவனிப்பதே
ஒரு சுறுசுறுப்புள்ள அங்கத்தினருடைய இலட்சணம்
என்று மிஸ்டர் ப்ரைஸ் அவர்கள் கூறுகிறார். மற்ற,
சட்ட நிரூபண சபையில் ஒரு மசோதா சட்டமாகத்
தீர்மானமாக வேண்டுமானால், அது மூன்று முறை
தனித்தனி படிக்கப்படவேண்டும். ஏனெனில், சட்ட
நிரூபண சபையார் அவசரப்பட்டோ அல்லது மிதமிஞ்
சின குதூகுலத்தைக் கொண்டோ ஒரு மசோதாவைச்
சரிவர ஆராய்ச்சி செய்யாமல் இதுவென்று சட்டமாகத்
தீர்மானிக்காமலிருப்பதற்காக இந்த முறை யனுஷ்
டிக்கப்பட்டது. பார்லிமெண்ட் காமன்ஸ் சபையில்
யாதாமொரு அங்கத்தினர் ஒரு மசோதாவைக்
கொண்டு வரவேண்டுமானால், அவர் முற்கூட்டியே
தனது எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டும். அதாவது
முன் எச்சரிக்கைப் படுத்தவேண்டும். பிறகு அம்



மசோதாவைச் சபைக்கு முன் கொண்டுவர உத்தரவு
கேட்க வேண்டும். பிறகு சபையார், மசோதாவைக்
கொண்டுவர்தவரும் அவருக்குத் துணையாக நின்றவர்
களுமாகச் சேர்ந்து அம் மசோதாவைத் தயாரித்து
வரட்டும் என்று உத்தரவு செய்வார்கள். உடனே
அம் மசோதாவைத் தயாரித்து அவர் பிரசங்க மே
டைக்கு வந்து மசோதா பத்திரத்தைக் கொடுப்பார்.
கொடுத்தவுடன் சபைப்பிரசங்கி (Speaker) மசோ
தாவைக் கொடுத்தவருடைய பெயரை விளித்து 'ஒரு
மசோதா ஐயா' என்று அழைப்பார். உடனே அம்
மசோதா சபைக்கு வரும். வந்ததும், பிரசங்கியார்
சபை குமாஸ்தாவிடம் கொடுத்து அம் மசோதாவின்
பெயரை உரக்கப்படிப்பார். பிறகு மசோதா முதல்
தடவை படிக்கப்பட்டது என்று கூறப்படும். அம்
மசோதா திருத்தப் பிரேரபணைகளும் வாதங்களு
மின்றி உள்ளபடி அச்சிடப்படும். இரண்டாம்தடவை
மசோதா படிக்கப்படும், என்று ஒரு நாளைக் குறிப்
பிடப்படும். குறித்த அந்த தினத்தன்று அம் மசோதா
கொண்டு வரப்படும். பிறகு 'மசோதா இரண்டாம்
முறையாகப் படித்தாய்விட்டது' என்றறியுமாறு
வோட் எடுக்கப்படும். இவ்வளவு தூரம் அம்மசோதா
வந்ததும், சட்டசபை அல்லது பார்லிமெண்ட் சபை
யின் எல்லா அங்கத்தினர்களையும் கொண்ட கமிட்டி
க்கு ஒப்புவிக்கப்படும். இங்கு அம் மசோதாவைப்
பற்றி நன்கு வாதிக்கப்படும். நன்கு வாதிக்கப்பட்ட
துடன் பிரிவு பிரிவாக வோட் எடுக்கப்படும். திருத்தங்
களும் செய்யப்படும். பிறகு கடைசி முடிவுக்காக

இன்னொரு நாள் குறிப்பிடப்படும். திருத்தத்துடன் நன்றாய் ஆராய்ச்சி செய்யப்பட்ட மசோதா சபைமுன் கொண்டுவரப்படும்; மீண்டும் திருத்தப் பிரேரேபணைகள் கொண்டு வரப்பட்டாலன்றி, அம்மசோதா மூன்றுவது முறை கடைசியாகப் படிக்கப்படும். இதற்குப் பிறகும் அம் மசோதா பிரபு சபையாகிய பார்லிமெண்ட் லார்ட் சபையில் திருத்தப்படாமல் மறுபடியும் புனராலோசனைக்கு வரும். மேற்கூறிய படி செய்வது சட்ட நிரூபண சபையின் முறையில் ஒன்று. இன்னொரு முறையுமுண்டு. அது சட்ட நிரூபணசபையின் காரியங்களை அச்சட்ட நிரூபண சபையைச் சேர்ந்த பல கமிட்டிகளுக்கு விடுவது. இதனுடைய நோக்கம் என்னவெனில், காரியங்களின் முடிவு துரிதமாகும் என்னும் காரிய அதிகாரத்தைப் பெருக்குவதற்கும் என்றுமாம். இந்த முறையானது அமெரிக்காவில் நன்கு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. பிரான்சு தேசத்தின் முறை வேறு விதமானது. மகாசபையைச் சேர்ந்த எல்லா அங்கத்தினர்களையும் 11 பிரிவுகளாக பிரிக்கப்படும். அங்ஙனம் பிரிக்கப்பட்ட பிரிவுகளிலிருந்தும் விசேஷ கமிட்டி யொன்று சபைக்குமுன் கொண்டு வரப்படும். ஒவ்வொரு மசோதாவுக்கும் தனித்தனி தெரிந்தெடுக்கப்படும். இதர, சட்டசபையில் வாதங்களை நிறுத்த சிலமுறைகள் அனுஷ்டிக்கப் படுகின்றன. ஒரு மசோதாவைக் குறித்தோ அல்லது ஒரு விஷயத்தைக் குறித்தோ சட்டசபைகளில் வாதமுண்டாகி வெகு நாழிகை வரை முடிவு பெறுமலிருந்தால், அல்லது இன்னும் வெகு நாழிகையாயினும் முடிவு பெறாது என்றிருந்



தால், அவ்விஷயத்தைப் பற்றிய வாதங்களை முடிவிக்குக் கொண்டுவரப்படும். பின்னர், அது விஷயமாக வோட் எடுத்து முடிவுபெறும். அமெரிக்காவிலுள்ள ஸினேட் என்கிற ஜனசபையில் வாதத்தை நிறுத்துவது மனிதனுடைய வாக்கு சுதந்திரத்தைப் பறிப்பதாகும் எனக் கொண்டு ஒருமுறையையும் அனுஷ்டிக்கிறதில்லை. ஆனால் ஜனசபையின் பிரதிநிதி சபையில் மட்டும் வாதத்தை நிறுத்த ஒருவர் பிரரேபணைகொண்டுவந்து பெருந்தொகையாளர் இஷ்டப்பட்டால், அது உடனே நிறுத்தப்படும். இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்ட் காமன்ஸ் சபையில் வாதத்தை நிறுத்தும் அனுஷ்டானம் வெகுநாள் வரை இல்லாமலிருந்து, பின்னர் கிளாட்ஸ்டன் அவர்கள் இரண்டாம் முறையாக மந்திரி பதவியிலிருந்து பரிபாலிக்க காலத்தில் ஐயர்லாந்து தேசப்பிரதிநிதி அங்கத்தினர்களின் செய்கையால் உண்டாயிற்று. ஆகவே, அன்று முதல் வாதத்தை நிறுத்த வேண்டும் என்கிற பிரேரேபணையை ஒருவர் சபைமுன் கொண்டுவரலாம். அப்பொழுது ஓட்டுக்கு விடவேண்டு மென்கிற பிரேரேபணை விஷயமாக அதற்கு இணங்குவதா இல்லையாவென்று யோசிக்கப் பேசுபவருக்கு அவகாசம் கொடுக்கப்படும். தவிர, சபைக்குமுன் வாதத்திலிருக்கும் தீர்மானங்களில் பிரிவு பிரிவாகப் பிரித்தும் வாதத்தை நிறுத்த ஓர் முறை அனுஷ்டிக்கப்படுகிறது. இதற்குப் பிரிவு வாத நிறுத்தம் (Closer by Compartments) என்பர். இதில் ஆதி தீர்மானத்தைப் பிரிக்கப்பட்ட ஒரு பிரிவை எடுத்துக்கொண்டு அதை வாதஞ் செய்

யாமலே முடிவுக்குக் கொண்டு வருகிறதா அல்லது மசோதாவுக்கோ அல்லது மசோதாவின் பிரிவுகளுக்கோ கால நிர்ணயம் உண்டாக்குவதா என்னும் விஷயமாகச் சபைக்குமுன் ஒரு நிர்மானமாகக் கொண்டுவரப்படும். சட்ட நிரூபண சபையின் காரியங்கள் சரிவர நடைபெறுவதற்கும், சட்டங்கள் ஒழுங்காக வாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுவதற்கும், உலகிலுள்ள வல்லரசுகளும் மற்ற பல சிற்றரசுகளும் சட்ட சபையை இரு பிரிவாகப் பிரித்திருக்கின்றன. இதற்கு சட்டசபை த்வையம் என்பர். ஐரோப்பா கண்டத்தில் கிரீஸ் நீங்கலாக மற்ற எல்லா தேசங்களிலும், அமெரிக்காவிலும் இம்முறையாக சட்டசபை இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் தேசத்திலுமுண்டு. ஒரு தேசத்திற்கு சட்டசபை யிருப்பின், அது பொறுப்பற்றதாயும், தீமையைக் கொடுக்கக் கூடியதாயுமிருக்கும். தவிர, வாதகோரியாயும் இணையற்ற பிரசங்கியாயுமிருக்கும் மனிதர்களின் வழியாகவே அது நிற்கும்: தற்கால குதூகல உணர்ச்சியினால் கட்டுப்படவும் ஆகும்; பிரஜா சுதந்தரத்தைக் கொண்டு நிற்கும் பிரஜா பரிபாலன வழிக்கு இம்முறை அவ்வளவு சாதகமாக யிராததுடன், சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்படும் பல அபிப்பிராயங் கொண்டவர்களுக்கும் பல வகுப்புக்காரர்களுக்கும் தக்க அவகாசம் கொடுப்பதில்லை. தவிர, சட்டங்களைத் தீர்மானிக்கும் விஷயத்தில் ஒரே சபையாகவிருந்தால், அச்சட்டங்களுக்குப் பெருமையும் குறைகிறது. ஆகவே, ஜனங்களிடமிருந்து அதிகாரங்களை இரண்டு



சபைகளும் ஏற்றுக்கொண்டு காரியங்களைச் செய்யலாம். இந்த பிரிவினையானது ஜாதியைக் கொண்டாகிலும் அல்லது வகுப்பைக்கொண்டாகிலும் ஏற்படுவதல்ல; இப்பிரிவினை சட்டங்களின் ஒழுங்கை உத்தேசித்தே ஒருசபைமீது மற்றொரு சபை நன்கு பரியாலோசனை செய்ய அவகாசமிருக்குமென்றே யுண்டாயிற்று. சிலர், இருசபைக்கு ஆவசியமில்லையென்றும், இருசபையின் பிரசன்னத்தால் வேற்றுமையும் ஏற்றத்தாழ்ச்சியு முண்டாகிற தென்றுங் கூறி சட்டசபைத் த்வைத தத்துவத்தைக் கண்டனஞ் செய்கின்றனர். எப்படியிருப்பினும், உலகில் பல அரசுகள் சட்ட சபையின் த்வைத தத்துவத்தை யநுசரித்தே வருகின்றன. நிற்க, சட்டசபையின் த்வைத தத்துவத்தை யநுசரித்த அரசுகளில் இரண்டாவது சபைக்கு மேல்சபை (Upper House) என்பர். மேல்சபை என்பதினால், மற்ற சபையைக் காட்டிலும் ஓர் உயர்வைக் கொண்டதாக எண்ணக் கூடாது. சரித்திரத்தை யொட்டி அப்பெயருண்டாயிற்று. மேல் சபையானது, பாரம்பர்ய ஸ்தானத்தைக் கொண்டவர்களை யேனும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களை யேனும், ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களை யேனும், அல்லது இம்மூன்று வகையின் சேர்க்கையைக் கொண்டவர்களை யேனும் பற்றி ஏற்படும். மேற் கூறிய நால்வகையில் முதன்மையாக நிற்கும் பாரம்பர்ய முறையைப் பலர் இக்காலத்தில் அங்கீகரிக்கவில்லை. தவிர, இராஜரீக சாஸ்திர முறைக்கு அது ஒவ்வாததென்பதும் சிலருடைய கொள்கை. இது 1889-ம் வருடத்

தில் ஜப்பான் தேசத்தில் பிரபுசபை உண்டான காலத்
தில் அநுஷ்டிக்கப்பட்டது. அனேக தேசங்களில் இந்த
பாரம்பர்ய முறையானது சரித்திரத்தை யொட்டியும்,
அரசாங்க பரிணாமத்தை யொட்டியும் உண்டாகி, மனித
சமூகத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் வித்தியா
சத்திற்கேற்ப வாழ்க்கையின் உயர்வு தாழ்வைக்குறித்து
அது ஏற்பட்டது. இங்கிலாந்திலுள்ள லார்ட் சபை
என்கிற பிரபுசபை இம்முறையைப் பற்றியதேயாகும்.
இந்த சபையை எடுத்து விடவேண்டும் என்று பல
தீவிர இராஜீய கட்சிக்காரர்களும் சமூக சமத்துவ வாதி
களும் கூறுகின்றனர்; தவிர, லார்ட் ரோஸ்பரியும்
கிளாட்ஸ்டனும் பல சீர்திருத்தங்களைக் கொண்டு சபை
யைத் திருத்த முன் வந்தனர். லார்ட் சபையில் வெறும்
மிதவாதிகளாகவே யிருந்து இராஜீயவழியில் யாதொரு
சீர் திருத்தத்தையும் விரும்பாமல் "பழைய கருப்பன்
கருப்பனே" என்றவாறு இருப்பதினாலேயே பல தீவிர
கட்சியினர்கள் கண்டனஞ் செய்கின்றனரேயன்றி, பிரபு
சபையின் ஸ்தாபனம் அல்லது உண்டான வகையைப்
பற்றி அவர்கள் கண்டிக்கவில்லையென்று பல ஆங்கில
இராஜரீக சாஸ்திரக்ஞர்கள் கூறுகின்றனர். பிரிட்டிஷ்
பிரபு சபை (House of Lords) யானது அனேகமாக
பாரம்பர்ய முறையைக் கொண்டேயுண்டாயிற்று. அச்
சபையில் 600 அங்கத்தினர்களிருக்கின்றனர். இதில்
4 மெம்பர்கள் ஜீவிய காலம் வரை சாசுவத அங்கத்தினர்
களாக நியமிக்கப்பட்டனர். 4 நீதி சாஸ்திரக்ஞர்கள்.
(இவர்கள் சபைக்குச் சட்டங்களின் நியாய அபிப்பிராயங்
களைக் கூறுவதற்காக) கிறிஸ்துவ மதத்தைச்சேர்ந்த



பாதிரிமார்கள் 26. ஸ்காத்லாந்து பிரபுக்கள் 16. ஐயர்
லாந்து பிரபுக்கள் 28. மற்ற அங்கத்தினர்கள்
யாவரும் யுனைடெட் கிங்டம் என்னும் (இங்கி
லாந்து, ஸ்காத்லாந்து, ஐயர்லாந்து, வேல்ஸ்) ஐக்கிய
இராஜாங்கத்தைச்சேர்ந்தவர்கள். பிரபுபட்டம் பெற்ற
ஒருவன் லார்ட் சபையில் ஸ்தானம் பெற உரிமை பெற்ற
வனாகிறான். முதல் நான்கு ஸ்தானங்கள் தவிர மற்ற
எதாகிலும் ஒரு ஸ்தானத்தையேனும் சாசுவித ஸ்தான
மாக்க அரசாங்கத்துக் கேனும் அரசனுக்கேனும் அதி
காரமில்லை. ஆஸ்திரியா, ஸ்பெயின், ஹங்கேரி, பிரஷ்யா
முதலிய தேசங்களில் பிரபுக்களும், இராஜ வம்சத்தைச்
சேர்ந்தவர்களுமாகப் பலர் சாசுவித ஸ்தானம் பெற்றிரு
கின்றனர். பிரஷ்யாவில், நிலச்சுவான்தார்களையும் வித்யா
சங்கத்தையும், ஸ்தல சுய ஆட்சி சங்கங்களையும் ஆதரிக்
கப் பிரதிநிதி மெம்பர்கள் சிலரும் தெரிந்தெடுக்கப்பட்டு
லார்ட் சபை என்கிற பிரபுசபையில் அங்கத்தினர்களாக
ஸ்தானம் பெறுகின்றனர். ஸ்பெயின் தேசத்திலும்
இவ்வண்ணமே. பிரான்சு, ஸ்விட்ஜர்லாந்து, பெல்
ஜியம், ஸ்விடன், இத்தாலிமுதலிய தேசங்களில் பாரம்
பர்ய அங்கத்தினர்களே கிடையாது. சிலதேசங்களி
லுள்ள சபைகளில் நிர்வாக அரசாங்கத்தாரால் நியமிக்
கப் பட்ட அங்கத்தினர்களே யிருக்கின்றனர். பலர்
அரசாங்க நியமனத்தை யாதரிக்கின்றனர். ஜனங்க
ளால் தேறுதல் பெற்று தெரிந்தெடுக்கப்படும் அங்கத்
தினர்கள் வெறும் பேச்சுக் காரர்களாகவும், ஜனங்களைச்
சந்தோஷிப்பதில் கருத்தைக் கொண்டவர்களாகவுமே
பலர் ஏற்படுவதால், அவர்கள் சபைகளில் வருங்காலத்

தில் ஏற்படும் சட்ட நிர்மானங்களுக்கும் மற்ற வாதங்களுக்கும் யோக்கியதையின்றி யிருக்கின்றனரென்றும், சட்ட ஞானமும் முதிர்ந்த அநுபவமும் அறிவும் பாண்டித்தியமும் பெற்றவர்கள் அநேகமாக ஜனங்களுடைய தேர்தல்களில் தெரிந்தெடுக்கப்படுவதில்லையென்றும் இக்காரணங்களாலேயே அரசாங்க நியமனத்தை ஆதரிக்கின்றனர். உதாரணமாக, இத்தாலி தேசத்தில் அரசாங்கத்தார் நியமனஞ் செய்கின்றனர். அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகமாயினும், கல்வி பாண்டித்தியம் பெற்றுக் கீர்த்தி பெற்றாயினும், சாஸ்திர ஞானத்தில் இணையற்றவர்களென்னும் பெயர்பெற்றாயினும், தேச நன்மைக்காக உழைப்பவர்களாயினும் உள்ளவர்களையே இத்தாலி தேச அரசாங்கத்தார் பிரபுசபை என்கிற மேல் சபைக்கு நியமனஞ் செய்கின்றனர். இத்தாலியைப்போலவே, கனடா தேசத்திலும் நியமனமுறையுண்டு. தேர்தல் முறையைக்கொண்டு அமெரிக்காவில் தெரிந்தெடுக்கப்படுகிறது. இந்த முறையில் அவர்கள் பலவித கஷ்டங்களைக் கொள்ளுகின்றனர். என்றாலும், ஒப்பந்த அரசுகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டு அவைகளுக்குப் பிரதிநிதியாக மேல்சபையில் ஸ்தானம் பெறுகின்றனர். கீழ்சபையில் பொது ஜனங்களால் ஜனத்தொகை விவரணப்படி தெரிந்தெடுக்கப்பட்டு ஸ்தானம் பெறுகின்றனர். பிரான்ஸ் தேசத்தின் முறை வேறு மாதிரியானது. கீழ்ச்சபைக்கு நேரான தேர்தலையும், மேல்சபைக்கு மறைவான தேர்தலையும் அநுசரிக்கப்பட்டது. சமஜனத்தொகைக் கொண்ட ஜில்லாக்களின்றும் சேம்பர் ஆப் டிப்யூடீஸ் என்கிற மகாஜன



சபைக்குத் தேர்தல்கள் நடைபெறும்; ஸினேட் என்கிற மேல் சபைக்கு பிரான்ஸ் தேசத்தின் ஒவ்வொரு இலாகாவினின்றும் ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஜில்லா கௌன்ஸில், முனிசிபாலிடி முதலிய அங்கத்தினர்களின் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கப்படும். மேற்கூறிய இருசபைகளுக்கும் தேர்தல் விஷயமாகத் தேர்தல் எல்லைகளையுண்டாக்கித் தேர்தல் நடத்தப்படும்; தவிர, ஒரு சபைக்கு மற்றொரு சபையின் காலம் குறைக்கப் பட்டும் இருக்கிறது. அதாவது ஒரு சபைக்கு ஆறுவருடமும் மற்றொரு சபைக்கு இரண்டு வருடமுமாக கால நிர்ணயம் தேர்தலுக்கு ஏற்படுத்தப்படும். மற்றும், சபையிலுள்ள அங்கத்தினர்களைத் திடீரென்று விலக்கிப் புதிய தேர்தலை ஏற்படுத்தாமல் சபையின் கண்ணுள்ள அங்கத்தினர்களிற் சிலரை ஒரு வருடத்திலும், மற்றுஞ் சிலரை மற்றொரு வருடத்திலுமாகக் கொண்டு தேர்தல் நடைபெறும். அமெரிக்காவிலுள்ள ஸினேட் சபையில் இரண்டு வருடத்திற்கொரு முறை சபையின் மொத்த மெம்பர்களில் மூன்றில் 1 பங்கு அங்கத்தினர்களுக்குப் புதிய தேர்தல் உண்டாகும். சபைகளைப் பற்றிய சம்பந்தங்களையும் அவைகளுக்குள்ள அதிகாரங்களையும் கவனிப்போம். சட்ட நிரூபண விஷயத்தில் அவ்விரண்டு சபைக்கும் ஒரே வித அதிகாரமும் சம அந்தஸ்தும் உண்டு. எந்த சபையும் அந்த மசோதாவைக் கொண்டுவரலாம்; அங்ஙனம் கொண்டுவந்த மசோதா மற்றொரு சபையின் அநுமதியின்றி அது சட்டமாகாது. எந்த சபையும் அந்த மசோதாவுக்குத் திருத்தப் பிரேரேபணைகள் கொண்டுவர

லாம்; ஆனல், அது மற்றொரு சபையின் அனுமதியின்றி ஸ்திரமாகாது. பணவிஷயமாக வருவாயிலே யேற்படுத்தவோ அல்லது பணத்தைச் செலவழிக்கவோ வரும் மசோதா விஷயமாக, உலகத்திலுள்ள முக்கிய அரசுகளில் அநேகமாக மேல் சபைக்கு அதிகாரம் குறைக்கப் பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் 14-வது நூற்றாண்டிலிருந்து தேசத்தின் பொக்கிஷ அதிகாரமானது காமன்ஸ் சபை என்கிற மகா சன சபைக்கே யிருந்து வருகிறது. மேல் சபையில் அதிகார வர்க்கத்தினர்களின் வழியையும் பிரபுக்களின் வழியையும் தழுவினவர்களும் நிர்வாக பரிபாலன அதிகாரிகளுமாக இருப்பதால், அதிகார முறைக்கு வேண்டிய திரவிய விநியோகம் அல்லது திரவிய வரவு முதலியவைகளைப் பற்றி மசோதாவொன்றை லார்ட் சபையார் கொண்டுவந்தால், காமன்ஸ் சபையார் வாதமிட்டு அங்கீகரிக்காமற் போனல், அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பித்து விடக்கூடும் என்பதை முற்கூட்டி யறிந்தே பொக்கிஷ அதிகாரத்தை காமன்ஸ் சபைக்கு அதாவது பொதுசன அதிகாரத்திற்கே விடப்பட்டது. ஆகவே, 1911-ம் வருடத்திய பார்லிமெண்ட் ஆக்ட்படி லார்ட் சபைக்குப் பணவிஷயமாக யாதொரு மசோதாவைக் கொண்டுவரவும், திருத்தவும், நிராகரிக்கவுமான ஒரு அதிகாரமும் கிடையாது. ஜர்மெனி சாம்ராஜ்யத்திலும் ஸ்விட்ஸர்லாந்திலும் இரண்டுசபைக்கும் பணவிஷயமாகக் கூட சம அதிகாரமுண்டு. இரண்டு சபையும் அநேகமாக சம அதிகாரத்தை வகித்திருந்த போதிலும், காமன்ஸ் சபை என்கிற கீழ்ச் சபை எப்பொழுதும் சற்று பலமடைந்தேயிருக்கும்.



இரண்டு சபைக்கும் யாதாமொரு விஷயத்தில் அபிப்பிராயபேத முண்டாகிச் சச்சரவு ஏற்படுமானல், பொதுசன அபிப்பிராயம் எப்பொழுதும் கீழ்ச் சபை யென்கிற காமன்ஸ் சபையையேயாதரிக்கும். அமெரிக்காவில் மட்டும் ஸினேட் சபைக்குச் சற்றே பலமதிகம். ஏனெனில், பல அரசுகளின் பிரதிநிதிகள் இருப்பதால் பல அரசுகள் அதை ஆதரிக்கும். காமன்ஸ் சபைக்கும் லார்ட் சபைக்கும் இங்கிலாந்தில் அபிப்பிராய பேதமுண்டாகி காமன்ஸ் சபைக்கு இடங்கொடுத்து நடக்காமலிருந்தால், உடனே பொதுசன அபிப்பிராய பலத்தின் ஆதரவால், லார்ட் சபையைக் காமன்ஸ் சபைக்குக் கீழ்ப்படியும்படி செய்தோ அல்லது புதிய பிரபுக்களை யுண்டாக்கி இப்பொழுதுள்ள லார்ட் சபையைக் கலைத்தோ அரசாங்கம் தன் கடமையைச் செலுத்த வேண்டியதாயிருக்கும் என்று டைஸி கூறுகிறார். ஆகவே, காமன்ஸ் சபையினரை எதிர்க்க லார்ட் சபையினருக்கு உரிமையில்லை என்பதாக ஏற்படுகிறது. ஆஸ்திரேலியாவில் இருசபைகளும் பண விஷயமாக மசோதாவைத் திரும்பத் திரும்பப் பிரேரேபனை செய்து கொண்டு நிராகரித்துக் கொண்டும் ஒரு முடிவுக்கும் வராமலிருந்தால், உடனே, அவ்விருசபைகளையும் கலைத்து விட கவர்னர் ஜனரல் அதிகாரம் பெற்றிருக்கிறார். பிறகு புதிய தேர்தல்களுண்டாகி அந்த புதியசபைகளும் பழையபடியே செய்யுமானல், கவர்னரவர்கள் இரு சபைகளையும் ஒன்றுகக் கூட்டி வோட் எடுத்துப் பிறகு அவ்வோட்டின் பேரில் ஏற்படும் முடிவே முடிவாகும் என்று தீர்மானித்துக் கூறுவர். நிற்க, பொது சனங்களாலேயே தோ

கச் சட்டங்கள் செய்யும் ஒரு முறையுண்டு. எல்லா சனங்களாலேயோ அல்லது சனங்களுக்குள்ளே வோட்டுரிமை பெற்றவர்களாலேயோ சட்டங்கள் நிர்மானிக்கப்படுவதென்பது பிரஜாதிபத்ய சுய ஆட்சி அரசாங்கங்களின் நோக்கமாகும். ருஸோ அவர்கள் இம்முறையே பிரஜைகளின் அதிகாரத்தைக் காட்டக்கூடியதெனக் கூறியுள்ளார். இம் முறை பண்டைகாலத்திருந்தே தெரிந்ததுதான். கிறிஸ்து பிறப்புக்கு 6 நூற்றாண்டுகளுக்கு முன்னமே ஏதன்ஸ் என்னுமிடத்தில் எல்லா சனங்களும் சேர்ந்த ஒரு மகாசபை யேற்பட்டு இராஜ்ய காரியங்களைச் செய்து வந்தது. ரோம் சாம்ராஜ்யமும் அவ்வண்ணமே மகா சபை யொன்றைக் கொண்டிருந்தனர். சிறிய சிறிய அரசுகளிலும், விஸ்தீரணக் குறைவுள்ள அரசுகளிலும் இந்த முறை திருப்திகரமாக யிருந்தபோதிலும் அகண்ட விஸ்தீரணத்தைக் கொண்ட பெரிய அரசுகளில் எல்லா சனங்களும் ஒருங்கு கூடுவதென்பது அசாத்யமானதென்று, அந்த சனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு சபைகள் ஸ்தாபிக்கப் பட்டனவென்று கூறப்படுகிறது. ஆனால், இக்காலத்தில், தந்திதபால்களின் நடமாட்டம் வெகு துரிதமாக யிருப்பதால் ஒரே இடத்தில் எல்லா சனங்களுங் கூடாமற் போனபோதிலும், ஒரே சமயத்தில் பல இடங்களைக் குறிப்பிட்டு அங்கங்கே சர்வ சனங்களும் கூடும்படியும் செய்யக்கூடும். ஆங்கு அவர்களுடைய வோட்டுகளையும் பெறக்கூடும். ஜனங்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு செய்யப்படும் காரியங்களும் சட்ட நிர்மாணங்களும் திருப்திகரமாகயில்லை யென்



பதைக் கண்ட பல பிரஜாதிபத்ய அரசுகள் பொது சனங்களின் இஷ்டத்தையேகொண்டு நேராகச் சட்டங்கள் செய்யத் தீர்மானிக்கின்றன. சட்டம் செய்வதற்கு நுண்ணிய அறிவும் அநுபவமும் வேண்டியதாகையால் வெறும் கம்பளிக் கூட்டத்தினிடம் விடுவதைவிட ஜனப்பிரதிநிதிகளின் வழியாகச் சட்டங்களைச் செய்வது அத்யாவசியமெனச் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். மற்றும் பொதுசனங்களிற் பெரும்பாலார் தங்கள் சுய காரியங்களையே கவனித்து வருகிறால், பொதுக்காரியங்களை வெகு அக்கறையுடன் கவனிப்பதில்லை என்பதும் அன்னவர்களுடைய முறையீடாகும். நிற்க, சனங்களாலேயே சட்டங்கள் செய்யப்பட வேண்டும் என்னும் உணர்ச்சி எல்லா தேசங்களிலும் உண்டான காரணமாகச் சிற்சில முறைகள் ஏற்பட்டன. யாதாமொரு மசோதாவை அல்லது அரசாட்சிக்குரிய யாதாமொரு பிரமாணங்களை வியாப்பிக்கவோ அல்லது யாதாமொரு சீர்திருத்தச் சட்டமொன்றைக் கொண்டுவரவோ வேண்டின், பொதுசனங்களுடைய வோட்டுக்குக் கொண்டுவரப்படும்; அங்ஙனம் கொண்டுவந்த பிறகு குறித்த பெரும்பாலாருடைய சம்மதம் பெற்று உறுதிப்பட்டால் அந்த மசோதா அல்லது சீர்திருத்தச் சட்டம் உடனே சட்டமாயிவிடும். இது ஒரு முறை. இதைப் பொது சன வாக்குக்கு ஒப்புவித்தல் என்பார். இரண்டாவதாக, சனங்களுடைய பிரமாண உரிமையைக் கொண்டு தீர்மானிப்பது. அதாவது, போதுமான தொகையைக் கொண்டவர்கள் கையெழுத்திட்ட மநு வொன்றை யனுப்பி, அதன்மூலமாகப் பொதுஜன வோட்டுக்குச்

சட்டத்தைத் தீர்மானிக்கும்படி செய்வது. மூன்றாவதாக, கவர்ன்மெண்டின் பரிபாலனத்திற்கு வழிகாட்டியாகவிருக்கப் பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்தையறிய அச்சனங்களினின்றும் வோட் பெறுவது. இக்கடைசி முறை ஸ்விட்ஸர்லாந்தில் இருந்துவருகிறது. அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்திலும் கூடியவரை சட்டங்களை நேராகச் செய்யும் முறை ஏற்பட்டிருக்கிறது. வருடத்திற்கொரு முறை குறித்த ஓரிடத்தில் வாக்காளர்கள் வந்து கூடி மகாநாடு ஒன்றைக் கூட்டி, அங்கு மனிதர்களைப் பொறுக்கிக் காரியங்களுக்காக எடுப்பதும், நகரத்திற்காக உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும், வரி விதித்தல், தன வருவாயைக் கூறுதல், பணச்செலவு செய்தல், முதலிய பல உள்நாட்டு விஷயங்களைப் பேசி வோட் எடுத்து முடிவு செய்வது அமெரிக்காவில் வழக்கம். இம்மாதிரியான காரியத்தைக் கொண்டு நடைபெறுவதற்கு முனிஸிபல் சபை ஆட்சி என்பார். பொதுஜனங்களாலேயே நேராகச் சட்டங்கள் தீர்மானிப்பது முதலிய அநுஷ்டானங்களை அமெரிக்காவிலுள்ள பல அரசுகளும், ஐரோப்பாவிலுள்ள சில அரசுகளும் கொண்டிருக்கின்றன. ஜனங்களால் கூட்டப்பட்ட பெரிய மகாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோக பதவியைப் பொது சனங்கள் இஷ்டப்படும் வரை பெற்றிருக்கலாம். பொது சனங்களுடைய சம்மதத்தின் பேரில் உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோக பதவியை வகிக்கும் முறைமையானது அரசாங்க முறைக்குப் பெரிய தடைகளுண்டாகுமென்றும், இராஜீய நிலைமை சீர் கெடுமென்



றும், பணத்தால் காரியங்கள் சாதிக்கலாம் என்னும் ஓர் அப்பியாசம் உண்டாகி விடுமென்றும் கூறி அம்முறையைச் சிலர் கண்டிக்கின்றனர். என்றாலும் அம்முறையினால் பொது சனங்களின் அதிகாரம் ஸ்திரப்பட்டு மேன்மையடைவதுடன், பொதுசன காரியங்களுக்குரிய விவகாரங்களுக்கும் அதிகாரிகளினுடைய தயவும் முகவிலாசமுமின்றித் தாராளமாகத் தாங்களே பரிகாரங்களைச் செய்யவுமான ஓர் சிறந்த உரிமையுண்டாகிறது. நாட்டின் வருமானம், வருமானப் பணத்தின் விநியோகம், பற்பல சட்டங்கள் முதலியவைகள் பொதுசனங்களுக்கு அதிக துன்பத்தைக் கொடுப்பதால், அவைகளினின்றும் கஷ்டப் படாமலிருப்பதற்குத் தக்க மார்க்கமாகவும் இம் முறை யிருந்துவருகிறது. இம்முறையே எல்லா முறையினும் மேலானதென்பதற்கு ஐயமே யில்லை. பொதுசன காரியங்கள் யாவும் பொதுசனங்களாலே நடத்தப் படவேண்டும். அரசாட்சிக்குரிய சகல ஏற்பாடுகளும் பொதுசனங்களின் பரிபாலனத்தை யுத்தேசித் திருப்பதால், அவ்வேற்பாடுகள் யாவும் பொதுசன சம்மதத்தையும் பொதுசன ஆதரவையுங் கொள்ளாமலிருந்தால், அரசாட்சியின் ஏற்பாடு சரிவர நடக்காது. ஆகவே, அரசாட்சியின் ஏற்பாடுகள், திட்டங்கள் யாவும் பொதுசனங்களாலேயே பொதுசனங்களுக்காகப் பொதுசனங்களின் பொருட்டு செய்ய விட்டுவிடுவதே உத்தமமானது. பலருக்காகச் சிலர் சட்டஞ் செய்வதும், அச்சிலரால் செய்த சட்டங்களைப் பலர் கீழ்ப்படிந்து நடப்பதுமான முறை முற்றிலும் நல்லாதது.

# 13. நிர்வாக பரிபாலனம்

நாட்டின் அரசாட்சிக்குரிய சட்டத்தை நிறைவேற்றிவைக்கும் கிரியாம்சத்தைச் செய்யும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பொதுவாக நிர்வாகிகள் (Executiro) என்று கூறப்படும். சாதாரணமாக அரசாங்கத்திற்குத் தலைவராகவோ அல்லது நாயகராகவோ யிருக்கும் ஒருவரையும் அவர் கீழ்ப்பட்டவர்களையும் நிர்வாகிகளென்பர். ஆனால், சரிவரக் கூறுமிடத்து அரசாங்கத்தில் நிர்வாக பரிபாலன இலாகாவிலுள்ள உயர்தர கீழ்தர உத்தியோகஸ்தர்கள் யாவரும் நிர்வாகிகளென்றே அழைக்கப் படுவர். நிர்வாக அத்தஸ்திலிருப்பவர்களோடு சட்ட நிரூபண இலாகாவைச் சேர்ந்தவர்களையும், நீதிஸ்தாபன இலாகாவைச் சேர்ந்தவர்களையும் நிர்வாகிகளென்னும் முறையில் சேர்க்கப் படமாட்டார். சிவில், உத்தியோகஸ்தர்கள், போலீஸ் ஆபீஸர்கள் முதலானவர்கள் நிர்வாகிகளெனப் படுவர். சேனையும், கப்பற்படையும் நிர்வாக பரிபாலனத்துடன் சேரும். ஓர் அரசாங்கத்தைக் கவனிப்போமானால், நிர்வாக பரிபாலனத்தில் முக்கிய அல்லது பிரதம உத்தியோகஸ்தர்கள் சட்டநிரூபண சபையினரைவிட குறைந்த தொகையினராகவே யிருப்பர். நிர்வாகத்திற்கு முக்கியமாக வேண்டுவது ஒரே காரியத்தில் மூர்த்தன்னியமாக யிருப்பதும், காலத்துக்குத் தக்கபடி சுறுசுறுப்பாக ஓர் விஷயத்தை முடிப்பதுமே யாம். 'நிர்வாகிகளில் நல்லவர்களாக இருவர் இருப்பதை விட கெட்டவராக ஒருவர் இருப்பது நலம்' என்று உலக



மகா வீரரான நெபோலியன் கூறியுள்ளார். நிர்வாக அதிகாரமானது சாதாரணமாக ஒரு அரசாங்கம் பூராவுக்கும் அல்லது மாகாணம் பூராவுக்கும் ஒருவனுடைய ஆதீனத்திலேயே யிருப்பதை நாம் கவனிக்கிறோம். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரமெல்லாம் அத்யட்சகர் ஒருவரிடமே யுள்ளது. அவருக்குத் துணையாகச் சிலர் கீழ்தர உத்தியோக பதவியில் அவரால் நியமனம் பெற்றவர்களிருக்கின்றனர். அவர்களை அப்புறப்படுத்தவும் அத்யட்சகருக்கு அதிகாரமுண்டு. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் நிர்வாக அதிகாரம் யாவும் காபினெட் என்கிற மந்தணசபையிலுள்ள பதினைந்து அல்லது இருபது மெம்பர்களிடம் இருக்கின்றன. ஆனால் அம்மெம்பர்களில் ஒருவன் மற்ற மெம்பர்களைவிட உயர்ந்தவனாகிறான். ஒருவன் தன்னுடைய மனோபாவத்தின்படி அதிகாரஞ் செலுத்துவதும் தன் இஷ்டப்படி பரிபாலிப்பதுமாக யிருக்கவேண்டுமென்பதில்லை. அரசாட்சிக்குரிய பரிபாலனத்திற்குத் தகுந்தபடி அதிகாரத்தீர்மானத்தைக் கூற ஒருவனே வேண்டுமாதலால், அவனுடைய அதிகாரம் முக்கியமானது. அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தில் சேனாதிபதியும் கப்பற்படைத்தலைவரும் இருந்தும் யுத்தகாலத்தில் அத்யட்சகரே பிரதான அதிகாரஞ் செலுத்துபவராக ஆகிறார். தன்னுடைய இஷ்டத்தையே நிலைநாட்டி சட்டநிரூபண ஒழுங்கை அல்லது முறைமையை மீறி நிர்வாக அதிகாரத்தை ஸ்தாபிக்கிறார். தவிர, பலர் சேர்ந்து நிர்வாக பரிபாலனத்தைச் செய்வதென்னும் ஒருமுறையுமுண்டு: அதற்குப் பன்மை நிர்வாக பரிபாலனம் என்பர். சிலர்

சேர்ந்து அரசாங்கத்தின் பிரதான அதிகாரத்தை நிர்வகிப்பது எனப்படும். அவர்களுக்குள்ளே ஒருவர் இன்னொருவரைவிட அதிக அதிகாரம் பெற்றவராகமாட்டார். எல்லோரும் சேர்ந்தே அதிகாரத்தை நிர்வகிக்க முடியும். அனைவரும் ஒன்றுசேர்ந்து அதிகாரத்தை நிர்வகிப்பதால் காரியங்கள் நன்கு தெளிவுடன் அனுஷ்டிக்கப்படும் என்றும், ஒருவனுடைய யதேச்சையான அதிகாரம் செல்லாதென்றும் எண்ணப்பட்டது. பின்னர், அனுபவத்தில் இம்முறை பெரு அசந்தர்ப்பங்களுக்குக் காரணமாய் இருந்ததால், இது உபயோகமற்றதெனக் கொண்டு பல இராஜரீக சாஸ்திரஞர்கள் நிராகரித்துவிட்டனர். பூர்வம், பல அரசுகளில் இம்முறையிருந்துவந்தது. பிரான்ஸ், ரோம், ஸ்பார்டா முதலிய அரசுகளிலிருந்தன. இப்பொழுதும், ஸ்விட்ஜர்லாந்தில் ஏழுபேர் கொண்ட பண்டேஸ்ராத் என்னும் சபையினரால் அவ்வரசின் அதிகார நிர்வாகமெல்லாம் நடந்துவருகிறது. பன்மை நிர்வாக பரிபாலனம் (Plural Executive) தற்காலத்தில் இந்த தேசமொன்றிலேயேயிருந்து வருகிறது. தனி மனிதன் ஒருவனுடைய நிர்வாக பரிபாலன அதிகாரத்தினாலேயே அரசாங்க காரியங்கள் நடைபெறுகின்றனவென்றும் நாம் கூறினோம். பின்னர், அந்த நிர்வாக பரிபாலன அதிகாரிகளைப் பொறுக்கி எடுப்பதும் அல்லது நியமிப்பதுமான முறைகளைச் சற்று கவனிப்போம். தவிர நிர்வாக அதிகாரிகளின் உத்தியோக காலமும், நிர்வாக அதிகாரிகளுக்கும் சட்ட நிரூபண சபையினருக்குமுள்ள சம்பந்தமும் என்னவென்பதையும் நாம் கவனிப்போம். நிர்வாக



அதிகாரிகளைப் பொறுக்கி எடுப்பதோ அல்லது நிர்வாக அதிகாரிகளின் உத்தியோகமோ இரண்டு முறைகளைக் கொண்டிருக்கின்றன. பாரம்பர்யமும் நியமனமுமாக நிர்வாக அதிகாரிகளின் உத்தியோகங்கள் உண்டாவதின் பேதாபேதங்கள் முதல்முறையாகவும், உண்மையாகவும் ஒப்புக்காகவுமாக (பெயருக்கு மாத்திரம்) நிர்வாக அதிகாரிகளின் உத்தியோகங்கள் ஏற்படுவதின் பேதாபேதங்கள் இரண்டாவது முறையாகவும் அனுசரிக்கப்படுகின்றது. பாரம்பர்ய நிர்வாக அதிகார உத்தியோகத்தில் அரசன், சக்கரவர்த்தி, இளவரசர் முதலானோர் ஜீவியகாலம் வரை நிர்வாக அதிகார பதவியை வகிப்பதுடன், அவர்களுடைய சந்ததியார்களும் அதை வகிக்கின்றனர். இந்த பாரம்பர்ய முறையானது உலக அரசுகளில் மிக்க பிரஜாதிபத்யத்தைக் கொண்டுள்ள அமெரிக்கா முதலிய அரசுகளில் இல்லை. இம்முறையைப் பலர் இக்காலத்தில் கண்டிக்கின்றனர். ஆனால், ஐரோப்பா தேசங்களில் பாரம்பர்ய முறையில் இராஜ்யாதிபத்யம் சரித்திர பூர்வமாக இராஜ்யத்துறையில் பரிணமித்து வந்ததைப்பற்றி அதை நிராகரிக்க முடியாதென்று சில இராஜரீக சாஸ்திரஞர் அபிப்பிராயப்படுகின்றனர். இதைப் பலர் அங்கீகரித்தும் வருகின்றனர். உதாரணமாக, இங்கிலாந்து மகாஜனங்கள் பாரம்பர்ய இராஜ்யாதிபத்யத்தை அங்கீகரித்திருப்பதே சான்றும். இங்ஙனம், மகாஜனங்கள் பாரம்பர்ய இராஜ்யாதிபத்யத்தை யங்கீகரிப்பதின் காரணம், அரசன் ஒப்புக்காக அல்லது பெயருக்கு மாத்திரம் நிர்வாக பரிபாலன அதிகாரியாகப் பாவிக்கப்படுவதேயன்றி, உண்

ன்மையில் அவ்வரசன் நிர்வாக பரிபாலன அதிகாரியல்ல வென்பதினாலேயாம். இதாலி, பெல்ஜியம், ஹங்கேரி, அமெரிக்கா ஐக்கிய அரசு முதலிய இராஜ்யங்களில் இராஜ்ய நிர்வாக அதிகாரம் அரசனிடத்திலில்லை. இராஜ்யத்தில் அரசன் வெறும் பெயருக்கு மாத்திரம் பூஷணமாக யிருப்பான்; ஆனால், இராஜ்ய நிர்வாக பரிபாலன அதிகார முறையாவும் அவனுடைய பெயரால் நடத்தப்படும்; உண்மையில் இராஜ்ய நிர்வாக அதிகாரம் யாவும் மந்திரி சபையினிடத்தும் பிரதம மந்திரியிடத்துமே யிருக்கும். இம்முறையானது ஒரு தேசத்தின் அரசாங்கத்தை நீண்டகாலமுள்ளதாகவும், ஏகவிதமாகவும், உறுதிப்பாடுள்ளதாகவும் செய்கிறது. தற்காலத்திலுள்ள பாரம்பர்ய முறையில் உள்ள அரசர்கள் யாவரும் சட்ட நீதிக்குட்பட்ட வகையினரல்ல. பிரஷ்ய மன்னர் ஜர்மெனி சாம்ராஜ்யத்திற்கு சக்ரவர்த்தியாகவுமிருப்பதினால் அவர் சட்ட நீதிக்குட்பட்ட வகைக்கு மாறானவர். 'அரசன் ஆளுகிறான்; ஆனால் அவன் நிர்வாக பரிபாலன அதிகாரஞ் செலுத்தவில்லை' என்னும் நீதிக்கு மாறாக ஜர்மெனியில் அரசன் ஆளுவதுடன் நிர்வாக பரிபாலன அதிகாரமுஞ் செலுத்துகிறான். தவிர, அரசனிடம் பாத்தியம் சந்ததியார்களுக்குஞ் செல்லும். நிர்வாக பரிபாலன அதிகார உத்தியோகங்களுக்குத் தெரிந்தெடுத்தலென்னும் முறையும் அனுஷ்டிக்கப்படுகின்றது. அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தில் பிரதான அதிகார உத்தியோகம் அத்யக்ஷ ஸ்தானம். அது தெரிந்தெடுத்தலென்னும் முறையையே தழுவிநிற்கும். இதல்லாமல்,



சில உத்தியோக ஸ்தானங்கள் பாரம்பர்ய முறையின்றியும் தெரிந்தெடுத்தல் முறையின்றியும் இருக்கின்றன. அவ்வுத்தியோகங்கள் நியமன முறையைப் பற்றும். இவ்வுத்தியோகங்கள் பெரும்பாலும் பிரதான உத்தியோக ஸ்தானத்தைப் பற்றாமல் கீழ்தர அல்லது நடுத்தர உத்தியோகங்களோ மாகாண அரசாங்கத்தில் பற்றும். உதாரணமாக, கன்னடாவின் இராஜப் பிரதிநிதி (கவர்னர் ஜனரல்) இந்தியாவின் வைஸிராய், (இராஜப் பிரதிநிதி) பிரிட்டிஷ் குடியேறின நாடுகளின் கவர்னர்கள் ஆகிய இவர்கள் யாவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நியமனம் பெற்றவர்களாகின்றனர். மற்றும், கன்னடாவின் இராஜப்பிரதிநிதி பெயருக்கு மாத்திரமேயன்றி வாஸ்தவத்தில் இல்லை; ஆனால், இந்தியாவின் வைஸிராய் உண்மையான அதிகாரத்தைக் கொண்டவர். பாரம்பர்ய அரசில்லாத அரசுகள் யாவும் அதனதன் அரசுத் தலைமைக்குத் தலைவரொருவரைத் தெரிந்தெடுக்கின்றன. ஆனாலும் அரச வம்சத்தினின்றும் ஒருவனை அரசனாக அவன் ஜீவிய காலம் வரை அரசாளவும் தெரிந்தெடுக்கும் ஒரு முறையுண்டு; ஆனால் சந்ததியார்களுக்கு அப்பதவி செல்லாது. நார்மன் படையெழுச்சி காலத்தில் இங்கிலாந்தில் இம்முறை இருந்தது. அவனை யுத்த பிரபு (War Lord) என்றழைப்பர். தற்கால நாகரீகமுள்ள அரசுகளில் நிர்வாக பரிபாலன உத்தியோகங்கள், தெரிந்தெடுக்கும் முறையைக் கொண்டுள்ளதால் மேற்கூறிய பழைய முறை நிராகரிக்கப் பட்டது. தெரிந்தெடுக்கும் முறையிலும் அநேக பேதங்களிருக்கின்றன. அமெரிக்கா அத்யக்

சகர் ஜனங்களினால் நேராகத் தெரிந்தெடுக்கப்படாமல், ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளின் வர்க்கத்தால் மறைமுகமாகத் தெரிந்தெடுக்கப் படுகிறார். பிரான்ஸ் அத்யட்சகர், பிரான்ஸ் தேசத்தின் இரண்டு மகாசபையும் ஒன்றுசேர்ந்து கூடி தெரிந்தெடுக்கப் படுகிறார். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தைச் சேர்ந்த ஒப்பந்த அரசுகளில் கவர்னர்கள் ஜனங்களால் நேராகவே தெரிந்தெடுக்கப் படுகின்றனர். பிறகு பிரஜாதிபத்திய முறையில் பரிபாலிக்கப்பட்டு வரும் அரசாங்கங்களில் நிர்வாக பரிபாலன உத்தியோக ஸ்தானங்கள் நீண்ட காலவளவு இருத்தல் கூடாதென்னும் முறையை யனுஷ்டிக்கப் படுகிறது. உத்தியோக ஸ்தானம் நீண்டகாலவளவு ஏற்படுமானால், அது பிரஜாதிபத்திய சித்தாந்தத்துக்கு விரோதமானதெனக் கூறப்படுகிறது. இதுகாரணம் பற்றியே, அமெரிக்காவிலுள்ள அரசுகளில் நிர்வாக அதிகாரம் நான்கு அல்லது ஆறுவருட காலம் வரைக்கே ஏற்படுகிறது. ஒரு முறை அதிகாரத்தை வகித்தவனே மறுமுறைக்கும் தகுதியல்லவெனப் புனர் ஆரோகண முறையை மெக்ஸிகோ அரசு கொண்டுள்ளது. ஆனால் அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தின் அத்யட்சகர் மூன்றாவது முறை தெரிந்தெடுக்கப்படுவது தடுக்கப்பட்டது. பிரான்ஸ் தேசத்தில் அத்யட்சகர் நியமனம் ஏழுவருடத்திற்கொருமுறை உண்டாகும்; ஆனால், அவர் மீண்டும் தெரிந்தெடுக்கப் படுவதற்குத் தக்கவராவர். புனர் ஆரோகண முறை இங்கு உண்டு. பிரான்ஸ் தேசத்தில் அத்யட்சகர் பெயருக்கு மாத்திரமேயன்றி உண்மையில் அதிகாரத்தை வகிப்பவரல்லர்.



பிரான்சு குடியரசானது பார்லிமெண்டரி முறையை யனுசரித்த குடியரசாகையால், இங்கு நிர்வாக பரிபாலன அதிகாரம் யாவும் மந்திரிசபைக்கும் முதன்மந்திரிக்குமே யுண்டு. பாரம்பர்ய அரசுரிமை அதிகாரம் பிரிட்டிஷ் மன்னரைப்போல ஒப்புக்காகவும் அல்லது ஜர்மென் மன்னனைப்போல உண்மையாகவும் இருக்கலாம்; அங்ஙனமே தெரிந்தெடுக்கும் முறையில் அமெரிக்கா அத்யட்சகரைப் போல உண்மையாகவும் பிரான்சு அத்யட்சகரைப் போல ஒப்புக்காகவும் இருக்கலாம். இத்தகைய பேதாபேதங்களின் முறையினாலேயே நிர்வாக அதிகாரிகளுக்கும் சட்ட நிரூபண சபைக்கும் உண்டாகும் சம்பந்தம் தெரியவரும். தற்கால அரசுகளைச் சேர்ந்த கவர்ன்மெண்டுகள் யாவும் இருவகையாகப் பிரிக்கப்படும். ஒன்று பார்லிமெண்ட் முறை அல்லது காபினெட் அரசாங்கம் அல்லது பொறுப்பாட்சி என்றும், மற்றொன்று பொறுப்பில்லாத ஆட்சி அல்லது சாங்க முறை என்றும் கூறப்படும். பார்லிமெண்டரி கவர்ன்மெண்டில் நிர்வாக பரிபாலன அதிகார உத்தியோகங்கள் சட்ட நிரூபண சபையின் தீர்மானத்திற்குட் பட்டதாகும். இரண்டாவது முறையாகக் கூறப்படும் சாங்க முறை அல்லது அத்யட்சக முறைக்குரிய கவர்ன்மெண்டில் நிர்வாக பரிபாலன அதிகார உத்தியோகங்கள் சட்ட நிரூபண சபைக்குச் சம்பந்தமின்றித் தனியாக விருக்கும். பார்லிமெண்டரி முறை கவர்ன்மெண்டில் நிர்வாக பரிபாலன அதிகார உத்தியோகங்கள் பெயருக்கு மாத்திரமாக விருக்கும். ஆனால் பாரம்பர்ய முறையை யனுஷ்டித்து இருக்கவேண்டு

மென்பதில்லை. பிரான்சு தேசத்தில் கவர்ன்மெண்டானது பார்லிமெண்டரி முறையைப்பற்றினது. ஆனால் அக்கவர்ன்மெண்டின் தலைமை அதிகாரி பெயருக்கு மாத்திரமிருந்து ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுகிறார். பார்லிமெண்டரி கவர்ன்மெண்டை நன்கு அறிவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முறையே தக்க ஆதாரமாகும். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இப்பொழுதிருக்கும் மந்தண சபையானது (cabinet) 15 அல்லது 20 அங்கத்தினர்களைக் கொண்டதாகும். இச்சபை சட்டப்படி ஏகசாங்கமாக இல்லையென்றாலும், அனுஷ்டானத்தில் மட்டும் ஒரே விதமான ஐக்கிய பொறுப்பையும் முறைமையையும் கொண்டிருக்கிறது. இச்சபையைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் சட்ட நிரூபண ஸ்தாபனமாகிய காமன்ஸ் சபை, பிரபு சபை இவைகளில் ஏதாவதொன்றில் மெம்பராகவுமிருப்பர். இச்சபையின் அங்கத்தினர்கள், தங்களுக்குள்ளே ஒருவருடைய ஆலோசனையின் படி நடப்பர். ஆலோசனை கூறும் அவர் முதன்முதல் மன்னரால் வரிக்கப்படுபவராவர். இவருக்குத்தான் பிரதம மந்திரி என்று பெயர். அம்மந்தண சபை அங்கத்தினர்கள் காமன்ஸ் சபையின் ஆதரவைப்பற்றிய இராஜ்ய கட்சியையாகிலும் அல்லது இராஜ்ய கட்சியின் கூட்டுக் கட்சிகளையாகிலும் சேர்ந்திருப்பர். காமன்ஸ் சபையின் ஆதரவைக் கொண்டிராத பட்சத்தில் அவர்கள் உடனே மந்தண சபையை விட்டு மொத்தமாக விலகுகின்றனர். இம்முறையானது இங்கிலாந்தில் வழக்கத்தை யொட்டி வந்ததேயன்றி சட்ட பிரமாணமாக உண்டானதல்ல.



ஆனால், பிரான்ஸ் தேசத்தில் இது சட்ட பிரமாணமாக ஏற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டின் பரிபாலன முறைக்கு ஆதாரமாயிருக்கும் மகா சபைகளுக்கு மந்தண சபையினர் மொத்தமாகப் பொறுப்புள்ளவர்களாகயிருக்கின்றனர். சேம்பர் ஆப் டெப்யூடிஸ் என்னும் மகாசன சபையினரின் ஆதரவில்லையாயின் மந்தண சபையினர் ஒரே மொத்தமாக விலக வேண்டும். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தில் அத்தியட்சகராக விருக்கும் பிரதான அதிகாரி, அவ்வரசாங்க ஆட்சிக்குரிய பிரமாணப்படி சட்ட நிரூபண சபையின் சம்பந்தமின்றி சுயேச்சையாக நான்கு வருட காலம் அந்த அத்யட்சகஸ்தானத்திற்குத் தெரிந்தெடுக்கப் படுகிறார். அவர் மீது குற்றஞ் சாட்டி உத்தியோகத் தினின்றும் நீக்க சட்ட நிரூபண சபை செய்யலாமே யன்றி வேறு வழியாக அவ்வுத்தியோக காலத்தைக் குறைக்க முடியாது. உத்தியோக நியமனங்கள் உடன்படிக்கை முதலியவைகளை ஸினேட் சபை தள்ளிவிடலாம் என்கிற ஓர் அம்சம் நீங்கலாக மற்ற அரசாங்க முறையை இந்தவிதமாக நடத்த வேண்டுமென்னும் உபதேசங்களைக் கொண்டாகிலும் அல்லது சட்ட பிரமாண நிபந்தனையைக் கொண்டாகிலும் அத்யட்சகரின் அதிகாரத்தைக் கேட்க சட்ட நிரூபண சபைக்கு வழியில்லை. அரசாங்கத்தின் பற்பல இலாகாவுக்கு அதிபதி அதிகாரத்தை வகித்து வருபவர்களே அத்யட்சகரின் மந்தண சபைக்கு மந்திரிகளாக யிருப்பதினால் அவர்கள் அத்யட்சகராலேயே நியமனம் பெற்றவர்களாவார்கள். அவர்களை நியமிக்கும் விஷ

யத்தில் அத்யட்சகர் சட்ட நிரூபண சபையினரைக் கேட்க வேண்டுவதில்லை. குற்றஞ் சாட்டி மந்திரிகளை விலக்கினாலன்றி, மற்ற வழியில் சட்ட நிரூபணசபை விலக்கவுங் கூடாது. ஆனால், அத்யட்சகர் அவர்களை நியமிக்கவும் நீக்கவுமான எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார். நிற்க, கீழ்த்தர நிர்வாக பரிபாலன உத்தியோகங்கள் யாவும் நேராகவோ அல்லது மறைவாகவோ பிரதான அதிகாரியினால் நியமிக்கப்படுகின்றன. இங்கிலாந்தின் அரசாங்கத்தில் சகல கீழ்த்தர நிர்வாக உத்தியோகங்கள் யாவும் நேராகவே நியமிக்கப்படும். அமெரிக்காவில் அத்யட்சகரினாலும் அல்லது மறைவாக அத்யட்சகரால் நியமிக்கப்பட்ட ஒருவராலோ அல்லது பலராலோ சகல கீழ்த்தர நிர்வாக பரிபாலன உத்தியோகங்கள் நியமிக்கப்படும். அமெரிக்கன் யூனியன் அரசாங்கங்களில் சகல கீழ்த்தர நிர்வாக பரிபாலன உத்தியோகங்களும் பொதுஜனங்களாலேயே நியமிக்கப்படும்; பிரதான அதிகாரிக்கு அதிகாரம் இங்கு மட்டுப்படும். ஜனங்களால் நியமிக்கப்படும் உத்தியோகங்களின் முறை ஐக்கிய காரிய நிர்வாகங்களுக்கு ஆபத்து சமயங்களில் சரிவர பிரயோசனப்படுவதில்லையெனச் சிலர் கூறுகின்றனர். எல்லா கவர்ன்மெண்டிலும் பிரதான அதிகாரம் ஒருவனிடமே யிருந்தபோதிலும், பொதுவாக அரசாங்க பரிபாலனத்திற்குப் பல இலாக்காக்களாக பிரிப்பது நலம். முக்கியமாக ஒரு அரசாங்கத்திற்கு அன்னிய நாட்டு விஷயங்களைப் பற்றிய இலாகா, இராணுவ இலாகா, கப்பற்படை இலாகா, அரசிறை இலாகா ஆகிய இந்



நான்கும் முக்கியமானதெனக் கூறப்படுகிறது. இதல்லாமல், பொதுவாக நிர்வாக பரிபாலகர்கள் ஸிவில் உத்தியோக முறையில் பலர் வருகின்றனர். ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கும் அரசாங்கத்தின் பிரதான நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்படும் அன்னோன்னிய சம்பந்தம், ஸிவில் உத்தியோகஸ்தர்களின் நியமனம், விலக்கம், உத்தியோக கால அளவு முதலிய விஷயங்கள் மிகவும் சிக்கலானவை. பிரிட்டிஷ் ஸிவில் உத்தியோகங்களில் சுமார் 80,000 உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். அரசனுடைய அரண்மனை உத்தியோகஸ்தர்கள், அன்னிய நாட்டு இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், உள் நாட்டு உத்தியோகஸ்தர்கள், குடியேறின நாட்டிலாகாக்கள், கப்பற்படை விஷயமாகப் பரிபாலிக்கும் பஞ்சாயத்து, கஜானா முதலியவைகளின் உத்தியோகஸ்தர்கள், ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபன இலாகாவின் உத்தியோகஸ்தர்கள், அதிகார உரிமைப் பத்திர இலாகா (Patent Office) உத்தியோகஸ்தர்கள், பரதேசங்களுக்குக் குடிபோகும் ஜனங்களைப் பற்றிய இலாகா உத்தியோகஸ்தர்கள், சுங்கத்தீர்வை இலாகா கலெக்டர்கள், தபால் உத்தியோகஸ்தர்கள் ஆகிய அனைவரும் ஸிவில் உத்தியோகத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வுத்தியோகங்கள் நிரந்தரமாகவும், மந்தணசபை (Cabinet) இராஜ்ய முறையால் மாறுபட்டாலும் உத்தியோக கால நிர்ணயம் முதலியவை மாறாமலிருக்கவுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேற் கூறிய இலாக்காக்களுக்குத் தலைமை அதிகாரிகள் நாட்டின் இராஜ்ய மாறுதல்களுக்கு மாறுபடக் கூடுமேயன்றி

மற்ற சேம்தா நிர்வாக பரிபாலன அதிகாரிகள் மாறுபடக் கூடியவர்களல்ல. பிரதான அதிகாரிகள் சுமார் 50 பேர்களேயிருப்பர். அவர்களுக்கு மொத்தமாக மினிஸ்டரி என்பர். பிரிட்டிஷ் ஸிவில் உத்தியோகங்களில் சில ஸ்தானங்கள் ஜீவிய காலம் வரையிலும் அல்லது நன்னடக்கை யுள்ள வரையிலும் இருக்கும். மற்ற ஸிவில் உத்தியோகங்களைப் பெரும்பாலும் அரசாங்கமே அவ்வுத்தியோகஸ்தர்களை விலக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. இந்த உத்தியோகங்களுக்குப் போட்டா போட்டி பரீட்சை வைக்கப்பட்டிருக்கிறது. பரீட்சையில் முதன்மையாகத் தேறினவர்களுக்குப் படிப்படியாக யோக்கியதையை யனுசரித்துக் கொடுக்கப்படும். ஸிவில் உத்தியோகஸ்தர்கள் இராஜீய நிதிக்குப் பணவுதவி செய்யக்கூடா தென்னும் பல நிபந்தனைகளையும் ஏற்படுத்தியுள்ளார். இங்ஙனம், நிர்வாக பரிபாலன அதிகாரம் அரசாங்கத்தில் பல இலாகாக்களைக் கொண்டு இயந்திரவேலைப் பாடுபோல் தற்கால இராஜ்ஜியங்களில் நடந்து வருகின்றது. அமெரிக்காவில், ஸிவில் உத்தியோகங்களில் அதிகாரிகள் வெகுகால அளவு இருப்பார்களானால், இலாகா நிர்வித மந்தமடைகின்றதெனக் கொண்டு நான்கு வருடத்திற் கொருமுறை அவர்கள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். இங்ஙனம் நான்கு வருடத்திற் கொருமுறை அடிக்கடி மாறுவதினால், நல்ல உத்தியோகஸ்தர்கள் நீங்குகிறார்களென்று அறிந்து, சில மேதாவிகளான உத்தியோகஸ்தர்கள் எத்தன்மையான இராஜீய கொள்கையைப் பற்றினபோதிலும் அவர்களை உத்தியோகங்



களிலேயே நிறுத்திவைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வண்ணம் அரசாங்கம் நிர்வாக பரிபாலன அதிகாரிகளால் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றது. * அரசாங்க பரிபாலன விஷயமாக அறிவதற்கு இன்னும் பல அரசாங்கங்களின் பரிபாலன முறைகளை நன்கு விரிவாக ஆராய்வது நலம்.

---

* பிரிட்டிஷ் அரசாங்கமுறை, அமெரிக்கா அரசாங்க முறை, பிரான்ஸ் அரசாங்க முறை முதலிய வல்லரசுகளின் அரசாங்க முறைகளைப் பற்றித் தனித் தனியே நூல்கள் எழுதப்படும். அவைகளில் விரிவாகக்கண்டு கொள்க.

# 14. நீதிஸ்தாபனம்

ஓர் அரசாங்கத்தில் நிர்வாக பரிபாலன அதிகாரிகளின் தொகையை விட நீதிஸ்தாபன முறையைச் சார்ந்த உத்தியோகஸ்தர்களின் தொகை குறைவு என்றாலும், அரசாங்கத்தில் மிக்க பலமான பொறுப்பை இந் நீதிஸ்தாபன இலாகா கவர்ன்மெண்டில் பெற்றிருக்கிறது. நீதிஸ்தாபனத்தின் முக்கிய கடமை என்னவெனில், தனிப்பட்ட விவகாரங்களில் ஏற்பட்ட சட்டங்களைப் பிரயோகித்துத் தக்கபடி தீர்மானிப்பதேயாம். ஒரு நீதிபதிக்கு முக்கியமாக வேண்டியது சட்டத்தின் நுண்ணிய அறிவேயாம். நீதிபதி முக்கியமாக சாஸ்திரார்த்தமாகத் தம் கடமையைச் செய்யவும், பிரத்யேகமான அனுபவ சித்தாந்தங்களைக் கொண்டு வியவகாரங்களை உயர்ந்த ஞானத்துடன் தீர்மானிக்கவுஞ் செய்கிறான். சட்டமானது தர்மமாகவேனும் அதர்மமாகவேனும் அல்லது நியாயமாகவேனும் அநியாயமாகவேனும் இருப்பதைப் பற்றி ஒரு நீதிபதி கவனிப்பது இரண்டாம் பட்சமேயாம். ஆகவே, உள்ள சட்டங்களைக்கொண்டு அச்சட்டங்களின் மேல் தீர்மானஞ் செய்யவேண்டுமேயன்றி, சட்டங்கள் இந்தந்த விதமாக இருக்கவேண்டுமென்றாகிலும், இருந்தால் இவ்வனம் தீர்மானஞ் செய்யக்கூடுமென்றாகிலும் நீதிபதி கவனிக்கக் கூடாது. ஒரு அதர்மமான சட்டமானது ஒருவனுடைய வியவகாரத்தில் மிக்க பாதகத்தை விளைத்தபோதிலும், இது அந்த அதர்மமான சட்டத்தை அங்கீகரிக்கமாட்டேன் என்று பிரமாணத்திற்கு

விரோதமாக நீதிபதி யொருவன் போவதைவிட மேன்
மையான தாகும். உண்மையில், நீதிபதிகளின் தீர்
மானங்கள் யாவும் வெறும் உறுதிச்சொல்லாக மட்டும்
இராமற்படி மேன்மையாகவே யிருக்கும். அவர்க
ளுடைய தீர்மானங்கள் அர்த்த புஷ்டியைக் கொடுத்து,
சட்டங்களை விரித்துரைத்து மேன்மேலும் வியாக்கியா
னத்தைக் கொடுக்கக்கூடியவைகளாக யிருக்கும். ஒரு
சட்டத்தைக் கொண்டு எல்லா வியவகாரங்களையும்
பரீட்சிக்க முடியாது; அல்லது ஒரு சட்டத்திற்கு ஏற்
படும் ஒரு வியாக்கியானத்தை மட்டும் வைத்துக்கொண்
டும் முடிவு செய்யமுடியாது. சட்டத்தில் யாதாமொரு
சந்தர்ப்பத்தில் சிக்கல் ஏற்படுகின்றகாலத்தில், உடனே
நீதி சாஸ்திர முறைப்படியும் தர்மசாஸ்திர முறைப்படி
யும், இராஜரீக முறைப்படியும் சட்டத்தில் ஏற்பட்ட சிக்
கலைக் களைந்து அச்சட்டத்திற்கு நியாயமான அர்த்தத்
தைக் கொடுக்க நீதிபதி வேண்டப்படுகிறான். இங்கி
லாந்திலும், அமெரிக்காவிலும் இம்முறை வெகுதூரம்
வரை கையாளப்பட்டு வருகிறது. நீதிபதிகள் ஒரு சம
யத்தில் ஒருவியவகாரத்தில் ஒரு தீர்மானத்தைச் செய்
வார்களானால், அத்தீர்மானம் வருங்காலத்தில் மேற்
கோளாகக் கருதப்படுகிறது. அத்தகைய மேற்கோள்
கள், நீதிபதி யொருவரைக் கட்டுப் படுத்தா தென்று
ம், இவ்வண்ணம் பூர்வம் நீதிபதி யொருவரால் தீர்மா
னிக்கப் பட்டதெனக் கூறி வியவகாரிகள் தங்கள் உத
விக்கு அவைகளைக்கையாளுகின்றனர். இத்தகைய மேற்
கோள்களை அடிக்கடி கையாளுவதினின்றும் நீதிபதிகள்
தனிச் சட்டங்களை யேற்படுத்துபவர்களாகவு மாகின்ற

னர். நீதிபதியொருவன் சமன் தூக்குங்கோல் போல் கோணாது மிகுந்த நெறியுடனிருக்கவேண்டும். இங்ஙனம், அவர்கள் நெறியுடனிருப்பதற்காக அவர்களுக்குப் பணமுட்டுதல் உண்டாகாமல் தாராளமாகச் சம்பளம் கொடுப்பதுடன், அவர்களை இராஜ்ய விஷயங்களில் அதிக அக்கறை கொண்டவர்களாக யிருக்கவுஞ் செய்யக் கூடாது. இதுகாரணம் பற்றியே, பெரிய அரசாங்கங்களில் நீதிபதிகள் நல்ல சம்பளம் கொடுக்கப் பட்டுவருவதுடன், அவர்கள் அவ்வரசாங்கத்தைச் சேர்ந்த இதர இலாக்காக்களிலுள்ளவர்களின் பூஷணைக்காகிலும் அல்லது தூஷணைக்காகிலும் கருதாமல் சுயேச்சையாகத் தங்கள் ஜீவியகாலம் வரை உத்தியோகஸ்தானத்தை வகித்து வியவகாரங்களில் தாராளமாகத் தீர்மானஞ் செய்து வரும் படியும் விடப்பட்டனர். அமெரிக்காவின் அரசாட்சிக் குரிய பிரமாணங்களில், உயர்தர நீதிமன்றங்கள், கீழ்தர நீதிமன்றங்கள் ஆகிய இவைகளில் இருக்கும் நீதிபதிகள் தங்களுடைய நன்னடக்கை வரை உத்தியோகத்தில் இருக்க வேண்டுமென்றும், குறித்த காலங்களில் தாங்கள் செய்த வூழியத்திற்காக அவர்கள் பெறும் வேதனங்களை அவர்களுடைய உத்தியோக காலங்களில் குறைக்கப்பட மாட்டாதென்றும் கூறப்பட்டுள்ளன. இவ்வண்ணமே இங்கிலாந்திலும் அநுஷ்டிக்கப் படுகிறது. அமெரிக்கா, பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம், பிரான்சு, பிரஷ்யா முதலிய அரசுகளில் நீதிபதிகள் சாசுவித ஸ்தானத்தையும் சுயேச்சையையும் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தைச் சேர்ந்த மற்ற சிற்றரசுகளில் நீதிபதி



ஸ்தானமானது குறித்த காலம் வரை பிரஜைகளால் தெரிந்தெடுக்கப்படும். பிரஜைகளின் அதிகாரமுறையை ஸ்தாபிப்பதற்கு இது ஓர் காரணம் எனக்கூறப்படுகின்றது. சில அரசுகளில் கவர்னர்களால் நீதிபதிகள் நியமிக்கப்பட்டும், மற்றுஞ்சில அரசுகளில் சட்டநிரூபண சபையால் நீதிபதிகள் தெரிந்தெடுக்கப்பட்டும் வருகின்றனர். சில அரசுகளில் நன்னடக்கை யுள்ளவரையில் நீதிபதிகள் ஸ்தானங்களில் இருக்கின்றனர்; மற்றசில அரசுகளில் இரண்டு வருடகாலம் வரையிலுமே நீதிபதிகள் ஸ்தானம் பெறுவர். பிறக, நீதி ஸ்தாபன இலாகாவைச் சேர்ந்த நீதிபதிகள் மற்ற சட்டநிரூபண, நிர்வாக பரிபாலன இலாக்காக்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களின் மீது அவர்களுடைய உத்தியோக நடத்தையைப்பற்றி நீதிமன்றங்களில் விசாரிக்க பாத்தியதையுள்ளவர்களாவென்னும் கேள்வி பிறக்கின்றது. சட்டநிரூபண இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களேனும் நிர்வாக பரிபாலன இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களேனும் அவரவர்களுக்குரிய பிரமாண அதிகார எல்லையைக் கடந்து சென்றால், அவர்கள் கடந்துசென்றனரென்று விசாரித்துத் தீர்மானிக்க நீதிபதிக்கு அதிகாரமுண்டா என்னும் கேள்வியும் உண்டாகிறது. அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் முதலியவைகளில் அரசாங்கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் நீதிமன்றங்களுக்கு உத்தரவாதமுள்ளவர்களாகின்றனர். ஐரோப்பாவிலுள்ள பல இராஜ்யங்களில், அரசாங்க உத்தியோகஸ்தர்களின் (சட்டநிருபண நிர்வாக பரிபாலன உத்தியோகஸ்தர்கள்) உத்தி

யோக நடத்தையைப் பற்றிக் கேட்கவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் விசாரணைசெய்து தீர்மானிக்கவுமான ஒரு வித அதிகாரமும் நீதி மன்றங்களுக்கு இல்லை. இந்த முறையால் அரசாங்கத்துக்கும் பொது சனங்களுக்கு முண்டாகும் அன்னியோன்னிய சம்பந்தம் நடைபெறுமென்பதைப் பலர் கூறியுள்ளார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அரசாங்க ஊழியன் (உத்தியோகஸ்தன்) ஒவ்வொருவனும், அரசர் நீங்கலாக, அவனவனுடைய நடத்தை காரணமாக நீதி மன்றங்களுக்கு உத்திரவாதியாகிறான். பிரதான மந்திரி முதல், சாமானிய போலீஸ் சேவகன் வரையிலுள்ள ஒவ்வொரு அரசாங்க உத்தியோகஸ்தனும், அரசாங்க உத்தியோகமில்லாத பொது சன சமூகத்தைச் சேர்ந்த மனிதனொருவன் சட்ட எல்லையை மீறி நடந்தால் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுவது போலவே, விசாரிக்கப்படுவான். நிர்வாக பரிபாலன இலாகாவைச் சேர்ந்த சிவில் உத்தியோகஸ்தர்களும், மேலதிகாரிகளால் தூண்டப்பட்டுச் சட்ட விரோதமான காரியங்களை இராணுவத்திலுள்ள உத்தியோகஸ்தர்களும் உள்பட செய்வார்களானால் நீதி மன்றங்களில் அவர்கள் விசாரிக்கப்படுவார்கள். ஒரு யுத்த வீரன் இராணுவத்தில் சட்ட விரோதமான காரியத்தைச் செய்தால் அவன் உடனே இராணுவ அமுல்படி கட்டுப்படுவான். மற்றும், அவன் மீறினால் ஜூரிகளாலும் நீதிபதியாலும் தக்க தண்டனைக்குட்படுவான். பிரிட்டிஷ் சட்ட நிருபண சபையார் மித மிஞ்சின அதிகாரத்தைக் கொண்டு சட்டங்கள் செய்தவரென கூறமுடியாது. (அரசர், பிரபு சபை, காமன்ஸ் சபை) பார்லிமெண்ட் மகாசபையார்



னது மிக்க மேன்மையாக யிருப்பதால், அது செய்யும் ஒவ்வொரு சட்டமும் பிரமாணப்படி நல்ல அல்லது தர்ம சட்டமாகின்றது. அப்பொழுது அச்சட்டங்களைப்பற்றிக் கேட்க எந்த நீதி மன்றங்களுக்கும் அதிகார மில்லை, ஆனால், நகர மகாசபை முதலிய கீழ் தர சபைகளைப் போன்ற சட்ட நிருபண சபைகள் செய்யும் சட்டங்களைப் பற்றிக் கேட்க நீதி மன்றங்களுக்கு அதிகார மிருப்பதுடன், அச்சட்டங்கள் அநீதியானவையென்று ஒதுக்கப் படும். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தில் இங்கிலாந்து அரசாங்கத்தைபோலவே நிர்வாக பரிபாலன உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோக நடத்தைகளில் நீதி மன்றங்களுக்கு உத்திரவாதியாகின்றனர். தவிர, அரசாட்சிக்குரிய பிரமாணப்படி அரசாங்கத்தைப் பற்றியதும் சமுதாயத்தைப் பற்றியதுமான சட்ட நிருபண சபைகளுக்குக் குறிப்பிட்டதும் எல்லைக்குட் பட்டதுமான சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதால், அவை அந்த அதிகாரங்களுக்கு மீறி யாதாமொரு சட்டங்களைச் செய்தனவா வென்று பார்க்கும் கடமையானது நீதி மன்றங்களுக்கு உண்டாகின்றது. அங்ஙனம் குறிப்பிட்ட அதிகாரத்தைக் கடந்து செய்யப்பட்ட சட்டங்கள் உறுதியற்றதாகும். நீதி மன்றங்களுக்கு ஏற்பட்ட அதிகாரங்களினால் எழுத்து மூலமான அரசாட்சிக்குரிய பிரமாணம் வற்புறுத்தப்பட்டது. தவிர, எழுத்து மூலமான அரசாட்சிக்குரிய பிரமாணம் உண்டானதின் பயனாக நீதி மன்றங்களுக்கு அதிகார மேற்பட்டதெனவும் கூறப்படுகிறது. எழுத்து மூலமான அரசாட்சிக்குரிய பிரமாணம் ஏற்

கேரியில் ஏற்பட்டிருக்கும் சட்ட நிருபண சபையால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் நியாயமானவையல்லவென்று தீர்மானிக்க நீதி மன்றங்களுக்கு அதிகாரமில்லை. பிரான்ஸு தேசத்தில் இதைப்பற்றிய அவஸ்தையேயில்லை. பிரான்ஸில் உள்ள அரசாட்சிக்குரிய பிரமாணங்கள் கவர்ன்மெண்டின் அமைப்பையும் பிரஜைகளின் சுதந்தரத்தையும் பற்றியே கூறுவதால் சட்ட நிருபண வகையில் மாகாண சபைக்கும் மத்திய சபைக்குமுள்ள பிரிவினை முதலியவைகளைப்பற்றிக் கூறவில்லை. இது பற்றியே அரசாட்சிக் குரிய சட்டங்களின் நியாய அநியாயங்களைப்பற்றி நீதி மன்றங்கள் கேட்பதில்லை. ஜர்மெனியில் இம்தர சட்ட நிருபண சபையாரால் செய்யப்பட்ட சில சட்டங்களைமட்டும் நீதிமன்றங்கள் நியாய மற்றவை என்று கூறியுள்ளன. ஆனால், சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த சட்டங்கள் ஒரு முறை சட்டமாகி விட்டால், அவைகளைக் கேட்க நீதிமன்றங்களுக்கு யாதொரு அதிகாரமுமில்லை. ஸ்விட்ஜர்லாந்து குடியரசில், ஏற்பட்ட சட்ட நிருபண மகா சபையால் உண்டாக்கப் பட்ட அரசாட்சிக்குரிய எல்லா பிரமாணச் சட்டங்களும் நியாயமானவை யென்றே அங்கீகரிக்கப்படவேண்டும். நிற்க, பிரான்ஸு தேசத்திலும் மற்ற ஐரோப்பாவிலுள்ள சில தேசங்களிலும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோக கடத்தை காரணமாக சாதாரண நீதி மன்றங்களுக்கு உத்திரவாதியாக மாட்டான். அரசாங்கத்தாரால் பிரத்யேகமாக அரசாங்க உத்தியோகஸ்தர்களை விசாரிக்க ஏற்பட்ட நீதிமன்றங்களுக்கே அவர்கள் உத்திரவாதியா



வார்கள். இந்நீதிமன்றங்களுக்கு அநேகமாக நிர்வாக பரிபாலன அதிகாரிகளே நீதிபதியாக யிருப்பார்கள். சாதாரண நீதிமன்றங்களைப் போலவே படிப்படியாக நிர்வாக நீதி மன்றங்களும் பிரான்ஸு தேசத்தில் இருக்கின்றன. பிரான்ஸு அத்யட்சகரால் நீதிபதிகள் இலாகா இலாகாவாக நியமிக்கப்படுவார்கள். இங்ஙனம், பல தேசங்களில் நீதி ஸ்தாபனங்களின் முறை பலவிதமாக யிருக்கின்றன. நீதிபதிகளுக்குப்பிரத்யேகமானதும் சுயேச்சையானதுமான ஓர் அதிகாரமும் அந்தஸ்துமிருந்தாலன்றி, பொது சனங்களின் சுதந்தரம் நிற்காது. நிர்வாக பரிபாலன அதிகாரிகளினின்றும் பொது ஜனங்களைப் பாதுகாக்கவும் அவர்களின் சுதந்திரங்களை ஸ்தாபிக்கவும் நீதி மன்றங்களே முக்கியமானவைகளாதலால், அவைகள் சுயேச்சையுடனும், ஒரு இலாகாவுக்கும் கட்டுப்படாமலும் பிரத்யேகமான அந்தஸ்தைக் கொண்டிருக்க வேண்டும்.

# 15. தேறுதல் முறை

அரசாங்கத்தின் சட்டநிரூபணம், நிர்வாக பரிபாலனம், நீதி ஸ்தாபனம் ஆகிய இம்மூன்று அதிகாரப் பிரிவினைகளைப்பற்றிக் கூறுகையில் அடிக்கடி அப்பிரிவினைகளின் உத்தியோகஸ்தர்கள் ஜனங்களால் தேறுதல் பெற்று தெரிந்தெடுக்கப்படுகின்றனரெனக் கூறிவந்தோம். ஆகவே, அத்தேறுதல் (Election) விஷயமாகவும் தேறுதல் தொகையினர் விஷயமாகவும் சற்று ஆராய்வோம். தேறுதல் தொகையினர் என்றால் பொதுஜனங்களைச்சேர்ந்த சமூகத்தினர் யாவும் என்பதல்ல; பிரஜை (Citizen) என்பது ஓர் அரசைச்சேர்ந்த ஒரு நபர் ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் அவ்வரசுக்குரிய ஆசாரத்தனத்துக்குப் பக்தி காட்டி, அவ்வரசின் பாதுகாப்புக்குப் பாத்தியதை கொண்டாடும் நபர். தேறுதல் தொகையினர் என்பது குறித்த அவ்வரசாங்கத்தின் சட்டத்திற்குச் சம்மதப்பட்டு வாக்குரிமை (வோட் பாத்தியதை)யைப் பெற்றிருக்கும் குழுவினர். வோட் பாத்தியதை அல்லது வாக்குரிமை பெற்ற இத்தொகையினருக்கு 'இராஜீய ஜனங்கள்' (Political People) என்று கூறுவர். பொதுஜன காரியங்களில் பரிபாலனத்தில் நேரான ஒரு பிரமாண பாத்தியதையில்லாத சாமானிய ஜனங்களினின்றும் அத்தொகையினரை வேறுபடுத்திக் கூறப்படுகிறது. மகா ஜனங்களின் பெரும்பாலார் தங்களை ஆளப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் வாக்குரிமையைப் பெற்றிருப்பதே பிரிட்டிஷ் ராஜ்யம், அமெரிக்கா அரசாங்கங்களின் சுதந்தர ஸ்தாபனத்திற்கு மூலாதாரமாகும். இங்கிலாந்தில் முதல் முதல் எல்லா மனிதர்களும் (அடிமை நீங்கலாக) வாக்குரிமை பெற்றவர்களாக யிருந்தனர். பிறகு, பார்லிமெண்டரி அரசாட்சிமுறை ஏற்பட்ட காலவாரம்பத்தில் நில உரிமை பெற்றவர்களுக்கே வாக்குரிமை யிருந்தது. பிறகு 1430-ம் வருடத்தில் ஆறுவது ஹென்றியின் ஆளுகையில் உண்டான ஒருசட்டத்தால், ஜில்லா தேறுதல்களில் அந்த ஜில்லாவில் குடித்தனஞ் செய்து ஒரு வருடத்தில் 40 ஷில்லிங்கு பெறுமான தனத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களே வாக்குரிமை பெற்றவர்களென தீர்மானிக்கப் பட்டது. நகர தேறுதல்களிலும் வாக்குரிமையின் தன்மை நகரத்துக்கு நகரம் வேறுபட்டிருந்தாலும், பொதுவாகச் சொத்துரிமையிலும் அரசாங்கத்துக்கு வரி செலுத்துவதிலுமே அமைந்தது. வரவர, சொத்துரிமை பெற்றவர்களே வாக்குரிமை பெற்றவர்களானார்கள். சொத்துரிமை பெற்றவன் சமூகத்தில் ஓர் அந்தஸ்து வாய்ந்தவனென்பதாகவும், அவனுடைய வாக்குரிமை சொத்துரிமையின் வழியாகவே யேற்பட்டதென்றும் அவனுடைய நபர் உரிமை அவ்வளவு விசேஷமாகக் கருதப்படவில்லை யென்றும் தெரியவருகிறது. வாக்குரிமையும் தேர்ந்தெடுக்கும் பாத்தியதையும், கடைசியாக சொத்துரிமை விசேஷத்தாலேயே ஸ்தாபிக்கப் பட்டது. 18-வது நூற்றாண்டில் பிரான்ஸிலும் அமெரிக்காவிலும் உண்டான இராஜீய புரட்சிகளினால் வாக்குரிமை ஏற்பாடு வேறு விதமாக மாறிற்று. சொத்துரிமை யிருந்தாலும் அல்லது சொத்

தாரிமை யில்லாமற் போனாலும் யுக்த வயது வந்த எல்லா ஆண்பாலர்களும் வாக்குரிமைக்கு யோக்யதையுள்ளவர்களென்னும் தத்துவமொன்று உண்டாயிற்று. இந்த தத்துவத்தை முதன் முதல் பிரான்ஸ் தேசத்து பிரஜாதிபத்யக் கட்சியர்களான ஜகோபின் கட்சியினர்களால் சித்தாந்தப் படுத்தப்பட்டது. ஆனால், இவர்களுக்குள்ளும் சிலரே ஸ்திரீகளுக்கு சர்வத்ர வாக்குரிமை ஏற்பட வேண்டுமென்று நினைத்தனர். இந்த சித்தாந்தத்தின் உணர்ச்சியினாலேயே 19-வது நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் அமெரிக்கா, சொத்துரிமை யோக்கியதையை நிராகரித்து விட்டு யுக்த வயது கொண்ட சர்வத்ர புருஷர்களுக்கும் வாக்குரிமையுண்டென பறை சாற்றிற்று. இக்காலத்திலுள்ள பிரஜாதிபத்ய அரசாங்கங்களிலும் வாக்குரிமை பெற்றவர்களின் தொகை மொத்த ஜனத்தொகையில் 5-ல் 1 பங்குக்கும் குறைவாகவேயிருக்கிறதெனக் கூறப்படுகிறது. ஏனெனில், வோட் கொடுக்கும் சாவடியில் எழுதப்படிக்கத் தெரிந்த புத்திசாலிகளையே வோட் கொடுக்க இடம் கொடுக்கப்படுமென்கிற பொது தர்மத்தினாலேயே வாக்குரிமை பெற்றவர்களின் மொத்த ஜனத்தொகையில் குறைகிறது. பிரான்சு தேசத்தில், 1874-வது வருடத்திய சட்டப்படி 21 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண்பாலர்களும் வோட் உரிமை பெற்றவர்களானார்கள். ஜர்மென் சாம்ராஜ்யத்திலுள்ள ஆண்பாலர்களில் 25 வயதும் அவ்வயதுக்கு மேற்பட்ட எல்லாரும் ஜர்மென் சட்டசபைக்குத் தேறுதல் செய்ய வாக்குரிமை பெற்றவர்களாக யிருக்கின்றனர். அமெரிக்கா அரசுகளில் வோட் கொடுக்கும்



பிரஜைகளின் உரிமையானது ஜாதி, மதம், நிறம், முதலியவைகளின் வித்தியாசங்களைக் கொண்டிருக்க மாட்டா. தவிர, பூர்வம் அடிமையாக ஒருவன் இருந்தானென்ற காரணத்தாலும் வோட் உரிமை பாத்தியம் இல்லாமலில்லை. அமெரிக்காவிலுள்ள சில அரசுகள் அன்னிய நாட்டார்களுக்கும், அமெரிக்க பிரஜையாகவே யாக இஷ்டப்படுபவர்களுக்கும், மாதர்களுக்கும், வோட் உரிமை பாத்தியதைகளைக் கொடுத்திருக்கின்றன. மூன்று மாத காலவளவிலிருந்து இரண்டு வருடகாலம் வரை முறையே சில சில அரசுகளில் குடித்தனஞ் செய்யும் அன்னியர்கள் வோட் உரிமை பெறுவார்கள். பைத்தியக்காரர்கள், குற்றவாளிகள், புத்திமாற்ற மடைந்தவர்கள் ஆகிய இவர்களுக்கு வோட் உரிமை கிடையாது; சில அமெரிக்கா அரசுகள் சர்வ ஏழையாக விருக்கும் சில வறிஞர்களுக்கு வோட் உரிமை கொடுக்க வில்லை. சில அமெரிக்கா அரசுகள் எழுதப்படிக்கத் தெரிந்த அனைவருக்கும் சர்வத்ர வோட் உரிமையைக் கொடுத்திருக்கின்றன. மற்றும், 300 டாலர் மதிப்புள்ள சொத்து ஒருவனுக்குத் தன் பேரிலாகிலும் அல்லது தன்னுடைய தகப்பன் பேரிலாகிலும் அல்லது பாட்டன் பேரிலாகிலும் இருந்தால், அவனுக்கு வோட் உரிமையைச் சில அரசுகள் கொடுத்திருக்கின்றன. இங்கிலாந்தில், 1832-ம் வருடத்திய சட்டப்படி வோட் உரிமை முன்னிலும் சற்று தாராளமாகச் செய்யப்பட்டது. நில சொந்தக்காரர்களுக்கும் அவர்களின் கீழ் குடிவாரத்திற்குப் பயிரிடுபவர்களுக்கும், நகரங்களில் வருடத்தில் 10 பவுன் குடிக்கூலி கொடுக்கும் நபர்களுக்கும் வோட் உரிமை கொடுக்

கப்பட்டது. பிறகு 1867-ம் வருடத்தில் சற்று தாராளமாக்கப்பட்டது. மீண்டும் 1884-ம் வருடத்தில் வெகு தாராளமான வோட் உரிமை ஏற்படுத்தப்பட்டது. வோட் உரிமைக்குரியவன் ஆண் பிள்ளையாகயிருக்க வேண்டும்; அவன் 21 வயதுள்ளவனாகயிருக்கவேண்டும்; நில உரிமையுள்ளவனாகவாகிலும் அல்லது குடிவாரத்திற்குப் பயிரிடக் கூடியவனாகவாகிலும், அல்லது நகரங்களில் வீட்டுக்குச் சொந்தக்காரனாகவாகிலும், அல்லது வருடத்தில் குறிக்கப்பட்ட தொகையைக் குடிக்கூலி கொடுத்து வருபவனாகவாகிலும் இருக்கவேண்டும். இங்கிலாந்தை ஸ்திர குடித்தனமாகக்கொள்ளாத அன்னிய நாட்டினர்கள், பயித்தியக்காரர்கள், குற்றவாளிகள், பிரபுவம்சத்தைச்சேர்ந்தவர்கள் ஆகிய இவர்களுக்கு வோட் உரிமையில்லை. நிற்க, உலகத்திலுள்ள அநேக தேசங்களில் 'சர்வத்ர வோட் உரிமை' தத்துவம் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படினும், உண்மையில் சர்வத்ர வோட் உரிமை அநுஷ்டானத்திலில்லை. அநேகமாக பாலர்களுக்கும் 21 வயதுக்குக் கீழ்ப்பட்ட மைனர்களுக்கும், குற்றவாளிகளுக்கும் பைத்தியக்காரர்களுக்கும் வோட் உரிமையில்லை. ஜனத்தொகையில் அநேகமாக சிறுபான்மையோருக்கே வோட் உரிமையிருந்து வருவதாக ஏற்படுகிறது. ஜனத்தொகையில் சரிபாதி அல்லது சில இடங்களில் பாதிக்கு மேலும் பாதிக்குக் குறைவாகவுமிருக்கும் ஸ்திரீ வகுப்பினர்களுக்கு வோட் உரிமை கொடுக்கவில்லை. ஆகவே, சர்வத்ர வோட் உரிமை தத்துவம் என்பது சரியல்ல. ஆனால் குழந்தைகளும் பால்மணம் மாறாச்சிறுவர்களும்



பைத்தியக்காரர்களும் வோட் உரிமைபெறின் அவர்கள் என் செய்ய முடியும்? எவ்வளவு தீவிர இராஜீய உணர்ச்சியைக் கொண்டவனும், சர்வத்ர வோட் உரிமை தத்துவத்தைப் பறை சாற்றுபவனும் மேலே கூறின மூவகையினருக்கு வோட் உரிமை கொடுக்க வேண்டுமெனக் கூறமாட்டான். கடந்த ஐம்பது வருட காலமாக ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களில் ஸ்திரீகளுக்கு வோட் உரிமை கொடுக்கவேண்டிய விஷயமாகப் பல கிளர்ச்சிகள் உண்டாயின. அமெரிக்கா அரசுகளில் ஒன்பது அரசுகளிலேதான் ஸ்திரீகளுக்குப் புருஷர்களைப்போல வோட் உரிமை கொடுக்கப்பட்டது. மற்றுஞ் சில அரசுகளில் சிற்சில தேர்தல்களுக்கு மட்டும் ஸ்திரீகளுக்கு வோட் உரிமை கொடுக்கப்பட்டது. ஐரோப்பா கண்டத்தில் பின்லாந்து ஒன்று நீங்கலாக மற்ற தேசங்களில் சட்ட நிருபண சபைகளின் தேர்தல்களுக்கு ஸ்திரீகள் வோட் உரிமை பெறவில்லை. இதாலியில் சொத்துள்ள கைம்பெண்களுக்கும் வோட் உரிமை உண்டு. அவர்கள் சட்டசபை தேர்தல்களுக்கும் வோட் உரிமையை உபயோகிக்கலாம். இங்கிலாந்தில் பார்லிமெண்ட் தேர்தல்களில் ஸ்திரீகளுக்கு வோட் உரிமை யில்லை; அவர்கள் நகரத்தேர்தல்களுக்கு வோட் உரிமை பெற்றிருக்கின்றனர். நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா அரசுகளில் புருஷர்களைப்போலவே சகல சபைகளுக்கு ஏற்படும் தேர்தல்களில் ஸ்திரீகள் வோட் உரிமை பெற்றிருக்கின்றனர். அமெரிக்காவிலுள்ள நீக்ரோ சாதியார்களுக்கு வோட் உரிமை விஷயமாகப் பலமான இயக்கமுண்டாகிப் பலர் கிளர்ச்சி

செய்தனர். கடைசியாக நீக்ரோ சாதியார்களுக்கும் வோட் உரிமையுண்டு. சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் என்னும் ஒரு தத்துவ முறையுண்டு. ஓர் அரசாங்கத்தின் சட்ட நிரூபண சபையினர் ஒரே மொத்தமாக சமூகத்தினர்களின் பொதுச்சீட்டால், அதாவது எத்தனை ஸ்தானங்கள் தேவையோ அவ்வளவு ஸ்தானங்களுக்கும் அத்தனை தடவை ஒவ்வொரு வாக்காளனும் தன் வாக்குரிமையைக் கொடுத்தபொழுது ஏற்பட்டால், தெரிந்தெடுக்கப்பட்டபோதும், வாக்காளர்களில் சிறுபான்மையோர் தங்கள் பிரதிநிதிகளை வரையும் தெரிந்தெடுக்காமலே யிருப்பரென்பதும் புலனாகும். ஆகவே, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜனங்களில் ஒரு தொகையரேனும் பிரதிநிதித்துவத்தை வகிக்க வேண்டிய அவசியத்தால், தேசம் முழுவதும் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவினின்றும் ஒருவரேனும் அல்லது சிலரேனும் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். அங்ஙனம், பிரிக்கப்பட்ட ஜில்லாக்களில் வெகு சனங்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் தெரிந்தெடுக்கப்படாத பிரதிநிதிகளுக்குத் தங்கள் வாக்குரிமையைக் கொடுத்து பிரதிநிதித்துவமின்றியும் இருக்கின்றனர். அதிகாரப் பதவியிலிருப்பவர்கள் தேறுதல் ஜில்லாக்களை ஒரு கட்சியைச்சேர்ந்தவர்களுக்கே பெருவாரியான வோட்டுகள் போகவும், அக்கட்சியைச் சேராத எதிர்க்கட்சியினர்களுக்கு வெகு குறைவான வோட்டுகளே போகவுமாகப் பிரித்தால் அநேக தீமைகள் நீங்குமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இம் முறையையும் கண்டித்து வேறு சிலர் இதனாலும்



சிறுபான்மையோரைக் காக்கப் பிரதிநிதித்துவம் பிரயோசனமாகாதென்றுங் கூறினர். இங்ஙனம், பற்பல விதமாகப் பலர் பலகாலமாகத் திட்டங்களை யேற்படுத்தியும் அத்திட்டங்கள் ஒரு நிலையாகவே காணப்படுகின்றன. 19-வது நூற்றாண்டின் மத்தியில் மிஸ்டர் தாமஸ் ஹேர் என்பவர் ஓர் திட்டத்தைத் தயார் செய்தார். தேசத்தைப் பல ஜில்லாக்களாகப் பிரிப்பதைவிட, எந்த பிரதிநிதியும் தன்னிஷ்டப்படி தேசத்தின் எப்பாகத்திலும் போதுமான வோட் வந்தால் தெரிந்தெடுக்கப்படும் என்பதே தாமஸ் ஹேர் அவர்களுடைய திட்டம். பார்லிமெண்டிற்கு வேண்டிய ஸ்தானங்களைக் கொண்டு வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பிரித்தால், உடனே தேவையான பிரதிநிதி ஸ்தானங்கள் உண்டாகுமென்பதும் தெரிவிக்கப்படுகிறது. இந்த முறையின் வழியாகச் சிறுபான்மையோரைக்கொண்ட யாதொரு தொகுதி ஜில்லா தேறுதல் எல்லைகளில் சிதறியிருப்பதைவிட்டு மொத்தமாக ஒன்றுசேர்ந்து ஒரே வாக்காக யிருக்கலாம். இந்த முறைக்கு இராஜீய உணர்ச்சியும் நடமாட்டமும் அதிகமாயிருந்தாலன்றி சாமானியமாக யிருத்தல் கூடாதெனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்த முறையை இங்கிலாந்து வாசிகள் முதன் முதல் வெகு அக்கறையுடன் கவனித்து வந்தனர். சிறுபான்மை யோரைக்காக்க பிரதிநிதித்துவ முறையில் மற்றொன்று முண்டு, இதற்கு "நிர்ணய வோட் செலுத்துகை" என்பர். யாதொரு கௌன்ஸில் அல்லது போர்டு ஸ்தாபனத்திற்காகப் பல பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் பொழுது இம்முறை

யனுஷ்டிக்கப் படுகிறது. ஜில்லாவில் ஒரே பிரதிநிதியைத் தெரிந்தெடுக்கும் தேர்தலில் இம்முறை அனுஷ்டிக்கப் படுவதில்லை. ஒவ்வொரு வாக்காளனும் எவ்வளவு ஸ்தானங்களுக்குப் பிரதிநிதிகள் தேவையோ அவ்வளவு பிரதிநிதிகளுக்கும் வாக்குரிமையைச் செலுத்தாமல் குறித்த தடவைகளில் தங்கள் வாக்குரிமையைச் செலுத்துவதற்கே நிர்ணய வோட் செலுத்துமுறை (Limited voting) எனப்படும். உதாரணமாக, ஒரு நகர சபைக்குரிய தேர்தலுக்கு 12 ஸ்தானங்களே தேவையென்றால், ஒவ்வொரு வாக்காளனுக்கும் 7 வோட்டே யுண்டு. அதாவது எழுபேர் கொண்ட ஒரு கட்சியினரையும் ஐவர் கொண்ட மற்றொரு கட்சியினரையும் தெரிந்தெடுப்பதாகும். எந்த கட்சியும் தானே தம் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் தெரிந்தெடுக்கக் கூடாது என்பதாம். இம்முறையைப் பற்றியும் பல ஆட்சேபனைகளுண்டாயின. மூன்றாவதாக ஒருமுறை யுண்டு. குப்பலாக வோட் செலுத்துமுறை (Cumulative voting) என்பதாம். இதில் பலர் தெரிந்தெடுக்கப்படும் தேர்தலில் ஒவ்வொரு வாக்காளனும் ஒரே தடவை தன்னுடைய வோட்டை எல்லா பிரதிநிதிகளுக்கேனும் அல்லது தன்னுடைய எல்லா வோட்டையும் ஒருவனுக்கேனும் கொடுக்கலாம். இம்மேற் கூறிய முறைகளினாலும் சிறுபான்மையோரைக் காக்கப் போதுமான வழியில்லையெனக் கண்டு ஒன்றுக்கொன்று பொருந்தக் கூடிய பிரதிநிதித்துவ முறையொன்றைக் கண்டு பிடிக்கப் பட்டது. இதில் வாக்காளன் தன்னுடைய இஷ்டப்



படி தனக்கு வேண்டிய ஒரு பிரதிநிதியை முதன் முதலாக அறிவிக்கும்படி செய்யப்படுவதுடன் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வரிசைக் கிரமமாகப் பிரதிநிதிகளின் பெயரை அறிவிக்கும் படியும் செய்யப்படும். தேர்தலடைந்த பிரதிநிதிக்கு உண்டாகும் மிஞ்சின வோட்டுகள் வாக்காளன் அறிவித்த இரண்டாவது பேர்வழிக்குப் போகும். இரண்டாவது பேர்வழிக்கு அவசியமில்லையாயின் மூன்றாவது பேர்வழிக்கும் பிறகு முறையே வரிசைக் கிரமமாகப் போகும். இந்த முறையில் இருவகையுண்டு. ஒன்று அட்டவணை வழி அல்லது இடாப்பு முறையாம். இதில் ஒரு தேர்தல் எல்லைக்குப் பல பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப் படவேண்டுமாயின், ஒவ்வொரு இராஜீய கட்சியும் தங்களுக்கு வேண்டிய நபர்களைக் குறித்து ஓர் அட்டவணையைத் தயார் செய்யும். கட்சிகளின் வோட்டுகள் ஒன்றுக் கொன்று பொருந்தக் கூடிய பரிமாணப் படி கட்சியின் அட்டவணையில் குறிப்பிட்ட எல்லா பிரதிநிதிகளாகிலும் அல்லது ஒரு பாகத்தைக் கொண்டவர்களாகிலும் தெரிந்தெடுக்கப் பட்டார்களெனக் கூறப்படும். இரண்டாவதாக, வெவ்வேறாக மாற்றப்படும் வோட் என்னும் முறையாம். இதில், ஒவ்வொரு வாக்காளனும் அவனுடைய இஷ்டமான பிரதிநிதிகளின் பெயரைக் குறித்துக் காட்டுகிறான். இந்தமுறையில் முதல் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்குச் சீட்டுகள் எவையென்றும் அவைகளினின்றும் இரண்டாவது பிரதிநிதியைத் தெரிந்தெடுப்பதெப்படி யென்றும் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இங்ஙனம் மேனாடுகளில் நடந்த இர

ண்டு மூன்று நூற்றாண்டுகளாகத் தேறுதல் விஷயமாகப் பல முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. இங்ஙனம் அனுஷ்டிக்கப் பட்டும் பலர் பலவிதமான தோஷங்களை அத்தேறுதல்களுக்குச் சுமத்தி வருகின்றனர். இத் தேறுதல் விஷயமாகப் பூர்வம் தென்னிந்தியாவிலும் சோழ மன்னர்கள் ஆண்ட காலத்தில் ஏற்பட்ட முறையென்ன என்பதையும் நம் நேயர்கள் அறியவேண்டும். இது விஷயமாக "பாரதநாட்டின் பூர்வ அரசாங்க முறை," என்னும் நூலிற் காண்க.

* பாரத நாட்டின் பூர்வ அரசாங்க முறையைப்பற்றிய நூலொன்று சமீபத்தில் வெளிவரும்.

# 16. அரசாங்கங்களின் வகை.

## 1. ஒப்பந்த அரசாங்கம் (or) உடம்பாடாட்சி.

தற்காலம் உலகில் ஏற்பட்டுள்ள அரசாங்க முறைகளில் ஒப்பந்த அரசாங்கம் அல்லது உடம்பாடாட்சி என்பது ஒன்று. இதை ஆங்கிலத்தில் பிடரல் கவர்ன்மெண்டு (Federal government) என்பார். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம், ஜர்மன் சாம்ராஜ்யம், மெக்ஸிகோ, ப்ரஜீல், ஸ்விட் ஜர்லாந்து முதலிய அரசுகள் மேற்கூறிய உடம்பாட்சியில் சேர்ந்தவை. தவிர, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த கன்னடா, ஆஸ்திரேலியா இவ்விரண்டையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினின்றும் நீக்கித் தனிப்படையாகப் பார்ப்போமானால் இவைகளும் உடம்பாடாட்சியிற் சேர்ந்தவையாகும். தற்கால நாகரிக அரசாங்கங்களின் பரிணாமங்களைச் சரிவர ஆராய்ச்சி செய்யுமிடத்து, பரந்த பூமிப்பரப்பை ஓர் அரசு ஆட்கொண்டிருப்பதென்பது நன்கு விளங்கும். இந்த தத்துவத்தைச் சித்தாந்தப் படுத்துவதற்கு இரண்டு வித பிரயோக சக்திகள் வேண்டும். ஒன்று, படையெழுச்சி, ஸ்வாதீனம், படர்ச்சி ஆகிய இம்மூன்றையுங் கொண்டது; மற்றொன்று ஒப்பந்த சேர்க்கையைக் கொண்டது. முதல் பிரயோக சக்தியின் அனுஷ்டானத்தால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் பிரான்சு சாம்ராஜ்யமும் விசாலமான பூமிப்பரப்பைக் கொண்டன. இரண்டாவது பிரயோக சக்தியின் அனுஷ்டானத்தால், சிறிய சிறிய அரசுகள் பாஷையினாலும்

நடையுடை பாவனைகளினாலும் ஒற்றுமை பட்டவைகளை இராஜ்ய முறையில் ஒன்று படுத்தி, ஒப்பந்த நிபந்தனைகளையுண்டாக்கி, ஒரு மத்திய அரசாங்கத்தை யேற்படுத்தின தன்மையால் அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம் ஏற்பட்டது. மேற்கூறிய இரண்டு பிரயோகங்களில் ஒன்று யுத்தத்தையும், மற்றொன்று சமாதானத்தையும் பற்றியது. இரண்டு அல்லது மூன்று சுதந்தரமுள்ள அரசுகள் யாதாமொரு வழிபற்றி ஒன்று சேர்ந்திருப்பதற்கே சம்பந்தமென்று பெயர். ஐரோப்பா கண்டத்தில் கிறிஸ்து பிறப்புக்கு முன்னும் இவ்வழியை யநுசரித்த உடம்பாட்சி இருந்தது. இம்முறை ரோமராச்சிய எழுச்சியினால் அழிந்ததென்பார். பிறகு 13-14-ம் நூற்றாண்டில் இதாலிய நகரங்களின் சேர்க்கையால் உடம்பாட்சி யேற்பட்டு சிறிது காலத்திற்குள் மறைந்தது. ஸ்விட்ஸர்லாந்து ஒன்றே அரசின் பரிணாமத்தால் சரித்திர பூர்வமாக ஒப்பந்த அரசாங்கத்தைக் கொண்டிருக்கிறது. 18-வது நூற்றாண்டில் வட அமெரிக்காவிலுள்ள அரசுகளின் சேர்க்கையினால் ஒப்பந்த முறை யேற்பட்டு உடம்பாட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு, ஒவ்வொரு அரசும் தனித்தனி சுதந்தரங் கொண்டது. காங்கிரஸ் என்னும் மகாசபை யொன்றே மேற் கூறிய அரசுகளின் மீது அதிகாரஞ் செலுத்தக் கூடும். இவ்வதிகாரமும் பொதுவானதே யன்றி, காங்கிரஸ் சபையானது தன்னிஷ்டப்படி ஒரு அரசைக்கட்டுப் படுத்தவோ அல்லது அவ்வரசுகளிலுள்ள பிரஜைகளின் மீது வரிவிதித்தல் முதலிய அதிகாரங்களைத்



தொடுக்கவோ அதிகாரம் பெறவில்லை. 1787-ம் வருடத்திய ஒப்பந்த நிபந்தனையின் பிரமாணப்படி அவ்வரசுகளுக்குச் சேர்க்கை யுண்டாக்க ஓர் மத்திய அரசும் ஸ்தாபிக்கப்பட்டது. தவிர, பிரஜைகளுடன் நேருக்கு நேராக சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் இது ஸ்தாபிக்கப்பட்டது. 19-வது நூற்றாண்டில் ஸ்விட்ஸர்லாந்து, கன்னடா, ஜர்மனி, ஆஸ்திரேலியா ஆகிய இவைகள் உடம்பாட்சி முறையில் உண்டான சம்பந்தங்கள் பலவிதமாகும். 18-வது நூற்றாண்டில் இதற்குக்குடும்ப சேர்க்கையென்பார். குடும்ப சேர்க்கையினின்றும், அரசு சேர்க்கை யுண்டாயிற்றென்பார். பல சிறிய சிறிய அரசுகள் தனி சுதந்தரங்கொண்டு, தங்களுக்குள்ளே சர்வாதிகாரம் பெற்று ஓர் தனிய அரசாங்கத்தை யுண்டாக்க ஒன்று சேர்வதின் முறையினாலேயே அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம் உண்டாயிற்றென்பார். அரசுகள் தாங்களாகவே ஒன்றோடொன்று சேர்வதுமுண்டு எனவும் கூறப்படுகிறது. உதாரணமாக, ஸ்காத்லாந்து இங்கிலாந்துடன் சேர்ந்ததுபோலாம். ஒப்பந்த அரசாங்க முறையில் இருவகையுண்டு. அவைகளுக்குள்ளே பலமான வித்தியாசம் இல்லை. ஐக்கிய அரசாங்கம் (Confederacy) என்றும் ஒப்பந்த அரசாங்கம் (Federal State) என்றும் கூறலாம். ஐக்கிய அரசாங்கம் என்பதற்கு சம்பந்த அரசாங்க மெனவும் கூறலாம். இதில் அரசாங்கம் ஏக அரசாங்கமாக யிராது. சில காரணத்தால் சில நிபந்தனைகளின்படி பல சுதந்தரமுள்ள அரசுகள் ஒன்று சேர்ந்திருப்பதற்கு ஐக்கிய அரசாங்கம் என்பார். இதில் ஒவ்வொரு

அரசும் பிரமாணப்படி சுயாதீனங் கொண்டது. தன் இஷ்டப்படி எப்பொழுது வேண்டுமானாலும் அப்பொழுது ஐக்கிய அரசாங்கத்தினின்றும் நீங்கிக் கொள்ள அவ்வரசு ஒவ்வொன்றும் பூர்ண சுதந்தரங் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஐக்கியம் அல்லது சம்பந்தம் சாசுவதமாகயிராது; பிரியக் கூடியது. பிரிக்கப்படுமானால் ஒன்று சேர்க்கப்பட்டிருந்த அரசாங்கத்தின் அதிகாரமுறை உடனே நீங்குகிறது. ஒப்பந்த அரசாங்கம் என்னும் உடம்பாடு முறையில் அரசு வசமானது. ஒப்பந்த சேர்க்கைக்கு முன் இவ்வரசுகள் தனிப்பட்ட சுதந்தர அதிகாரத்தைக் கொண்டிருக்கக் கூடும். ஒப்பந்த முறை யேற்பட்ட பிறகு அவ்வரசுகள் முன்மாதிரியாகயிரா. அவ்வரசுகள் ஒவ்வொன்றும் பிரமாணப்படி சேர்க்கப்படுவதால் அவைகள் பிரிக்கக்கூடியதல்ல. ஒப்பந்தப் பிரமாணத்தைத் திருத்தினாலன்றி அவ்வரசுகளை வேறு வழியாகப் பிரிக்க முடியாது. இதுவே, ஒப்பந்த அரசாங்கத்திற்கும் ஐக்கிய அரசாங்கத்திற்குமுள்ள வித்தியாசம். ஒப்பந்த அரசாங்கம் ஒன்று ஸ்தாபிப்பதினால், தனித்தனியாகவிருந்த அரசுகளின் அதிகாரங்கள் அழிகின்றன. புதிய அரசாங்கத்தின் அதிகாரம் புதிதாக ஏற்பட்ட கவர்ன்மெண்டினிடமுமில்லை; ஒப்பந்த நிபந்தனைகளின் பிரமாணங்களை மாற்றவோ திருத்தவோ அதிகாரம் பெற்ற சபையினிடத்தே சகல அதிகாரங்களுமிருக்கின்றன. இவ்வதிகாரம் பெற்ற சபையினர் தங்களுடைய அதிகாரத்தால் ஒப்பந்தத்தை ரத்து செய்து ஓர் அரசை நீக்கவும், அல்லது ஒப்பந்தத்தையே நீக்கி



அரசுகளையெல்லாம் தனித்தனியே சுயாதீனங்கொண்டவைகளாகச் செய்யவும் கூடும். ஒப்பந்தத்தால் உண்டான அரசாங்கத்திற்கு முக்கியமாக நான்கு அதிகாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இராணுவம் கப்பற்படை ஸ்வாதீனம், அன்னியநாட்டுச் சம்பந்தமான விஷயங்களின் அதிகாரம், பிரஜைகளுக்கு வரி விதிக்கும் அதிகார சுதந்தரம், அரசாங்கத்திற்காகப் பணவருவாயிலைக் கொள்ளவும் கடன் வாங்கவுமான சுதந்தரம் ஆகிய இவைகளே அரசாங்கத்தின் நான்கு அதிகாரங்களில் முதலாவதாகும். இரண்டாவதாக, நாணயங்களை யடித்தல், வழங்குதல், மாற்றல் முதலிய அதிகாரமும், புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் வஸ்துக்கள் தொழில்கள் முதலியவைகளைச் சுய உரிமைப்படுத்துவதற்காக அரசாங்கத்தார் பத்திரமொன்று கொடுப்பது வழக்கமாதலால், அவைகளைப்பற்றிய அதிகாரமும், புத்தகப் பதிவு உரிமைகளைப்பற்றிய அதிகாரமும் தபால் போக்குவரவு சாதனங்களின் அதிகாரமும் ஆகிய இவையாவும் ஒப்பந்த அரசாங்கத்தின் உரிமையென ஏற்பட்டிருக்கின்றன. மூன்றாவதாக, பொதுக் காரியங்களைப்பற்றிய ஸ்தாபனங்கள், இருப்புப்பாதைகள், வாய்க்கால்கள், தந்தி, தனாட்சண நிதி, ஆயத்தீர்வை முதலிய அதிகாரங்களும் இவ்வரசாங்கத்திற்கு உரிமையென ஏற்பட்டிருக்கின்றன. நான்காவதாக, விவாகம், கல்வி முதலியவைகளின் அதிகாரங்களும், கடைசியாக, பொது தர்ம காரியங்கள், கலால் முதலியவைகளின் அதிகாரங்களும் இவ்வரசாங்கத்திற்கு உரிமையென ஏற்பட்டிருக்கின்றன. இது விஷயமாக

அமெரிக்கா அரசாங்க முறையென்னும் புத்தகத்தில் விரிவாகக் காணலாம். கன்னடா அரசாங்க விஷயமாக யோசிக்குமிடத்து கன்னடாவின் அரசாட்சிக் குரிய பிரமாணம் 1867-ம் வருடத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபையில் "பிரிட்டிஷ் வட அமெரிக்கா ஆக்ட்" என்னும் சட்டத்தின் ஆதாரத்தைப்பற்றி நிற்கிறது. கன்னடாவிலுள்ள காங்கிரஸ் மகாசபைக்குரிய அதிகாரங்களோடு, கன்னடா பார்லிமெண்டின் சட்டநிரூபண சபைக்குரிய அதிகாரமும் கிரிமினல் சட்டம், விவாகம், விவாகத்தை ரத்து செய்தல், வட்டி, வரியினாலும் அல்லது வேறு வழியினாலும் பணவருவாயைக் கொள்ளுதல் முதலிய இனங்களின் மீது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்விட்ஜர்லாந்தில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரமானது அமெரிக்கா அரசாங்கத்தைக் காட்டிலும் சற்று அதிகரித்தே யிருக்கிறது. ஜர்மெனி ஒப்பந்த அரசாங்கத்தில் காங்கிரஸ் சபையின் அதிகாரமும் கிரிமினல் சட்டம், ஸிவில் சட்டம் நியாய ஸ்தாபனம், இருப்புப்பாதை முதலிய அதிகாரங்களும் ஒப்பந்த அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒப்பந்த அரசாங்கம் சரிவர நடைபெறாத விடத்து அல்லது சரிவர அனுஷ்டிக்கப்படாத விடத்து அரசுகள் தனித்தனியே சட்ட நிரூபணஞ் செய்யும் அதிகார முறையைக்கொள்ளும். கன்னடாவைப் போலவே ஆஸ்திரேலியாவின் அரசாட்சிக்குரிய பிரமாணம் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபையில் 1900-ம் வருடத்திலுண்டான சட்டத்தை ஆதாரமாகப்பற்றி நிற்கிறது. இதன்விஷயமாக பிரிட்டிஷ் இராஜநீதி என்னும் புத்தகத்தில் பரக்கக்காண



லாம். ஒப்பந்த அரசாங்க முறையினால், பல அரசுகள் தனித்தனியே நின்று துன்பப்படுவது ஒழிந்து அவைகள் ஒரே அரசாங்கமாக ஏற்பட்டு ஐக்கிய பாவத்துடன் அபிவிர்த்தியை யடைகின்றன. பொருளாதார வாயில்கள் விசாலப்பட்டும் தொழில் முறைகள் அதிகரித்தும் வரலாகும். பிரஜைகளின் வாழ்க்கையின் நிலைமை நாளுக்கு நாள் இம் மூலமாகப் பலப்படும். ஜாதி துவேஷமும், வகுப்புப் பிரிவுமில்லாமல் ஏக குடும்பத்தினர்களாகப் பிரஜைகள் ஆவர். இவ்வுடம்பாடாட்சி முறை மற்ற எல்லா அரசாங்க முறைகளைவிட மிக்கவும் மேன்மையுடன் பரிபாலிக்கப்பட்டு வருகிறதென பல இராஜநீக சாஸ்திரக்ஞர் கூறுகின்றனர்.

## 2. குடியேற்ற நாடுகளின் அரசாங்கம்

உலகத்திலுள்ள குடியேற்ற நாடுகள் சற்றேறக்குறைய உலகப்பரப்பில் 5-ல் 2 பங்கு விஸ்தீரணமுள்ள பூமியைக் கொண்டிருக்கின்றன. ஜனத்தொகையோ சுமார் 50 கோடி. இக்குடியேற்ற நாடுகள் யாவும் ஒவ்வோர் தாய் நாட்டு அரசாங்கங்களின் அதிகாரத்திற்குட்பட்டே பெரும்பாலும் யிருக்கின்றன. உண்மையில், குடியேற்ற நாடுகளிற் சில சுதந்தரமுள்ள அரசாங்கங்களாகவே யிருக்கின்றன. கன்னடா, ஆஸ்திரேலியா போன்ற சுதந்தரமுள்ள குடியேற்ற நாடுகளுக்கும் ஜிப்ரால்டர், மடகாஸ்கர் போன்ற சுதந்தரமற்ற குடியேற்ற நாடுகளுக்கும் வித்தியாசமுண்டு. உலகிலுள்ள புறம்போக்கு தேசங்களை வல்லரசுகள் ஒவ்வொன்றும் தனித்தனியே சுவாதீனப்

படுத்திக் கொண்டன. குடியேற்ற நாடுகளில் அரசாங்கம் ஏற்பட்ட விதம், குடியேற்ற நாடுகளில் தற்பொழுது பரிபாலிக்கப்பட்டு வரும் பலவிதமான அரசாங்கமுறை, குடியேற்ற நாடுகளின் வருங்கால இராஜீய நிலைமை ஆகிய இம் முறையையும் சற்று நாம் ஆராய்வாம். உலகிலுள்ள வல்லரசுகளில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே பெரும்பாலும் குடியேற்ற நாடுகளின் அதிக விஸ்தீரணத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு அரசாங்கமானது குடியேற்ற நாடுகளைப் படையெழுச்சியினால் ஆட்படுத்துகிறது. வெற்றி பெற்றவர்கள் தோல்வி யடைந்தவர்களை ஆட்படுத்துகின்றனர். இதற்கு உதாரணம் இந்தியா என்று கூறப்படுகிறது. இது ஒரு முறை. குடியேற்ற நாடுகளை சுவாதீனப் படுத்திவரும் ஓர் அரசாங்கம் யுத்தத்தில் மற்றொரு அரசாங்கத்துடன் தோல்வியடைந்தால், தோல்வி யடைந்த அந்த அரசாங்கம் வெற்றிகொண்ட அரசாங்கத்திற்குச் சமாதான உடன்படிக்கையில் ஸ்வாதீனமாயிருந்த குடியேற்ற நாடுகளை ஒப்புவித்தலே இரண்டாவது முறை. உதாரணமாக, பிரான்சுக்காரர்களின் ஸ்வாதீனத்திலிருந்த கனடாவை 1763-ம் வருடத்தில் ஆங்கிலேயர்களுக்கு ஒப்புவித்ததேயாம். தவிர, இன்னொரு முறையுண்டு. புதிதான தீவுகளிலோ அல்லது இடங்களிலோ தாய்நாடுகளினின்றும் சென்று ஸ்திரமான குடித்தனக்காரர்களாவது மூன்றாவது முறை. புதிதான இடங்களில் ஏற்கனவே அவ்விடங்களில் வசிக்கும் பூர்வ குடிகளைப்போல வசித்துச் சிறிது காலத்திற்குள் அவர்களைக் கீழ்ப்படுத்தி அவ்



விடங்களை சுவாதீனப்படுத்திக் கொள்வது. பூர்வம், குடியேற்ற நாடுகளில் குடிபுகும் அனுஷ்டானம் இருந்தாலும், முக்கியமாக 15, 16-வது நூற்றாண்டில் கிழக்குத் தீவுகளுக்குக் கடல்வழியையும் அமெரிக்காவையும் கண்டுபிடித்ததிலிருந்தே ஐரோப்பா கண்டத்து சனங்கள் மேற் கூறிய இடங்களுக்குக் குடிபுக வாரம்பித்தனர். ஸ்பெயின் தேசத்தவர்களும் போர்த்துகல் தேசத்தவர்களுமே முதன்மையானவர்கள். 17-வது 18-வது நூற்றாண்டுகளிலேயே இங்கிலாந்தும் பிரான்ஸும் இவ்வழியைப்பற்றவாரம்பித்தன. முதன் முதல், குடியேறின சனங்களின் வழியாக அக்குடியேற்ற நாடுகளிலிருந்து உணவுபொருள்கள், சாமான்கள், திரவியம் முதலியவைகளை யடைவதே தாய் நாடுகளின் முக்கிய கருத்தாக யிருந்தது. ஆங்கிலேயர்கள் குடியேற்ற நாடுகளுக்கு 17-வது நூற்றாண்டில் யாதொரு உதவியையும் புரியவில்லை. ஆனால் குடியேற்ற நாடுகளிலிருந்து கணக்கற்ற விதமாக உதவியைக் கொண்டனர். பிரான்ஸு ஆரம்பத்திலிருந்தே குடியேற்ற நாடுகளுக்குப் பண உதவி முதலிய உதவிகளைச் செய்ய முன்வந்தது. குடியேற்ற நாடுகளின் வியாபாரங்களின் மூலமாகவே தாய்நாடுகளின் வியாபாரக் கூட்டத்தார் தனைப் பெருக்க மடைந்துவந்தனர். குடியேற்ற நாடுகள் அந்தந்த தாய் நாட்டுடனேயே வியாபாரஞ் செய்ய வேண்டு மென்றும், மற்ற நாடுகளுடன் வியாபாரப் போக்குவைத்துக் கொள்ளக் கூடா தென்றும் சட்டங்களை யுண்டாக்கினர். இரண்டாவது சார்லஸ் அரசாட்சி காலத்தில் உண்டான கடல் வியாபாரச் சட்டங்களி

ஞல், அன்னிய அரசாங்கத்தார் எவரும் குடியேற்ற
நாடுகளோடு வியாபாரஞ் செய்யக் கூடாதென்றும்,
குடியேற்ற நாடுகளிலிருந்துவரும் சர்க்கரை, புகை
யிலை, பருத்தி, நீலி முதலிய பல சாமான்கள் இங்கி
லாந்துக்கு முதன் முதல் இறக்குமதியாக வேண்டு
மென்றும் நிர்மானிக்கப்பட்டது. 18-வது நூற்றாண்
டில் கடல் வியாபாரச் சட்டம் திருத்தப்பட்டது.
ஆங்கிலேயர்களுடைய சுயகாரிய கருத்தால் ஏற்பட்ட
கடல் வியாபாரச் சட்டங்களின் விபரீதமே குடியே
ற்ற நாடுகளைப் பிரித்தன. குடியேற்ற நாடுகள் சில
ஒன்று சேர்ந்து பிரிட்டிஷ் ஆளுகையினின்றும் விலகின.
குடியேற்ற நாடுகளில் பிரிட்டிஷாருடைய இராஜ்ய
நோக்கமானது ஒரு தலைப்பட்டதல்ல. குடியேற்ற
நாடுகளில் வசிக்கும் ஜனங்கள் நிறம், கல்வி, இராஜ்ய
வாழ்க்கை முதலியவைகளை யொட்டியே யேற்பட்டி
ருக்கின்றது. ஒவ்வொரு குடியேற்ற நாட்டிற்கும்
பிரிட்டிஷ் அரசாங்கமானது குறித்த சில அதிகாரங்
களைத் தனக்குள் வைத்துக் கொண்டிருக்கின்றது. குடி
யேற்ற நாடுகளின் கவர்னர் அல்லது பிரதம அதிகாரி
பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பற்றிய வரை பிரிட்
டிஷ் கவர்ன் மெண்டாரலேயே நியமிக்கப் படு
வர். அவ்வதிகாரி பெயருக்கு மாத்திரமாகவேனும்
அல்லது உண்மை யாகவேனும் இருப்பர். குடி
யேற்ற நாடுகளைப் பற்றிய சட்டங்களில் தாய் நாட்டு
அரசாங்கமானது நிராகரிக்கும் அதிகாரத்தைப் பெற்றி
ருக்கிறது. குடியேற்ற நாடுகளில் உண்டாகும் வியாச்
சியங்களைக் கடைசியாக முடிவு செய்யும் அதிகாரம்



பிரிவி கௌன்ஸிலின் நியாய கமிட்டிக்கு உள்ளது.
பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த குடியேற்ற
நாடுகளில் சுய ஆட்சியில்லாத கிரௌன் குடியேற்ற
நாடுகளென்றும், கொஞ்சம் சுய ஆட்சியைப் பற்றிய
பிரதிநிதித்துவ குடியேற்ற நாடுகளென்றும், பூர்ண
சுய ஆட்சியைக் கொண்ட பொறுப்புள்ள குடியேற்ற
நாடுகளென்றும் மூவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்
றன. மேற் கூறிய குடியேற்ற நாடுகள் யாவும் உள்
நாட்டு விஷயங்களைப் பரிபாலிக்கப் போதுமான சுதந்
தரத்தைக் கொண்டிருக்கின்றனர். அவைகள் தங்களி
ஷ்டப்படி வரிவிதிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்
கின்றன. தவிர, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி
யாகும் சாமான்களின் மீது ஆயத்தீர்வை விதிக்கவும்
சுதந்தர முண்டு. தாய் நாட்டு (பிரிட்டன்) ச்சரக்கு
களின் மீதும் ஆயத்தீர்வைகளை இனவாரியாகக் குடி
யேற்ற நாடுகள் விதிக்கும் உரிமையைப் பெற்றிருக்
கின்றன. ஆனால், இதர தேசங்களோடு சமாதான
உடன் படிக்கை செய்து கொள்ள அவைகளுக்கு அதி
காரமில்லை. தாய் நாட்டுக்காகச் சில குடியேற்ற
நாடுகள் இராணுவ உதவிசெய்யவும் கடமைப் பட்டுள்
ளன. இங்ஙனம் குடியேற்ற நாடுகளின் நிர்வாக விஷ
யம் யாவும் அந்தந்த தாய் நாடுகளின் இராஜரீக முறை
யைப் பற்றியிருப்பதால், அவைகளில் கண்டுகொள்க.

## 3. மாகாண அரசாங்கம்

மாகாண அரசாங்க மென்பது ஓர் அரசாங்கத்தின்
நகரசபை, முனிஸிபாலிடி, ஜில்லா முதலிய வழி
களில் பரிபாலிக்கும் அதிகார சாங்கம். மாகாண

அரசாங்கமானது பொதுவாக மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்டே யிருக்குமென்று கூறப்படுகிறது. சிலர் மாகாண அரசாங்கமானது பூர்ண சுதந்தரமுள்ளதென்றும் மத்திய அரசாங்கத்துடன் நாட்டின் பொதுவான க்ஷேமகாரியங்களுக்குச் சேர்ந்து கொள்ளுமென்றும் கூறுகின்றனர். மத்திய அரசாங்கமானது இராணுவம், கப்பற்படை, கிரிமினல் சட்டம், பொது நன்மையை யுத்தேசித்த காரியங்கள் ஆகிய இவையாவையும் தன் கடமையாகக் கொள்ளும். கல்விச்சாலைகள், ஆஸ்பத்திரிகள், வாசாவதி, ரஸ்தாக்கள், சிங்காரத் தோட்டங்கள், விளக்கேற்றுதல், போக்கு வரவு சாதனங்கள் ஆகிய இவையாவும் மாகாண அரசாங்கத்தின் கடமைகளாம். இம்மேற்கூறிய பிரிவுகளுள் சில சமயம் மாகாண அரசாங்கத்திற்கென்பது மத்திய அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கென்பது மாகாண அரசாங்கத்திற்கும் போகும். பொதுவாக மாகாண அரசாங்கமானது ஒரு தேசத்தின் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த எல்லையில் பிரிக்கப் பட்டிருக்கும் தனி எல்லையை மாகாண அரசாங்கம் கொள்ளும். அந்த எல்லைக்குள் வரி விதித்தல், நியாயத் தீர்ப்பு செய்தல் முதலிய காரியங்கள் அவ்வரசாங்கத்தால் நடைபெறும். மாகாண அரசாங்கத்தை நடத்தும் நிர்வாக அதிகாரிகள் சில விடங்களில் மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டும், சில விடங்களில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டும் வருவர்.



## 4. கட்சி அரசாங்கம்

ஓர் அரசாங்கத்தில் இராஜீயத் துறையில் ஏற்படும் அபிப்பிராய பேதங்களினால் கட்சிகள் உண்டாகின்றன. ஒவ்வொரு கட்சியும் அதனதன் அதிகாரமே அரசாங்கத்திலிருக்க வேண்டுமென்னும் நோக்கத்தைக் கொண்டு நிற்கிறது. கட்சிப் பிரிவினால் மானிட சுதந்தர உரிமையே குறைகிறதென்று பல இராஜரீக சாஸ்திரக்ஞர் அபிப்பிராயப்படுகின்றனர். மற்றுஞ் சிலர் கட்சிப்பிரிவினாலேயே நாட்டின் இராஜீயவுணர்ச்சி சனங்களுக்குள் அபிவிர்த்தி யடைகின்றதென்றும் கூறுகின்றவர். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய வல்லரசுகளில் இராஜீயத் துறையில் பல கட்சிகளுண்டாயிருக்கின்றன. அக்கட்சிகளில் நான்கு முக்கியமெனக் கூறப்படுகிறது. 1. பூர்வஆசார அநுஷ்டானங்களையேகொள்ள வேண்டுமென்கிற பிரத்தியாகாதிகள் (Roactionaries) 2. உள்ள ஆசார அநுஷ்டானங்களைச் சீர்திருத்தஞ் செய்ய மனமில்லாமல் அவ்வண்ணமே யிருக்க வேண்டுமென்கிற கன்ஸர்வேடிவ் என்னும் நிதானக் கட்சியினர் (Conservatives) 3. தற்பொழுதுள்ள ஆசார அநுஷ்டானங்களையும் சமூக சாங்கத்தையுஞ் சீர்திருத்த வேண்டுமென்கிற சீர்திருத்தக்காரர்கள் (Liberals) 4. தற்பொழுதுள்ளவைகளை அடியோடு களைந்தெடுக்கவேண்டுமென்கிற தீவிர கட்சியினர் (Radicals) ஆக நால்வகைக் கட்சிகள் உண்டு. இங்கிலாந்தில் கட்சியானது எலிஜபெத் மகாராணி காலந்தொட்டு ஏற்பட்டு வருகிறது. முதன் முதல் மதவிஷயமாக உண்டாயிற்று. எலிஜபெத் ராணியின் மிதமிஞ்

சின அதிகாரத்தையும், அவர் இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ்துவ மதக்கொள்கையினருக்கு விசேஷ தயவு காட்டி வரும் காரணத்தையு மறிந்த பியூரிடன் சமயவாதிகள் பார்லிமெண்டில் புகக் கிளர்ச்சி யுண்டாக்கின காலத்திலிருந்து கட்சி யேற்பட்டது. பிறகு, அரசாங்கத்தைத் தாங்கி நிற்பவர்களுக்கும் ஜனங்களைத் தாங்கி நிற்பவர்களுக்குமாக கட்சிகள் உண்டாயிற்று. பிறகு இரண்டாவது சார்லஸ் காலத்தில் கோர்ட் கட்சி என்றும் கிராம கட்சி என்றும் இருகட்சி யுண்டாயிற்று. 1680-ம் வருடத்தில் அரசனுடைய சகோதரன் சிம்மாதனத்திற்குரிமை பெற்றவனல்ல வென்னும் ஓர் நிபந்தனையை யுண்டாக்க ஏற்பட்ட சட்டத்தினின்றும் 'விக்' கட்சியென்றும் 'டோரி' கட்சியென்றும் இரண்டு கட்சிகள் பார்லிமெண்டில் உண்டாயின. 'விக்' கட்சியினர் பார்லிமெண்டின் அதிகாரமே உயர்ந்த தென்று கூறி அரசனுடைய அதிகாரத்தைக் கண்டனஞ் செய்து வருபவர்கள். 'டோரி' கட்சியினர் அரசனுடைய அதிகாரத்தை அங்கீகரிப்பவர்கள். இந்த இரண்டு கட்சியும் நாட்டின் அபிவிருத்தியையும் இராஜீய விஷயங்களில் தீவிர ஞானத்தையும் கொண்டதல்ல. ஹனோவர் வம்சத்தார் இங்கிலாந்து சிம்மாதனத்திற்கு வந்ததும் 'விக்' கட்சியினர் 'டோரி' கட்சியினருடைய கொள்கையையும், டோரி கட்சியினர் 'விக்' கட்சியினருடைய கொள்கையையும் அவலம்பித்தனர். மூன்றாவது ஜார்ஜ் பட்டத்திற்கு வந்த காலத்திலிருந்து தான் 'விக்' கட்சியினர் நாட்டின் சீர்திருத்தங்களுக்கும் அபிவிருத்திக்கும் மனஞ் செலுத்த முன்வந்தனர். டோரி



கட்சியினர் நாட்டின் அமைதியையும் பந்தோபஸ்தையுமே கருதி யிருந்தனர். பிறகு இவ்விரு கட்சியினர்களே லிபரல் கட்சியென்றும், கன்ஸர்வேடிவ் கட்சியென்றும் ஆயினர். லிபரல் கட்சியினர்கள், பிரஜாதிபத்திய உணர்ச்சியைத்தழுவி எல்லா மனிதர்களுக்கும் சமசுதந்தர உரிமைகள் இராஜீய விஷயங்களில் ஏற்பட வேண்டுமென்றும், மத விஷயமான தடைகள் கோளாறுகள் யாவையும் ஒழித்துவிட வேண்டுமென்றும், வியாபாரங்களிலும் கைத்தொழில்களிலும் தடையில்லாதபடி சுதந்தரமிருக்க வேண்டுமென்கிற கொள்கையை ஸ்தாபித்து வந்தனர். கன்ஸர்வேடிவ் கட்சியினர்களோ சமசுதந்தர உரிமையை யங்கீகரிக்காமல் சதா அமைதியும் பந்தோபஸ்துமே யிருக்க வேண்டு மென்னும் தீவிர கொள்கையின் அபாயத்தைக் கூறிக்கொண்டும் வரலாயினர். அமெரிக்காவில் மத்திய அரசாங்கத்தைப் பலமாக ஒப்பந்த முறையில் அமைக்க வேண்டு மென்னும் கொள்கையைக் கொண்ட பிடரல் கட்சியினர் யென்றும், அவ்வரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்கிற எதிர்க்கட்சியினரென்றும் இரு கட்சியினர் உண்டாயினர். இவ்விருகட்சியினர்களே பிறகு ரிபப்ளிகன் கட்சியினரென்றும் டெமோகராட் கட்சியினரென்றும் அழைக்கப்பட்டனர். இவ்விரு கட்சியினரும் பொதுவாகக் குடியரசைத் தாங்குபவர்களாயினும் டெமோகிராட் கட்சியினர்களைவிட ரிபப்ளிகன் கட்சியினர் தீவிர இராஜீய கொள்கையைக் கொண்டவர்கள். அமெரிக்கா இங்கிலாந்து தேசங்களில் கட்சி அரசாங்கம் எங்ஙனம் நடந்து வருகின்றதென்பதை அந்தந்த அரசாங்கங்

களின் இராஜரீக முறையைப் பற்றிய நூல்களில் கண்டு கொள்க. பிரான்சு முதலிய தேசங்களில் கன்ஸர்வேடிவ், ரிபப்ளிகன், ராடிகல், சோஷ்யலிஸ்ட் என்கிற நால்வகை கட்சியுண்டு. கன்ஸர்வெடிவ் கட்சியினர் நீங்கலாக மற்ற அம் மூன்று கட்சியினர்களும் தீவிர கொள்கையைக் கொண்டவர்களே. சோஷ்யலிஸ்ட் கட்சியினர் அரசாங்க முறையையே கண்டித்து சமூக சமத்துவ உரிமையிலும் சாங்கத்திலும் நம்பிக்கை யுள்ளவர்கள். தவிர, சமீப காலத்தில் இன்னுஞ் சில கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. கிளாட்ஸ்டன் காலத்தில் லிபரல் கட்சியினர்களுக்குள்ளே யூனியன் கட்சியினரென்றும் ஹோம்ரூல் கட்சியினரென்றும் இரு கட்சியினர் உண்டாயினர். தொழிற்கட்சியொன்று உண்டாகி அதில் பல கட்சியினர்கள் ஏற்பட்டிருக்கின்றனர். சமீபகாலத்தில் இராஜ்யத் துறையில் உண்டான கட்சிகளெல்லாம் பிரஜாதிபத்யத்தைத் தழுவினவைகளே யன்றி இராஜ்யாதிபத்யம் முதலிய வேறுவகையான அரசாங்கங்களைத் தழுவி நிற்பவையல்ல. பிரஜாதிபத்ய உணர்ச்சியில் சில சில அபிப்பிராய பேதங்களினால் இக்கட்சிகள் உண்டாயின. இக்கட்சிகள் ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் பிரஜைகளுக்குள்ளே மிக்க உணர்ச்சியைத் தந்துவருகின்றன. இனி எதிர்கால இராஜ்யத் துறையில் இக் கவின கட்சிகள் பெரும் பலத்தையடையும் என்பதற்கு ஐயமேயில்லை.

# 17. அரசாங்க கடமை

இதுகாறும் அரசு என்பதையும் அரசின் உறுப்புகளையும் அதிகார முறைமைகளையும் பலவகை அரசாங்கங்களைப் பற்றியும் நாம் கூறி வந்தோம். இனி பொதுவாக அரசாங்கத்தின் கடமை என்னவென்பதைப் பற்றிக் கூறுவோம். அரசாங்கத்தின் கடமையும் அதன் இலட்சியமும் மனித சுதந்தர நிலைமையும் ஆகிய இவையாவையும் இராஜரீக சாஸ்திரத்தின் இரண்டாவது பாகத்தில் வெகு விரிவாகக் கூறப்படும். என்றாலும் ஈண்டு சில முக்கிய அம்சங்களை மட்டும் கூறுவோம். அரசாங்கத்தின் கடமையைக் கூறுவதற்கு முன்னர், அரசாங்கம் தேவையா இல்லையா என்னும் கேள்வி யுண்டாகிறது. அரசாங்கம் ஆவசியமில்லை என்னும் கொள்கையைக் கொண்ட சாரார் சிலர் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களிலிருக்கின்றனர். அரசாங்கமானது தன் பத்திற்கும் தீமைக்கும் காரணமாகவே யிருத்தலால், அது தேவையில்லை யென்று கூறப்படுகிறது. அரசாங் கம் செய்யக் கூடிய காரியங்கள் யாவையும் மனிதர்கள் பரஸ்பர சம்பந்த ஒப்பந்தத்தாலும் கட்டுப்பாட்டாலும் செய்யக்கூடுமென்றும், அரசாங்கம் தனியே யொன்று யிருக்குமானால், அது மனிதர்களுடைய சுதந்தரத்தை யும் சமூகத்தின் அபிவிர்த்தியையும் கூட்டுறவையும் அழிக்கிறதெனவும் கூறப்படுகிறது. மேலும், அரசாங் கமொன்று இல்லாமலிருந்தால் வியாபாரத் தடைகள், வர்த்தக வரிகள், இறக்குமதி ஏற்றுமதித் தீர்வைகள், அகவிலையின் மிகவிலை, கைத்தொழில் சிதைவு முதலிய

வைகள் உண்டாகா தென்றும், அரசாங்கம் இருப்பதி
னாலேயே தாராளமான வர்த்தகமும் கைத்தொழில்
அபிவிர்த்தியும் உண்டாகவில்லையென்றும், தேசத்திற்
க்குத்தேசம் நகரத்திற்கு நகரம், மனிதனுக்கு மனிதன்
யுத்தமும் சண்டையும் உண்டாகிற தென்றும் கூறப்
படுகிறது. அரசாங்க மிருப்பதினாலேயே தனவந்தர்
கள் அதிக தனப் பெருக்கத்தையும், ஏழைகள் அதிக
வறுமையையும் அடைந்து வருகின்றனரென்றும் சமூ
கத்தில் சம தனவிபாகம் உண்டாகவில்லை யென்றும்
கூறப்படுகிறது. அரசாங்கம் இருப்பதினாலேயே இராணு
வப் பெருக்கமும், அவ்விராணுவத்தைப் பழக்கி வைக்க
யுத்தமும், யுத்தத்திற்கு உபயோகப்படுத்தப் பல தளவா
டங்களும் நூதன சாஸ்திர முறையில் கண்டுபிடிக்கப்
படுகின்ற தென்றும், இவ்வளவும் மனிதனை மனிதன் ஜீவ
காருண்ய மில்லாமல் கொல்வதற்கே உபயோகப் படுத்
தப்படுகிற தென்றும் கூறப்படுகிறது. அரசாங்கம் ஒன்று
இருப்பதினாலேயே ஒரு சாரார் அதிகாரங்களை வகிக்
கவும் மற்றவர் அவ்வதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்
கவும், மனிதனுடைய தாராளமான இயற்கைச் சுதந்
தரங்களைக் கட்டுப் படுத்தவுமான பல தடைகள் உண்டா
கின்றன வென்றும் கூறப்படுகிறது. அரசாங்கம் இருப்
பதினாலேயே குற்றங்கள் அதிகரிக்கிறதென்றும் மனி
தனுக்குத் தடை யேற்படுங் காலத்தில் அவன் குற்றங்
களைச் செய்யப் பிரயத்தனஞ் செய்கிறானென்றும் கூறப்
படுகிறது. மேற்கூறிய பல காரணங்களைக் கொண்டு
அரசாங்கம் அவசியமில்லையென்று அச்சாரார் தங்கள்
கொள்கையைப் பிரதிஷ்டை செய்கின்றனர். அர



சாங்கம் தீமையே வடிவாகக் கொண்ட ஓர் ஸ்தா
பனம்; அரசாங்கம் இயற்கையான ஓர் சாங்கமல்ல;
அவ்வரசாங்கம் மனிதனுடைய ஸ்வாபாவிகமான நட
மாட்டங்களைக் கட்டுப்படுத்தி மனிதனை அடிமையாக்கு
கின்றது என்னும் இம் மூன்று காரணங்களால் அர
சாங்கம் தேவையல்லவென்று சித்தாந்தப் படுத்தப்
படுகிறது. ஆனால், அரசாங்கம் தேவை யென்று
கூறுபவர்களோ பற்பல காரணங்களைக் கொண்டு சித்
தாந்தப்படுத்துகின்றனர். அரசாங்கமானது இயற்கை
யாகவே சாங்கமாக ஏற்படாவிட்டாலும், இயற்கை
யாகவே யுண்டான மானிட சமூக சம்பந்தத்தினாலும்
ஒப்பந்தத்தினாலும் ஏற்பட்டதால் அது ஓர் சாங்கமே
யென்றும், அரசாங்கம் இருப்பதால் பலமுள்ளவர்
பலஹீனர்களை வருத்தாமலும், பலஹீனர்களுடைய
நபர் பந்தோபஸ்து, சொத்து பந்தோபஸ்து முதலிய
வைகளைக் காக்கவும் வசதியுண்டாகிற தென்றும் கூறப்
படுகிறது. மேலும், அரசாங்கம் இருப்பதினாலேயே
நாட்டின் வியாபாரம் வர்த்தகம் பெருக்கடைகிற தென்
றும், அரசாங்கம் இல்லாமற்போனால், ஒரே வியாபார
த்தையும் ஒரே வர்த்தகத்தையும் பல மனிதர்கள்
செய்யவும், அதினால் பலமான சண்டைகளும் பிரிவு
களும் உண்டாகி, நாட்டின் அபிவிர்த்திக்கு முட்டுக்
கட்டையாக ஏற்படுமென்றும், அரசாங்க அதிகாரம்
இல்லாமற்போனால் நாட்டில் கொலையும் களவுமுண்
டாகி சமூகம் கட்டுப்பாடின்றி தலைவிரிகோலமா யிரு
க்குமென்றும் கூறப்படுகிறது. ஆராயுமிடத்து, அர
சாங்கம் இருப்பதினால் சிற்சில உபத்திரவங்களும் தீமை

களுமுண்டாகின்றன வென்பது பிரத்யட்சம். அரசாங்கமானது மனிதனுடைய இயற்கை உரிமையை மட்டுப் படுத்துகிறது உண்மையே. அரசாங்கமானது தன்னுடைய சுயநலத்திற்காக யுத்தஞ் செய்வதும், கணக்கற்ற மனித சமூகத்தை வதை செய்வதும் உண்மையே. அரசாங்கமானது தன்னுடைய நலத்திற்காகவே பணக்காரர்களை யாதரிப்பதும் ஏழைகளை அநாதரவு செய்வதும் பிரத்யட்சமே. அரசாங்கமானது தன்னுடைய உபயோகத்திற்காக உணவு பொருள்கள் முதலிய பொருள்களை வாங்குவதினால் அகவிலைகளின் மிகவிலையுண்டாகிறது. இங்ஙனம் அரசாங்கத்தினால் பல தீமைகள் இருப்பது போலவே, பல நன்மைகளுமிருக்கின்றன. அரசாங்கமே யில்லாமல் சமூக கட்டுப்பாடு கொண்டு மனிதர்கள் ஜீவிப்பதை இராஜ்ய வழியில் நாம் பிரத்யட்சமாகக் காணவில்லையாதலால், அதினால் உண்டாகும் நன்மை தீமைகளைப்பற்றிக் கூற நாம் சக்தியற்றவர்களாக யிருக்கிறோம். ஆனால், அரசாங்கமொன்று ஏற்படாத காலத்திற்கு முன் உலகில் பல சமூகங்கள் தங்களுக்குள்ளே ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு நடமாடி வந்தார்களென்பது மானிட சமூக சாஸ்திரத்தின் துணிபு. அந்நிலைமை தற்காலத்தில் அனுஷ்டிக்கக் கூடியதாயிருக்குமா என்றால், முடியாதென்றே கூற முடியும். தற்காலத்தில் ஜனத்தொகை பெருகிற்று. இராஜ்யங்களின் விஸ்தீரணம் அதிகரித்தது. மானிடசமூகத்தில் பற்பல நடமாட்ட வழிகளுண்டாயின. வியாபாரம், வர்த்தகம், தொழில், கல்வி முதலிய பல ஏற்பாடுகள் அபிவிர்த்தியடைந்தன.



ஆகவே, இக்காரணங்களைக் கொண்டு பூர்வ நிலைமையைப் புனர் உத்தாரணஞ் செய்வது முடியாத காரியமாகும். நிற்க, அரசாங்கம் ஆவசிய மென்பதை மட்டும் எடுத்துக் கொண்டு அரசாங்கத்தின் கடமையை விசாரிப்போம். அரசாங்கமானது பற்பல மாதிரியாக விகார மடைந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு அரசாங்கமும் முதன் முதல் சில இராஜரீக சித்தாந்திகளால் ஸ்தாபிக்கப்பட்டுப் பின்னர், அவ் வரசாங்கத்திலுள்ள குற்றங் குறைகளைக் கண்டு, அவ் வரசாங்க வழியை அல்லது முறையை மாற்ற வேறு சில இராஜரீக சித்தாந்திகள் தோன்றி மீண்டும் ஓர் அரசாங்க முறையை ஸ்தாபித்தனர். இங்ஙனம், மாறிமாறி ஒவ்வொரு அரசாங்கத்தை ஸ்தாபிப்பதும், அவ்வரசாங்கத்தின் குறைகளையும் தோஷங்களையும் காண்பதும், புதிய புதிய மாறுதல்களை இராஜரீக சாஸ்திரக்ஞர் உண்டாக்குவதுமாகவே கடந்த 4, 5 நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் ஏற்பட்டு வந்தன. 19-வது நூற்றாண்டின் இடைகாலத்திற்குப் பிறகு ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் பல இராஜரீக சாஸ்திரக்ஞர் அரசாங்க முறையானது பிரஜாதிபத்ய வழியைத் தழுவியிருக்க வேண்டு மென்று சித்தாந்தப் படுத்தினர். அது முதற் கொண்டே, அரசாங்கமானது ஜனங்களாலேயே, ஜனங்களின் பொருட்டு ஜனங்களுக்காகப் பரிபாலிக்கப் படவேண்டு மென்று சித்தாந்தப் படுத்தப்பட்டது. பிரஜாதிபத்யத்திற்கு முன் வேறு அரசாங்க முறை ஸ்தாபிக்கப்பட்டது. பிரஜாதிபத்ய முறையை யாதாரமாகக்கொண்டு அரசாங்க பரிபாலனத்தில் பல இராஜ

ரீக சாஸ்திரக்ஞர் புதிய புதிய திட்டங்களைத் தயார் செய்து வந்தனர். இத்திட்டங்களிலும் பல முறைகள் வித்தியாசப்படுகின்றன. அரசாங்கத்தின் முக்கிய கடமையானது பிரஜைகளின் சுபாவிக சுதந்தரத்தை யழிக்காமல் பாதுகாத்தலும், நாட்டிலுள்ள மனித சமூகத்தில் சாமாதானத்தையும் கட்டுறவையும் ஸ்தாபித்தலுமேயாம். அரசாங்கமானது எல்லா பிரஜைகளின் க்ஷேமத்தை யுத்தேசித்துப் பரிபாலிக்க வேண்டுமென்றும் ஒரு கட்சியினரின் சௌகரியத்துக்கு மட்டும் பரிபாலிக்கக் கூடாதென்றும் சித்தாந்தப்படுத்தப் பட்டது. மனிதனுடைய உரிமையைக் காத்து அவனை பலாத்காரத்தினின்றும், வஞ்சகத்தினின்றும் அரசாங்கம் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளதென்று கூறப்படுகிறது. அரசாங்கமானது சுதந்தரம் சமத்துவம் என்னும் தாராள நோக்கத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். அரசாங்கமானது, இராணுவம், கப்பற்படை, நீதிமன்றம், போலீஸ் (நகரக்காப்புப்படை), கிரிமினல் சட்டத்தின் அனுஷ்டானம், சுகாதாரம், உணவு பொருள்களில் கலப்பின்மை முதலிய விஷயங்களைத் தாங்கி பரிபாலித்து வரவேண்டுமென்றும் இவைகளே அரசாங்கத்தின் கடமைகளென்றும் எல்லா இராஜரீக சாஸ்திரக்ஞர்களும் ஒப்புக் கொண்டனர். தந்தி, தபால், ஆஸ்பத்திரி, தர்ம மடங்கள், ஆதுலர்ச்சாலை, இருப்புப்பாதை முதலிய காரியங்கள் அரசாங்கத்தின் கடமையைப் பொறுத்ததல்லவென்றும் அவர்களே அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால், சிலர் அரசாங்க கடமையையே மேற்கூறியவைகள் சேருமென்று கூறுகின்ற



னர். கல்வி விஷயமாகவும் அபிப்பிராய பேதமுண்டு. சிலர் கல்வியை யபிவிர்த்தி செய்வது முதலிய பல கல்வி விஷயங்கள் யாவும் அரசாங்கத்தைச் சேர்ந்ததென்றும், மற்றுஞ் சிலர் அவையாவும் சமூகத்தைச் சேர்ந்ததென்றும் கூறுகின்றனர். என்றாலும் கட்டாயக் கல்வியை நாட்டில் ஏற்படுத்த அரசாங்கமே கடமைப் பட்டுள்ளதென்று அவ்விருவர்களும் கூறுகின்றனர். அரசாங்கமானது சமூக சாங்கத்தில் தலையிடாமல், வெளியே பார்வையிடுபவர்களைப் போலிருக்க வேண்டுமென்றும், சமூக சாங்கத்தில் தலையிட்டால் அநேக கோளாறுகளும் துன்பங்களு முண்டாகின்றனவென்றும் கூறப்படுகிறது. அரசாங்கம் பிரஜைகளுக்காக ஏற்பட்டதேயன்றி பிரஜைகள் அரசாங்கத்திற்காக ஏற்படவில்லை. ஏனெனில், அரசாங்கம் இருந்தாலும் இல்லாமற் போனாலும் பிரஜைகளைப் பற்றிய சமூகம் இருப்பது நிச்சயம். ஆகவே, அரசாங்கம் பிரஜா உரிமையையும் சுதந்தரத்தையும் பாதுகாப்பதற்கு மட்டும் வேண்டிய சட்டங்கள் திட்டங்கள் இவைகளைச் செய்து கொள்ள வேண்டுமேயன்றி, உரிமைகளையும் சுதந்தரங்களையும் ஓர் எல்லைக்குட்படுத்தவோ அல்லது பறிக்கவோ அல்லது நிராகரிக்கவோ கூடாது. அரசாங்கம் சட்டப் பிரமாணத்தின் ஆதரவினாலேயே நிற்கின்றது. அப்பிரமாணமும் ஜனங்களின் சம்மதத்தினால் ஜனங்களைக் கொண்டு செய்யப்படுகின்றது. ஜனசம்மதமும் ஜனவாக்கின் வன்மையும் பெற்று ஏற்படாத சட்டங்கள் அரசாட்சிக் குரிய பிரமாண சட்டங்களாக அங்கீகரிக்கப் படுவதில்லை. அச்சட்டங்களும் நடுவு நிலைமையைப்

பற்றியவைகளாகவே யிருக்கவேண்டும். பணக்காரர்களுக்கு ஒரு சட்டமும் ஏழைகளுக்கு ஒரு சட்டமும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு சட்டமும், சாமானிய மனிதனொருவனுக்கு ஒரு சட்டமும் படித்தவனுக்கும் ஒரு சட்டமும் படியாதவனுக்கு ஒரு சட்டமும் வெள்ளைக்காரனொருவனுக்கு ஒரு சட்டமும் கறுப்பு மனிதனொருவனுக்கு ஒரு சட்டமும் ஓர் அரசாங்கத்தில் ஏற்படுமானால், அச்சட்டம் சட்டமுமல்ல, அவ்வரசாங்கம் அரசாங்கமுமல்ல. ஒவ்வொரு மனிதனும் சட்டத்திற்குமுன் நிறுத்தப் பட்டு விசாரணைக்குக் கொண்டு வரவேண்டியதே அரசாங்கத்தின் கடமை. விசாரணையின்றி எம் மனிதனும் தண்டிக்கப் படமாட்டான். நீதியும் நியாயமும் எல்லாருக்கும் பொதுவாகவும் சுலபமாகவும் தாராளமாகவு மிருக்கச் செய்வது அரசாங்கத்தின் பொறுப்புகளில் ஒன்று. அரசாங்கத்தைச் சேர்ந்த சொத்துள்ள ஒவ்வொருவனும் அவ்வரசாங்கம் நடைபெறுவதற்காக வரி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறான். அரசாங்கம் மனிதனுடைய கபர் பந்தோபஸ்து, சொத்து பந்தோபஸ்து முதலியவைகளைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு மனிதனும் அவ்வரசாங்கத்திற்குக் கடமை செலுத்தவேண்டும். அக்கடமை அல்லது வரிசெலுத்துவதிலும் பிரஜைகளின் அபிப்பிராயப் படியும் சம்மதப் படியும் அரசாங்கத்தில் திட்டமொன்று சொத்தின் மதிப்புப்படியோ அல்லது வருமானத்தின் படியோ தயாரிக்கப்படும். பிரஜைகளின் சம்மதமும் அபிப்பிராயமும் அங்கீகாரமும் இல்லாமல் அரசாங்கம் வரி நிர்ணயஞ் செய்து வசூலிக்கக் கூடா



தென்பது முக்கியமான அம்சம். அரசாங்கமானது சமூக வாழ்க்கையில் தலையிடக் கூடாதென்பதும் பிரத்யட்சமே. சமூகத்தைச் சேர்ந்த தனி மனிதர்களின் வாழ்க்கை பல பல விதமாக யிருப்பதாலும், அவ்வாழ்க்கையின் சுகதுக்கங்களுக்கும் லாப நஷ்டங்களுக்கும் அக்குடும்பமே பொறுப்புள்ளதாக யிருப்பதாலும் அச்சமூக வாழ்க்கையில் அரசாங்கம் தலையிடக் கூடாதென்றும் இராஜரீக சாஸ்திரக்ஞர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால், வேறுசிலர் மட்டும், அச்சமூகவாழ்க்கையின் அபிவிர்த்திக் குரிய சாதனங்களையும் முறைகளையும் அரசாங்கமே செய்யக் கடமைப் பட்டுள்ளதென்றும் கூறுகின்றனர். உதாரணமாக, விவாக விஷயங்களிலும் விவாகங்களை ரத்துசெய்யும் விஷயங்களிலும் இது போன்ற வேறு சிலவிஷயங்களிலும் அரசாங்கம் சமூக வாழ்க்கையில் தலையிடக் கடமைப் பட்டுள்ளதென்றும் மேனாட்டு இராஜரீக அறிஞர்களால் கூறப்படுகிறது. மற்றும், மதவிஷயத்திலும் அரசாங்கம் தலையிடக் கூடாதென்பதும் பிரத்யட்சமே. பல வித மனிதர்கள் பலவிதமான மதக் கொள்கையை யனுஷ்டித்து வருவார்களாதலால், அரசாங்கம் ஒரு மதக் கொள்கையிலும் சம்பந்தப் படுத்திக்கொள்ளக் கூடாதென்பதும் இராஜரீக சாஸ்திரக்ஞர்களின் துணிபு. பூர்வம், அரசாங்கங்கள் மதவிஷயங்களில் தலையிட்டு ஒரு வகையான மதக்கொள்கையை யாதரித்து வந்ததினாலேயே மதவிஷயத்தில் பெருத்த சண்டையும் சச்சரவு முண்டாகி மனிதர்கள் மத சுதந்திரத்தையே யிழந்தனர். மதவிஷயத்தால் சமூகத்தில் சச்சரவு ஏற்படுமானால்

அதைத்தடுக்க அரசாங்கம் கடமைப் பட்டுள்ள தென்றும் கூறப்படுகிறது. ஒரு மனிதன் மற்றொருவனுடைய உரிமையில் தலையிடாமல் இருக்கும் வரையில் அம்மனிதனுடைய சுதந்தரத்தில் அரசாங்கம் தலையிடக் கூடா தென்றும் ஒருமனிதன் மற்றொருவனுடைய உரிமையில் தலையிட்டு அவனுக்குச் சுதந்தரத்தடையையுண்டாக்கினால், அரசாங்கம் சுதந்தர மிழந்தவனுடைய உதவிக்குச் செல்லவேண்டு மென்றும் கூறப்படுகிறது. அரசாங்கம் முக்கியமாக பலாத்காரத்தினாலாகிலும் வற்புறுத்துதலையாகிலும் அனுஷ்டிக்கக் கூடா தென்றும், பாலாத்காரத்தாலேயே சமூகம் அபிவிருத்தியடையாதென்றும் கூறப்படும். அரசாங்கமானது மனிதனுடைய குணத்தையும் நடத்தையையும் சரிவர மேன்மைபடுத்தக் கூடிய வழிகளை யனுசரிக்க வேண்டு மென்றும், பிரஜைகளின் குணத்திற்கும் நன்னடைக்கைக்கும் அரசாங்கமே ஜவாப்தாரி யென்றும் இராஜரீக சாஸ்திரக்ஞர் பலர் கூறுகின்றனர். மனிதர்கள் தாங்களாகவே நன்னடக்கைக்குரிய மார்க்கத்தைத் தேட சக்தியற்றவர்களாயின், அவர்களுக்கு அரசாங்கமே நன்மார்க்கத்தை ஸ்தாபித்துப் பாதுகாக்க வேண்டு மென்றும் அவர்கள் கூறுகின்றனர். தவிர, பிரஜைகளில் குடியிருக்க மனையும், உண்ணச் சோறுமில்லாதவர்களுக்கு அரசாங்கம் இரட்சிக்கவேண்டு மென்றும், குடியிருக்க மனையும் உண்ணச் சோறுங் கொடுத்து அவர்கள் பிழைப்பதற்குரிய தொழில் முறைகளையுங் கொடுத்துப் பாதுகாக்க வேண்டு மென்றும், அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அரசாங்கமானது அன்னிய



படையெழுச்சியினின்றும் பிரஜைகளைக் காக்கவும், தேசத்தில் ஒருவருக்கொருவர் பந்தோபஸ்துடனிருக்கப் பாதுகாக்கவுமே கடமைப்பட்டுள்ள தென்றும், மற்ற காரியங்கள் யாவும் சமூகத்தைச் சேர்ந்தவை யென்றும் கூறப்படுகிறது. சிலர், தபால் போக்குவரவு சாதனங்களை ஏற்படுத்துதல், நாணயச் செலாவணி செய்தல் முதலிய காரியங்கள் அரசாங்கத்தைச் சேர்ந்ததே யென்றும் கூறுகின்றனர். நாட்டில் அகவிலைகளுக்கு விலை திட்டங்களை யேற்படுத்துவதும், தொழிலாளர்களுக்குக் கூலித் தொகையை நிர்ணயிப்பதும், பணத்துக்கு வட்டித்தொகையை நிர்ணயிப்பதும், வீட்டு வாடகை முதலியவைகளை நிர்ணயிப்பதுமான எல்லா பொதுசன சௌகரியங்களை அரசாங்கமே செய்ய வேண்டு மென்றும் பின்னுஞ் சிலர் கூறுகின்றனர். இருப்புப்பாதைகளில் அரசாங்கம் ஸ்வாதீனங் கொண்டிருக்க வேண்டு மென்றும், நாட்டின் கைத்தொழில்களிலும் அரசாங்கம் அபிவிருத்திக்குரிய பல வழிகளைச் செய்யவேண்டு மென்றும் இப்பொழுது தீர்மானிக்கப்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள சுரங்கங்களையும், அச்சுரங்கங்களினின்றும் எடுக்கப்படும் கனிவர்க்கங்களையும் அரசாங்கம் சுவாதீனப்படுத்திக் கொண்டு, நாட்டின் அபிவிருத்திக்குரிய தொழில்களை ஸ்தாபிக்கவேண்டு மென்றும் சில இராஜரீக சாஸ்திரக்ஞர் கூறுகின்றனர். நாட்டின் தொழிற்சாலைகளெல்லாம் அரசாங்கத்தின் சுவாதீனத்திலிருக்க வேண்டு மென்றும், தனிப்பட்ட தனவந்தர்களிடமாகிலும் முதலாளிகளிடமாகிலும் இருக்கக் கூடா தென்றும் பின்னுஞ் சிலர் கூறுகின்றனர். இங்ஙனம், பல இராஜரீக சாஸ்திரக்

ஞர் பல விதமாக் அரசாங்க கடமையை விரித்துக் கூறின போதிலும், பொதுவாக, அரசாங்கமானது பிரஜைகளின் சுதந்தரத்தையும் உரிமையையும் பறிக்காமல், அவைகளைக் காப்பாற்றிப் பிரஜைகளின் அபிவிர்த்திக்கு அவர்களுடைய சம்மதத்தையும் ஆதரவையுங் கொண்டு நடக்க வேண்டுமென்று மட்டும் எல்லா இராஜரீக சாஸ்திரக்ஞர்களும் ஒரு முகமாக அங்கீகரித்தனர். இது விஷயத்தில் அபிப்பிராய பேதம் அவர்களுக்குள்ளில்லை. மற்றும், வேறு சிலர் ஓர் அரசாங்கத்திற்கு இராணுவம் முதலியவைகள் வேண்டுவதில்லையென்றும் கூறுகின்றனர். இராணுவம் இருப்பதினாலேயே யுத்தங்களுக்குப் பிரயத்தனஞ் செய்யவும், கணக்கற்ற மனிதர்களைக் கொல்லவும், கோடிக்கணக்கான திரவியத்தைச் செலவழிக்கவும், வேறு பல அனர்த்தங்களையுண்டாக்குவமான விபரீதங்களுண்டாகின்றன வென்றும், இராணுவமே அரசாங்கத்திற்கு இராதபடி சர்வதேச ஒப்பந்த மொன்றுண்டாக வேண்டுமென்றும் சில மேதாவிகள் கூறுகின்றனர். ஆகவே, அரசாங்கமானது பிரஜாதிபத்யமாகயிருக்கவேண்டும். பிரஜைகளினின்றும் வரிவாங்கல், வரி நிர்ணயித்தல், வரிப்பணத்தைச் செலுத்தல் ஆகிய இவையாவும் பிரஜைகளின் சம்மதத்தைக் கொண்டு செய்யவேண்டியது அரசாங்கத்தின் முதற் கடமை. பிரஜைகளின் இயற்கைச் சுதந்திரங்களையும் உரிமைகளையும் பாதுகாத்தல் அரசாங்கத்தின் இரண்டாவது கடமை. நீதிமுறைமையை ஸ்தாபித்தல் அரசாங்கத்தின் மூன்றாவது கடமை. பிரஜைகளின் நன்



னடைக்கைக்குரிய எல்லா முறைகளையும் காலதேச வர்த்தமானங்களை யறிந்து செய்தல் அரசாங்கத்தின் நான்காவது கடமை. ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் உதவி செய்வது அரசாங்கத்தின் ஐந்தாவது கடமை. இத்தகைய கடமையைக் கொண்டு அரசாங்கம் நடைபெற வேண்டுமென்று கூறப்படுகிறது. இதின் தொடர்ச்சியை இனி இரண்டாம் பாகத்திற் காண்க.

77462

முதற்பாகம் முற்றிற்று.

'திராவிட ரத்தினம்'

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா இயற்றிய நூல்கள்.

சிறைச்சாலையில் இயற்றியவை.

| | | |
|---|---|---|
| நெப்போலியன் (பிரான்சுவீரர்) ... | 1 | 8 |
| ஜோஸப்மாஜினி ... | 0 | 12 |
| இந்தியா இழந்ததனம் ... | 1 | 0 |
| அசோக சக்கரவர்த்தி ... | 0 | 8 |
| கும்பமகாராணா (இராஜபுத்திரவீரர்) | 0 | 6 |
| இராஜரீக சாஸ்திரம் (அரசியல்நூல்) | 1 | 0 |
| இராஜ இராஜ சோழன் (தமிழ்நாட்டு வீர மன்னர்) ... | 0 | 10 |
| லோகமான்ய பாலகங்காதர திலகர் ஜீவிய சரிதை ... | 1 | 4 |

| | | |
|---|---|---|
| மகாத்மா காந்தி (௨-ம் பதிப்பு) ... | 1 | 8 |
| முகம்மத் அலி ஷவுகத் அலி (௨-ம் பதிப்பு | 1 | 0 |
| சித்தரஞ்சனதாஸ் ... | 0 | 12 |
| லாலாலஜபதிராய் ... | 0 | 8 |
| சிவாஜிமகாராஜா ... | 1 | 0 |
| ஸ்வராஜ்யம் ... | 0 | 8 |
| டால்ஸ்டாய் (ருஷியஞானி) மகாத்மா காந்தியின் குரு ... | 0 | 4 |
| மகாத்மா காந்தியின் ஆன்மசக்தியும் சாந்தி நிலையும் ... | 0 | 10 |
| பண்டிதமதிலால் நேரு ... | 0 | 2 |

"ஞானபோதினி பிரசுராலயம்"

இருளப்பன் வீதி, சௌகார்பேட்டை போஸ்ட்,

சென்னை.

[illegible]